த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 485

# அரசியல் தத்துவம்

ஆசிரியர்

டாக்டர் முத்துராமன், எம்.ஏ., பிஎச்.டி.,

பேராசிரியர்,

தலைவர் (மேற்பட்டப் படிப்பு),

தத்துவத்துறை,

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—August, 1973

T.N.T.B.S. (C. P.) No. 485

© Tamil Nadu Text Book Society

# POLITICAL PHILOSOPHY

Dr. MUTHURAMAN

Price Rs. 3·80

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Shanmugam Press Private Ltd.,
Madras-1.

# அணிந்துரை

## திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றுண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன **'அரசியல் தத்துவம்'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **485** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை **520** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# முகவுரை

சங்கப் புலவர்கள் செந்நாவிலே சஞ்சரித்து, சிங்களத்திலே சாவகத்திலே சிறப்புற்று, செந்தமிழ் நாட்டில் உலவிய மொழி, தமிழ் மொழி, நம் தாய்மொழி ; இது தொன்மை வாய்ந்தது மட்டு மன்று, தூய்மையும் இனிமையும் இயல்பாகவே பெற்றுள்ளதாம். அதனுற்ருன், தேனினும் இனிது நம் தமிழ் மொழி என்று கூறினுர் பாரதியார். இம்மொழியிலேயே கல்விப் பாடங்களைப் பயில்வது எதற்கு ஒப்பாகும் என்ருல், பெற்ற தாயின் பாலை உண்டு பெரு வளர்ச்சியடையும் பிள்ளையின் நிலையைப் போன்ற தாகும் ; அதிலும், உயர் கல்விப் பாடங்களையும் தாய் மொழியி லேயே பயில முடியுமா என்ற கேள்விக்கு, 'முடியும்' என்ற பொருத்தமான பதிலைத் தருவதுபோல் இந்நூலைப் படைத் திருக்கிறேன்.

இருந்தபோதிலும், ஆங்கில மொழி அகில உலக மொழி என்பது உண்மை; அம்மொழியின் வளர்ச்சிக்கும், அவற்றில் காணப்படும் பல இயல்களும், அவற்றிற்குத் தேவையான எல்லா நூல்களும் மற்றெந்த மொழியிலும் அமையவில்லை என்பதும் உண்மையாகும். இந்நிலைமை நமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டுமென்பதே என்னுடைய கருத்து. ஏனென்ருல், உயர் கல்வித்துறையில், தமிழில் அத்துணை அளவு நூல்கள் இல்லை என்று நான் கூறமாட்டேன் ; வேண்டுமென்ருல், இன்று வரை வெளியிடப்பெறவில்லை என்றுதான் உண்மையைக் கூறுவேன் ! இனிமேல் அவ்வித நூல்கள் நிச்சயமாக வெளியிடப்பெறும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே, என்னுடைய நூல் அமைந்திருக்கிறது. இம்முயற்சியின் பெரும் பங்கு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தைச் சார்ந்ததே என்று கூறி, அவர்களின் பெருமுயற்சியினைப் பாராட்டுகிறேன்.

மக்களாட்சியினை அமைத்து மாண்புடன் வளர்ச்சியடைந் துள்ள மாபெரும் நாடாகிய இந்தியா, எங்கள் தாய் நாடு. இருபதாம் நூற்ருண்டில், மக்களாட்சியினை அமைத்து மகிழ்ச்சி யுடன் வாழும் நாம் பெற்றிருப்பது ஓர் உயரிய அரசியல் வாழ் வாகும். இப்பேற்றினை நன்முறையில் பயன்படுத்துவதற்கும், அதன் பலனுகப் பெருவாழ்வு வாழ்வதற்கும் உறுதுணையாக அமையும் பல அறிஞர் பெருமக்களின் அரசியல் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு, என் அறிவுக்கு எட்டியவரை தொகுத்துப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தினை அனுசரித்து, 'அரசியல் தத்துவம்' (Political Philosophy) என்னும் நூலைப் படைத்திருக்கிறேன். வாழ்க்கையும் அரசியலும் ஒன்ருக இணைந்துவிட்ட இந்நாளில், அரசியலைப் பாடமாகப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மட்டுமன்றி, மக்கள் யாவருக்குமே இந்நூல் பயன்படும் என்று நம்புகிறேன்.

டாக்டர் முத்துராமன்

# பொருளடக்கம்


பக்கம்

1. அரசியல் என்றால் என்ன? ... 1
2. அரசியல் தத்துவம் ... 6
3. அரசியல் நூல் ... 12
4. அரசியல் நூல் தற்காலத்தில் தோன்றினமைக்கான காரணங்கள் ... 16
5. அரசியல் தத்துவமும் அறிவியல்களும் ... 19
   (i) அரசியலும் அறவியலும் ... 20
   (ii) அரசியலும் பொருளியலும் ... 21
   (iii) அரசியலும் வரலாறும் ... 23
   (iv) அரசியலும் உளவியலும் ... 25
   (v) அரசியலும் சமூகவியலும் ... 27
   (vi) அரசியலும் மானிடவியலும் ... 28
6. அரசியல் வாழ்வின் தோற்றம் ... 31
   பண்டைக்காலக் கிரேக்க மக்களின் வாழ்க்கையும் நெறிமுறைகளும்: பிளேட்டோவும் அரிஸ்டாடிலும் –
7. நாடும் அதன் முக்கிய நிறுவனங்களும் ... 62
8. அரசின் தோற்றம் ... 71
   தொகுப்புமுறைக்கொள்கைகள் ... 71
   பகுப்புமுறைக் கொள்கைகள் ... 78
9. அரசின் குறிக்கோள் ... 83
10. அரசாங்கத்தின் வகைகள் ... 90
11. மக்களின் உரிமைகள் ... 100
12. தண்டனைக் கொள்கைகள் ... 108
13. தற்காலத்து அரசியல் கொள்கைகள் ... 114
14. காந்தி அடிகளின் அரசியல் தத்துவம் ... 125
15. ஐக்கிய நாட்டு நிறுவனமும் உலக அமைதியும் ... 133

மேற்கோள் நூல்கள் ... 146
கலைச் சொற்கள் ... 147

“ தெளிவான உன் சிந்தனைக்குச்
சரியென்று பட்டால் ஏற்றுக்கொள்.”

—சோக்ரதர்

# 1. அரசியல் என்ருல் என்ன ?

இக் கேள்விக்குச் சரியான பதில் பெறவேண்டுமென்ருல், அரசியல் வாழ்வு என்ருல் என்ன ? என்ற மற்ெருரு முக்கிய மான விஞவிற்கு முதலில் விளக்கம் பெறவேண்டியிருக்கிறது. ஏனென்ருல், மக்களின் வாழ்க்கை எவ்விதம் இயற்கையாக நடைபெற்று வருகின்றது என்பதை நோக்குவோமாகில், அந்த வாழ்க்கைச் சமுதாயத்திலே, ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தத்தமக்கு வேண்டிய நன்மைகளைத் தங்களின் விருப்பப்படி முயலவும், அடையவும் விரும்பி வாழ்கிருர்கள் என்பது எடுத்துச் சொல்லாமலேயே விளங்கும் உண்மை. அதே நேரத் திலே, ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடி தங்களுடைய விருப் பங்களைத் திருப்தி செய்துகொள்வதற்கு இயலுவதில்லை என் பதும் உண்மை. இதன் காரணமாகவே, எல்லோரும் நன்மை அடையவேண்டும் ; அவ்வித நேர்மையான ஒரு சமுதாய அமைப்பை எல்லோரும் விரும்பி ஏற்படுத்திக் கொண்டு வாழ்வது 'அரசியல் வாழ்வு' (Political life) என்று கூறிஞல், ஒருவிதத்தில் முதன்முதலாக எழுப்பிய கேள்விக்குச் சுருக்க மான பதில் கூறியதாக அமையும்.

நேர்மையான ஒரு சமுதாய அமைப்பு மக்களிடத்திலே அமையப் பெற்ருல்தான் மக்கள் இன்பவாழ்வு வாழமுடியும் ; அப்போதுதான் அவர்கள் 'மக்கள்' (People) என்று அழைக்கப் படுவதற்குத் தகுதி பெறுகின்றனர். இல்லையேல் அவர்களைக் 'கூட்டம்' (Crowd) அல்லது 'மாக்கள்' — விலங்கினத்திற்குச் சம மானவர்கள், என்றுதான் கூறப்படும். எனவே, அரசியல் வாழ்வு என்பது மக்களின் ஒன்றிணைந்த வாழ்வு மட்டுமன்று, உறுதியான வாழ்வு மட்டுமன்று, உன்னதமான, உயர்தரமான உண்மை வாழ்வு என்று கூறிஞல் மிகையாகாது. அவ்வித உத்தமமான வாழ்வை நாடுபவர்கள் மக்கள் (People) எனப் படுவர். ஒருமையில் கூறுவோமாகில், மனிதனை மனிதனுக்குவது

மக்கள் சமுதாயம்; மக்கள் சமுதாயம் என்பது சில நியதிகளை அமைத்துக்கொண்டு, அக்கோட்பாடுகளை முறைப்படி அனுசரித்து ஒன்றுபட்டு வாழ்வதாகும். அவ்வித நன்மையான நியதிகளைக் கட்டிக்காப்பது அரசின் கடமையுமாகும். இவ்வித அமைப்புகளைக் கொண்ட மக்கள் அரசியல் வாழ்வு வாழ்பவர் என்றும், அவர்கள் வாழும் இடம், பொருள், ஏவல் முதலியவைகளின் தொகுப்பு 'நாடு' (State) என்றும் அழைக்கப்படும். சுருங்கக் கூறின், இதுவரை தரப்பட்டுள்ள விளக்கங்களிலிருந்து இரண்டு முக்கியக் கருத்துகளை உற்று நோக்கற்பாலது. அவையாவன: (1) அரசியல் வாழ்வின் தோற்றம்; (2) அரசியல் அமைப்பின் முறைகள்.

முதல் பிரிவை எடுத்துக்கொள்வோமாகில், அரசியல் தோற்றமும், அரசியல் வாழ்வின் தோற்றமும், ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றவை. ஏனென்றால், மக்களின் கூட்டு வாழ்க்கை அமையப்பெருமல், அரசியல் வாழ்வு தோன்றுவது இயலாததாகும்; அதைப்போலவே, ஒழுங்கான நேர்மையான அரசியல் நியதிகள் இல்லையேல், மக்களின் வாழ்வு பயனற்றதாகிவிடும். ஒருமையில் கூறுவோமாகில், மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபடுவதற்கு முக்கியக் காரணம், தன்னுடைய சிந்தனையைப் பயன்படுத்துவதனுல்தான். அவ்விதம் தானுகவே சிந்திக்கும் திறன் பெற்றிருப்பதால்தான், 'மனிதன்' (Man) என்று அழைக்கப்படுகிறுன். உண்மை அவ்வாறு இருந்தபோதிலும், பெரும்பாலான ஆடவரும் பெண்டிரும் தங்களுடைய சிந்தனையைப் பயன்படுத்தாமலேயே நாட்களைக் கடத்திவிடலாம். அதன் காரணமாக அவர்கள் பெறுதற்கரிய உயர்ந்த பலன்களை இழக்கின்றனர் என்பதைத் தவிர, வேறொன்றும் இச்சந்தர்ப்பத்தில் யாம் கூறுவதற்கில்லை.

மக்களாய்ப் பிறந்தவர்கள் தங்களுடைய சிந்தனையைச் செம்மையான வழியிலே செலுத்தி, நன்மை தீமைகளை ஆய்ந்து, அவற்றிலிருந்து நன்மையானவற்றையே நாடி, நலம் தரும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில்தான், தனக்கும் மற்றவர்களுக்கும் பெருநன்மையும் பேரின்பமும் ஏற்படுகின்றன என்ற கருத்து, அறிஞர் பெருமக்கள் காலங்காலமாகக் கூறிச் சென்றுள்ள உண்மையாகும். அவ்விதச் செம்மையான முயற்சிகளினுல்தான், சிறந்த அரசியல் வாழ்வுமட்டுமன்று, வேறு பல நன்மைகளாகிய மொழி, கலை, இயல், இசை, இன்பம் ஆகிய யாவற்றையும் மக்கள் அடையமுடியும். இவ்விதமான உயர்ந்த

கோட்பாடுகளை மக்கள் தங்கள் வாழ்வில் பெற்று இன்புறுவதில் சில இன்னல்களும் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பமிருக்கிறது. அவற்றினைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டிய அவசியமிருப்பதால், அதனைக் கீழே விளக்குவோம்.

ஆங்கில அரசியல் மேதை எர்னஸ்ட் பார்க்கர்[1], அரசியல் வாழ்வில் ஏற்படும் சில முக்கியமான சிக்கல்களைத் தெளிவு படுத்துகின்ருர். ஒரு தனிப்பட்ட ஆணோ அல்லது பெண்ணோ தன்னுடைய விருப்பு வெறுப்புகளை முழுவதும் வெளியிட்டு, அவற்றிற்குப் பூரணமாகத் திருப்தி அடையச் சமுதாயத்திலே சந்தர்ப்பமுண்டா ? அவ்வித நலமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சமுதாயச் சட்ட திட்டங்களின் வரையறை என்ன ? தனிப்பட்ட மனிதனின் உரிமைக்கும், மக்களின் பொதுஉரிமைக்கும் ஏதாவது இடையூறு உண்டா ? அவ்விதம் ஏதாவது இடையூறு ஏற்படுவதாயிருந்தால் ஒவ்வொரு மனிதனின் சொந்த உரிமைகள் பாதிக்கப்படுமல்லவா? அவ்வாறில்லையேல், அரசுரிமைக்கும், மக்கள் உரிமைக்கும் வரையறுக்கப்படும் நியதிகள் யாவை ? என்பன போன்ற பல முக்கிய விளுக்களை யெழுப்பி, அவற்றின் அரசியல் பொருள் நிறைந்த விடைகளைத் தேடுவதன் மூலமாக, அரசியல் வாழ்வு, அரசின் அதிகாரம், நாட்டின் உரிமை, மக்களின் கடமை, தனி மனிதனின் உரிமை போன்ற தலைசிறந்த அரசியல் பிரச்சினைகளை நம் மனக்கண்முன் வரிசையாக வகுத்துத் தருகின்ருர் எர்னஸ்ட் பார்க்கர்.

மேற்குறிப்பிட்ட அரசியல் சிக்கல்களைத் தெளிவாக நோக்குவோமாகில், மேலும் சில உண்மைகள் நம் மனக்கண்முன் புலப்படுகின்றன. அதாவது, அரசியல் வாழ்வின் தோற்றம் என்ற பொருள்பற்றி ஆராயும் பொழுது, மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அரசியலின் கோட்பாடுகளும் அதன் வரையறைகளுமாகும். இதனையே நாட்டின் உரிமைப் பிரச்சினையாகவும் எடுத்துக்கொள்ளலாம். அந்நிலையில் இதற்குப் பொருத்தமான பெயர் 'அரசு' (Government), என்பதாகும். ஏனென்ருல், அரசு அல்லது அரசாங்கத்தின் மூலமாகத்தான் ஒரு நாட்டின் உரிமைகளையும் சட்ட திட்டங்களையும் வெளியிடுவதும் நிறைவேற்றப்படுவதுமாகும். சுருங்கக்கூறின், இதனையே அரசியல் அமைப்பு என்றும் கூறலாம். இவற்றிலிருந்து, அரசியல் வாழ்வும், அரசியல் அமைப்பும் எவ்விதம் ஒன்ருேடொன்று

1. The Study of Political Science and its Relation to Cognate Studies by Ernest Barker-Cambridge-1928.

இணைந்திருக்கின்றன என்பதும் நன்கு விளங்கும். அதனால் தான், அரசியல் வாழ்வும், அரசியல் அமைப்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் ஆகும் என்று முன்னமேயே குறிப்பிடப்பட்டதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

சரித்திர பூர்வமாக நோக்குவோமாகில், அரசாங்கம் அல்லது அரசியல் அமைப்பு, பல்வேறு முறைகளிலே காலங்காலமாக மக்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரியவருகின்றது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், சுமார் இரண்டாயிரம் (2000) ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க நாடுகளிலும், தமிழகத்திலும் முடியரசு—மன்னர் ஆட்சி(Monarchy) தான் அநேகமாக நின்று நிலவியது என்று சரித்திரங்கள் சான்று தருகின்றன; இலக்கியங்களும் இயம்புகின்றன. பன்னெடுங் காலம் வாழ்ந்தபின், மக்களிடத்திலும் மன்னர்களிடத்திலும் இயற்கையாக ஏற்படும் மாறுதலுக்கொப்ப, மன்னர் ஆட்சி சிதைந்து, உயர்குடி ஆட்சியும் (Aristocracy), அதன் பின்பு சர்வாதிகார ஆட்சியும் (Dictatorship), கடைசியாக மக்களாட்சியும் (Democracy) அமைந்து விடுகின்றனவென்று அரசியல் மேதைகள் அழகாக எடுத்துரைத்திருக்கின்றனர். மன்னர் ஆட்சியும் மற்றும் பல தன்மை பொருந்திய ஆட்சி அமைப்புகளைப் பற்றிய விளக்கமும் பின்னால் தரப்படுகிறது.

இருந்தபோதிலும், வரலாற்று உண்மைகளை உற்று நோக்கும் பொழுது, உதாரணமாக, மக்கள் ஆட்சி என்பதைப் பற்றி ஆராயும் பொழுது, எவ்விதம் அவ்வாட்சி அமையப்பெற்றது, பயன்பட்டது, பழுதுபட்டது, அதன் காரணமாகப் பாழ்பட்டது என்பன போன்ற உண்மைகளும் நமக்குத் தெரியவருகின்றன; அவ்வுண்மைகள் நமக்குப் படிப்பினையாகவும் அமைகின்றன. அதைக்கொண்டு எவ்விதம் தற்காலத்தில் உலகத்தின் பல பாகங்களில் இயங்கிவரும் மக்கள் ஆட்சியைச் சரிவர நடத்தி நல்ல பல நன்மைகளை நாம் பெறமுடியுமென்று அறிந்து கொள்வதிலும், மற்றவர்களுக்கு அறிவிப்பதிலும் பலகோடி நன்மைகள் நிச்சயமாக மக்களைப் போய்ச் சேருகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். மேலும், முன்பு குறிப்பிட்ட இருபெரும் பிரிவுகள் அதாவது, அரசியல் வாழ்வின் தோற்றம், அரசியல் அமைப்பு இவை இரண்டும் இணைபிரியாதவை என்பதும் நன்கு புலனாகின்றது. அப்பிரிவுகளும் நாமாகவே நம்முடைய நலனைக் கருதி அமைத்துக் கொண்டவை என்பதை வாசகர்கள் மனத்திற் கொள்ளவேண்டும். ஏனென்றால், அந்த இரு கூறுகளையும் ஒன்றாக இணைத்துப்

பார்க்கும் போதுதான் முழுமையான உண்மை நமக்குக் கிடைக்கவிருக்கின்றது. அந்த உண்மைதான் 'நாடு' (State) அல்லது 'மக்கள்' (People) என்று குறிப்பிடப்படுகிறது. அதன் காரணமாகத்தான் கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாடில்[2] கூறினுர்: 'மக்களின் அடிப்படைத் தேவைகளை நல்ல முறையில் அமைத்துக் கொடுப்பதற்கே நாடு தோன்றுகிறது'. இந்த அடிப்படை உண்மையையே இன்னும் தெளிவாக விளக்குகின்ருர் திருவள்ளுவர்[3]: 'தேவையான விளைபொருளும், தரமான மக்களும், தன்நலங் கருதாத செல்வரும் பொருந்திச் சேரும் போதே நாடு தோன்றுகிறது'. பண்டைக்கால அரசியல் மேதைகளான அரிஸ்டாடில், திருவள்ளுவர் போன்றவர்கள் கூறிச்சென்ற அடிப்படைக் கொள்கைகள், தற்காலத்திலும் அரசியல் அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் ஜானட் என்பாரை முக்கியமான உதாரணமாகக் கூறலாம்.

2. 'The State arises to meet the needs and demands of the people' -Aristotle.

3. Tirukkural by Tiruvalluvar
"That is the happy land where peasantry with plenty and the Sages of wisdom, with men of abundant wealth live in amity and comity', No. 731.

# 2. அரசியல் தத்துவம்

## (Political Philosophy)

அரசியல் தத்துவம் என்ருல் என்ன? அரசியல் என்னவென்பது முன்னமேயே விளக்கப்பட்டுள்ளதால், அவ்விளக்கத்தைத் தத்துவரீதியிலே ஆயும்பொழுது, அரசியல் தத்துவம் பெறப்படுகின்றதென்று சுருக்கமாகக் கூறலாம். எனினும் தத்துவம் என்பது என்னவென்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்; அப்போதுதான் தத்துவரீதியிலே அரசியல் விளக்கம் அமைவதும், அதன் முக்கியத்துவமும் எளிதில் விளங்கும். தத்துவம் என்ருல் என்னவென்பதைச் சுருக்கமாக விவரிப்போம்.

மெய்ப்பொருள் இயல் (Philosophy) என்பதும் தத்துவம் என்பதும் பெயர்ச்சொற்கள். அவற்றில், முதலில் குறிப்பிட்ட மெய்ப்பொருள் இயல் என்பது மிகவும் தெளிவாக அதன் பொருளை விளக்கி நிற்பதாகும். மெய்ப்பொருள் என்பது, என்றும் நிலைத்து நிற்பதும், அழியாத்தன்மை பெற்றதுமாகிய தன்னிகரில்லாத் தனிப்பெரும் பொருளாகும். இதனையே, தொல்காப்பியனுர்[4] 'கடவுள்' என்றும் 'கந்தழி' என்றும் கூறுகிருர். அந்தக் கருத்தினையே இன்னும் விளக்கமாகத் தெளிவுபடுத்துகிருர் திருவள்ளுவர்[5], தம்முடைய குறட்பாவிலே. 'மொழிகளின் எழுத்துகளெல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; அதுபோல் உலகமும் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது'. கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாடிலும் அப்பொருளை உலக இயக்கத்தின் முதல் இயக்குநர்

4. Tolkappiyam—Porulathikaram.

5. Tirukkural No : I
'A is the first stir in the world of sound; even so, the Eternal Adorable one is the prime impulse of all creation'.

(Prime Mover) என்று குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது. இப் பெரியோர்களின் கூற்றிலிருந்து நாம் உணரும் உண்மைகள் சுருங்கக் கூறின், பலகோடி உயிரினங்களும் அவற்றிலே முதன்மை பெறும் மனித இனமும், அவர்களின் இடம், பொருள், காலம் முதலியவற்றின் தொகுப்பாகிய இவ்வுலகமும் அதனைச் சார்ந்த மற்ற உலகங்களுக்கும் அப்பாற்பட்டதாயும், இவையாவும் சரிவர நடத்தப்படுவதற்கு இயக்கியாகவும் ஒரு பெரும்பொருள் இருந்து இயங்கி வருகின்றது என்பது பெறப்படும். அவ்வுயரிய பொருளை வாழ்த்தி வணங்கிப் போற்று வதையே மனித வாழ்வின் மிக உயர்ந்த பணியாகவும், பேறுகவும் கருதப்படுகிறது. சுருங்கக் கூறின், அப்பெரு வாழ்வினை மக்கள் இனம் பெற்று இன்புறுவதற்கே அரசியல் வாழ்வும் உதவியாக அமைய வேண்டுமென்பதும் பெறப்படும். அந்த உயரிய அடிப்படையின்கீழ் அமையும் அரசியல் வாழ்வே அரசியல் தத்துவம் என்று கூறினுல் ஓரளவு பொருத்தமான விடையாகக் கொள்ளலாம்.

தத்துவரீதியிலே அமையும் அரசியல் வாழ்வைப் பேராசிரி யர் போசங்கே[6] ஓர் அழகான உதாரணத்துடன் விளக்கம் தருகின்ருர். அரசியல் வாழ்வைத் தத்துவரீதியிலே நோக்குவ தென்பது கவிஞன் ஒரு மலரை வருணிப்பதற்கு ஒப்பாகும். சிறிது விளக்கமாகக் கூறுவோமாகில் நன்ருகச் செழிப்புடன் வளர்ந்து வனப்புடன் விளங்கும் ஒரு ரோசாமலர் அழகுடன் மிளிர்கின்றது என்பது கவிஞர்கள் ஒப்புக்கொள்ளும் உண்மை. எடுத்தாளும் உதாரணங்களின் குறைவுகளும், அவற்றின் நோக்கமும் வாசகர்கள் மனத்திற் கொள்ளவேண்டும். ஏனென்ருல் உதாரணங்களை எடுத்தாளுவதின் நோக்கம், அவை எந்தப் பொருளைச் சுட்டிக்காட்டுகிறது, விளக்கம் தருகிறது என்பதைப் பற்றித்தான். அப்போதுதான் அந்த உதாரணம் குறிப்பிடும் உண்மைப்பொருள் நன்கு விளங்கும். 'ரோசாமலர் அழகாக மிளிர்கின்றது' என்ற கூற்றில், 'அழகு' என்ற உண்மை குறிப்பிடப்படுவது நோக்கற்பாலது. மலர்களில் பொதுவாக அழகு இருக்கின்றது என்பதும், ரோசா மலரில் அவ்வழகு அமைதியுடன் அதிகமாகத் திகழ்கின்றது என்பதும் உண்மை. அதன் காரணமாகத்தானே என்னவோ பார்புகழ் பண்டித நேருவும் ரோசாமலரின் அழகுக்கு அடிமைப் பட்டாரோ என்னும் ஐயத்தினை வாசகர்களின் வளமான சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

6. Philosophical theory of the State by Prof. Bernard Bosanquet.

ரோசாமலர் அழகாகயிருக்கிறது என்பதை ஒரு கவிஞன் வருணிக்கும்போதும், அதே மலரை ஒரு தாவர இயல் பேராசிரியர் வருணிக்கும்போதும் வேறுபாடுகள் உண்டல்லவா? நிச்சயமாக உண்டு. அவ்வித வேறுபாடு ஏன் ஏற்படுகிறது என்ற வினுவிற்கு விடையும் விளக்கமும் பெற்றுவிட்டால், தத்துவ ரீதியிலே வருணிக்கப்படும் அரசியல் வாழ்வும் நன்ருகத் தெளிவாகிவிடும். கவிஞன் ரோசா மலரை வருணிக்கும்போது அந்த முழுமலரையும் கருத்திற்கொண்டு அதன் முக்காலங்களையும் நோக்கிற்கொண்டு, அம்மலரை அம்மலருக்காகவே வருணிக்கிருன். இத்திறனில் கவிஞன் மேற்கொண்டது தொகுப்பு நோக்கு (Synthetic approach). ஆனுல் மலரை வருணிப்பதற்குத் தாவர இயல் பேராசிரியர் மேற்கொண்டது பகுப்பு நோக்கு (Analytical approach) எனப்படும். இதனை இன்னும் சிறிது விளக்குவது நலம் என நம்புகிறேன்; ஏனென்ருல் இப் பகுப்பு முறைதான், பகுப்பு நோக்கு விஞ்ஞானமுறை (Scientific method) என்றும் ஏற்றிக் கூறப்படுவதாகும்.

விஞ்ஞான ரீதியிலே அமைந்த அறிவியல்களாகிய வேதியியல் (Chemistry), தாவரம் (Botany), உயிரினம் (Zoology) போன்ற பாடங்கள் பகுப்பு முறையிலே அமைந்தனவாகும் என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். உதாரணத்துடன் விளக்கவேண்டுமென்ருல் உயிரினவியலை எடுத்துக் கொள்வோம். ஒரே வகையான உயிரினங்களின் தன்மை பான்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு அவ்வகையிலுள்ள எல்லாவற்றையும் ஆராய்வதில்லை. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பதுபோல், முதுகெலும்புள்ள உயிரினங்களைப்பற்றி அறிவதற்கு முதுகெலும்புப் பிராணி ஒன்றை மட்டும் நன்ருகக் கவனித்து முழுமையாக ஆய்ந்து, அதன் முடிவுகளைக் கண்டு, தெளிந்து, அதன் பின்பு அக்கோட்பாடுகளை அந்த வகையைச்சார்ந்த எல்லா உயிரினங்களுக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்விதமான பகுப்பு முறையில் கையாளப்படும் நோக்கம் பொதுவாக எல்லோராலும் அறியப்படுவதும், சுலபமானதுமாகும். அவற்றை அதில் தேர்ச்சி பெற்ருேர் மீண்டும் சரிபார்க்கவும் முடியும். இவ்வகை அனுகூலங்களினுல்தான் விஞ்ஞானமுறை மேன்மேலும் வளர்ச்சி அடைய முடிகிறது. இருந்தபோதிலும், இப்பகுப்புமுறை கையாளப்படுவதனுல், ஒரு பொருளோ அல்லது ஓர் உயிரினமோ எவ்விதம் இயங்கும் என்பதைப் பற்றித்தான் கூற முடியுமேயொழிய, அதற்குமேல் எதையும் கூறுவதற்கில்லை.

இப்பிரச்சினையை இன்னும் சிறிது விளக்கினால் வாசகர்கள் இதன் முக்கியத்துவத்தை நன்றாக உணரமுடியும்.

முன்னதாகவே கூறப்பட்டதுபோல், தாவர இயலை எடுத்துக்கொள்வோம் ; அதில் மலரையே குறிப்பாக எடுத்துக்கொள்வோம். தாவர இயல் பேராசிரியர் ஒரு மலரை வருணிக்க வேண்டுமானால், அம்மலரைப் பல பாகங்களாகப் பிரித்து, அவற்றிற்கு வேறு வேறு பெயரிட்டழைத்து விளக்கம் தருகிறார். இந்த வருணனையிலே நாம் காண்பது மலரின் அழகையன்று, அழிவைத்தான் காண்கிறோம் ! ஏனென்றால், மலரை வருணிப்பதற்குப் பேராசிரியர் முற்படும்போதே, அம்மலரைப் பல பாகங்களாகப் பிரித்து, அதன் இயற்கையான ஒற்றுமை அமைப்பைக் கலைத்து, அதன் பிரிவுகளைப் பலவேறு பெயரிட்டு விளக்கம் தருகிறார். ஆனால், கவிஞனோ அதே மலரை வருணிக்கும்போது அம்மலரை அதன் இயற்கை அமைப்பில் உள்ளபடியே முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்குப் பொருள் கூறுகிறான். உதாரணத்திற்காகவேயன்றி வேறு எந்தவிதமான சொந்த அபிப்பிராயங்களின் அடிப்படையில் மேலே கூறப்பட்டுள்ள விளக்கங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கவிஞன் மலரின் அழகை ஏற்றுப் போற்றுகிறான் ; தாவர இயல் பேராசிரியர் அம்மலரின் அழகை வருணிக்கும் தோரணையில் அவ்வழகையே அழித்து விடுகிறார் என்று மேல்வாரியான பொருள்கொள்ளவும் முடியும். ஆனால் அவ்விதம் பொருள்கொள்வது முழு உண்மையாகாது. ஓர் உண்மையை எடுத்துக் காட்டுவதற்காகத்தானன்றி, அவ்வுதாரணங்களையே உண்மை என்று ஏற்றுக்கொள்வதற்கல்ல. சுருங்கக்கூறின் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

எவ்விதம் ஒரு கவிஞன் மலரின் அழகை வருணிக்கும்போது, அம்மலரை முழுமையாக எடுத்துக்கொள்கிறானோ, அதைப் போலவே தத்துவப் பேராசிரியர் அரசியலையும், மக்கள் வாழ்வு, அரசு, நாடு முதலிய யாவற்றையும் முழுமையாக எடுத்துக்கொண்டு, அதனுடைய நன்மை தீமைகளை எடைபோடுகிறார். அம்முயற்சியினால், அரசு எவ்விதம் இயங்குகிறது என்பதைவிட அரசு ஏன் இயங்குகிறது என்ற மிக முக்கியமான வினாவையும் எடுத்துக்காட்டுகிறார். மக்களின் நன்மைக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்காகவும்தான் அரசு அமைகிறது, அமையவேண்டும் என்ற பேருண்மை சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விளக்

கங்களின் மூலமாக மக்கள் நன்மை பெறுவதும், நலமடைவதும் தான் அரசின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்பதும் அரசியல் தத்துவத்தின் அடிப்படை அம்சமாகும். அவ்வடிப் படைத்தளத்தை இன்னும் சிறிது கூர்ந்து கவனிப்போமாகில் தத்துவரீதியிலே, அரசு இப்படித்தான் அமையவேண்டும்; அப்போதுதான் மக்கள் மக்களாக வாழமுடியும்; நாடு நாடாக அமையும்; இல்லையேல் மக்கள், மாக்கள் - விலங்குகள் ஆகி விடுவார்கள்; நாடு, காடாகிவிடும் என்ற உண்மைகள் எடுத்துக் சொல்லாமலேயே விளங்கும். இப்பேருண்மையைத்தான் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் அரிஸ்டாடில்: 'நாடு நிலை பெற்று வாழவேண்டுமென்றால், மக்களின் பெருவாழ்வை நல்ல முறையிலே அடைவதற்கு அமைப்புகள் ஏற்படவேண்டும்'.[7] இக்கட்டத்தில், வாசகர்கள் கவனிக்கவேண்டிய முக்கியமான செய்தி, அரிஸ்டாடிலின் முந்தைய கூற்று: 'மக்களின் அடிப் படைத்தேவைகளை நல்ல முறையில் அமைத்துக்கொடுப் பதற்கே நாடு தோன்றுகிறது'. பொதுவாகக் கூறினால், மக்களின் அடிப்படைத்தேவைகள், உண்பதும் உடுப்பதுமாகியவை களாகும். இவற்றினை மட்டும் மக்கள் அடைந்துவிட்டால் அவர்கள் பெருவாழ்வு பெற்றவர்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஏனென்றால், அடிப்படைத் தேவைகளையும் அமைத்துக்கொண்டு, அதற்குமேலும் மக்கள் உயர்ந்து வாழ்வதற்கு—பெருவாழ்வு வாழ்வதற்கு வழிமுறைகளை அமைத் துத் தந்தால்தான் நாடு நிலைத்து வாழமுடியும் என்ற உண்மை யைக் கவனிக்கவேண்டும்.

உடம்பின் தேவைகளை மட்டும் பேணிப் பாதுகாப்பதுடன் மனிதவாழ்வு அமைந்துவிடாது; ஏனென்றால், மனிதன் - ஆண், பெண் - உடம்பை மட்டும் பெறவில்லை, உள்ளத்தையும் சிந்தனையையும் பெற்றிருக்கிறான். அச்சிந்தனையைச் செம்மை யாக வளர்ப்பதில்தான் மனிதன், மனிதனாகிறான். அப்போது தான் நன்மை, தீமை; உண்மை, பொய்; அழகு, அழிவு; நீதி, நேர்மை என்பன போன்ற உயர்ந்த கோட்பாடுகளை மனிதன் உணரமுடியும். இவையாவும் அடையும் பொழுதுதான் மனிதன், மனிதனாகிறான்; அதற்காகத்தான் மக்களுடன் சேர்ந்து நாட்டில் வாழ்கிறான். எனவேதான் அவ்வித நல்ல பல சூழ் நிலைகளை அமைத்துக் கொடுப்பதும் அவற்றிற்கு இடையூறாக நிற்கும் சக்திகளை அழிப்பதும், நாட்டின்—அரசின் தலையாய கடமையுமாகும் என்று அரசியல் தத்துவம் பெருமையுடன்

7. 'The state continues to exist to promote the best life'-Aristotle.

பேசுகிறது. அவ்விதமான உயரிய சூழ்நிலைகள் நல்லமுறையிலே அமைந்தால், அது மக்களின் பெருவாழ்வு மட்டுமன்று, நாட்டின் பேரழகுமாகும் என்று எடுத்தியம்புகிருர் திருவள்ளுவர்: 'நோயின்மை, செல்வம், பொருள்வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு அழகு என்ப[8]'.

8. Tirukkural No. 738.

'Five are the blessings that crown a gifted realm immunity from disease, boundless wealth, smiling plenty, unmixed happiness and a sure defence'.

# 3. அரசியல் நூல்

(Political Science)

முன் கூறப்பெற்ற விளக்கங்களிலிருந்து அரசியல் தத்துவத்தின் தன்மையை ஓரளவு புரிந்து கொண்டவர்களாவோம். இந்நிலையில், தத்துவரீதியிலே அரசியல் வாழ்வை எடைபோட முடிவது, அரசியல் வாழ்வு அமைத்துக்கொண்ட பின்புதான். அவ்வித அமைப்புகள், அதன் தன்மை முதலியவற்றின் தொகுப்பே அரசியல் நூலாகும். இதனையே தத்துவரீதியிலே நோக்குங்கால், அரசியல் தத்துவம் என்று அழைக்கப்படுகிற தென்ற உண்மையை வாசகர்கள் மனத்திற்கொள்ளவேண்டும். அரசியல் நூலின் வரையறைகளைச் சுருக்கமாகக் கவனிக்கற்பாலது. இம்முயற்சியில் வெற்றிபெற வேண்டுமென்றால் அரசியல் நூல் என்ன என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து, அங்குக் கையாளப்படும் முறைகளும் அதன் தன்மைகளும் தெளிவாக விளக்கப்பெறவேண்டும். ஒரு நாட்டின் எல்லையையும், அதற்குள் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், அவர்கள் அமைத்துக்கொண்ட ஒழுங்கு, சட்டம் முதலிய நியதிகளையும் பற்றி அறிவிப்பதுதான் அரசியல் நூல் என்று கூறலாம். இப்போக்கானது, ஒரு நாட்டுடன் அமையாமல், வேறு நாடுகளுடன் தொடர்பு கொள்வதும், அந்நாட்டு மக்களுடன் தம்நாட்டு மக்களையும் தொடர்புகொள்ளச் செய்வதுமாகிய உயர்ந்த செயல்களையும் பற்றி அறிவதுமாகும். இருந்தபோதிலும், ஒரு நாட்டின் உள் விவகாரங்களைப்பற்றியே மிகவும் தெளிவாகத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்வதற்கு முயற்சி செய்வதையே அரசியல் நூல் பொதுவாக மேற்கொள்ளும் பணியாகும் எனக்கூறலாம். இந்த ரீதியிலே சுருங்கக்கூறின் அரசியல் நூலின் மிகவும் முக்கிய பாகங்கள் மூன்று என்று குறிப்பிடலாம். அவையாவன: நாடு, அரசு, சட்டம்.

வரலாற்றுரீதியிலே பேசுவோமாகில், ஒரு நாட்டினுடைய தோற்றத்தைப் பற்றியும், அரசியல் அமைப்புகளையும், அவற்றின் கொள்கைகளையும் பற்றிய விளக்கமே அரசியல் நூல் என்று கூறலாம். அவ்வித விளக்கங்களிலிருந்து மக்களிடத்தில் உண்டாகிய மாற்றங்களையும் அவற்றின் முறையான வளர்ச்சிகளையும் நாம் உணரமுடியும். அதன் காரணமாக நாம் பெறும் பயன் மிகவும் முக்கியத்துவம் அடைகிறது; எவ்விதம் பயனடைகிறோம் என்பதைச் சிறிது விளக்குவோம். கடந்தகால அரசியல் வாழ்வு, அரசியல் முறை முதலியவற்றைத் தற்கால அரசியல் வாழ்வு முதலியவற்றுடன் இணைத்துப் பார்க்கவும், அதன் மூலமாகக் கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளையும், நன்மை பயவாத முறைகளையும், நிகழ்காலத்தில் நிச்சயமாக நீக்கிவிடவும், அதன்காரணமாகத் தேவையான நன்மை பயக்கும் முறைகளை மட்டும் பின்பற்றவும் முடியும். இன்னும் கூறப்போனால், அரசியல் நூல், சென்ற காலங்களில் நடந்த அரசியல் சம்பவங்களை மட்டுமல்லாமல், வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளையும் சுட்டிக்காட்ட முடிகிறது. அந்த ரீதியிலே நோக்குவோமாகில், அரசியல் நூல் என்பது, அரசியல் வாழ்வு இப்படித்தான் அமையவேண்டும்; அப்போதுதான் மக்கள் எல்லோரும் நல்வாழ்வு வாழமுடியும்; நாடு நலமடையும் என்பன போன்ற உயர்ந்த கருத்துகளை ஒருங்கே அமைத்துத் தருவதாகும். அந்நிலையில், அரசியல் நூலும் முறையியல் நூல் (Normative Science) என்ற தன்மையைப் பெற்று விடுகிறது என்பது கவனிக்கத்தக்கது. இவ்விதமாக, மக்களின் நலனையே குறிக்கோளாகக்கொண்டு, அதற்குச் சாதகமாகக் கோட்பாடுகளை வரைந்து, கொள்கைகளை நிறுவி, அவற்றின் முறையே நாட்டு வளர்ச்சியைப் பேணிக்காப்பதே அரசின் கடமை என்ற பேருண்மையை அரசியல் நூல் எடுத்துக்காட்டுகிறது என்று கூறலாம்.

மேலே கூறப்பெற்ற விளக்கங்களைச் சில அரசியல் மேதைகள் முழுமனத்துடன் ஒப்புக்கொள்வதில்லை. ஏனென்றால், அரசியல் நூல், நூலியல் (Science) தன்மையை முழுதும் பெறுவதற்கில்லை என்பதே அவர்களின் கூற்று; அவர்கள் கூற்றிலும் உண்மையிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. ஏனென்றால், நூலியல் தன்மைகளாகிய உற்று நோக்கல் (Observation), சரிபார்த்தல் (Verification)ஆகிய முறைகளை அரசியல் நூல்முழுதும் அனுசரிக்கமுடியாது; அதன் காரணம், அரசியல் வாழ்வு மக்க

ளைப் பற்றியது; கடந்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றியது. இவை யாவும் நூலியல் தன்மைகளால் எடை போட முடியாது என்பது சொல்லாமலேயே விளங்கும். அதைப் போலவே, நிகழ்காலத்தில் தோன்றி அமையும் அரசியல் வாழ்வு, மக்களின் மனநிலை, கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றையும் நூலியல் தன்மைகளால் அறிய முற்படுவது மிகவும் கடினம். இவ்விதமாக ஒப்புக்கொள்ளக் கூடிய இடர்ப் பாடுகள் இருந்தபோதிலும் அரசியல் நூல், நூலியல் தன்மை யைப் பெற்றுள்ளது என்பதைக் கீழ்வருமாறு விளக்குவோம்.

நூலியல் என்றால் என்னவென்பதை முதலில் தெரிந்துகொள் வோம். ஒரு பொருளைப்பற்றித் தொடர்ந்து ஆய்ந்து அறிந்து கொள்வது பொதுவாக நூலியல் தன்மையாகும். இம்முறையில் உற்று நோக்கல், சரிபார்த்தல் போன்றவைகளும் அடங்கும். இம்முறை பயன்படுவது எந்த ஒரு பொருளைப்பற்றி அல்லது செய்தியைப் பற்றியதாகவும் இருக்கலாம். இருந்தபோதிலும், எப்பொருளைப் பற்றியது என்பது முக்கியமன்று; அப்பொருளைத் தெரிந்துகொள்வதற்கு எத்தன்மையதான முறைகள் கையாளப் படுகின்றன; அவற்றில் நூலியல்தன்மை அமைந்திருக்கின்றனவா என்பதுதான் முக்கியம். தற்போது, அரசியல் நூலை எடுத்துக் கொள்வோம். அது பெற்றுக்கொள்ளும் பொருள் நாடு; அறிய முயலும் செய்திகள் நாட்டு மக்களைப் பற்றியதாகும். மக்கள் எப்போது வாழ்ந்தார்கள்; எவ்விதம் வாழ்ந்தார்கள்; எதற்காக வாழ்ந்தார்கள் என்பன போன்ற பிரச்சினைகளாகும். இவை யாவும் சரிவரப் புரிந்துகொள்வது கடினமே என்பது உண்மை யானாலும், ஓரளவு இவற்றினைப் பற்றி நாம் நிச்சயமாக அறிய முடிகிறது என்பதை மறுக்கமுடியாது. அது நிற்க, தெரிந்து கொள்வதில் இடையூறுகள் இருந்தபோதிலும், தெரிந்து கொள்ள முற்படும் பொருள்களாகிய நாடு, அரசு, சட்டம் முதலி யவை மிகவும் தெளிவாகவும், குறிப்பாகவும் கிடைக்கப் பெறு கின்றன என்பது வரலாற்று ரீதியிலேயே நிருபிக்கப்பட்ட உண்மையாகும். கடந்த காலங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நல்ல முறையிலே தெரிந்து கொண்டால், கடந்த காலங்களில் நிகழ்ந்த தவறுகளை நிகழ்காலத்தில் ஏற்படாமல் பாதுகாக்க லாம். கடந்த காலங்களில் மக்கள் பெருமல் வாழ்ந்த நல்ல பல நன்மைகளை, நிகழ்காலத்தில் அமைத்துக் கொடுக்கலாம்; அதற் கொப்ப அரசியல் அமைப்புகளையும் மக்களின் தேவைகளை யும், அரசாட்சியின் பொறுப்புகளையும் தெளிவாகத் திட்ட வட்டமாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். இவ்வித நல்ல பல

நன்மைகளை நாம் அடையமுடியும் என்பது உண்மை. இவ்வித நல் வாய்ப்புகளை நாம் பெறுவதற்குச் சாதகமாகயிருப்பது நூலியல் நன்மைகளை ஒருவாறு அடையப்பெற்ற அரசியல் நூலின் படிப்பினையே என்பதை வாசகர்களின் கவனத்திற்குச் சுட்டிக் காட்டுகிறேன். இவ்விதம் அரசியல் நூலுக்கும் பெருமக்களின் நல்வாழ்வுக்கும் நேரடியான தொடர்பு உண்டு என்ற உயர்ந்த கருத்துகள் எவ்விதம் தற்காலத்தில் தோன்றின, வளர்ந்தன என்பன போன்ற சுவாரசியமான கருத்துகள் அடுத்த பகுதியில் விளக்கப்பெறும்.

# 4. அரசியல் நூல் தற்காலத்தில் தோன்றினமைக்கான காரணங்கள்

தற்காலத்தில், குறிப்பாக 19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சிகளும், அதன் காரணமாக ஐரோப்பாவில் தோன்றிய அரசியல் அமைப்புகளும், அவைகளை ஊக்குவித்த அறிஞர் பெருமக்கள் சிலரைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறோம். உதாரணமாகப் பேராசிரியர் எர்னஸ்ட் பார்க்கர்[9], 19ஆம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட சமுதாய மாறுதல்களையும், அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் வரலாற்றுரீதியாக வரையறுத்துக் காட்டுகின்ருர். அவற்றிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எதுவென்ருல் மனிதனையும், மக்கள் சமுதாயத்தையும் பற்றி நன்ருகப் புரிந்துகொள்வதற்கு முனைந்த ஆராய்ச்சிகளும், அறிவு விளக்கங்களுமாகும். குறிப்பாகச் சமுதாயப் பொதுவியல் (Social philosophy) போன்ற நூல்கள் புதிய புதிய கருத்துகளை வெளியிட்டன; அதன் காரணமாக, மனிதனின் வாழ்க்கையும் மக்களின் வாழ்க்கையும் எவ்விதம் நேரடியாக இணைந்துள்ளன என்பன போன்ற அடிப்படைக் கொள்கைகளை எடுத்துக் காட்டின. மனிதன் தனிமையாக வாழ்ந்த போதிலும் சமுதாயத்தின் கோட்பாடுகளால் எவ்விதம் பாதிக்கப்படுகிருன்; எனவே சமுதாயத்தின் அமைப்பு எவ்விதம் அமையவேண்டும்; அவ்விதம் நல்ல அடிப்படையில் சமுதாயம் அமைந்தால் தான், மனிதனும் மக்களும் நல்வாழ்வு பெறமுடியும் என்பன போன்ற சமூகப் பொதுநலக் கருத்துகள் வெளியிடப்பட்டன. இந்நிலையில், வேறு சில துறைகளிலிருந்தும் புதிய கருத்துகள் வழங்கப்பட்டன. அவையாவன: உயிரியல் (Biology), அரசியல் பொருளாதாரம் (Political Economy) போன்றவையாகும்.

9. Political Thought in England-1848-1914 by Ernest Barker

இவற்றைத்தவிர, சார்லஸ் டார்வினின் பரிணுமக் கொள்கையும் (Evolutionary theory), அதன் சுவாரசியமான முடிவுகளும் 19ஆம் நூற்ருண்டின் சிந்தனை உலகத்திலே ஒரு புதிய திருப்பத் தையே தோற்றுவித்தது என்று கூறிஞல் அது மிகையாகாது.

இவ்விதமாக 19ஆம் நூற்ருண்டில் ஆங்கிலேயர்களிடையே ஏற்பட்ட சமுதாய விழிப்புணர்ச்சி மேலும் வளர்ச்சியடை வதற்கு ஜெர்மானியர்களும், பிரெஞ்சு, அமெரிக்க நாட்டினரும் உதவி புரிந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டவியல் (Jurisprudence), உளவியல் (Psychology) போன்ற மனிதனுக் குத் தேவையானதும் பயனளிக்கக் கூடியதுமாகிய அறிவியல் கள், ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்க நாடுகளில் புதிய புதிய கோணங்களிலிருந்து ஆராயப்பட்டு, அதன் மூலமாகக் கிடைத்த அனுமானங்களும், முடிபுகளும் ஐரோப்பிய நாட்டினரனை வருக்கும் அளிக்கப்பட்டது. அதன் விளைவு என்னவென்ருல், மக்கள் சமுதாயம் வளமாக முன்னேற வேண்டுமென்ருல், ஒரு சிலர் மட்டும் எல்லாவிதச் சலுகைகளைப் பெற்று வாழ்வது அல்ல; ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தம் மனச்சாட்சி யின் பிரகாரம் வாழ்வதற்கும், பேசுவதற்கும், மற்றவர்களுடன் கூடி நட்புக் கொள்வதற்கும், வழிபடுவதற்கும் தேவையான அடிப்படை உரிமைகள் சட்ட ரீதியாக அமைத்துக் கொடுக்கப் படவேண்டுமென்பதே. அவ்விதம் அமைவதே நல்ல அரசி யல் வாழ்வாகும் என்பன போன்ற பொதுநோக்குக் கருத்து கள் வெளிவந்தன; வளர்ந்தன. அதன் பயஞகத்தான் இன்றைய இருபதாம் நூற்ருண்டில் உலகச் சமுதாயத்திலேயே ஒரு விழிப்புணர்வு தோன்றி, எல்லோரும் நலமாக வாழ வகை செய்வதே, நாட்டின், அரசின் தலையாய கடமை என்ற கொள்கை வேரூன்றிவிட்டது என்பதை வாசகர்கள் உணர வேண்டும். இதன் காரணமாகத்தான் தற்காலத்தில் சரித்திர நூல்களும் முக்கியத்துவம் பெற்றன. ஏனென்ருல், 19ஆம் நூற்ருண்டில், மக்கள் இனம் எவ்விதம் வாழ்ந்தது, எந்த வாழ்க்கைக்காக ஏங்கித் தவித்து, இடர்களை எதிர் கொண்டு, அவற்றில் வெற்றியும் கண்டது என்பன போன்ற நிகழ்ச்சிக் குறிப்புகள் சென்ற நூற்ருண்டு வரலாருக, இருபதாம் நூற்ருண்டில் அமைந்துவிட்டது! அதைப் போலவே, 21ஆம் நூற்ருண்டில் இருபதாம் நூற்ருண்டின் பெருமைகள் பழைய வரலாறு ஆகிவிடலாம்! இருந்த போதிலும், இவ்வரலாறுகளை மக்கள் உணருந்தோறும், முந்தைய நிகழ்ச்சிகளில் இழைத்த பெருந்தவறுகளை, தற்போதைய நிகழ்ச்சிகளிலிருந்து நீக்கவும்,

அதன் பயனுக நல்ல பல நன்மைகளைப் பெறவும் முடியும் என்பது சொல்லாமலே விளங்கும்.

19ஆம் நூற்ருண்டில் ஆங்கிலேயர்களின் சமுதாய அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள், ஐரோப்பிய நாட்டவருக்கு மட்டுமல்லாமல், உலக மக்கள் அனைவருக்குமே ஒரு புதிய சகாப்தம் உண்டாக்கியது என்று கூறினுல் அது மிகையாகாது. அவ்விதத் திருப்பத்தை-புதிய சகாப்தத்தை உண்டாக்கியவர்கள் அறிவியல் துறை ஆராய்ச்சி வல்லுநர்கள் என்பது முன்னமேயே கூறப்பட்டது. அம்முயற்சியில் வெற்றி பெறுவதற்கு வழிகோலியவர்களில் இன்னும் சிலரைப் பற்றி வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமென்று கருதுகிறேன். ஏனென்ருல், ஒரு குறிப்பிட்ட நாட்டினரன்றி, மனித இனமே விழிப்புணர்ச்சி அடைந்ததென்ருல், அதற்கு எத்துணைபேர் எவ்வெத் துறையில் பணியாற்றியிருப்பர் என்பது வாசகர்கள் அறிந்திருக்க வேண்டியதாகும். எனவே, ஒரு சில உத்தமர்களைப்பற்றி இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும். ஆங்கிலேய இலக்கியம், பொருளாதாரம், வரலாறு போன்ற துறைகளிலே வல்லமை பெற்ற மேதைகளான கார்லே, ஜான் ரஸ்கின், மேத்யு அர்னேல்டு போன்ருேர் தங்களின் எழுத்துத் திறமையினுல் மக்களைத் தட்டி எழுப்பினுர்கள். புனைகதாசிரியர்களான சார்லஸ் டிக்கன்ஸ், கிங்ஸ்லே போன்ருேர் தங்களுடைய செம்மையான கற்பனைக் கதைகளின் மூலம் உண்மைகளை மக்களுக்கு உணர்த்தினுர்கள். பெர்னுட் ஷா போன்ற நாடக ஆசிரியர்கள், பொதுச் சமுதாயக் கோட்பாடுகளை, மக்கள் சமுதாயத்தின் மனக்கண் முன்னே விவரித்தார்கள். இப்பெரியோர்களின் உயர்ந்த தொண்டுகளை ஒரு சில வார்த்தைகளைக் கொண்டு நிச்சயமாக வருணிக்க என்னுல் இயலாது; அந்தத் திறமை எனக்கு இல்லை என்பதைப் பணிவுடன் கூறி, அப்பணியினைத் தொடர்ந்து அதனுல் ஏற்படும் நல்ல பல நன்மைகளைப் பெறும் வாய்ப்பினை வாசகர்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

# 5. அரசியல் தத்துவமும் அறிவியல்களும்

எந்த அறிவியல் பாடங்களானாலும், அவற்றின் அடிப் படை நோக்கம் ஒன்றுதான் ; அவை மனித நல்வாழ்வுக்கு எவ்விதம் பயன்படுகின்றன என்பதுதான். அந்த உண்மை யான அடிப்படை நோக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டால், அறிவியல் நூல்களுக்கும், அரசியல் நூலுக்கும் உள்ள நேரடி யான தொடர்பு நன்கு புலனாகிவிடும். செம்மையான அரசியல் வாழ்வு அமைந்தால்தான், மனிதனுடைய முயற்சிகள் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடையவும், அவற்றின் பயனை மனித சமுதாயமே பெறவும் முடியும். அவ்விதமான சீரிய சமுதாய அமைப்பை நிரந்தரமான நிலையில் அமைத்துக் கொடுப்பது அரசியல் தத்துவம்தான் என்பதை வாசகர்கள் இந்நிலையில் ஓரளவு ஒப்புக் கொள்வார்களென்று நம்புகிறேன். ஏனென்றால், அரசியல் தத்துவம்தான் என்றும் நின்று நிலவக்கூடிய செம்மை யான அரசியல் அமைப்பை வகுத்துக்கொடுப்பது மட்டுமன்று, வரையறுத்துக்கொடுப்பது மட்டுமன்று, இப்படித்தான் வாழ வேண்டும் என்று கட்டளையிடுவதுபோல் கருத்துகளை வெளி யிடுகிறது. அவ்விதமான அறக்கட்டளை அமைத்துக் கொடுப் பதற்கு அரசியல் தத்துவத்திற்குத்தான் தகுதி உண்டென்றால், அது உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை நிச்சயமாக. இவ்வ டிப்படை உண்மையை வாசகர்கள் மனத்திற்கொண்டால், அரசியல் நூலுக்கும் மற்றப் பல அறிவியல் நூல்களுக்கும் எவ் விதம் இணைப்பும் பிணைப்பும் இருக்கின்றன ; இருக்கவேண்டும் என்னும் கருத்துகள் நன்கு தெளிவாகிவிடும். இக்கூற்றின் பிரகாரம் எல்லா அறிவியல்களும், மனித வாழ்க்கைக்கு எந்த ஒரு விதத்திலாவது பயன்பட்டுத்தான் வருகிறது. ஆகவே எல்லாவித அறிவியல் நூல்களும், அவற்றின் கருத்துகளும், அரசியல் நூலுக்குப் பிணைப்புக்கொண்டவைகளே என்று பொது வாகக் கூறலாம். இருந்தபோதிலும், ஒரு சில முக்கியமான அறிவியல் நூல்களை எடுத்துக்கூறி, அவை அரசியல் நூலுடன்

எவ்விதம் இணைந்துள்ளனவென்பதைத் தெளிவாக வரையறுத்துக் கூறுவது நல்ல பயனைத் தரும் என்று நம்புகிறேன்.

### (i) அரசியலும் அறவியலும் (Ethics)

தெளிவான சிந்தனையுடன் கவனிப்போமாகில், அரசியல் வேறு, அறவியல் வேறு என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. இந்த உண்மையைத்தான் மிகவும் தெளிவாக விளக்கித் தந்தார் கிரேக்கப் பேரறிஞர் பிளேட்டோ.[10] இருந்தபோதிலும் அறிவியல் கோட்பாடுகளும் அரசியல் கோட்பாடுகளும் தனித் தனியாக வரையறுத்துக் குறிப்பிடவேண்டும் என்ற கருத்தினை அரிஸ்டாடில்[11] வலியுறுத்தினுர். அதற்குக் காரணம் அவ்விரண்டு இயல்களும் அடிப்படையில் வெவ்வேறல்ல; அளவிலும் அமைப்பிலும்தான் தனித்தனியாகப் பிரிந்துள்ளன. ஏனென்றுல், அரசியல் ஒரு நாட்டு மக்களின் தொகுப்பு வாழ்வையும், அதன் சட்ட திட்டங்களையும் பற்றியதாகும்; அறவியலோ தனி மனிதனின் ஒழுக்க வரம்புகளைப் பற்றியதாகும். தனி மனிதனின் ஒழுக்கமான வாழ்வு சமுதாய வாழ்வில்தான் நலம்பெற முடியும் என்பதையும் கூறி, அறவியலின் பொதுத் தன்மையையும், இந்நிலையில் குறிப்பிட விரும்புகிறேன். இந்நிலைமையை இன்னும் சிறிது கூர்ந்து கவனிப்போமாகில், அடிப்படையில் அவ்விரண்டு இயல்களும் இணைபிரியாதவை என்பது நன்கு விளங்கும். எவ்விதம் என்றுல், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒழுக்கச் சீலர்களாய் வாழ்ந்து, மற்றவர்களுக்கும் வழிகாட்டத் தகுதி பெற்றவர்களாகத் திகழ்வதற்கு, அரசியல் சமுதாயம் சூழ்நிலைகளை அமைத்துத் தரவேண்டியது கடமையாகும். இக்கருத்தினையே, ஐரோப்பிய தத்துவ மேதை ஏகல் (Hegel) என்பார் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுகின்றுர்: 'உண்மையான அரசியலின் முதற்கடமை என்னவென்றுல், அறவியலைப் பேணிக் காப்பதே'. அறம் வாழ்க்கைக்குத் துணையாக மட்டுமன்று, வழியாகவும் அமைந்து கிடக்கின்றது என்ற பேருண்மையைத் திருவள்ளுவர் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்: 'ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானுனல், அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கதொன்றுமில்லை'.[12] அறவாழ்க்கையின் பெருமையை

10. Republic by Plato.
11. Ethics by Aristotle.
12. Tirukkural No : 46.
'No need for an householder to long for other spheres of life, if he keeps the lustre of his soul uncontaminated amidst the ceaseless toil of his home'.

யும், அதனால் அடையப்பெறும் உயரிய இன்பத்தையும் திருவள்ளுவர் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார் : 'அறநெறியில் வாழ்வதன் பயனாகப் பெறுவதே இன்பமாகும் ; அறத்தோடு பொருந்தாமல் வருவனவெல்லாம் இன்பம் அல்லாதவை; புகழும் இல்லாதவை.'[13] இப்பெரியோர்களின் கூற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மை என்னவென்றால், அரசியல், மனிதனுக்கு, மக்களுக்கு, உலகத்திற்கே பயன்பட வேண்டுமென்றால், அதன் அடிப்படை அறவியலில்தான் அமைய வேண்டுமென்பதே.

## (ii) அரசியலும் பொருளியலும் (Economics)

அரசியல் அமைப்பும் அதன் காரணமாக ஏற்படும் சீரான பொருளாதார நிலைமையும் சேர்ந்துதான் ஒரு நாட்டை வளம் பெறச் செய்யமுடியும். இந்நிலைமையில், ஒரு நாட்டின் சட்ட திட்டங்கள் எவ்வெவ்விதங்களில் பொருள் வருவாயை வளர்ப்பதற்குப் பயன்படுகின்றன அல்லது அதற்கு முரணாகயிருக்கின்றன என்பன போன்ற நிலைமைகள் ஏற்படுவதன் மூலமாகப் பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் எவ்வளவு நெருங்கிய பிணைப்பு இருக்கிறது என்பது எடுத்துச் சொல்லாமலேயே விளங்கும் உண்மையாகும். இந்த உண்மையைத்தான் பிளேட்டோ வலியுறுத்தினார். பொருட்செல்வம் உடையவர்களுக்கே அரசியலில் பங்குகொள்ள முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கூறினார். இக்கூற்றைத் தழுவி அரிஸ்டாடிலும் கீழ்க்கண்ட விளக்கம் தந்தார். ஒரு நாட்டின் அமைப்பும் அரசியல் வாழ்வும், அந்நாட்டு மக்களின்பொருளாதார நிலைமையைப் பொறுத்ததே ; ஒரு நாட்டில் ஏற்படும் குழப்பங்களுக்கும், குமுறல்களுக்கும், கொந்தளிப்பிற்கும் முக்கியக் காரணம் பொருளாதாரப் பிரச்சினையே. எனவே, ஒரு நாட்டில் அமைதி நிலவி, அரசு நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால், அந்நாட்டு மக்களிடையே ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் செம்மையான முறைகளை அமைத்துக் காப்பாற்றவேண்டியது அரசின் தலையாய கடமையாகும். பொருளாதாரத்தை எந்தெந்த வழிகளில் அதிகம் பெறலாம், அவற்றிற்கு அனுகூலமாக எந்த விதத்தில் அரசு அமையவேண்டும் என்பன போன்ற சுவையான கருத்துகளை விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார் பழங்கால இந்தியாவின் அரசியல்

13. Ibid. No: 39.

'Verily that alone is the delight which springs from the spirit of righteousness; all else bring in their train either pain or shame.'

மேதை கௌடில்யர்.[14] பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த மேல் நாட்டு அரசியல் மேதை மாக்கிவலி (Machiavelli) என்பாரும், பொருளாதார அமைப்பும், அரசியல் வாழ்வும் ஒன்றையொன்று இணைபிரியாதவை என்பதை வலியுறுத்தியிருக்கின்றார். பொருளாதாரத்தின் அடிப்படையில், மக்களிடத்தில் பிரிவினைகளை அதாவது குறைந்த வருவாயைப் பெற்றவர்கள், அதிகமான வருவாயை அடைந்தவர்கள் என்பவற்றை ஏற்படுத்தி, அவர்களைக் கட்டிக் காப்பதின் மூலமாக அரசு நிரந்தரமாகத் தம் ஆணையைச் செலுத்துவதற்கு முடியும்; நல்ல பொருளாதார நிலைமையையும் பெறமுடியும்; அரசியல் வாழ்வும் தழைக்கும்; அரசனும் அசைக்க முடியாத உறுதியான நிலையைப் பெற்று வாழமுடியும். மாக்கிவலியின் கூற்றுகளிலிருந்து அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள நெருங்கிய பிணைப்பு மட்டுமல்லாமல், அரசியல் முறைகளில் முடியாட்சியின் (Monarchy) முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதை வாசகர்கள் கவனத்திற் கொள்வார்களாக.

19ஆம் நூற்றாண்டுவரை அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்றுதான் அழைக்கப்பட்டது. அதிலிருந்து அரசியலும், பொருளாதாரமும் எவ்வளவு நெருக்கமாக இருந்து, வளர்ந்து வந்துள்ளன என்பது நன்கு விளங்கும். பொருளாதாரம் என்ற தலைப்பையே எடுத்துக்கொண்டாலும், அதில் அமைந்துள்ள பிரிவுகள் மக்களின் தேவைகளைப் பற்றியும், அத்தேவைகள் எவ்விதம் உண்டாக்கப்படுகின்றன; உண்டாக்கப்பெற்ற பொருள்கள்—செல்வம்—மக்களிடத்தில் எந்த ரீதியில் பங்கிடப்படுகின்றன என்பன போன்ற முக்கியப் பாகங்களைக் கொண்டதாகும். அவற்றையே சுருக்கமாகக் குறிப்பிடுவோமாகில், உற்பத்தி (Production), பங்கீடு (Distribution), நுகர்வு (Consumption) என்று குறிப்பிடலாம். இம் மூன்று பிரிவுகளும் எவ்விதம் அமையப்பெற்றுள்ளன, அதன் காரணமாக மக்கள் எவ்வளவு நலம் பெறுகிறார்கள் என்பன போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுவது அரசியல் சட்டங்களினாலேயே. ஆகவே அரசியல் சட்ட திட்டங்களின் நோக்கம், மக்கள் எல்லோரும் தம் தேவைகளைப் பெறுவதற்கு ஏற்றவாறு பொருளாதார நிலைமை ஏற்படவேண்டுமென்பதே. இதனையொட்டியே வரிவிதிப்பு (Taxation), நாணயச் செலாவணி (Currency) போன்றவை அரசினரால் அமைக்கப்படுகின்றன. அவற்றின் வருவாயைப் பொருத்தே அந்த நாடு செல்வச் செழிப்பு அடைகிறது.

14. Artha Sastra by Kautilya.

இருபதாம் நூற்றுண்டில் நிலவிவரும், பொதுவுடைமைச் சமுதாயம் (Socialistic society) என்பது அரசியல் கொள்கை எனப்படுவதைவிடப் பொருளாதாரக் கொள்கை என்று கூறுவதே பொருத்தமுடையதாகும். ஏனென்ருல், பொதுவுடைமைச் சமுதாயத்தில் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நல்வாழ்வுக்குத் தேவைப்படும் உரிமைகளே அரசினரால் அமைத்துக் கொடுக்கவேண்டிய சூழ்நிலே ஏற்படுகிறது. இவ்விதச் சமுதாய அமைப்புக்கு அடிகோலியவர்கள் ஆங்கிலேயர்களும் ரஷியமக்களுமாவர் என்பது வரலாற்றுச் செய்தியாகும். 16ஆம் நூற்ருண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சியும் (Industrial Revolution), 19ஆம் நூற்ருண்டில் ஏற்பட்ட ரஷியப் புரட்சியும் (1917 Revolution) இருபதாம் நூற்ருண்டில் அமைப்பெற்ற பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு அடிகோலிகள் என்ருல் அது உண்மையைத் தவிர வேறென்றுமில்லே. மாபெரும் தொழில் நிறுவனங்கள் தேசிய உடமை ஆக்கப்பட்டதும், அதன் காரணமாகச் செல்வந்தர்களுக்கு மட்டுமல்லாமல், தொழிலாளர், பணியாளர் போன்ருேர்க்கும் தேவையான பொருள் வருவாய், சம்பள ரீதியில் அல்ல, சமத்துவ ரீதியில் பங்கிட்டுத்தரவேண்டிய நிலேமை ஏற்பட்டுள்ளது. இவற்றிலிருந்து அரசியலும் பொருளாதாரமும் ஒன்றையொன்று பிணேந்துள்ள வாழ்க்கைத் தத்துவமே என்பது சொல்லாமலே விளங்கும் உண்மையாகும்.

### (iii) அரசியலும் வரலாறும் (History)

பல பெரியோர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளின் தொகுப்பையே ஒரு நாட்டின் வரலாறு என்று கூறினுல் அது மிகையாகாது. ஏனென்ருல், வரலாற்றிலே நாம் காண்பது முக்கியமாகக் கடந்தகாலச் சம்பவங்களும், அவை ஏற்பட்டதற்கான காரணங்களுமாகும். இவை யாவும், ஒரு சில பெரியோர்கள், சான்ருேர்கள், வீரர்கள், தலேவர்கள் ஆகியோரைப் பற்றியும், அவர்கள் ஆற்றிய அரிய பெரிய செயல்களேப் பற்றியும், அதனுல் ஏற்பட்ட விளேவுகளேப் பற்றியதுமாகும். இந்நிலேயில் அக்காரணங்கள் எவ்விதத் தன்மைகளேப் பெற்றிருந்தனவென்று அறுதியிட்டுக் கூறமுடியாது. உதாரணமாகச் சொல்வோமாகில், நிகழ்ச்சிகள் பொருளாதாரப் பிரச்சினேயாகவும், சமுதாயப் பிரச்சினேயாகவும் இருந்திருக்கலாம். கடந்த காலச் சம்பவங்களே இவ்விதம் ஆராயும்போதுதான், மனிதனின் தேவைகள் எவ்வளவு இருக்கின்றனவோ அவை அனைத்தும்

எவ்விதம் அடையப்பெற்றன ; அதன் காரணமாக எத்துணை முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன ; அதன் விளைவாக எத்தன்மையான சமுதாயம் வளர்ந்தது ; வருங்கால மக்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகிறது என்பனபோன்ற பலவிதச் செய்திகளும் வரலாற்றிலே இடம் பெறுவதை நன்கு காணலாம். இதனால்தான், வரலாறு ஒரு முக்கிய இடம் பெற்று விளங்கு கிறது தற்காலத்தில். ஏனென்றால், கடந்த காலத்திலும் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் ; அவர்களின் தேவைகள் இன்றுபோல் அன்றும் இருந்திருக்கின்றன. எனவே கடந்த காலத்தில் மக்கள் எந்தெந்த வழிகளில் தங்கள் தேவைகளைப் பெற்று மகிழ்ந்தார் களென்று அறிவோமாகில், அதைவிட நல்ல முறையில் சந்தர்ப் பங்களை நாம் அமைத்துக்கொள்ளத் தற்காலத்தில் நிச்சயமாகப் பயன்படும். அதனால்தான், வரலாற்றுப் பேராசிரியர்கள் அரசி யலை வரலாற்றின் வளர்ச்சி காரணமாக ஏற்படும் ஒரு சமுதா யம் என்றே குறிப்பிடுகின்றனர். ஆகவே வரலாறு என்பதைக் கடந்த காலச்சம்பவங்களைக் குறிக்கும் ஒரு பழம்பேடு என்று நினைத்துவிடக்கூடாது. அந்தப் பழைய பேட்டிலிருந்துதான், அரசியல் சமுதாயத்தைப் பற்றியும், அரசியல் சிக்கல்களைப்பற்றி யும், அரசியல் நெறி முறைகளைப் பற்றியும் நாம் நன்கு உணர முடிகிறது.

சுருங்கக்கூறின், அரசியல் கொள்கைகளை வரலாற்றுப் பேட்டிலிருந்துதான் நாம் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். வரலாற்றுத் துறையிலே, பலவேறு பிரச்சினைகள் பலகோணங் களில் வரையப்பட்டு வளர்ந்திருக்கின்றன. அவற்றிலிருந்து முக்கியமாக ஒரு நாட்டைப் பற்றியும் அந்நாட்டு மக்களைப் பற்றியும், அவர்கள் வகுத்துக்கொண்ட சமுதாய அமைப்பைப் பற்றியும், இன்னபல பிரச்சினைகளைப் பற்றியும் நாம் உணரமுடி கிறது. இந்த உண்மையை மேல்நாட்டு அரசியல் பேராசிரியர் வில்லுபை[15] என்பார் குறிப்பிட்டுக் கூறுகிறார்: "அரசியல்நூலின் நீள அகலத்தைத் தவிர, அதன் உயரத்தை அறுதியிட்டுக் கூறுவது வரலாற்று நூலாகும்." இக்கருத்தை இன்னும் தெளி வாகக் கூறுகிறார் பேராசிரியர் சீலே[16] என்பார் : " அரசியலின் ஆணிவேர் வரலாற்றில்தான் அமைந்து கிடக்கிறது ; எனவே, வரலாற்று மரத்தின் பழுத்த கனி அரசியல் என்று கூறினால்

15. 'History gives the third dimension of political science' - Prof. Willoughby.

16. 'Political science is the fruit of history and history is the root of political science'-Prof. Seeley.

அது மிகையாகாது.” இப்பேராசிரியர்களின் விளக்கங்கள் வரலாற்றுக்கும், அரசியலுக்கும் உள்ள தொடர்பை நன்கு புலப்படுத்துகின்றன. அரசியல் தன்னுடைய வளர்ச்சியை முழுதும் அடையவேண்டுமென்றால், மற்றப் பல அறிவுத் துறைகளிலிருந்தும் செய்திகளைப் பெறவேண்டும் என்ற உண்மையையும் வாசகர்கள் கவனிக்கற்பாலது.

## (iv) அரசியலும் உளவியலும் (Psychology)

உளவியலின் முக்கியத்துவத்தையும், அதன் தன்மைகளையும் பண்டைக்காலத்திலேயே அரிஸ்டாடில் வெளியிட்டுள்ளார். அக்கருத்துகள் யாவும் பொதுவானதாகவும் விஞ்ஞான ரீதியில் அமைக்கப்படாததாயும் அமைந்திருந்தன. எனினும் அக்கருத்துகளின் பொதுத்தன்மை தற்காலத்தில் உளவியல் வல்லுநர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்கலாம். மனிதனுடைய உடலை ஊக்குவிக்கும் ஒரு பொருள்-உயிர்-உண்டு; அதனை அரிஸ்டாடில் சைக்கி (Psyche) என்று குறிப்பிட்டார். அவற்றின் உணர்வுகள் வெளியிடப்படுவதையே மனிதனின் நடவடிக்கைகளில் நாம் காணமுடிவது. எனவே மனித நடவடிக்கைகள் எல்லாம் உள் உணர்வுகளின் பிரதிபலிப்பே என்று கூறலாம். இக்கூற்றை எல்லா உளவியல் வல்லுநர்களும் ஒப்புக்கொள்வதில்லை என்றாலும், இக்கூற்றில் சில பொது உண்மைகள் அமைந்து கிடக்கின்றன; அவற்றை ஆராய்ச்சி செய்தால் இன்னும் சில அரிய கருத்துகள் தெரியவரும் என்ற அடிப்படையில் உளவியலுக்கு உருவம் கொடுத்தவர் கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாடில் என்றால் அது மிகையாகாது.

அரிஸ்டாடிலின் பொதுவான கொள்கைகள் தற்காலத்தில் விஞ்ஞான ரீதியில் ஆராயப்பட்டு, அதனால் உளவியல் மேலும் வளர்ச்சி அடைந்து, அரிய பல கருத்துகளை வெளியிட்டுள்ளது. அவை யாவும் மனிதனுடைய உள்ளத்தின் நிலைமையையும், அதன் நனவியல் (waking experience) தன்மையையும், அங்கு ஏற்படும் உணர்வுகளும் அதன் விளைவாக எழும் சிந்தனையும் (Thinking), அதனை வெளியிடும்போது ஏற்படும் நடத்தையும் (Behaviour) என்பன போன்ற சுவையான செய்திகளை விளக்கி நிற்பதாகும். இம்முயற்சி 16-ஆம் நூற்றாண்டிலிருந்து 20-ஆம் நூற்றாண்டுவரை மிகவும் வளர்ச்சியடைந்து முன்னேற்றம் பெற்

றுள்ளது என்பதைக் கவனிக்கற்பாலது. இம்முயற்சிகளில் ஈடு பட்டு, புதிய புதிய வழிமுறைகளையும் அமைத்து, மனிதனுக்குத் தேவைப்படும் உண்மைகளை உலகுக்கு எடுத்துக்கூறிய பெரி யோர்களில் சிலரைக் குறிப்பிட்டுக் கூறுவது நலம் எனக் கருது கிறேன். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் டேகார்ட் (Descartes), பேகன் (Bacon) ஆகியோரையும்; ஜெர்மானிய நாட் டைச் சேர்ந்த வில்லியம் வுண்ட் (William Wundt), பெக்னர் (Fechner) என்பாரையும்; அமெரிக்க நாட்டைச்சேர்ந்த வில்லியம் ஜேம்ஸ் (Wiliam James), ஜான் வாட்சன் (John Watson) என் பாரையும் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

மனிதனின் நனவு உள்ளத்தைத் தவிர, அதன் மறுபாகங் களாகிய ஆழ்ந்த உள்ளம் (Unconscious Mind), மறைவு நன உள்ளம் (Sub-conscious Mind) போன்ற அரிய கருத்துகளை வெளியிட்டார் சிக்மண்ட் பிராய்ட் (Sigmond Freud) என்னும் மருத்துவ அறிஞர். அவருடைய அரிய முயற்சியின் காரண மாக, மனிதனுடைய நடத்தைகள் எவ்விதங்களில் ஊக்குவிக்கப் படுகின்றன; அதன் காரணமாக எவ்விதம் மனிதனின் செய் கைகள் பாதிக்கப்படுகின்றன. என்பன போன்ற கோட்பாடு களும் தெரியவந்தன. மனிதன் மற்றவர்களுடன் சேர்ந்து பழகும்போது எவ்விதம் நடந்துகொள்கிறான் என்பன போன்ற கருத்துகளை வில்லியம் மாக்டுகல் (William McDougall) என்பார் வெளியிட்டார். இவ்விதமாகப் பல அறிஞர்களின் அரிய முயற்சிகளினால் ஏற்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக மனிதனைப் பற்றியும் மக்களைப்பற்றியும் முழுமையாக அறிந்து கொள்ளப் பலப்பல வழிகளும் வகைகளும் பிறந்தன. அதன் பலனாக மனிதனுடைய உள்ள அமைப்பு, உடல் அமைப்பு, நுண்ணறிவும் (Intelligence) அதனை அளவிடும் சோதனைகளும், கற்றல் (Learning), நினைவு (Remembering), மறதி (Forgetting) ஆகியவற்றைப் பற்றியும் நன்கு அறிந்துகொள்ளும் பேற்றினை நாம் இக்காலத்தில் அடைந்துள்ளோம். விஞ்ஞான ரீதியில் அமையப்பெற்ற பரிசோதனைகள் மூலமாக மேற்கூறப்பட்டவை நிரூபிக்கப்படுவதால், அவற்றின் நன்மைகள் மக்களின் நல்வாழ் வுக்கு மிகவும் பயனை அளிக்கவல்லது என்பது சொல்லாமலே விளங்கும். அதன் காரணமாகத்தான் அமெரிக்கா போன்ற நாடுகளில் எத்துறையில் பணியாற்றுவதாக இருந்தாலும், உள வியல் அறிவு முக்கியமாகத் தேவையென்று வலியுறுத்தப் படு கிறது.

மேலே குறிப்பிட்ட பிரிவுகளைத் தவிர, உளவியல் மற்ற வகைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளன. அவையாவன: உடலியல் உளவியல் (Physiological Psychology), விலங்கு உளவியல் (Animal Psychology), பிறழ்வான நடத்தை உளவியல் (Abnormal Phychology), மருத்து உளவியல் (Psycho Pharmacology), கல்வித்துறை உளவியல் (Educational Psychology), சமூக உளவியல் (Social Psychology) முதலியனவாகும். இப்பிரிவுகளினாலும் அவற்றின் வளர்ச்சியினாலும் மக்களுக்கு ஏற்படும் பலப்பல நன்மைகள் சொல்லாமலே விளங்கும் உண்மையாகும்.

### (v) அரசியலும் சமூகவியலும் (Sociology)

ஒரு சமூகத்தினிடையே வாழ்ந்து, வளர்ந்தாலன்றி மனிதன் அரசியல் வாழ்வு பெறவியலாது. இவ்வுண்மையை வெளிப்படுத்தும் முறையில் அரிஸ்டாடில் கூறுவதாவது[17]: 'மனிதன் ஒரு சமூகப் பிராணி'. ஏனென்றால், மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் இயல்புணர்ச்சி மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ளது. அதனால்தான் ஆராய்ச்சி வல்லுநர்கள், மனித வாழ்வைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், மக்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனைத்தான் பொதுவாகச் 'சமூகவியல்' என்று குறிப்பிடுகின்றனர். சமூகவியல் மக்கள் சமுதாயத்தைப் பற்றிய பொதுவான கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட நூலாகும். மக்கள் எவ்விதம் கூடிவாழ்கின்றனர்; எவ்வித அமைப்புகளையும், நியதிகளையும் ஏற்படுத்திக்கொள்கின்றனர் என்பன போன்ற தன்மைகளைத் தொகுப்பாகவும், பொதுவாகவும் ஆய்ந்து அறிவதே சமூகவியலின் நோக்கமாகும். இக்கருத்துகளை ஊன்றிக் கவனிப்போமாகில், சமூகவியல், அரசியலை விட ஆழமும் அகலமும் கொண்டது என்பது சொல்லாமலேயே விளங்கும் உண்மையாகும். ஏனென்றால் அரசியல் என்பது சட்ட திட்டங்களோடு அமைத்துக்கொள்ளப்பட்ட ஒரு நாட்டு மக்களின் அரசியல் வாழ்வைப் பற்றிய நூலாகும். ஆனால், சமூகவியலோ அரசியல் சட்டதிட்டங்கள் மட்டுமல்லாமல், பொருளாதாரப் பிரச்சினைகள், சமயப் பிரச்சினைகள் என்பன போன்ற இன்னும் பலப் பிரச்சினைகள் அனைத்தும் மக்கள் சமுதாயத்தில் எவ்விதம் ஏற்படுகின்றன, இயங்குகின்றன

17. 'Man is a social animal'-Aristotle.

என்பவற்றின் பல தன்மைகளைப் பற்றிக் கூறுவதாகும். சுருக்கமாக எடுத்துக் கூறப்பெற்ற இவ் விளக்கத்திலிருந்து சமூகவியலில், அரசியல் ஒரு பாகம்தான் என்ற உண்மையும் நன்கு விளங்கும்.

மேலும், சமூகவியலை நன்று கவனித்து ஆராய்ந்தால், அரசியலுக்குத் தேவையான, அடிப்படையான செய்திகள் ஏராளமாகக் கிடைக்கவிருக்கின்றன. உதாரணமாகக் கூறுவோமாகில், அரசியல் நியதிகள், அரசியல் நிறுவனங்கள், அரசாட்சி, அதிகாரம் போன்ற மிகவும் முக்கியமான கோட்பாடுகள் எவ்விதம் தோன்றின என்பவற்றைச் சமூகவியலிலிருந்துதான் நன்கு அறிய முடியும். அதன் காரணமாகத்தான், தற்கால அரசியல் அமைப்பிலும், சட்டதிட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. இவ்வுண்மைகளைக் குறிப்பாக 18ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தோன்றிய சமூகவியல் மேதைகளான அகஸ்ட் காமத் (Auguste Comte), துர்கிம் (Durkhiem) போன்றேர் மிகவும் தெளிவாகவும், திட்டமாகவும் எடுத்து இயம்பியிருக்கின்றனர். அவர்களுடைய கூற்றுகளெல்லாம், சமூகவியல் படிப்பினையை அடிப்படையாகக் கொண்டவையாகும்; அதன் விளைவாகத் தற்காலத்து அரசியல் வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு அடிகோலியதுமாகும். சுருங்கச் சொல்லின், சட்டதிட்டங்களும் சமுதாய அமைப்புகளும், மனிதனுடைய நல்வாழ்வுக்காகவேயன்றி, மனிதனுடைய வாழ்வு, சட்டதிட்டங்களுக்காக நிச்சயமாக அன்று என்ற உண்மை தெளிவாக விளக்கப்பட்டதனுல்தான், மனிதன் தன்னுடைய முழு உரிமையை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்வதற்கு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் அமைப்புகள் 19ஆம் நூற்றுண்டிலேயே ஏற்படத் தொடங்கின என்பது வரலாறு கூறும் உண்மையாகும். அது நிற்க, சமூகவியல் ஒரு பொதுவான இயலாக இருந்தாலும், அதனையும் விஞ்ஞான ரீதியிலே வரையறைகளுடன் ஆராயவும், அதனுல் நல்ல பல நன்மைகளை நாட்டிற்கும், மக்கள் சமூகத்திற்கும் அளிக்க முடியும் என்ற உண்மைகளையும் நிரூபித்துக் காட்டிய பெருமை அகஸ்ட். காமத், துர்கிம் போன்ற மேதைகளைச் சாரும் என்பதும் வாசகர்கள் கவனிக்கற்பாலது.

### (vi) அரசியலும் மானிடவியலும் (Anthropology)

மானிடவியலும் சமூகவியலைப் போன்ற நோக்குடையதானுலும், ஒருசில வேறுபாடுகளைப் பெற்றிருக்கிறது என்பதைச்

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முக்கியமாக, மிகப் பழங்காலத்தில் மனிதன் எவ்விதம் வாழ்ந்தான், எவ்விதங்களில் தாம் வாழ்ந்த சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டான் என்பன போன்ற சுவையான பகுதிகளை ஆராய்ச்சி செய்கின்றது. மேலும், அந்த ஆய்வானது, விஞ்ஞான ரீதியில் நடத்தப்படுவதால், அவற்றால் விளையும் நன்மைகளும் வரையறுக்கப்பட்டனவையாகும். சுருங்கச் சொல்லின், பழங்கால மனிதன் விலங்குகளைப் போலவே தம்மையொத்த இனத்தவருடன் சேர்ந்து கூட்டங் கூட்டமாக வாழ்ந்தான். அவ்விதக் கூட்டுவாழ்க்கையில் சில முறைகள் இயல்பாகவே பின்பற்றப்பட்டன. உதாரணமாக, குலமரபு (Totem), தீண்டப்படாதவை (Taboo), திருமணம் (Marriage) போன்ற சமுதாயப் பழக்கவழக்கங்கள் எவ்விதம் தோன்றின, வளர்ந்தன, அதன் விளைவாகச் சமுதாயமே எவ்விதம் முன்னேற்றமடைந்தது என்பன போன்ற அரிய கருத்துகள் மானிடவியலிலிருந்துதான் நமக்குக் கிடைக்கின்றன. இக் கருத்துகளிலிருந்து மேலும்சில முக்கியமான செய்திகளை நாம் அடைகிறோம். உதாரணமாக இன வேறுபாட்டுக் கொள்கை (Race superiority) எவ்விதம் பழங்காலத்தில் ஏற்பட்டது ; ஏன் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வளர்ந்தது ; அதனால் ஏற்பட்ட நன்மைகள் யாவை என்ற பிரச்சினைகளையும் நாம் அறியமுடிகிறது. இப்பிரச்சினைகளையெல்லாம் ஆய்ந்து அறியும்போது, தற்கால அரசியல் சமுதாயத்தின் அடிப்படைக் கொள்கைகளும், அரசியல் நிறுவனங்களும் எவ்விதம் தோன்றி வளர்ந்து உரம் பெற்றனவென்பதை நன்கு அறியமுடிகிறது.

ஆய்வாளர்களின் அரிய முயற்சிகளின் காரணமாகச் சில சுவையானதும் பயனுடையதுமாகிய செய்திகள் நமக்குக் கிட்டியிருக்கின்றன. தற்காலத்தில் ஆஸ்திரேலியாவில் வாழும் பழங்குடிமக்கள் சில பண்பாடுகளை இன்றும் போற்றிப் பேணி வருகின்றனர். அவர்களின் கூட்டுவாழ்க்கையில் குலமரபுச் சின்னம் எதுவென்றால், கங்காரு என்னும் மிருகம். அந்த மிருகத்தை அக்குடி மக்கள் எல்லோரும் போற்றிப் பேணுவதால், அதனை யாருமே தீண்டுவதில்லை. மேலும் மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்வதால், திருமண நிகழ்ச்சிகள், ஒருகூட்டத்திலிருந்து மற்றக் கூட்டத்தினருடன் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்றன என்பதும் கவனிக்கற்பாலது. இன்னும் தெளிவாக விளக்குவோமாகில், ஒரு கூட்டத்தைச் சார்ந்த ஆண் மகனுக்கும், மற்றொரு கூட்டத்தைச் சார்ந்த பெண்ணுக்கும்தான் திருமணம் செய்யப்படுகிறது. இதன் மூலமாக ஒரு கூட்டத்தில்

அல்லது குடியில் வாழும் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதில்லை; அனுமதிப்பதுமில்லை. இது மிகவும் மரபாகயிருந்தபோதிலும், எல்லா நாகரீகச் சமுதாயத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடிய மரபுதான் என்பதையும் வாசகர்கள் கவனிக்கவேண்டும். இதைப் போன்றே மற்றப் பல சமுதாயப் பிரச்சினைகளும் அரசியல் அமைப்புகளும், அவை ஏற்பட்ட தன் சூழ்நிலை முதலியவைகளையும் மானிடவியல் நூலிலிருந்து நாம் அடையப் பெறுகிறோம் என்பது சொல்லாமலே விளங்கும். அவற்றால், அரசியலுக்கு மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளுக்கும் பயன் என்பது உறுதியும் உண்மையுமாகும்.

# 6. அரசியல் வாழ்வின் தோற்றம்

அரசியல் வாழ்வு எவ்விதம் தோன்றியது என்ற கேள்வியை ஆராய்வோமானல், அதற்குத் தக்க விடைகாண, மனிதன் ஆதிகாலத்தில் எவ்விதம் வாழ்ந்தான் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. எப்பொழுது வாழ்ந்திருந்தாலும், எங்கே வாழ்ந்திருந்தாலும், மனிதன் மக்களுடன் சேர்ந்தே வாழ்ந்திருக்கிருன்; எனவே மனித வாழ்க்கையும், மக்கள் வாழ்க்கையும் இணைபிரியாத ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என்ற உண்மையை உணரலாம். இருந்தபோதிலும், எவ்விதம் அரசியல் வாழ்வு தோன்றியது என்பதைச் சரித்திரபூர்வமாகத் தெரிந்துகொள்வதற்கு, மேல்நாட்டுப் பேராசிரியர் போசங்கே (Bosanquet) என்பார், பின்வரும் வினவை எழுப்புகிருர்.[18] எந்தவிதமான ஆவலினுல் தூண்டப்பட்டு மனிதன் மக்களுடன் சேர்ந்து வாழ விரும்பினுன்? இவ்வினுவிற்கு விடையளிக்கும் முறையில், பேராசிரியர் போசங்கே, நம்முடைய கவனத்தைப் பண்டைக்காலக் கிரேக்க மக்களின் பக்கம் திருப்புகிருர். மனிதன் மக்களுடன் சேர்ந்துதான் வாழ வேண்டும்; அப்போதுதான் மனிதன் முழு மனிதனுகிருன். இன்னும் சிறிது விளக்கிக் கூறுவோமாகில், மக்கள் சமுதாயத்திலேதான் மனிதன், நல்ல பல சூழ்நிலைகளினுல், உயர்ந்த நிலைக்கு உருவாக்கப்படுகிருன். எனவே, மனிதவாழ்வின் பயனை அடைய வேண்டுமென்றல், மக்கள் சமுதாயத்திலே சேர்ந்து வாழவேண்டியதன் அவசியம், நன்கு புலனுகிறது. இவ்வித நிலைமை மக்கள் சமுதாய வாழ்க்கையின் அடிப்படை உண்மையாக இருந்தபோதிலும், அவ்விதச் சமுதாய வாழ்வும், அதனை அடைய விரும்பும் ஆவலும் பண்டைக்காலக் கிரேக்க மக்களிடத்தில் சிறப்புற்று விளங்கின; அவ்விதமாகச் சேர்ந்து வாழும் தன்மை தற்காலத்திலும் மக்களிடையே நிலவுகிறது

18. Philosophical theory of the State-Bernard Bosanquet.

என்பதும் உண்மை என்று பேராசிரியர் போசங்கே சுட்டிக் காட்டுகிறார்.

மக்களுடன் சேர்ந்து வாழவேண்டுமென்ற ஆவல், மனிதனிடத்திலே எவ்விதம் தோன்றியது? இக்கேள்விக்கு விடையளிக்கும் முறையில் பண்டைக்காலக் கிரேக்க மக்கள் சமுதாயத்தில் நிலவிய சம்பிரதாயங்கள் வாழ்க்கை முறைகள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை உணரலாம். இவ்விதம் பழங்காலத்தில் வாழ்ந்த நாகரீக மக்களில் முக்கியமாகக் கிரேக்க மக்களைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் என்னவென்றால், அவர்களுடைய பண்டை வாழ்க்கை உயர்ந்த அரசியல் வாழ்க்கையாக மட்டுமன்று, அவ்வரசியல் வாழ்க்கையைப் பற்றித் தெளிவான, திட்டவட்டமான குறிப்புகள் வரலாற்றுரீதியாகப் பெறப்படுவதேயாகும். உதாரணமாகக் கூறுவோமாகில், பிளேட்டோ, அரிஸ்டாடில்போன்ற கிரேக்க மேதைகள் எழுதிவிட்டுச் சென்ற அரிய இலக்கியச் சுரங்கங்களிலிருந்துதான் தற்காலத்திய மேற்கிந்திய நாகரீகமே வளம்பெற்றுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. அதே நேரத்திலே, அம்மேதைகள் எழுதி வைத்துவிட்டுச் சென்றார்கள் என்றால், அவர்களுடைய எழுத்துகளுக்கு உண்மை உருவம் தந்தது அன்றைய கிரேக்க மக்களின் பண்பாடும், சமுதாயச் சட்டதிட்டங்களுமேயாகும். எனவேதான் அம்மக்களின் வாழ்க்கை முறைகள், சம்பிரதாயங்கள் அவைகளைக் கட்டிக்காத்துவந்த நிறுவனங்கள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவற்றிலும், நூற்றுக்கணக்கான நகர அரசுகள் (City States) வளம்பெற்று வாழ்ந்த கிரேக்கத்தில் முக்கியமாக ஏதென்ஸ் (Athens) நகரத்தைப்பற்றி அறிய முற்படுகிறோம்; காரணம், அந்த நகரத்திலேதான் பொதுவுடைமைக் கொள்கைகள் மிகவும் வளம்பெற்று வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. எத்தன்மையதான அரசியல் வாழ்வு, எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்படும் என்பதை முக்கியமாக ஏதென்ஸ் நகர மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் பரிசோதனைகள் நடத்தினார்கள் என்றே, கிரேக்கச் சரித்திரம் பெருமையுடன் பேசுகிறது. எனவே, ஏதென்ஸ் நகரத்தின் அமைப்பையும், அம்மக்களின் பண்பாடுகளையும், மற்றும் பல அரசியல் முறைகளையும் தெரிந்து கொள்வதற்கு, வாசகர்களை ஏதென்ஸ் நகரத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.

செம்மையான அரசியல் கருத்துகள் சீராக வளர்ந்து செழிப்பான சமுதாயத்திலே வேரூன்றியது முதன் முதலில்

எங்கே என்ற நேரடியான வினாவை எழுப்பினால், அவ்வித நிலைமை ஏற்பட்டு நிலைத்து நின்றது பண்டைக்காலக் கிரேக்க மக்களிடத்திலேதான் என்று கூறினால், அது சரித்திர உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை. மேல்நாட்டு மக்களிடையே பொதுவாகவும், ஐரோப்பிய நாடுகளிலே சிறப்பாகவும் நிலவி வரும் அரசியல் கருத்துகளுக்கு இருப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் உள்ளது பண்டைக்காலக் கிரேக்க மக்களின் அரசியல் வாழ்வாகும். அதிலும் முக்கியமாக, கிரேக்க மக்களின் இயல்பு–அதாவது எதைப்பற்றியதாயினும் தீரச் சிந்திப்பது; செம்மையான சிந்தனை வளர்ச்சியின் காரணமாகப் புதிய கருத்துகளை உண்டாக்குவது; அதனை அன்றாட வாழ்க்கையில் மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்துவது. ஆகவே, கிரேக்கப் பெரியோர்களின் சிந்தனைத் தத்துவம், வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருந்துவிடவில்லை என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். தாங்கள் சிந்தித்ததை அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்வு காண்பதற்கும், பிரச்சினைகளே ஏற்படாமல் மக்கள் என்றும் நல்வாழ்வு வாழ்வதற்கு எத்தகைய அரசியல் நிறுவனம் பயன்படும் என்பதைப் பற்றித்தான் சிந்தித்தார்கள். அதனாலன்றோ, சிந்தனை என்பது எதற்காகவென்று சிந்தித்தான் அரிஸ்டாடில் என்று தற்காலச் சிந்தனைச் சிற்பிகளும் கூறிப் பெருமிதம் கொள்கின்றனர்!

அரசியல் என்பதற்கு ஆங்கிலப் பதம் பாலிடிக்ஸ் (Politics) என்பதாகும். அந்த ஆங்கிலப் பதமே கிரேக்க வார்த்தையாகிய பாலிஸ் (Polis) என்ற பதத்தைத் தழுவியதாகும். எனவே மேல் நாட்டு அரசியல் கருத்துகள் முதன் முதலில் தோன்றியது கிரேக்க மக்களின் நகர வாழ்க்கையில்தான் என்பது சரித்திரப் பேராசிரியர்கள் ஒப்புக்கொண்ட உண்மையாகும். இயேசுகிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே, கிரேக்க நகரங்களில் பல அரசியல் முறைகளின் நன்மை தீமைகள் பரிசோதனை செய்யப்பட்டதெனக் கூறலாம். அவ்வரசியல் முறைகளில் மிகவும் முக்கியமானவை பின்வருவனவாகும்: முடியாட்சி (Monarchy), உயர்குடி ஆட்சி (Aristocracy), சர்வாதிகார ஆட்சி Dictatorship), மக்கள் ஆட்சி (Democracy). இந் நான்கு அரசியல் முறைகளைத் தவிர, இவற்றின் பல பிரிவுகளும் பல நகரங்களில் நிலவிவந்தது என்பது உண்மை. இருந்த போதிலும் இந்நான்கு முறைகளே அடிப்படை அரசியல் முறைகள் என்று அரசியல் வல்லுநர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இவ்விதமாகப் பல அரசியல் முறைகளைப் பின் பற்றியதாலும், கிரேக்க மக்களின் இயற்கையான இயல்பாகிய சிந்தித்து

ஆராய்தல் என்ற பண்பாலும், எத்தகைய அரசியல் முறை மக்களுக்கு அதிகமான பயனைத் தரும் என்ற அடிப்படைத் தத்துவத்தை அமைத்துக்கொடுப்பதில், உலக சமுதாயத்திலே, கிரேக்கப் பெரியோர்கள் முதலிடம் பெறுகின்றனர்.

தற்கால அரசியல் உலகிலே பொதுவாகக் கையாளப்படும் சொற்களாகிய சுதந்திரம் (Liberty), உரிமை (Right), சமத்துவம் (Equality), நீதி (Justice) முதலியவற்றின் பொருளைக் கிரேக்க மக்களே அறுதியிட்டுச் சென்றுள்ளனர். எனவே, அச் சொற்களின் சரியான பொருளை நாம் உணர வேண்டுமென்றால், கிரேக்க மக்களின் அரசியல் நிறுவனங்களைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், அந்த நிறுவனங்களின் சார்பாகத்தான் அச் சொற்கள் வழங்கப்பெற்றன; பயன்படுத்தப்பட்டன. எனவே, தற்காலத்தில் அரசியல் உலகில் வழங்கப்பெறும் சொற்களையும் அவற்றின் பொருளையும் நாம் உணர்ந்துகொள்வதற்குக் கிரேக்க மக்களின் அரசியல் வாழ்க்கையும், அரசியல் நிறுவனங்களையும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். எனவே, முன்பு குறிப்பிட்டவாறு பழங்காலக் கிரேக்க மக்களின் பல நகரங்களிலும் முக்கியமாக விளங்கிய ஏதென்ஸ் நகரத்திற்குள் நாம் நுழைகிறோம்.

தற்கால நாடுகளுடன் ஒப்பிடும்போது, பரப்பளவிலும் மக்கள் தொகையிலும், ஏதென்ஸ் நகரம் மிகவும் சிறியதென்றே கூறலாம். அந்நகரத்தின் மொத்த மக்கள் தொகை மூன்று இலட்சம் (3,00,000) என்று சரித்திர ஆசிரியர்கள்[19] ஊகிக்கின்றனர். அத்தொகையின் அடிப்படையில், மூன்று பெரும் பிரிவுகளாக மக்கள் வாழ்ந்து வந்தனர். முதல் பிரிவினையைச் சேர்ந்தவர்கள், மற்ற இரு பிரிவினர்களுக்கும் தொண்டு புரிந்து வாழ்ந்தவர்களாவர்; இவர்கள் அடிமைகள் (Slaves) என்று அழைக்கப்பட்டனர். இரண்டாவது பிரிவினர் வணிகர்களாவர்; இவர்கள் மெடிக்ஸ் (Metics) என்று அழைக்கப்பட்டனர். இந்த இரு பிரிவினருக்கும், அரசியலில் பங்கு கொள்ளும் உரிமைகள் இல்லை. மேலும் முதல் பிரிவினராகிய அடிமைகளுக்கு எந்த உரிமைகளும் தரப்படவில்லை; அடிமைகள் விலைக்கு வாங்கப்படுவதும், விற்கப்படுவதுமாகிய பொருளாகக் கருதப்பட்ட காலம். இரண்டாவது பிரிவினராகிய வணிகர், நகரத்திலேயே என்றும் இருந்து வாழ்ந்தவர்களாகையால், அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பெற்றிருந்தன; ஆனால் அரசியலில்

19. History of the political philosophy-Sabine.

பங்கு கொள்ளும் உரிமைகள் தரப்படவில்லை. மூன்ருவது பிரிவினர்தான் நகரத்தார் (Citizens) என்று அழைக்கப்பெற்றனர். இப் பிரிவினர் எப்பொழுதும் நகரத்தில் வாழ்ந்தவர்; வீடு, நிலங்களைப் பெற்றுச் செல்வாக்குடன் வாழ்ந்த பழங்குடி மக்களாவர். பிறப்பாலும், செல்வாக்கினுலும், நகரத்தார் என்று அழைக்கப்படும் பெருமை பெற்றிருந்தனர். நகரத்தான் என்றழைக்கப்பட்டதன் முக்கியத்துவம் என்னவென்ருல், தன்னுடைய நகரத்தில் கூடும் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளவும், அரசியல் பிரச்சினைகளைப் பற்றிப் பேசி ஆலோசிக்கவும், அபிப்பிராயங்களை வெளியிடவும் உரிமை பெற்றிருந்தான் என்பதாகும். இவ்வுரிமையானது இயற்கையாகவே நகரவாசிகளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனுல் தற்கால ரீதியிலே நோக்குவோமாகில், இவ்வித உரிமை, சில குறிப்பிட்டவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள காரணத்தினுல், அது ஒரு சலுகையாக (privilege) மாறி விடுகிறது. இந்த வேறுபாடுகளை வாசகர்கள் மனத்திற்கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், கிரேக்கப் பெருமக்கள், முக்கியமாக நகரத்தார் பெற்றிருந்த உரிமையானது எப்படிப்பட்டதென்ருல், ஒரு பெருங்குடும்பத்தில் வாழ்பவர்கள், அக்குடும்ப நல்வாழ்வுக்காக எவ்விதம் தங்களுக்குள் ஒருசில நியதிகளை ஏற்படுத்திக் கொண்டு, ஒருவரையொருவர் ஏவியும், ஒருவருக்காக மற்றவர்கள் பணி செய்தும் வாழ்வார்களோ அதைப் போன்றதாகும். இந்த அடிப்படையில்தான் ஏதென்ஸ் நகரத்தில் வாழ்ந்த மூன்ரும் பிரிவினராகிய நகரத்தார் உரிமைகளைப் பெற்று வாழ்ந்தனர் என்று கூறலாம்.

இருந்தபோதிலும், தாம் பெற்ற உரிமைகளை, நகரத்தார் எவ்விதம் பயன்படுத்தினுர்கள் என்பதை இவ்விடத்தில் நாம்தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம் எனக் கருதுகிறேன். ஏனென்ருல், அவர்கள் பெற்ற உரிமைகளைக்கொண்டு, சமுதாய முன்னேற்றத்திற்கு ஒவ்வொருவராலும் எந்த விதத்தில், எவ்வளவு நன்மையும், தொண்டும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பதை வெளிக்காட்டுவதற்கே சந்தர்ப்பமாகக் கொண்டார்களன்றித் தாம் பெற்ற தனிச் சலுகைகள் என்று நிச்சயமாகக் கொள்ளவில்லை. இந்த உயர்ந்த பண்பானது தம்மால் இயன்ற அளவு பொது நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்கு ஆக்கமாக அமைந்தது. இவற்றிலிருந்து மேலும் புலப்படும் உண்மையாவது, நகரத்தாரில் ஒவ்வொரு மனிதனுக்கும் தம்முடைய திறமைகளை வெளியிடுவதற்கு முழுச் சுதந்திரம் இருந்தது என்பதாகும். இந்நிலையில், கிரேக்கச் சமுதாயத்தில் பெண்டிரின் நிலை என்ன என்பதைப் பற்றியும் இவ்விடத்தில்

தெரிந்து கொள்ளவேண்டியதவசியம். கிரேக்க மக்களின் பழம் பெரும் மரபுகளுக்கிணங்க, பெண்டிர் அரசியலில் பங்குகொள் வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதன் காரணமாக. கிரேக்க மக்கள் பெண்டி ரைக் குறைவாக நடத்தியதில்லை என்பதையும் குறிப்பிட விரும்பு கிறேன். நகர மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கின ருக்கே அரசியலில் பங்கு கொள்ளும் உரிமையில்லை. அதைப் போலவே பெண்டிருக்கும் அரசியலில் பங்கு கொள்ளும் உரிமை யில்லை. இவ்விதச் சமுதாய அமைப்பு, கிரேக்க மக்களின் மரபாக இருந்தது. மேலும், அரசியல் பிரச்சினைகளை, சிந்தனையும், செல்வாக்கும் பெற்ற சீமான்களால்தான் செம்மையான முறை யில் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தவர்கள் பழங்காலக் கிரேக்கமக்கள். அவ்விதம் அரசியல் வாழ்வுக் காகவே பொதுவாழ்வுக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித் துக் கொண்டதால், அவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு, உதாரணமாக ஒரு நகரத்தானுக்கு நான்கு அடிமைகள் சேவை செய்வதற்கு அமைந்திருந்தார்களென்று சரித்திரக் குறிப்புகள், சுட்டிக்காட்டுகின்றன. இவ்விதமாக இயங்கிய சமுதாய அமைப்பின் அரசியல் நிறுவனங்களைப் பற்றி இனித் தெரிந்து கொள்வோம்.

ஏதென்ஸ் நகரத்தின் அரசியல் நிறுவனங்களில் மிகவும் முக்கியமானது பெருமன்றம்தான் (Assembly). இதனை அரசியல் நிறுவனமாக மட்டுமன்றி ஒருதெய்வத்தலமாகக் கொண்டார்கள். கிரேக்கப் பெருமக்கள் கடவுள் நம்பிக்கையுடையவர்களாகை யால் அப்பெருமன்றத்தை எக்ளிஸியா (Ecclesia), என்று அழைத் தார்கள். இருபது வயது அமைந்த ஆண்பாலர் யாவரும் இப் பெருமன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டனர். பொதுவாக ஓர் ஆண்டில் பத்து முறைகளும், மேலும் சில சிறப்புக் கூட்டங்களும் கூடுவதாகத் திகழ்ந்தது இப்பெருமன்றம். இதனைக் கண்காணிப்பதற்கு ஐநூற்றுவர் குழு (Council of Five Hundred), என்ற நிறுவனம் இயங்கிவந்தது. நகரத்தாரின் பிரதி நிதிகளே இக்குழுவில் பங்கு கொண்டார்கள். குலத்தின் அடிப் படையில், நகரத்தார் பத்துப் பிரிவினராக வாழ்ந்தனர் என்று கூறப்படுகிறது. எனவே, ஒவ்வொரு குலத்தினரும் (Tribe), ஐம்பது பிரதிநிதிகளை அனுப்பினுர்கள்; ஆகவே மொத்தத்தில் ஐநூறு பிரதிநிதிகள் பெருமன்றத்தின் அலுவல்களைக் கவனித்து நடத்தினர். அக்காலத்தில் அனுசரிக்கப்பட்ட பிரதிநிதித்துவம், தற்காலத்தில் வழங்குவதைப் போன்றதன்று. ஏனென்றால், கிரேக்க மக்கள் தனி மனிதனின் சிறப்புகளை மதித்தவர்கள்;

அவ்விதச் சிறப்பும் தகுதியும் பெற்ற சிலர்தான், பலருக்காகப் பொதுமக்களுக்காக அரசியல் நிறுவனங்களில் பணிபுரிவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். அவ்விதம் தேர்ந்தெடுப்பதிலும் ஒரு புதுமை என்னவென்றால், ஒருமுறை பதவி வகித்தவர்கள் மறுமுறையும் பதவிக்குப் போட்டியிடக் கூடாது. இதன் மூலமாக எல்லா நகரத்தினருக்கும் பொறுப்பான பதவிகளை ஒரு முறையாவது தங்களின் வாழ்நாளில் ஏற்று நற்பணிபுரிய வாய்ப்பிருந்தது. நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் இம்முறை அனுசரிக்கப்பட்டது. அதற்கென்றே பதின்மர் குழு (Board of Ten), என்ற நிறுவனமும் இருந்தது. இந்த நிறுவனத்திற்கு, நகரத்தாரின் பத்துப் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 35 வயதுக்கு மேற்பட்ட ஆடவர் யாவரும் நீதிபதியாவதற்குத் தகுதி பெற்றிருந்தனர். இவ்விதமாக, ஐநூற்றுவர் குழுவும், பதின்மர் குழுவும், பெருமன்றத்தின் எல்லாவித அலுவல்களையும் செம்மையான முறையில் கண்காணித்து வந்ததால், ஏதென்ஸ் நகரமக்கள் நல்வாழ்வு நடத்த முடிந்தது. மக்களின் தேவைகளை, மக்களிடமிருந்தே தெரிந்துகொண்டு அதனைச் செயல்படுத்தி இயங்கியதால் அரசியல் நிறுவனங்கள் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தனவென்பதும் கவனிக்கத்தக்கது. இதன் காரணமாகத்தான், நகரத்தார் மட்டுமே அரசியலில் பங்கு கொண்டார்களானலும், நகரத்திலுள்ள எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஆவன செய்துவந்ததால், மக்களின் பிரதிநிதியாக விளங்கினுர்கள் என்பதும் கவனிக்கற்பாலது.

நகரத்தின் உள்ளாட்சிப் பிரிவுகள் டெமிஸ் (Demes) என்றழைக்கப்பட்டன. இப்பிரிவுகளுக்கு உறுப்பினர்களாவது பாரம்பர்யத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. அந்நகரிலேயே, இடம், பொருள், ஏவல் பெற்றுச் செல்வச் சிறப்புடன் வாழ்ந்த நகரத்தார்களும் அவர்களுடைய வாரிசும் உள்ளாட்சிப் பிரிவுகளில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பதினெட்டு ஆண்டுகள் நிரம்பிய ஒவ்வொரு ஆண்மகனும் உறுப்பினராகும் தகுதி பெற்றிருந்தான். அரசியல் நிறுவனங்களுக்கும், மற்றப் பொறுப்புள்ள அரசியல் காரியங்களுக்கும் தேவையான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் நேரடியாகப் பதவிகளில் அமைப்பதற்கும், இவ்வுள்ளாட்சிப் பிரிவுகள் அரசியல் வீட்டின் நுழைவாயிலாகத் திகழ்ந்தனவெனக் கூறலாம். இவ்விதமாக அரசியலில் பங்குகொள்வதற்குப்

பலரைத் தேர்வு மூலமாகத் தேர்ந்தெடுப்பதும் முக்கியமான பதவிகளுக்குச் சிலரை நேரடியாகவே தேர்ந்தெடுப்பதும் கிரேக்கமக்களின் மரபாக இருந்தது.

எல்லா நகரத்தினருக்கும் அரசியலில் பங்குகொள்ள உரிமையிருந்ததென்றாலும், அவரவர்களின் தகுதிக்கேற்ப, திறமைக் கேற்பப் பொறுப்புகளை வகுத்து, பொதுமக்களுக்குப் பணிபுரிய வேண்டுமென்பதே கிரேக்க மக்களின் சீரிய நோக்கமாகும். உதாரணமாகப் படைத்தலைமை வகிப்பவர்கள் பதின்மர் (Ten Generals) என்னும் நிறுவனம் இருந்தது. பத்துக் குலமரபுகளைக் கொண்ட நகரத்தார், பதின்மரை நேரடியாகத் தேர்ந்தெடுத்து, படைத்தலைமைப் பொறுப்பை அளித்தனர்; நேரடியாகத் தேர்ந்தெடுப்பதன் முக்கிய நோக்கம் அப்பொறுப்புகளை வகிப்பதற்குத் தகுதி பெற்றவர்கள்தானா என்பதைத் தெரிந்துகொள்வதற்கும், எந்தவிதமான ஐயங்களுக்கும் இடமில்லாமல், நாட்டுப் பொறுப்பைக் காப்பாற்றும் வீரமும், தீரமும் நிரம்பிய நேர்மையான நடத்தையும் உடையவர்களாகத் திகழவேண்டுமென்பதே. இவ்வித உயரிய பண்புகளைப் பெற்றவர்கள், அப்பதவிகளுக்குப் பல முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; ஆனால் மற்றப் பதவிகளுக்கோ ஒருமுறைதான் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதும் கவனிக்கற்பாலது. இதன் மூலமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் என்னவென்றால், இராணுவத் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்பவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. அவை அப்பொறுப்பின் சிறப்பினையும், முக்கியத்துவத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன எனலாம். படைத்தலைவர்கள் முக்கியமாக அண்டை நாடுகளுடன் சமர் செய்யும்போது உள்நாட்டில் எல்லா நிறுவனங்களையும் தங்கள் அதிகாரத்தின் கீழ் நடத்தினார்கள் என்று அறியப்படுகிறது. இதன் காரணமாகவே படைத்தலைமைப் பொறுப்பு அரசியல் நிறுவனங்களிலேயே மிக உயர்ந்த நிறுவனமாகக் கொள்ளப் பட்டது. இது எவ்வளவு உண்மை என்பதைத் தற்காலத்திலும் நாம் உணரமுடிகிறது. இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு, ஆட்சி மாறும் பொழுது, அவற்றை இராணுவத் தளபதிகள் கைப்பற்றினார் களென்பது நன்கு தெரிந்த செய்தியாகும். இவ்வித நிலைமைகள் ஏற்படுவதை ஊகித்தே பழங்காலக் கிரேக்க மக்கள், படைத் தலைமை நிறுவனத்திற்கு, மிகவும் பொறுப்புடைய, நாட்டுப்பற்றுடைய நற்பண்பும், குணமும், நடத்தையும் ஒருங்கே பெற்ற வீரர்களையே நேரடியாகத் தேர்ந்தெடுத்தனர்; இம்முறையானது

தற்கால அரசியல் மேதைகளுக்கே ஒரு படிப்பினையாகவும், ஏன், ஓர் எச்சரிக்கையாகவும் அமைகிறது என்று கூறினால் அது உண்மைக் கூற்றேயாகும்.

அரசின் அன்றாட அலுவல்களை ஐநூற்றுவர் குழுதான் கண் காணித்து வந்தது. ஏனென்றால், பெருமன்றத்தின் நடவடிக்கை கள் அனைத்தும் அக்குழுவினரால்தான் நடத்தப்பெற்றன. இருந்தபோதிலும், பெருமன்றத்தின் நடவடிக்கைகளையும், அரசின் அலுவல்களையும் ஐநூற்றுவர் குழு எவ்விதம் நடத்தியது என்பதைச் சிறிது ஆழமாக ஆராய்வோமாகில் அதனுடைய ஜனநாயகக் கோட்பாடுகளை (Democratic methods), நாம் நன்கு உணரமுடியும். ஏதென்ஸ் நகரத்தினர் பண்டைக் குலமரபின் வழியாக வந்தவர்கள் என்பது முன்னரே கூறப்பட்டது. பத்துப் பிரிவுகளாகக் கொண்ட குலமரபின் முறையில் வாழ்ந்தனர். எனவே, ஒவ்வொரு பிரிவிலிருந்தும், ஐம்பது பிரதிநிதிகள் ஒரு மாதக் காலத்திற்கு, ஐநூற்றுவர் குழுவில் பங்கு பெற்றனர். அவ்வைம்பதுபேர் கொண்ட குழுவிற்கு ஒவ்வொரு நாளும், ஒரு தலைவர் (President) தேர்ந்தெடுக்கப்பட்டார். எந்த நபரும் ஒரு தடவைக்குமேல் இப்பதவியைப் பெறமுடியாது, கூடாது என்பது நகரத்தார் ஒப்புக்கொண்ட மரபு. அம்மரபுக்கிணங்க, ஒவ்வொரு நகரத்தானும் தன்னுடைய வாழ்நாளில் நிச்சயமாக ஒருநாள் அந்தத் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சந்தர்ப்பம் பெற்றிருந்தான் என்பது ஊன்றிக் கவனிக்கத்தக்கது. ஒரு வருடம் என்பது பத்து மாதங்களைக் கொண்டிருந்தது. எனவே, ஒவ்வொரு மாதத்திற்கும் ஐம்பதுபேர் ஒவ்வொரு குலப் பிரிவிலிருந்தும் அனுப்பப்பட்டதால், மொத்தத்தில், ஐநூற்றுவர் ஆகினர் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஏதென்ஸ் நகரத்து அரசியல் நிறுவனங்களில் மிகவும் முக்கிய மானது நியாயத்தலமாகும் (Court of Justice). இத்தலங்களின் மூலமாக மக்களிடையே நீதியையும் சட்டங்களையும் நிலை நாட்டினர். மக்களிடையே ஒற்றுமை உணர்வையும், உயர்ந்த நோக்கத்துடன் உண்மைக்காக வாழவேண்டும்; அதற்கு அடிப் படை அறம் (Justice) என்பன போன்ற கருத்துகளை மக்களின் மனத்தில் நிலைத்து நிற்க வழிகாட்டிகளாக அமைந்தன. நியாயத் தலங்களில் நடைபெற்ற முறைகளை நோக்கும்போது, தற்காலத் தில் காணப்படும் நீதித்துறையிலுள்ள பல பிரிவுகள் அங்குக் காணப்படவில்லை. இருந்த போதிலும், ஒரு நீதிமன்றத்தில் கூறப் பட்ட முடிவுகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றமுடி யாது. எனவே, ஒருமுறை செய்த முடிவுகள் என்றும் ஏற்றுக்

கொள்ளத்தக்க முடிவுகளாகத் திகழ்ந்தன. இவ்விதக் கொள்கைகளை ஒப்புக் கொள்வதற்கு முக்கியமான காரணம், நீதிபதிகளாகத் திகழ்ந்தவர்கள், நேர்மையும் பொதுநோக்கும் கொண்ட உத்தமர்களாக விளங்கியதே. நீதிபதிகள் நியமனம் செய்யப் பெற்ற முறைகளும் சுவாரஸ்யமானவையாகும்; அதனைக் குலுக்குச் சீட்டு முறை (Lot System) என்று கூறலாம். அதன் மூலமாக நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், எந்த நீதி மன்றங்களில் யாருடைய வழக்கைத் தீர்ப்பதற்குத் தாம் தேர்ந்தெடுக்கப்படுகிறோம் என்பது நீதிபதிகளுக்கே தெரியாது! முப்பது வயதுக்கு மேற்பட்ட, அறிவிலும் ஒழுக்கத்திலும் திறமை பெற்ற ஆடவர் நீதிபதி (Jurimen) களாகலாம் என்ற மரபு இருந்தது. இவர்களை நகரத்தின் உள்ளாட்சிப் பிரிவுகள் அங்கீகரித்து அனுப்பின; அவ்விதம் அனுப்பப்படும் ஆயிரக்கணக்கான நபர்களைச் சீட்டுக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தனர். ஒவ்வொரு ஆண்டிற்கும் சுமார் 6000 நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று சரித்திரக் குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. நீதிமன்றங்கள், மக்களையும் பெருமன்றத்தினையும், ஐந்நூற்றுவர் குழுவையும் இணைக்கும் நிறுவனங்களாகப் பணிபுரிந்தன. எனவே தான் நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும், கிரேக்க மக்கள் பயபக்தியுடன் கண்காணித்து வந்தனர் என்பதும் கவனிக்கத் தக்கது.

## நகர அரசியல் வாழ்வின் சிறப்பியல்புகள்

ஏதென்ஸ் நகரத்தில் இயங்கிவந்த அரசு, நேரடியான அரசு (Direct Government) என்று கூறப்படுகிறது; இதனை மக்கள் ஆட்சி என்றும் கூறலாம். இதற்குக் காரணமான பல சூழ்நிலைகளில் மிகவும் முக்கியமானவை இரண்டு என்று எடுத்துக்கூறலாம். அவையாவன: நகரத்தின் பரப்பளவு குறுகியது; சுமார் நாற்பது சதுரமைல்கள் தான்; மக்களின் தொகையும் சிறியது; சுமார் 3,00,000 பேர்கள்தான்; அதில் $\frac{1}{3}$ பங்கினர் மட்டும் அரசியலில் பங்கு கொண்டனர்; பெண்டிர் அரசியலில் பங்குகொள்ளவில்லை. இவ்வித நிலைமைகளினால் அரசியலில் பங்குபெற்ற நகரத்தினர் ஒருவரையொருவர் நன்றாகத் தெரிந்திருந்தனர். அவர்கள் எல்லோரும் ஓர் இனம்; ஒரு குலம் என்ற ஒற்றுமை உணர்வுகளுடன், பொதுமக்களின் நல்வாழ்வுக்காகவே பணிபுரிந்து வாழ்ந்தனர். இவற்றிற்கு அனுகூலமாக, அவர்கள் பொது மன்றங்களில் கூடுவதும், பொதுப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசி,

ஆராய்வதிலும் ஈடுபட்டிருந்ததால், மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக அறத்தின் அடிப்படையில் ஆட்சியை நடத்தி வந்தனர். எனவே, ஒவ்வொரு கிரேக்க மகனும் தன்னுடைய தாய்நாட்டை அரசியல் நிறுவனமாகமட்டும் கருதவில்லை; ஆண்டவனின் இருப்பிடமாகக் (Theocracy) கருதி வணக்கம் செலுத்தினன். அதனுல்தான் வருடத்தில் பலமுறைகள், நாட்டைக்காக்கும் தெய்வங்களுக்கு விழா எடுத்து வழிபட்டனர். அவ்விழாக்களில் எல்லா மக்களும் பங்கு கொண்டு தங்களுடைய மரியாதைகளைப் பயபக்தியுடன் வெளியிட்டுக் கொண்டார்கள் என்பதும் கவனிக்கற்பாலது. ஆகவே, கிரேக்கமக்களின் மரபுக் கிணங்க, அரசியல் கோட்பாடுகளும் சமயக் கோட்பாடுகளும், ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழ்ந்து வளம் பெற்றனவென் பதையும் வாசகர்கள் ஆய்ந்து கவனிக்கவேண்டும்.

கிரேக்க மக்கள் நடத்திய அரசியலில், மக்கள் பொது வாகவும், நகரத்தினர் சிறப்பாகவும் நேரடியான பங்கு கொண்ட னர் என்பது முன்னமேயே குறிப்பிடப்பட்டது. அவ்வித நேரடி யான அரசியல் வாழ்வை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், செம்மையான அரசியல் அமைப்பில்தான் சிறப்பான பொது வாழ்வு அமையும்; அப்போதுதான், மக்கள் தங்களது உயரிய நோக்கங்களையும், வாழ்வின் நற்பயனையும் பெற்றுப் பெருவாழ்வு வாழமுடியும் என்பதாகும். எனவேதான், அரசியல் வாழ்வை யும், பொதுமக்கள் வாழ்வையும், பிரித்துக்கூற முடியாதவாறு, ஒன்றிணைந்த பொருளின் இரு பிரிவுகளாகத் திகழ்ந்தது கிரேக்க மக்களின் வாழ்க்கைத் தன்மை என்பதும் ஊன்றிக் கவனிக்கத் தக்கது. இந்நிலையில், கிரேக்க மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பொதுச் சமுதாய வாழ்க்கை என்று குறிப்பிட்டாலும் மிகை யாகாது; ஏனென்ருல், அரசியல் முறைகள், பொதுமக்களின் தேவைகளை எந்தெந்த விதங்களில் தேவை என்றுணர்ந்து அவைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்துவந்தது. இருந்த போதிலும் இவ்விதமாக அமையப்பெற்ற பொதுச் சமுதாய அமைப்பிலும், தனி மனிதனின் வாழ்வும் அதன் வரைமுறை களும் நன்கு நிர்ணயிக்கப் பெற்றிருந்தன. அரசியல் வாழ்வையே தங்களது வாழ்க்கையாகக் கொண்ட நகரத்தினர், பொதுமக் களின் தேவைகளையும் அவற்றைச் சரியான முறையில் அமைத்துக் கொடுப்பதிலும், அவைகளைப் பற்றிய வாதங்களிலும் கலந்துகொண்டு, பெருமன்றங்களிலும், பொது மேடைகளிலும், சில சந்தர்ப்பங்களில் தெருக்களிலும் கூடியும், பேசியும், விவா தித்தும் தீர்வு காண்பதிலேயே காலம் கழித்தார்கள்.

இருந்தபோதிலும், பொது மக்களுக்காகவே வாழ்ந்த நகரத்தார்க்கும், தங்களது சொந்த வாழ்க்கை யென்று இருக்கத்தான் செய்தது. அவர்களின் தேவைகளை அமைத்துக் கொடுத்துப் பணிபுரிவதற்கு, ஒவ்வொரு நகரத்தானுக்கும் சுமார் நான்குபணியாட்களாவது இருந்தார்களென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விதம் தனிப்பட்டோர் வாழ்க்கை இயங்கி வந்தபோதிலும், அதன் உயர்ந்த நிலையைப் பொதுமக்கள் வாழ்வில்தான் பூர்த்தியடைந்தது. அந்த உயர்ந்த அடிப்படைக் கொள்கையின் காரணமாகத்தான், கிரேக்கமக்கள் தங்களது வாழ்க்கையைப் பொது நோக்குடன் அமைத்துக்கொண்டார்கள்; ஆகவேதான், தனிப்பட்டோரின் வாழ்க்கையை மக்கள் சமூகத்திலிருந்து பிரித்துக் கூறவுமில்லை. ஆனல் இவ்விதப் பிரிவுகள் தற்காலத்தில் உண்டு என்பதையும் நாம் நன்கு அறிவோம்; இவ்விதப் பிரிவுகளைக் கிரேக்க மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம், மனித வாழ்க்கை அமைவதே சமூகவாழ்வில்தான் என்பதாகும் ; சமூகவாழ்வு செம்மையடைவது அரசியல் வாழ்விலுல்தான் ; அரசியல் வாழ்வைக் கொண்டதே நாடு. இவை யாவும், இலைகளும் கிளைகளும், கிளைகளும் மரமும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டுள்ளதைப்போல, இணைபிரியா ஒரு பொருளின் பல பாகங்கள் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைவதாகும். இது உறுப்பமைதிக் கொள்கை (Organic Theory) என்று அழைக்கப்படுகிறது. இடைக்கால ஐரோப்பாவில் தோன்றி வளர்ச்சிபெற்ற எல்லா அரசியல் கொள்கைகளும், கிரேக்கப் பெருமக்களின் உறுப்பமைதிக் கொள்கையைத் தழுவி எழுந்தன என்பதையும் வாசகர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மக்களுக்குப் பணிபுரிவதில், அரசியல் அலுவல்களில் நகரத்தார், எல்லாப் பணிகளையும் தொழில்களையும் சமமாகவே கருதினுர்கள்; போற்றினுர்கள். இவ்வுயர்ந்த பண்பினைச் சிறிது விளக்குவோம். உதாரணமாக, ஒரு சந்தர்ப்பத்தில், பெரு மன்றத்தின் வாதங்களில் பங்கு பெற்று முக்கியத்துவம் பெற்றவராக இருக்கலாம்; மற்றச் சந்தர்ப்பத்தில் நீதிபதியாகப் பணியாற்றி இருக்கலாம். இவ்விதம் பல சந்தர்ப்பங்களில் பலவிதமான பணிகளைச் செய்து மக்களுக்கு நன்மை புரிய வேண்டுமென்பதையே குறிக்கோளாகவும், அவ்வித உயர்ந்த குறிக்கோளை நிறைவேற்றுவதில் ஒருவனுடைய தன்மையும் திறமையும் முக்கியமாகவும் கிரேக்க மக்கள் கருதினுர்கள். எனவே, பணி என்பது பொதுவாகவும், அதனை ஏற்றுக்கொள்வோர், நகரத்தாரில்

யாராகவும் இருக்கலாம், ஆனால் திறமை படைத்தவர்களாக இருக்கவேண்டும்; அப்போதுதான் அதன் பயன் மக்களைச் சென்றடையும். இக்கொள்கையைக் கிரேக்க மக்கள் பெரிதும் போற்றினர். இக்கொள்கையினால் ஏற்படும் பயன், தற்காலத் திற்கும் எவ்வளவு பொறுத்தமுடையதாக யிருக்கிறது; பெரு நன்மையை விளைவிக்கக் கூடியதாகயிருக்கிறது என்பதும் நன்கு கவனிக்கத்தக்கது.

மேலும் ஒரு முக்கியக் குறிப்பு வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கிரேக்கப் பேரறிஞர்களின் நூல்களிலோ அல்லது கிரேக்கப் பெருமக்களின் வாழ்விலோ, தனி மனிதனின் உரிமை, பொதுமக்களின் உரிமைகள் என்ற பாகுபாடுகள் எழுந்ததில்லை; அதற்கு அவசியமும் இருந்ததில்லை. அதன் காரணம் என்னவென்றால், அம்மக்கள் பொதுவாகவும், நகரத்தார் சிறப்பாகவும், தங்களின் நன்மைக்காகத் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட பொதுப் பணிகளைச் செய்வதிலேயே ஒவ்வொருவருடைய தேவைகளும் பூர்த்திஅடைந்து விட்டதாகக் கருதினார்கள்; அந்த நம்பிக்கையிலேயே வாழ்ந்தார்கள். முன் குறிப்பிட்ட உருவமைப்புக் கொள்கையைத் தழுவி, தனி மனிதனின் வாழ்வு சிறியது; அதனைப் போலவே ஆனால் அதைவிட மிகப் பெரியது பொது வாழ்வு; இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம் அளவில் தான்; அடிப்படையில் அன்று. ஏனென்றால், தனி மனிதனுக்கு என்னென்ன தேவைகளோ அவையே பெருமளவில் பொது மக்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே பொதுமக்களைக்கொண்ட நாடு, 'மிகப் பெரும் அளவினைப் பெற்ற மனிதன்' (The State is a magnified individual) என்று கூறினால் அது மிகையாகாது என்பது பிளேட்டோவின் கொள்கையாகும். இக்கூற்றின் அடிப்படையில், தனி மனிதனின் உயர்ந்த இலட்சியங்கள் பெருமளவில் பெற்றுப் பயனடைய முடிவது பொதுச் சமுதாய வாழ்வில் தான் என்ற உண்மையும் கவனிக்கற்பாலது. எனவே, பொதுச் சமுதாயம் அல்லது நாடு என்பது மக்களின் கூட்டுச் சேர்க்கை (Association)யல்ல; அது ஓர் உயிருள்ள பொருள் (Organism). இக் கொள்கையிலிருந்துதான் உருவமைப்புக் கொள்கையே தோன்றியது என்பதையும் வாசகர்கள் கவனிக்கவேண்டும்.

## கிரேக்கச் சமுதாயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்

நகரத்தான் (Citizen), என்பதற்குச் சரியான பொருள் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், கிரேக்கப்

பெருமக்களின் சமுதாயப் பணியில் நகரத்தார் பெற்ற பங்கும், அவர்களது தகுதியையும் தெரிந்துகொள்ள வேண்டியதவசியமாகிறது. அரசியல் வாழ்வும், குடி உரிமையும் (Citizenship), ஒன்ருேடொன்று நெருக்கமாக இணைந்ததாகும் என்பது கிரேக்கப் பெருமக்களின் கொள்கை. எனவேதான் அரசியலில் பங்கு கொள்ளும் நகரத்தினர், அரசியல் வாழ்வையே-பொது வாழ்வையே தங்கள் வாழ்வாகக் கொண்டனர்; வாழ்ந்தனர். அவர்களுடைய தேவைகளை நல்ல முறையில் அமைத்துக் கொடுத்து உபசரிப்பதற்கு அடிமைகள் வாழ்ந்தனர். அடிமைக் கொள்கை உறுதியாக நிலைத்துநின்று வாழ்ந்த காலம் அது. அவ்வித நிலையிலும் குடியுரிமை அங்கீகரிக்கப்பட்டதென்ருல், அதனை மிகவும் கவனமாகத்தான் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்ருல், தற்காலத்தில் குடியுரிமை என்பதற்கும், கிரேக்க மக்களின் குடியுரிமைக் கோட்பாட்டிற்கும் வேற்றுமைகள் உண்டு என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். கிரேக்கப் பெருமக்களில் நகரத்தாரின் பங்கு $\frac{1}{3}$ பாகம்தான். அவர்கள் பெற்று வாழ்ந்த குடியுரிமை என்பது, அதிகாரத்தைச் செலுத்துவதற்கு மட்டுமன்று; அதிகாரத்திற்கு உட்பட்டு அடங்கி வாழ்வதற்கும் ஆகும். எனவே குடியுரிமை, தகுதியின் அடிப்படையிலும் அறிவுச் செல்வம், பொருட் செல்வம் முதலியவற்றின் அடிப்படையிலும் நகரத்தாருக்கு வழங்கப்பட்டிருந்தது.

மக்கள் சமுதாயம் நலமாக அமைவதற்கு அரசு தேவை; அதனைச் செம்மையாக நடத்துவதற்குத் தகுதியுடைய நகரத்தார் வேண்டும்; அவர்களால் நடத்தப்படும் அரசியல் வாழ்வுக்கு அரணாக அமைய சட்ட திட்டங்கள் நிச்சயமாக வேண்டும் என்ற கோட்பாடுகளை மதித்தவர்கள் கிரேக்கப் பெருமக்கள். மனித நல்வாழ்வுக்கு, அரசியல் வாழ்வுக்குச் சட்டம், ஒழுங்குமுறை போன்றவைகள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதைப் பற்றிக் கூறும்போது, சட்டங்களின் அடிமைகள்தான் மக்கள் எல்லோரும் என்று பிளேட்டோ கூறியுள்ளார். இவ்வளவு உயரிய இடம் சட்டத்திற்கு அளிக்கப்பட்டதன் முக்கியக் காரணம், சட்ட நியதிகள் மனிதனுடைய தெளிவான, உயர்ந்த சிந்தனையிலிருந்து தோன்றியவை என்பதுவே. இதனை இன்னும் சிறிது விளக்கமாகக் கூறவேண்டுமென்ருல், சட்ட நியதிகள், மனிதனுடைய அறிவுக்கு அப்பாற்பட்ட எல்லையிலிருந்து (Super human origin) தோன்றி மனிதனுடைய தெளிவான சிந்தனைக்குத் தெரிவிக்கப்பட்ட உண்மைகள் என்பன போன்ற நம்பிக்கையை ஒப்புக்கொண்டவர்கள் கிரேக்க மக்கள். இன்னும் சொல்லப்போனல், கடவுள் நம்பிக்கையில் உறுதியாக நிலை

பெற்று வாழ்ந்த கிரேக்கப் பெருமக்கள், சட்ட திட்டங்கள் மனித நல்வாழ்வுக்காக ஆண்டவனால் அளிக்கப்பட்டவை என்ற சமய நோக்கு உடையவர்களாக விளங்கினார்கள். இவ்வித நம்பிக்கையினால், சட்டதிட்டங்கள் மனிதர்களால் மாற்றப்பட மாட்டா; ஏனென்றால், அவை மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவையல்ல; ஆனால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால் சட்டதிட்டங்கள் மாற்றங்களுக்கோ, மறுப்புகளுக்கோ உட்படாதவை; அவை நிரந்தரமானவை. மக்களின் கடமை, சட்டங்களை மதித்துப் போற்றி நடப்பதேயாகும். மக்களின் நல்வாழ்வைப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்ட சட்ட திட்டங்கள், ஒரு விதத்தில் ஒரு சிலருக்குத் தவறாகப்பட்டாலும், அவற்றை எதிர்க்காமல் மதித்துப் போற்றி நடப்பதே மனிதனின் தலையாய கடமை என்பது கிரேக்க மக்களின் அசைக்க முடியாத ஆணித்தரமான நம்பிக்கையாகும். இவ்வுண்மையை விளக்குவதற்கு, மனிதகுலத்தின் மங்காத விளக்கென்று போற்றிப் புகழப்படும், கிரேக்கப் பெருமக்களின் சிந்தனைச் சிற்பியாகிய சோக்ரதரின் வாழ்வும், சாவும் ஓர் உதாரணமாகும். சட்டக் கருத்துக்கள் மனிதனுடைய தெளிவான, ஆழமான சிந்தனையிலிருந்து தோன்றியவை; அவற்றின் பயன் மக்களின் நல்வாழ்வு; எனவே சட்டங்களின் அடிப்படை அறமாகும் (Justice). அறத்தின் அடிப்படையில் எழுந்தனவே சட்டங்கள் என்பது பிளேட்டோவின் கொள்கை. எங்கெங்கு அறம் நிலைத்திருக்கிறதோ அங்கெல்லாம் நற்செயல்களும், நல்வாழ்வும் நலம்பெற்று வாழ்கின்றன. எனவேதான் அறத்தின் அடிப்படையில் எழுந்த சட்டங்களைப் போற்றி வாழ்வதே மக்களின் தலையாய கடமை என்பது கிரேக்கப் பெருமக்களின் நம்பிக்கை.

அறத்தின் அடிப்படையில்தான் சட்டதிட்டங்கள் அமையப்பெற்றன என்ற உறுதியான நம்பிக்கையினால், கிரேக்கப் பெருமக்கள் நீதித்துறையைப் (Judiciary) போற்றி வணங்கினார்கள். பொதுநலப் பணியின் சிகரமாகவே நீதித்துறை விளங்கியது என்றால் அது மிகையாகாது. இவ்வளவு முக்கியத்துவம் நீதித்துறைக்கு வழங்கப்பட்டபோதிலும், அவற்றின் தலையாய கடமை என்னவென்றால், இயற்கையில் உருவான சட்டதிட்டங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு, அவற்றின் பிரகாரம்தான் மனித இயல்புகளையும், நடவடிக்கைகளையும் சரி அல்லது தவறு என்று நிர்ணயித்தார்கள்; தண்டனைகள் விதித்தார்கள். மற்றபடி, அச்சட்டங்களைத் திருத்தி அமைக்கவோ, மாற்றவோ எந்த விதத்திலும் முயலவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இதற்குக் காரணம், சட்டதிட்டங்கள் இயற்கையாகவே தோன்றி

னவை; அவற்றிக்கு மூலகாரணம் ஆண்டவன் ஒருவனே; இவ்வுண்மையை அறிவதற்குச் சீரிய சிந்தனையும் தெளிவான மனநிலையும் பெற்றவர்கள்தான் தகுதியுடையவர் என்பன போன்ற ஆன்மீகக் கொள்கைகளை ஒப்புக்கொண்டவர்கள் கிரேக்கப் பெருமக்கள். இயற்கையும், சமூகமும், சட்ட திட்டங்களும், மனித இயல்புகளும், ஒழுக்கமும், பண்பும் ஒன்றையொன்று இணைபிரியாமல் சேர்ந்துள்ள வாழ்க்கைத் துறையின் பலபகுதிகள்; இவை யாவும் ஒன்றுக இணைந்த பொழுதே பொருள் நிறைந்த உன்னத வாழ்க்கை மனிதனுக்குக் கிட்டுகிறது; மனித வாழ்வு தெய்வ வாழ்வாக மலருகிறது என்பன போன்ற ஆன்மீகக் கொள்கைகள் கிரேக்கப் பெருமக்கள் வாழ்வில் மலிந்து கிடந்தனவென்பதையும் நாம் காணலாம்.

இவ்விதமாக இயற்கையாக அமைந்த இறைவாழ்வின் சுவராக நீதித்துறையும், அச்சுவர்களின் மீது அமையப்பெற்ற கட்டுக் கோப்பாக ஒழுக்கமும், பண்பும் அலங்கரித்தன; அவற்றைக் கட்டிக்காக்கும் சலவைக் கற்களாக விளங்கின சட்டதிட்டங்கள். எனவே கிரேக்கச் சட்டதிட்டங்கள் சமுதாய வாழ்வின் அடிப்படைநிலையில் அமைந்திருந்தன; அதனுல்தான் அவற்றை போற்றிப் பாதுகாத்து வந்தார்கள். அவ்விதச் சூழ்நிலையிலிருந்து எழுந்தவைதான் சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity), விடுதலை (Freedom) என்னும் உயரிய அரசியல் பண்புகளாகும் என்பதையும் வாசகர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். இவ்வுயரிய அரசியல் பண்புகளைப் பெறுவதற்குச் சட்டதிட்டங்களை மதிப்பதும், அவற்றின் பிரகாரம் நடப்பதும் மிகவும் இன்றியமையாதவை என்பதும் கவனிக்கத்தக்கது. அதே நேரத்தில், சட்டதிட்டங்கள் மனிதர்களால் உண்டாக்கப் படுவதில்லை என்ற கிரேக்கமக்களின் கொள்கைகளையும், கவனத்திற்கொள்ளவேண்டும். கிரேக்க நாகரிகத்திற்குப்பின்புதோன்றிய ரோமாபுரிமக்கள்தான், சட்டதிட்டங்களைத்தங்களால் உண்டாக்கவும், மாற்றவும் முடியும், கூடும் என்ற கொள்கையைப் பின்பற்றினுர்கள். ரோமாபுரி மக்கள் பெற்றிருந்த அரசியல் வாழ்வு, கிரேக்க மக்களின் அரசியல் வாழ்விலிருந்து வேறுபட்டது என்பதும் கவனிக்கத்தக்கது. நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் ரோமாபுரிஅரசு மிகப் பெரியதாக இருந்ததால் அது உலக அரசு (World State) என்றே அழைக்கப்பட்டது. அவ்வளவு பெரிய அரசைப் பெற்றிருந்த ரோமாபுரி மக்கள், சட்டதிட்டங்களை அடிக்கடி உண்டாக்குவதும், அவற்றை மக்களின் தேவைகளுக்கேற்ப மாற்றுவதும் அவசியமாயின. எனவே சட்டதிட்டங்

களைப் பொறுத்தமட்டில், கிரேக்கப் பெருமக்களும் ரோமாபுரி மக்களும் எவ்விதம் ஏற்றுக்கொண்டார்கள் என்பதில் நிச்சய மாக வேறுபாடுகள் உண்டு, அதற்குக் காரணங்களும் உண்டு என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக.

அரசியல் துறையில் மட்டுமல்லாமல் கிரேக்கப் பெருமக் களின் வாழ்க்கைத்துறை எல்லாவற்றிலும் அறத்தின் பங்கு முக்கியமானதாக மட்டுமல்லாமல் முதன்மை இடமும் பெற்றிருந் தது என்ற உண்மையை வாசகர்கள் கவனிக்கவேண்டும். ஒழுக்கமான வாழ்க்கைப் பயணமே அறம் என்று கருதப்பட்ட தால், அறத்தாற்றின் வாழ்வதே மிகவுயர்ந்த பண்பாகப்போற்றி புகழப்பட்டது. உண்மையைப் பேசுவதும், தகுதியின் அடிப் படையில் ஒருவனுக்கு உரியவற்றை அவனுக்கே அளிப்பதும் அறமாகும் என்று பிளேட்டோ கூறுகிருர். மேலும் அவர் கூறு வதாவது: உயிரின் நல்லொழுக்கமே அறம்; தீயொழுக்கம் மறமாகும். மனிதச் சமுதாயத்திலே மாண்பும், பண்பும் தழைத் தோங்கி வளம்பெற்று வாழ்கிறதென்ருல் அங்கே அறம் அளவோடு ஆட்சி புரிகிறது என்றுதான் பொருள்; தன்னுடைய இயற்கையான திறமையினுல் தகுதி பெற்ற ஒருவனுக்கு, அவனுக் குத் தேவையான சந்தர்ப்பங்களை அமைத்துக்கொடுத்து, அதன் மூலமாக அவனிடமுள்ள உயரிய பண்புகள் வெளிப்பட்டு, எல்லோருக்கும் நன்மை பயப்பதே அறச்செயலாகும். இவ்வித மாக அறம், வாழ்க்கைத் துறைகள் யாவற்றிலும் தழைத்தோங்கி அமைவதே பேரின்ப வாழ்வாகும்; அங்கே எல்லோரும் அவரவர் களின் திறமைக்கேற்ப, தகுதிக்கேற்ப நன்மைகளைப் பெற்று நல் வாழ்வு வாழமுடியும்; அவ்வித நல்வாழ்வு ஒவ்வொருவரும் பெறுவதற்கே உரிமைகளும், கடமைகளும் தோற்றுவிக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எனவே தனி மனிதனின் உரிமை களும், அவர்களின் பொதுக் கடமைகளும் அறத்தின் அடிப் படையில்தான் அமைகின்றன. பிளேட்டோவின் இவ்வரிய பெரிய கூற்றுகளை நன்கு ஆராய்வோமாகில், கிரேக்கப் பெரு மக்கள், அறத்திற்கு அளித்த மகத்தான இடமும், அதன் ஆழமான பொருளும் நன்கு புலனுகும். சுருங்கக்கூறின், அறம் என்பது, நீதிமன்றங்களில் மட்டும் உலாவும் தென்றல் காற்றல்ல; மக்கள் வாழ்வின் மூலை முடுக்குகளிலும், சாலைத் தெருக்களிலும், அவர்கள் சொல்லிலும், செயலிலும், நடத்தையிலும் பின்னிப் பிணைந்து கிடக்கும் தங்கச் சங்கிலியாகும் என்று உவமானமாகக் கூறினுல், அதன் பொருள் உண்மையைத் தவிர வேருென்று மில்லை. இவ்விதமாக அறத்தின் அடிப்படையில் இயங்கி,

மக்களின் நன்மைகளைத் தேர்ந்து, அவற்றை நன்முறைகளில் பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலைகளையும், சமுதாய அமைப்பையும் உண்டாக்கித் தருவதே அரசின் தலையாய கடமை என்பதும் கிரேக்கப் பெருமக்களின் தீர்மான முடிவாகும் என்பதும் கவனிக்கற்பாலது.

## தற்கால அரசியல் கருத்துகளில் கிரேக்கப் பெருமக்களின் பங்கு

சமார் மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்கு முன்பு சீரான சமூக அமைப்பும் செம்மையான அரசியல் வாழ்வும் பெற்றுச் சிறப்பான நாகரிகத்தைக் கிரேக்க மக்கள் அடைந்திருந்தனர் என்பது சரித்திரம் கூறும் உண்மைகளாகும். அதே நேரத்தில், ஏன், அதற்கு முந்திய காலத்திலும்கூட, வளமான அரசியல் வாழ்வுபெற்ற, பாபிலோனியா, பாரசீகம், இந்தியா, சீனு போன்ற நாடுகளும் அவற்றின் நகரங்களும் இருக்கத்தான் செய்தன. ஆனுல் அவைகளைப்பற்றிக் குறிப்புகளைத் தவிர, வரலாற்று ரீதியாக அளவிட்டுக்கூறும் செய்திகள் கிடைக்கவில்லை! அந்தக் குறைபாடுகள் இல்லாமல், கிரேக்கப் பெருமக்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையையும், அவர்கள் அமைத்துக்கொண்ட அரசியல் நிறுவனங்களைப் பற்றியும் தெளிவான, தீர்மானமான கருத்துகளை எழுதிவைத்துச் சென்றுர்கள். எனவேதான், அவைகளைப் படிக்குந்தோறும் அதன் பயனை மக்கள்-அடைகின்றனர். அதன் காரணமாகத்தான், மேல்நாட்டு நாகரீகம், அரசியல் வாழ்வு, விஞ்ஞான வளர்ச்சி என்று தற்காலத்தில் குறிப்பிட்டுக் கூறப்படும் உன்னத நிலைகளுக்கும், கிரேக்க மக்களின் பண்டைக்கால வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை வாசகர்கள் மனதிற் கொள்ளவேண்டும். இவற்றிற்கு மிக முக்கிய காரணம் கிரேக்கப் பேரறிஞர்களாகிய, பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ருேர் எழுதிவைத்துவிட்டுச் சென்ற நூல்களே என்பதையும் நன்றியறிதலுடன் நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். அவர்களுடைய எழுத்துகளிலே பழமைவாய்ந்த கிரேக்க மக்களின் வாழ்வும் வளர்ச்சியும் காணலாம்; ஆனுல், அதே நேரத்தில் அவ்விதக் குறிப்புகளின் மூலமாக, மக்கள் இனத்திற்கே தேவையான, பொதுவான கருத்துக்களையும் அப்பெரியோர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றனர் என்பதும் உணரற்பாலது. கிரேக்கப் பெருமக்கள் தாங்கள் மட்டும் நல்வாழ்வு வாழ்ந்து விட்டுச் செல்லவில்லை ; மற்றவர்களுக்கும், ஏன், மனித இனத்

திற்கே வழிகாட்டிச் சென்றுள்ளனர் என்று கூறினால் அது மிகையாகாது. அவர்கள் வாழ்ந்த உயரிய அரசியல் வாழ்வு, அவர்கள் அமைத்துக்கொண்ட அரசியல் கோட்பாடுகள், நிறுவனங்கள், அவற்றிற்கு அளிக்கப்பட்ட உரிமைகள், முக்கியத்துவம் ஆகிய பலவற்றில், சிலவற்றை வாசகர்களின் சிந்தனைமுன் வைக்க விரும்புகிறேன். அவைகளை உணருந்தோறும், எவ்வளவு சீரிய சிந்தனையைப் பெற்றவர்களாகவும், நாகரிக உணர்வு கொண்டவர்களாகவும் கிரேக்கப் பெருமக்கள் திகழ்ந்தார்கள் என்பதும் நன்கு புலனாகும்.

## நாட்டுப் பற்று (Patriotism)

தாய் நாட்டிற்காகத் தன் வாழ்க்கையையே பணயம் வைக்கும் துணிவு கொண்டவர்கள் கிரேக்க மக்கள். மக்களின் நல்வாழ்வில்தான் நாடு தன்னுடைய கடமையைச் செய்து, தன்னுடைய நிலையை உயர்த்திக் கொள்ள முடியும் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டவர்களானாலும், நாட்டிற்காக மக்கள் எத்தியாகத்தையும் செய்வர்; செய்யவேண்டும் என்னும் கருத்தினையே வலியுறுத்தினர். இதற்கு முக்கியக் காரணம், நாட்டின் வாழ்வே தங்கள் வாழ்வாகக் கொண்டதும், தாங்கள் எல்லோரும் ஓர் இனம், ஒரு குலம் என்னும் உயரிய பண்பாடுகளைக் கொண்டவர்களாயும் விளங்கினர் கிரேக்க மக்கள் பொதுவாகவும், நகரத்தினர் சிறப்பாகவும் என்று குறிப்பிடலாம். இக்கருத்தின் அடிப்படையில், தோன்றியதுதான் உலகச்சமுதாயச் சகோதரத்துவம் (Brotherhood of Mankind). மக்கள் இவ்வளவு உயரிய நோக்கங்களைப் பெறுவதற்கு, உறுதுணை செய்யும் உயர்ந்த நிறுவனமாக நாடு விளங்கியதால் அதனைப் போற்றிக் காப்பாற்றினர் என்பது நன்கு புலனாகும் உண்மையாகும். நாடு வாழாமல், பொதுவாழ்வு மட்டுமன்று, தனி மனிதனின் வாழ்க்கையே இயலாததாகிவிடும் என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. ஏனென்றால் நாட்டு வாழ்வில், முக்கியமாக நகரத்தினர் எல்லாவிதச் சலுகைகளையும் பெற்றுப் பொதுமக்களுக்குப் பணிபுரிந்து, தாங்களும் நல்வாழ்வு நடத்தி நலம்பெற்றிருந்தனர். இவ்விதம் தங்கள் வாழ்வுக்கும், மற்றவர்களின் நல்வாழ்வுக்கும் அடிகோலியாக அமைந்த காரணத்தால், நாட்டுப்பற்று ஒவ்வொரு குடிமகனிடத்திலும் ஓங்கி வளர்ந்திருந்தது என்பது உண்மை.

## சட்டத்தின் இறைமை (Sovereignty of Law)

கிரேக்கப் பெருமக்கள் சட்டநியதிகளைத் தெய்வ வாக்காகக் கருதினமையால் சட்டங்களுக்குட்பட்டு வாழ்வதே அவர்கள் கடமையென்று நம்பினார்கள்; வாழ்ந்தார்கள். நாட்டின் உரிமைக்கும் உயர்வுக்கும் சட்ட திட்டங்கள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதைப் பிளேடோவும் அரிஸ்டாடிலும் மிகவும் வலியுறுத்தியிருக்கின்றனர். சட்டங்களின் தலைமை உரிமை, மக்களின் உரிமையைவிட உயர்ந்தது என்னும் அரிஸ்டாடிலின் கொள்கை இக்காலத்திற்கும் பொருந்தும் உண்மை என்பதையும் வாசகர்கள் கவனிப்பார்களாக. கிரேக்கப் பெருமக்களின் அரசியல் சட்ட திட்டங்கள் தலைமுறை தலைமுறையாகப் பழக்கத்தில் இருந்து வந்த சம்பிரதாயங்கள். அவை ஏற்பட்ட காலமே நிச்சயமாக அறுதியிட்டுக் கூறவியலாது என்பதை உணருந்தோறும், அவற்றின் பழமையும், புனிதத் தன்மையும் நன்கு விளங்கும். பழமையானதாகவிருந்த போதிலும், தெளிவான சிந்தனை பெற்ற பெரியோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நல்வாழ்வுக்காக அளிக்கப்பெற்ற அரிய செல்வமாகக் கருதப்பட்டது. எனவேதான், கிரேக்கச் சமுதாயத்தின் அடித்தளமாகச் சட்ட திட்டங்கள் திகழ்ந்தன; அவற்றின் தலைமையுரிமை ஏற்றுக் கொள்ளப்பெற்றுப் போற்றப்பட்டன.

## மனச்சாட்சியின் உரிமை (Freedom of Conscience)

கிரேக்கப் பெருமக்கள் தனி மனிதனின் உரிமைகளைப் பொது நன்மைக்காகப் பணயம் வைக்கவேண்டும் என்ற பொது நோக்குடையவர்களாயினும், தனி மனிதனின் மனச்சாட்சியின் குரலுக்குப் பூரண உரிமையளித்து, மதித்துப் போற்றினார்கள் என்பதும் உண்மை. இவ்வுண்மையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரே ஒரு சான்று, வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சான்று. அதுதான் மேதை சோக்ரதரின் வாழ்வும், முடிவுமாகும். தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொருளமையின் காரணமாக எழுந்தவை என்பதைச் சுட்டிக்காட்டிய பின்பும், மக்கள் மன்றத்தின் தீர்ப்புக்கிணங்கி, விஷக்கோப்பையை மகிழ்வுடன் ஏற்று, விஷமருந்தித் தன்னுடைய பூதஉடலுக்கு முடிவுகட்டி, என்றும் அழியாப்புகழ் உடம்பெய்தினார் சோக்ரதர். அவருடைய மனச்சாட்சியின் குரல், தனிக் குரலாக அன்று ஒலித்தது; ஆனால் அவர் விடுத்துச்சென்ற வேண்டலைச் சிந்தனை உலகம் அறியுந்தோறும், உணருந்தோறும், எவ்வளவு சீரிய சிந்தனையுடையவர்

சோக்ரதர், தாம் மட்டும் பயனடையாமல், சிந்தனையைப்பெற்ற ஒவ்வொரு ஆணும் பெண்ணும், அதன் பலனைப் பெறவேண்டும் என்ற மகத்தான கொள்கைக்காகப் பாடுபட்ட உத்தமர் என்பதையும் ஐயத்திற்கிடமில்லாமல் அறிவுறுத்தியிருக்கிறுர், மனித குலத்தின் மங்காத விளக்கு, மாமேதை சோக்ரதர். சிந்தனை உலகத்திற்குச் சோக்ரதர் புரிந்துள்ள சேவையைவிடப் பெரியதோர் சேவை இருக்கமுடியுமா என்ற வினுவிற்கு, இருக்கமுடியாது என்பதுதான் என்னுடைய பணிவான பதிலாகும்.

## மக்கள் ஆட்சியின் கோட்பாடுகள் (Democratic principles)

கிரேக்கப் பெருமக்களின் வாழ்க்கை முறையிலும், அரசியல் நிறுவனங்களிலும் ஜனநாயகப் பண்புகள் இயல்பாகவே அமைந்திருந்தன. இதற்கு முக்கியக் காரணங்கள் : ஒவ்வொரு நாடும், பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் சிறிய அளவைப் பெற்றிருந்தன ; இயற்கை வளங்கள் நிறைந்திருந்தன ; அரசை நடத்துபவர்களும் அதன்படி நடந்து கொள்பவர்களும் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்திருந்தனர் ; எனவே அவர்களிடம் நம்பிக்கை, நல்லெண்ணம் போன்ற உயர்ந்த பண்புகள் நிலவின. அப்பண்புகளின் அடிப்படையில் எழுந்தவைகள் தான் சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Brotherhood) என்னும் அரசியல் பண்புகளாகும். அப்பண்புகளின் வளர்ச்சியே, அரசியல் வாழ்வின் தலையாய பண்பாகிய மக்கள் உரிமை - விடுதலை (Liberty) என்னும் பொதுச் சமுதாயக் கோட்பாட்டிற்கு வித்திட்டது என்று கூறலாம். இப்பண்பு, 19ஆம் நூற்ருண்டு ஐரோப்பிய அரசியல் வாழ்விலும், தற்கால அரசியல் வாழ்விலும் எவ்வளவு முக்கியத்துவம் அடைந்துள்ளது என்பதை அறியும்பொழுது, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே அப்பண்புகளைப் போற்றி வளர்த்தார்கள் கிரேக்கப் பெருமக்கள் என்பதை உணரும்பொழுது , அவர்கள் எத்துணைப் பொதுநல நோக்குடையவர்களாக விளங்கினுர்கள், எவ்வளவு நாகரிகமான அரசியல் அமைப்பை வளர்த்தார்கள் என்பதும் நன்கு தெரியவரும். அதே நேரத்தில், அரசியல் வாழ்வின் தலையாய பண்பாகிய மக்கள் உரிமை-விடுதலை என்பதை எவ்விதம் ஒழுங்கு நியதிகளோடு கூடிய சமுதாயத்திலேதான் பெற முடியுமென்பதையும் கிரேக்கப் பெருமக்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். சட்டதிட்டங்களைப் புறக்கணித்து விட்டு, வன்முறைச் செயல்

களில் இறங்கி, சமுதாயத்திலே கொந்தளிப்பை ஏற்படுத்தி, மக்களின் உரிமையைப் பாதுகாக்க முடியாது, பெறவும் முடியாது என்பது கிரேக்க மக்களின் ஆழமான கருத்தாகும். மக்களிடத்திலே சட்டதிட்ட நியதிகளின்படி அமைதியும், கடமையுணர்வும் நிலவும் போதுதான், மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறவும், நல் வாழ்வு வாழவும் முடியும் என்ற கிரேக்கப் பெருமக்களின் உயர்ந்த பண்பாடு, மக்கள் ஆட்சியின் கோட்பாடு, என்றைக்கும் நின்று நிலவக்கூடிய அரசியல் பண்பாடு என்று கூறினுல் அது மிகையாகாது.

இவ்விதமாக, பண்டைக்கால கிரேக்கப் பெருமக்களின் சமுதாய அமைப்புகளையும், அரசியல் நிறுவனங்களையும், அவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளையும், இன்றைக்கும் நாம் அறிந்து பயனடைவதற்குத் துணையாக இருப்பவை, பிளேடோ, அரிஸ்டாடில் போன்ற மேதைகள் விட்டுச்சென்ற எழுத்துக் கருவூலங்களாகும். அவர்களுடைய எழுத்துகளுக்கு உண்மை உருவம் அமையப் பெற்றது அன்றைய கிரேக்க மக்களின் வாழ்க்கையும் வழிமுறைகளுமாகும். இருந்த போதிலும், அப்பெரியோர்கள் எழுதியுள்ள கோட்பாடுகள், மனித இனம் முழுமைக்குமே பயன்படும் அளவில் அமைந்திருக்கின்றன என்பது, அரசியல் மேதைகளும், அறிஞர் பெருமக்களும் ஏற்றுக் கொண்டு போற்றும் உண்மையாகும். எனவே, பிளேடோ, அரிஸ்டாடில் போன்ற அரசியல் மேதைகளின் கருத்துகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டி விளக்கம் தருவது வாசகர்களுக்குப் பயன்படும் எனக்கருதுகிறேன். மேலும், வாசகர்கள் கவனத்திற்குக் கீழ்வரும் செய்திகளைக் குறிப்பிட்டுக் கூறவிழைகிறேன். உலக இலக்கியங்களில் சோக்ரதர் சம்வாதங்கள் மிகவும் புகழ் பெற்றவை. அவற்றின் ஆசிரியர் பிளேடோ, அவர் சோக்ரதரின் மாணவராவார். சோக்ரதர் கொல்லப்பட்டது கி.மு. 399; அப்போது அவருக்கு வயது 70. அவருடைய மாணவர் பிளேட்டோவின் வயது 28; சுமார் பத்து வருடங்கள் சோக்ரதரின் மாணவராக இருந்தார். சோக்ரதர் இறந்த பின்பு அவரது கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அகாடமி (Academy) என்னும் அறிவு நிலையத்தை அமைத்து, அங்கிருந்து கொண்டு மற்றவர்களுக்கும் உபதேசித்து வந்தார். பிளேடோ எழுதிய நூல்கள் சம்வாத (dialogue) வடிவமாக அமையப் பெற்றிருக்கின்றன. இருபத்து நான்கு சம்வாதங்கள் இக்காலத்திலும் கிடைத்திருக்கின்றன. அச்சம்வாதங்களில் கதாநாயகனுக விளங்குபவர் சோக்ரதரே. ...இந்தச் சம்வாதங்களில் சோக்ரதர்

வாயிலாகக் கூறப்படும் கருத்துகளும், கொள்கைகளும் உண்மையில் சோக்ரதரைச் சேர்ந்தனவா அல்லது அவருடைய மாணவர் பிளேடோவைச் சேர்ந்ததா என்று ஐயம் எழலாம். ஆனால் இருபெரு அறிஞர்களும் சேர்ந்து உலகத்திற்கு அளித்த உயர்ந்த செல்வம் என்று கூறினால், அதில் ஐயமிருக்க முடியாது!

## பிளேடோ (Plato) கி.மு. 427-347

முடியாட்சிதான் சிறந்தது ; அதுவும் தத்துவத்துறையில் வல்லமை பெற்றவர் அரசனாக அமைவது சிறப்பின் சிகரமாகும் என்னும் கொள்கையைப் பின்பற்றிய பிளேடோ, தன்னுடைய நூலுக்கு, குடியாட்சி (Republic) என்று பெயரிட்டழைத்தது விந்தையாகத்தான் தோன்றுகிறது ! இருந்தபோதிலும் அந் நூலில் அவர் எடுத்துக்காட்டும் கருத்துகளையும், அரசியல் கோட்பாடுகளையும் சிறிது விளக்கமாகக் கவனிப்போம். ஒரு நாடு எப்படி யிருக்கிறது, அதன் மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைவிட, அந்த நாடு எப்படி இருக்கவேண்டும், அதன் காரணமாக அந்நாட்டு மக்கள் எப்படி வாழவேண்டும் என்னும் கற்பனைக் காவியமாகத் தீட்டித்தந்திருக்கிறார் பிளேடோ, தன்னுடைய முடியாட்சியை. அவர் கண்ட கற்பனை அரசியல் உலகம், எல்லா மக்களுக்கும், எக்காலத்திற்கும் பொதுவானது என்னும் நோக்கில் அமைந்ததாகக் கொள்ளவேண்டும்.

தனிப்பட்ட மனிதனுக்கும் ஒரு நாட்டிற்கும் உள்ள வித்தியாசம் : தனிப்பட்ட மனிதன் என்பது ஒரு சிறிய உலகம்; நாடு என்பது மிகப்பெரியது ; ஆகவே இரண்டிற்கும் அடிப்படை ஒன்றுதான். இதற்குக் காரணம் இரண்டிற்கும் அடிப்படைத் தேவைகள் ஒரே விதமானவையாகும் ; அவற்றிலுள்ள வித்தியாசம் அளவில்தான் ; பொருளில் அல்ல. அதனால்தான் பிளேடோ தீர்மானமாகக் கூறினார் : தனிப்பட்ட மனிதனை மிகப் பெரிய அளவில் நோக்கும்போது நாடு தோன்றுகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனிடத்திலும் மூன்று தன்மைகள் ஒன்று கூடி அமைந்திருக்கின்றன. அம்மூன்று தன்மைகளாவன : வேட்கை (Appetite), உணர்வு (Spirit), பகுத்தறிவு (Reason). இம்மூன்று தன்மைகளும் அளவில் வித்தியாசப்பட்டு ஒன்று சேர்ந்ததே, தனிமனிதனாக அமைவதாகும்; ஒவ்வொருவரிடத்திலும் ஏற்படும் வித்தியாசங்களுக்கும் காரணமாகும். எனவே, மனிதர்கள்—ஆண், பெண் இருபாலாரும், ஒருவருக்கொருவர் தன்மைகளால் வேறுபடுவர் என்பதையும், அவற்றிற்குக்

காரணம் என்ன என்பதையும், பிளேட்டோ அறுதியிட்டுக் கூறியுள்ளார் என்பதையும் கவனிக்கவேண்டும். எவ்விதம் மனிதனிடத்தில் மூன்று தன்மைகளும் ஒன்று கூடி இருக்கின்றனவோ, அதைப்போலவே, நாட்டிலும் மூன்று தன்மையான மக்கள் இருக்கவேண்டும். இதன் மூலமாகத் தனி மனிதனை மிகப்பெரிய அளவில் நோக்கும்போது நாடு தோன்றுகிறது என்ற உண்மையையும் பிளேட்டோ நிரூபித்துக் காண்பிக்கிறர். ஒரு நாட்டிலுள்ள மக்கள் தொகையை மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம்: எந்தெந்த மக்களிடத்திலே வேட்கை மட்டும் அதிகரித்தும், சிந்தனை முதலியவை குறைவாகச் செயல்படுகிறதோ, அவர்களை எல்லாம் ஒன்ருக இணைத்துப் பாதுகாவல் அல்லாதார் (Non-guardians) என்று பிளேட்டோ அழைக்கிருர். அதேபோல், எந்தெந்த மக்களிடத்தில் உணர்வுமட்டும் அதிகரித்தும், வேட்கையும் சிந்தனையும் குறைவாகச் செயல்படுகிறதோ அவர்களை எல்லாம் ஒன்ருக இணைத்துச் சாதாரணப் பாதுகாவலர் (Ordinary guardians) என்று அழைக்கிருர். எந்தெந்த மக்களிடத்தில் சிந்தனை மட்டும் அதிகரித்தும் உணர்வு, வேட்கை முதலியன குறைந்து செயல்படுகின்றதோ, அவர்களைத் தூய பாதுகாவலர் (Perfect guardians) என்று அழைக்கிருர். இவர்கள்தான் மக்களை நல்வழிகாட்டி, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து ஆணை செலுத்துவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது பிளேட்டோவின் கொள்கையும் நம்பிக்கையுமாகும்.

தனி மனிதன், பொதுமக்கள் இவர்களின் தன்மைகளை எடுத்துக்கூறிய பிளேட்டோ, யார் ஆட்சி புரியவேண்டும்; யார் ஆட்சியின்கீழ் அடங்கி நடக்கவேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுகிருர். அவ்வித உயர்ந்த தன்மை பான்மைகளைப் பெற்று ஒரு சமுதாயம் இயங்கிக் கொண்டிருக்கிறதென்ருல், அதுதான் நேர்மையான சமுதாயம்; அங்கு நீதி (Justice) நின்று ஆட்சி புரிகிறது! அதன் காரணமாக, யார் யார் எச்செயல்களைச் செய்வதற்குத் தகுதி பெற்றிருக்கின்றனரோ, அவர்கள் அவ்விதம் பணிகளைப் புரிந்து, அதன் பலாபலன்களைப் பெறுகின்றனர்; அதனுல், அந்தச் சமூகமே வளர்ச்சிபெற்று வளமான வாழ்வும் வாழமுடிகிறது, எனவே ஒரு சமுதாயம் நல்ல முறையில் இயங்கி, தனி மனிதனுக்கும் பொது மக்களுக்கும் ஏற்ற முறையில் தேவைகளை அமையப்பெற்றும், அனுபவிக்கப்பெற்றும் வருகிறதென்ருல், அவற்றிற்கு ஊன்றுகோலாக அமைவது நீதி. நீதி ஆட்சி புரிகிறதென்ருல், அங்கே நேர்மையும், ஞானமும் உலவுகின்றன; அதன் காரணமாகக் கடமை உணர்வும் கட்டுப்பாடான

ஒழுக்கமும் நிலைத்து நிற்கின்றன. இவ்வாறு பிளேடோ, நீதியின் பல தன்மைகளை விவரித்துக்கூறி, மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் தன்மைகளையும், அவைகள் வெளிப்பட்டு வளர்ச்சியெய்தி எல்லோரும் இன்புற்றிருப்பதற்கு நீதிதான் அடித்தளமாக அமைந்திருக்கிறது என்னும் தத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கிறார். பிளேடோவின் கூற்றுகள், கிரேக்க மக்களின் சமூகத்திற்கு மட்டும் பொருந்துவன அல்ல ; மனித குலத்திற்கே பொருந்துவனவாகும் என்ற பேருண்மையை வாசகர்கள் கவனிக்கவேண்டும். அதன் காரணமாகத்தான், தற்காலத்திலும், பல மேதைகள் பிளேடோவின் கருத்துகளால் கவரப்பட்டு அக்கருத்துகள் உண்மையானவை என்று ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

மேற்கத்திய நாட்டு மேதைகளில், செம்மையான சிந்தனையும், சீரிய நோக்கினையும், செழிப்பான கருத்துகளையும், கற்பனைத்திறனையும் முதன்முதலில் எழுத்துவடிவமாக அமைத்து உலகத்திற்கே தந்த பெருமை பிளேடோவைச் சாரும் என்று சரித்திரம் சான்று தருகின்றது. மனிதனுடைய சிந்தனை, இடம், காலம், மக்கள் முதலியவற்றிற்கு மேம்பட்டது; அவ்வித உயர்ந்த நிலையிலிருந்து, கற்பனைச் சிகரத்திலிருந்து எழுந்த கருத்துகள்தான், பிளேடோவினுடைய முடியரசில் கண்ட அரசியல் கோட்பாடுகள், அரசன் வேண்டும் ; அவன் தத்துவமேதையாக இருக்கவேண்டும். ஆட்சி வேண்டும்; அங்கே நீதி தேவன் நிலைத்திருக்கவேண்டும். மக்கள் வாழவேண்டும் ; அதற்கு ஓர் உயர்ந்த குறிக்கோள் வேண்டும். இவ்விதமாக ஏதோ ஒரு கற்பனைக் கதையைச் சொல்லிவிட்டுச் சென்றார் பிளேடோ என்று கூறினால்—அவ்விதம் நினைப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் ! நிச்சயமாக அது முழு உண்மையாகாது. ஏனென்றால் கதைகளின் மூலமாகத்தான், முழு உண்மைகளை வெளியிடமுடிகிறது என்பதை வாசகர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். இதற்கு அதிகக் கற்பனைத் திறன்வேண்டும். அத்துறையில் பிளேடோவின் அருகில் வருகிறார்களேயொழிய, பிளேடோவுக்கு மிஞ்சினவர்களாக இன்றைவரைக்கும்—2500 ஆண்டுகள் கடந்த பின்பும் யாரும் தோன்றியதில்லை என்பது கவனிக்கற்பாலது. குறிக்கோளுடைய இலட்சிய வாழ்வு வாழவேண்டும் ; அப்போதுதான் வாழ்க்கையின் பயனை அடையமுடியும். அவ்வுன்னதமான நோக்கத்தின் அடிப்படையில் அவ்வுயர்ந்த நோக்கத்தை அடைந்து இன்புறுவதற்காக, மற்றப் பல சமுதாயத் திட்டங்களையும் சம்பிரதாயங்களையும் துறந்தார் பிளேடோ

என்று கூறினுல், அது உண்மையைத்தவிர வேறென்றுமில்லை. உதாரணமாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து, மக்கள் நலனையே தம் நலனுகக்கொண்டு வாழும் தூய-பாதுகாவலர்கள், எதையும் தங்களுக்குச் சொந்தமானதென்று வைத்துக்கொள்ளக் கூடாது என்று பிளேடோ கூறியுள்ளார். இக்கூற்றைச் சிறிது விளக்க மாக விவரிப்போமாகில், தூய - பாதுகாவலர்களுக்கு, மனைவி - மக்கள்-வீடு-வாசல் போன்ற தனிச்சொத்துகள் இருக்கக் கூடாது ; அவையாவும் பொதுச்சொத்துகளாக அமையப் பெறவேண்டும். இக்கூற்றில் அடங்கியுள்ள ஆழமான கருத் துகள் எவ்வளவு பொதுவுடைமைக் கொள்கைகளைக் கொண் டுள்ளது என்பதைத் தீரச் சிந்தித்துப்பார்க்கும்பொழுது, பிளே டோவின் கற்பனைத்திறன்மட்டுமன்று, கலையுணர்வு மட்டுமன்று, அவருடைய திடமான, தீர்மானமான தீர்க்க தரிசனமான கோட் பாடுகள் நமக்கு நன்கு தெரியவருகின்றன. பொதுவுடைமை யைப்பற்றி பிளேடோ கூறியிருக்கிருர் ; உண்மை. ஆனுல் யாருக்கு, எந்த முறையில் பொதுவுடைமை பயனளிக்கும் என் பதையும் சுட்டிக்காண்பித்திருக்கிருர் பிளேடோ. இவற்றின் நுணுக்கங்களை வாசகர்கள் ஊன்றிப்பார்க்கவேண்டும். அப்போது தான் அவற்றில் அடங்கிக்கிடக்கும் அற்புதக் கருத்துகள் பளிச்சென விளங்கும்.

ஆட்சி முறைகளில், முடியாட்சி (Monarchy) தான் சிறந்தது; அதுவும் தத்துவ மேதைகளால் நடத்தப்படும்போது மிகச்சிறந்த தாக விளங்கும் என்னும் தம்முடைய கொள்கையை ஒளிவு மறை வின்றிப் பிளேடோ எடுத்துக்கூறியுள்ளார். மக்களாட்சியே மலிந்து கிடக்கும் 20ஆம் நூற்ருண்டில், பிளேடோவின் ஆணித் தரமான கொள்கைகள், உண்மைகளே தவிர வேறென்றுமில்லை என்பதைத்தான் நிரூபிக்கின்றன. ஏனென்ருல், மக்கள் ஆட்சியை பிளேடோ ஆதரிக்கவில்லை ; காரணம், அவ்வாட்சியில் நீதி முழுதும் நிலவமுடியாது ; நேர்மை தலையெடுக்க முடியாது ; அறிவு பிரகாசிக்கமுடியாது என்பதெல்லாம் பிளேடோவின் உருக்கமான கூற்றுகள். இக்கூற்றுகளை நாம் மறுக்கலாம் ; மறைக்கலாம். ஆனுல் செம்மையாகச் சிந்தனை செய்வோ மாகில், அவருடைய கூற்றுகளில் மின்னும் உண்மைகள் நன்கு தெரியவரும். 16ஆம் நூற்ருண்டில் ஐரோப்பாவில் தோன்றிய அரசியல் மேதைகள் பலர் பிளேடோவின் கருத்துகளை ஒப்புக்கொண்டனர். அவர்களில் முக்கியமானவர்கள் பிரெஞ்சு நாட்டு மேதை ஜீன் ஜேகஸ் ரூஸோ (Jean Jacques Rousseau) என்பாரும், ஆங்கிலேய அரசியல் மேதை ஜான்லாக் (John

Locke) என்பாரும், ஜெர்மானிய நாட்டுச்சிந்தனையாளர்களாகிய காண்ட் (Kant), ஏகல் (Hegel) போன்ருருமாவார்கள்.

## அரிஸ்டாடில் (Aristotle) கி.மு. 384-322

மனிதன் ஒரு சமூகவாதி மட்டுமன்று, அவன் ஓர் அரசியல் வாதியுமாவான் என்பது அரிஸ்டாடிலின் கொள்கை. சமூக வாதியாக இருந்தவன் அரசியல்வாதியாக வளர்கிருன். இவ்விதம் மனிதர்கள் அரசியல் ஞானம் அடையும் பொழுதுதான், நாடு தோன்றுகிறது. ஆகவே நாடு எவ்வாறு தோன்றுகிறதென்ற கேள்விக்கு, அரிஸ்டாடில் அளிக்கும் பதில் நம் கவனத்திற்குரியதாகும்; அரசியல் வாழ்வின் தோற்றம் மனிதனுடைய இயற்கையான தன்மையிலேயே அமைந்திருக்கிறதென்பதாகும். இதனைத்தான் முன்னமேயே குறிப்பிட்டோம். மனிதனுடைய தேவைகளையும் அவசியங்களையும் பூர்த்தி செய்வதற்கே நாடு தோன்றுகிறது. பொதுவாக, மனிதனுடைய தேவைகள் பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் அமைகிறது. இக்கூற்றிலிருந்து ஒரு நாட்டின் அடித்தளம் பொருளியலில் அமைவதையும் காணலாம். ஆனல் நாடு அமைவதுடன் நின்றுவிடக்கூடாது; அது வளரவும் வேண்டும். எந்தக் குறிக்கோளுடன் வளர வேண்டும் என்று கேட்டால், அரிஸ்டாடில் சொல்கிருர் : உயர்ந்த குறிக்கோளாகிய நல்வாழ்வு ஒவ்வொருவரும் பெறச் செய்வதே நாட்டின் குறிக்கோளாகும்.

ஒன்ருகச் சேர்ந்து வாழ்தல் என்னும் இயற்கையான தன்மையால் (gregarious instinct), ஆணும் பெண்ணும் கூடி இல்லறத்தைத் துவக்குகின்றனர்; சீமானுடைய வாழ்வும், அடிமையினுடைய வாழ்வும் அமைவது இல்லறத்தில்தான். இக்கூற்றின் மூலமாக, இல்லறத்தின் முக்கியத்துவத்தையும், அது நல்லறமாகத் தழைத்தோங்க வேண்டியதன் அவசியத்தையும் அரிஸ்டாடில் வலியுறுத்துகிருர். அதே நேரத்தில், சமூக வாழ்வின் துவக்கம் இல்லறம்தான் என்பதையும் சுட்டிக் காட்டுகிருர். சமூக வாழ்விற்குத் தேவையான பண்புகள் வளருமிடமும் இல்லறம்தான். கூடிவாழ்தல் (fellowship), எல்லோரின் நன்மைக்காகவும், ஒவ்வொரு குடிமகனும் பொறுப்புடன் தம்மால் இயன்றதைச் செய்வதும், செய்வித்தலும் (organisation), இவ்விருதன்மைகளும் ஒழுங்குடன் நடைபெறுவதற்கு ஊன்றுகோலாக அமைவதும் உயர்ந்த பண்புகளாகும் (Virtues). அப்பண்புகள் யாவை என்று வருணிப்பதைவிட, அவை யாவும் வளருமிடம் இல்லறம் தான் என்னும் அரிஸ்டாடிலின் கூற்றை ஊன்றிக் கவனிக்க

வேண்டும். ஒழுக்கமுடனும், உண்மையுடனும், அன்புடனும் ஒருவரையொருவர் நேசித்து வாழ்தல் இல்லற நெறிகளாகும். அப்போதுதான், அவ்விதமான நற்பண்புகளைப் பெற்று வளரும் ஒவ்வொருவரும் சமூகத்திலும் அவ்வாறே வாழ முடியும். எனவே நற்பண்புகளுக்குத் துவக்கம் ஏற்படுவது இல்லறத்தில் தான். நற்பண்புகளுடைய குழந்தைகளை வளர்த்துக் கொடுப்பதே இல்லறத்தாரின் கடமையுமாகும் என்பதைச் சொல்லாமலே குறிப்பிடுகிறுர் அரிஸ்டாடில். சமூகத்தின் நல்வாழ்வுக்கு ஆணி வேராக இருப்பது இல்லறம்தான் என்பதும் சுட்டிக்காட்டப் படுகிறது. இல்லறத்தில் துவங்கும் நற்பண்புகள் நன்ருக வளர்ச்சி யடையும் பொழுதுதான் நாடு தோன்றுகிறது ; நாடும் ஒரு பெரிய இல்லறம்தான். இதன் மூலமாக ஒரு நாடு எவ்விதம் இயற்கை யாகவே ஏற்படுகிறதென்ற உண்மையையும் அரிஸ்டாடில் விளக்குகிருர். பலப்பல இல்லங்களில் வதியும் மக்கள் எல்லோ ரும் ஒன்று கூடும்போது, ஒரு நாடு தோன்றுவதற்கான சூழ்நிலை கள் ஏற்பட்டு விட்டன என்பது தெளிவாகிறது. இன்னும் சிறிது விளக்கமாகக் கூறுவோமாகில், மனிதன் உயர்ந்த இலட்சியங் களைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்கு இல்லறம் போதாது; அதைவிடப் பெரிய நிறுவனமாகிய சமூகமும், அதைவிடப் பெரிய நிறுவனமாகிய நாடும் தேவைபடுகின்றன ; எனவே தோன்றுகின்றன. நாட்டு வாழ்க்கை அல்லது நகர வாழ்க்கை வாழ்வதில்தான் மனிதன் தன்னுடைய உயர்ந்த இலட்சியங் களைப் பெறுகிருன் ; அப்போதுதான் மனிதன், முழு மனிதனுகி ருன். ஆகவே மனிதனை, மனிதனுக்குவது உயர்ந்த இலட்சி யங்களும், குறிக்கோளுமாகும். இவையாவும் பெறமுடிவது நாட்டு வாழ்வில்தான். எனவேதான் நாட்டுவாழ்வை அல்லது நகர வாழ்வை மனிதன் பெருவாழ்வாகக் கருதுகிருன்.

மனிதன் பெருவாழ்வைப் பெறுவதற்கு இன்றியமையாத சூழ்நிலைகளை அமைத்துக்கொடுப்பது நாடு; அப்போதுதான் நாடு தன்னுடைய நிலையைத் தொடர்ந்து நிலைக்கச் செய்ய முடியும். பெருவாழ்வு (Spiritual life) பெறுவதற்கு நாட்டின் முக்கியத்துவத்தையும், மனிதன் பெருவாழ்வை நாடி அடைய வேண்டியதன் மூலமாகப் பெருவாழ்வின் முக்கியத்துவத்தையும் இங்குக் குறிப்பிட்டுள்ளது நோக்கற்பாலது. இவ்விரு நிலைகளை யும் அடைவதற்கு நாடு எவ்வளவு இன்றியமையாததாக இருக் கிறது என்பதையும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். பெருவாழ்வை நாடி, பேரின்பமடைவதற்கு மனிதனுக்கு உதவியாக உள்ளது நாடும், அதன் நல்ல பல நிறுவனங்களுமாகும். ஆனுல் அந்த உயரிய வாழ்வைத் தேடுவதும், அதன் பயனைப் பெறுவதிலும்

தான் மனிதவாழ்வின் குறிக்கோள் நிறைவுபெறுகிறது. இதற்கு முக்கியக் காரணம், மனிதன் இயற்கையிலேயே நல்ல பண்புகளைப் பெற்றிருக்கிறுன். இந்த உண்மையை அறிவதற்கு, மனிதன் தன்னுடைய சிந்தனையைச் செம்மையாக வளர்க்க வேண்டும்; அல்லாத காரணத்தால்தான் தன்னிடத்திலேயே உள்ள நற்பண்புகளையும், நல்லெண்ணத்தையும் பயன்படுத்தாமல், அதற்கு மாருன இயல்புகளைப் பின்பற்றவும், அதன் காரணமாகத் தீயசெயல்களில் ஈடுபட்டு, வாழ்க்கையின் குறிக்கோளையே மறந்து, எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய நோக்கத்திற்கு அடிமையாகிருன். இவ்விதக் குறுகிய நோக்கத்தைத் தவிர்ப்பதற்கு, நாட்டின் நல்ல பல நிறுவனங்கள் உதவிசெய்கின்றன. ஆகவே, ஒரு நாட்டின் பெருமை என்னவென்ருல், தீமையை அகற்றி, நல்வழிகளை ஏற்படுத்துவது தான் ; அவ்விதச் செம்மையான நிலைமைகள் நிலவி வந்தால், மனிதன் தன்னுடைய இயற்கையான நல்லறிவுகளை மேலும் வளர்ச்சி செய்யமுடியும் ; அறிவும் பண்பும் வளர, குறுகிய நோக்கங்களும், அதன் காரணமாக ஏற்படும் குற்றங்களும் தாஞகவே மறைந்துவிடும் இவ்விதக் கருத்துகளை எடுத்துக் கூறும் அரிஸ்டாடில், மேலும் கூறுகிருர் : நாடு என்பது உயர்ந்த வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்ட உத்தமமான சமூக வாழ்வாகும். இக்கூற்றின் மூலமாகத் தனி மனிதனுக்கும், சமூகத்திற்கும் உள்ள பிணைப்பையும், சமூகத்திற்கும் நாட்டிற்கும் உள்ள பிணைப்பையும் தெளிவாகக் குறிப்பிடுகிருர் அரிஸ்டாடில்.

தனி மனிதனின் உரிமையையும், பொதுமக்களின் உரிமைகளையும், நன்கு ஆதரித்தவர் அரிஸ்டாடில் ; அதிலும் தனி மனிதனின் உரிமைகளை அதிகமாகவே வலியுறுத்தி, அதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிஞர் என்றே சொல்லவேண்டும். அதன் காரணமாகவே, தற்காலத்திலும், தோன்றி வலிமை பெற்றுள்ள தனி மனிதனின் உரிமைக்கொள்கைகளுக்கும், ஆதிகாலத்தில் வித்திட்டவர் அரிஸ்டாடில் என்று கூறிஞல் அது மிகையாகாது. தனி மனிதனின் வாழ்வையும், அதன் சிறப்பையும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தவர், அடிமைக் கொள்கையை எவ்விதம் ஆதரித்தார் ? என்ற சுவையான விஞவிற்கு நாம் சரியான விளக்கம் பெறவேண்டியுள்ளது. ஏனென்ருல், அடிமைக்கொள்கை நன்ருக வாழ்ந்து, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற நிறுவனமாக இருந்த காலம், அரிஸ்டாடிலின் காலம். எனவே அடிமைகள் வாழ்வும் அதனைச்சார்ந்த பிரச்சினைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டு, ஒரு மரபாகவே பின்பற்றப்பட்டுவந்தது.

இந்நிலையில், அடிமைக் கொள்கை, ஒரு நிறுவனமாகவே இயங்கி வந்தது. எனவே, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தை அரிஸ்டாடில் ஆதரித்தார் என்று கூறுவதற்கு அவசியமில்லை. ஏனென்றால், அவ்விதமாக ஒப்புக்கொள்ளப் பட்டு இயங்கிவந்த நிறுவனத்தைப்பற்றியும் அவர் சில வார்த் தைகள் கூறியுள்ளார். அவையாவன: அடிமையையும் மனித னாகவே மதிக்கவேண்டும்; தொழிலாளியையும் சகோதரனாய் நேசிக்கவேண்டும்; அப்போது அவர்களிடமிருந்து நல்லபலனை நாம் பெறமுடியும். இதே விதமான பரந்த மனப்பான்மையை வேறொரு இடத்திலும் அரிஸ்டாடில் வலியுறுத்துகிறார். பொது வாழ்விலும், அரசியல் வாழ்விலும் கலந்து கொள்வதற்குப் பெண் டிர்க்கு உரிமைகள் தரப்படாத காலம் அது; அந்நிலையில் பெண் டிரும் தங்களுடைய அறிவுத் திறமையினால் பொதுவாழ்வில் கலந்துகொண்டு நல்ல பணிகளைச் செய்யமுடியும் என்பது தெளிவாகத் தெரிந்தால், அவர்களுக்கும் ஆண்களைப்போலவே உரிமைகள் வழங்கப்படலாம் என்பதாகும். அக்காலத்தில் அரிஸ்டாடில் கூறிய இக்கருத்துகள் புரட்சிகரமான கருத்து களாகும் என்பதும் கவனிக்கற்பாலது.

பண்டைக்காலக் கிரேக்க மக்களின் பெருவாழ்வினையும், அவற்றின் சிறப்புகளையும் நாம் அறிய முடிவதே, அம்மக் களின் பிரதிநிதிகளாகத் திகழும், மேதைகளாகிய, பிளேடோ, அரிஸ்டாடில் போன்றோர்களின் எழுத்துகள் மூலமாகத்தான். அவர்களுடைய கூற்றுகளிலிருந்து, கிரேக்க மக்களின் அரசி யல் வாழ்வு மட்டுமன்று; கிரேக்கச் சமுதாயத்தின் சாதனைகள் அனைத்தும் அறியப் பெறுகிறோம். இருந்தபோதிலும், பிளே டோவும், அரிஸ்டாடிலும் எடுத்துக்கூறும் முறைகளில் சிறிது வித்தியாசம் இருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக, அரிஸ்டாடில் பிளேடோவுக்குப் பின்பு வாழ்ந்தவர்; அவருடைய கொள்கைகளாலும், கருத்து களாலும் வெகுவாகத் தூண்டப்பட்டவர் அரிஸ்டாடில். அதைப் போலவே, சோக்ரதருடைய கருத்துகளாலும், விவாதத்திறமை யினாலும் தூண்டப்பட்டவர் பிளேடோ ஆவர். கருத்துகளை எடுத்து இயம்பும் பிளேடோவின் முறையானது தொகுப்பு முறையாகும் (Deductive method). அதனால்தான் அவருடைய எழுத்துகளில், பொதுவாகச் சமூகப் பிரச்சினைகள் விளக்கம் பெற்றிருக்கின்றன; கிரேக்க மரபுகள் அப்படியே ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளன. இருந்த போதிலும், ஒரு சில குறிப் பிடத்தக்க மாற்றங்களும் ஏற்படுத்த வேண்டியதின் அவசியத் தையும் அறிவுறுத்தியிருக்கிறார் பிளேடோ. ஆனால் அரிஸ்டா

டிலினுடைய விளக்கம் பகுப்பு முறையில் (Inductive method) அமைந்ததாகும். அதனுல்தான், சமூகத்தின் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும், தெளிவாகத் திட்டவட்டமாக எடுத்துக் குறிப்பிட்டு, விளக்கங்கள் தருகிருர் அரிஸ்டாடில். உதாரண மாகக் கூறுவோமாகில், பொருளியலையும், அரசியலையும், ஒழுக்க வியலையும் தனித்தனியாக விவரித்துக் கூறுகிருர் அரிஸ்டாடில்; அவையாவையும் ஒன்ருக இணைத்தே விளக்கம் தருகிருர் பிளேடோ. இவ்விதமாக, பகுப்பு முறையின் அடிப்படையில், சமூக நிறுவனங்கள் எவ்விதம் மாற்றம் அடைய வேண்டும், முக்கியமாக அரசியல் துறையில் என்பதைப் பற்றி அரிஸ்டாடில், அழகாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

தற்காலத்தில் ஐரோப்பாவில் நிலவிவரும் அநேகமான அரசியல் கொள்கைகளுக்கு வழிகாட்டியாய் அமைந்தவர் அரிஸ்டாடில் என்பதை அரசியல் வல்லுநர்கள் ஒப்புக்கொண் டுள்ளனர். அதற்கு முக்கியக் காரணம், அரிஸ்டாடில் அவரு டைய காலத்திலேயே, வளம் பெற்று வாழ்ந்த பல நகரங்களைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தார்; உதாரணமாகச் சொல்வோ மாஞல், சுமார் 150 நாடுகளின் சட்ட அமைப்புகளைப் படித்து, அவற்றின் அடிப்படை உண்மைகளை உணர்ந்து, அதன் மூல மாகச் சட்டங்கள் எவ்விதம் இயங்க வேண்டும்; எவ்விதம் அமையப் பெறவேண்டும்; அப்போதுதான் அவை மக்களுக்குப் பயன்படும்; மக்களும் சட்டங்களை மதித்துப் போற்றுவர் என்பன போன்ற கருத்துகளை நன்கு வலியுறுத்தியிருக்கின்ருர். அவருடைய கூற்றுகள் அக்காலத்திற்கு மட்டுமல்லாமல், தற்காலத்திலும் பயன்படுகிறது; எனவே எக்காலத்திற்கும் பயன்படக்கூடிய, அறிவுச்சுரங்கம் என்று கூறினுல் அது மிகை யாகாது. அதனுலன்ருே, அரசியல் விஞ்ஞானி (Scientist of Politics) என்று அரிஸ்டாடில் போற்றப்படுகிருர்! ஒரு சில வேற்றுமைகள் இவ்விருமேதைகளின் எழுத்துகளில் நாம் காணப் பெற்ருலும், பிளேடோவும் அரிஸ்டாடிலும் கிரேக்க மக்களின் இருகண்கள்; இரண்டு கண்களின் மூலமாகப் பார்த் தால்தான் முழு உண்மைகள் நன்கு தெரியும். மேலும் இரு மேதைகளின் நோக்கம் ஒன்றுதான் — அதுதான் மக்களின் நல் வாழ்வு; அதுவே மனித குலத்தின் நல்வாழ்வு! எனவே, அவ்விரு மேதைகளின் எழுத்துகளிடையே காணும் ஒரு சில வேற்று மைகளை மிகைபடுத்திக் கொள்ளாமல், அவர்களிடையே மிகு தியாகக் காணும் ஒற்றுமைகளைக் கருத்திற் கொள்வோமாஞல், பெரிதும் நன்மை பயக்கும் என்று கூறி இப்பாகத்தை இத்துடன் முடிக்கிறேன்.

# 7. நாடும் அதன் முக்கிய நிறுவனங்களும்

(State and its essential institutions)

மக்களின் கூட்டுச் சேர்க்கையின் தொகுதியே நாடு என்று அழைக்கப்படுகிறது. எவ்வித வரலாற்று நூல்களைப் புரட்டிப் பார்த்தாலும், மனிதர்கள் சேர்ந்து வாழ்ந்ததாகவும், வாழ்வதாகவும்தான் காண்கிறோம். இருந்தபோதிலும், மனிதர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதற்காக, அக்கூட்டு வாழ்க்கையை நாடு அல்லது தேசம் என்று அழைத்துவிடமுடியாது. அவ்விதம் கூறமுடியுமென்றால், சமூகத்திலுள்ள பல நிறுவனங்களாகிய வணிகக்குழு (Trade Unions), மருத்துவர் குழு (Medical Association) போன்றவைகளும் நாடு என்று அழைக்கப்பட நேரிடும்; ஆனால் அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. அதைப்போலவே எவ்விதமான மக்கள் சேர்க்கையும், நாடு என்று அழைக்கப்படமாட்டாது. அவ்விதத்தில் ஊர் சுற்றித் திரியும் மாக்கள் கூட்டமும் (Crowds), நாடு என்று அழைக்கப்பட நேரிடும்; ஆனால் அதுவும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. எனவே, நாடு என்று குறிப்பிட வேண்டுமென்றால், அதற்குச் சில தகுதிகள் அவசியம். அவைகளாவன: ஒரு குறிப்பிட்ட தொகையான மக்கள், சில பல நியதிகளுடன் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, ஓர் எல்லைக்குள் வாழ்ந்து வளம் பெறுவதுதான் நாடு என்று கூறினால், ஓரளவு பொருந்தும் எனலாம்.

மக்களின் கூட்டு வாழ்க்கை, மக்களுக்காக மட்டுமல்லாமல், தனி மனிதனுக்கும் அவசியமாகத் தேவைபடுவதால்தான், தனி மனிதனையும் 'ஒரு சமூகப் பிராணி' என்று அரிஸ்டாடில் குறிப்பிட்டார். தனி மனிதனின் வாழ்வு, சமூக வாழ்வில் முன்னேற்ற

மடைகிறது என்பது உண்மை; அதைப்போலவே, சமூக வாழ்வு முன்னேற்றமடைவது நகர வாழ்வில்தான் என்பதும் உண்மை. நகர வாழ்வு சீராக அமைந்துவிட்டால், அங்கு நாடு தோன்று கிறது. எனவே நாடு என்பது ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுட னும், அமைப்புகளுடனும் ஏற்படும் மிக உயர்ந்த நிறுவன மாகும். இந்நிறுவனத்தின் மூலமாகத்தான் எல்லா மக்களும் தங்களின் நன்மைகளையும் நல்ல முறையில் பெறமுடிகிறது. எனவே, ஒரு நாட்டில் வாழ்வதென்பது, உயர்ந்த வாழ்வு அடைய விரும்பும் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாததாகும். ராபின்சன் குருஸோ என்பாரின் கதையை வாசகர்கள் படித்திருக்கலாம் ; அவரைப்போல் நாம் யாருமே தனிமையாக இருந்து வாழமுடியாது. இவ்வுதாரணத் தின் மூலம், தனி மனிதன் என்ற கூற்றே பொருளற்றது என்ற உண்மை புலப்படுகிறது. மக்கள் சேர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை ; அதன் சிகரம் நாட்டு வாழ்க்கையில்தான் பெற முடிகிறது. அவ்விதம் பலரும் சேர்ந்து வாழும்போது ஒவ் வொருவரின் உரிமைகளைக் காப்பதும் அவசியமாகிறது; காப் பாற்றும் அதிகாரம் அரசின் மூலமாகச் செலுத்தப்படுகிறது. எனவே ஆட்சிபுரியும் நிறுவனத்திற்கு அதிகாரம் அளிப்பதும், அதற்குப் பணிந்து மக்கள் நடந்துகொள்வதும் இயல்பே. இவ்விதமான நன்மைகளையெல்லாம் நாம் பெறமுடிவது, ஒரு நாட்டிலே வாழும்போதுதான் என்ற உண்மையை உணரும் போது, நாட்டு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை நன்கு அறியமுடிகிறது. அதனாலன்றோ அரிஸ்டாடில் கூறினார் : நாட்டு வாழ்க்கை வேண்டாதவர்கள் ஒன்று மனித நிலைக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கவேண்டும் ; அல்லது மனிதநிலைக்கு மேம்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

நாடு என்று குறிப்பிடும்போது, அதில் எத்துணை நிறு வனங்கள் அமைந்து கிடக்கின்றன என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு நாட்டிற்குக் குறிப்பிட்ட நிலப்பரப் பளவு வேண்டும் ; அதன் எல்லைக்குள் போதுமான மக்களைக் கொண்ட கூட்டுவாழ்க்கை நல்ல முறையில் நடைபெற வேண்டும். அவ்வித நல்வாழ்வு நடைபெறுவதற்கு அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனம்—ஆட்சி — வேண்டும். இவ்வித நிறு வனங்கள் எல்லாம் சேர்ந்து, ஒன்றுக இயங்கும்போதுதான் அதனை நாடு என்று அழைக்கலாம். தமிழ் நாட்டில் கல்வெட் டுகளை ஆராய்ந்தவிடத்து, அவற்றிலிருந்து நாடு என்பதைப் பற்றியும், அவற்றின் பிரிவுகளைப்பற்றியும் பல அரிய, சுவை

யான செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவற்றைப்பற்றிச் சுருக்கமாக ஒருவாறு விளக்க விரும்புகிறேன். கோட்டம், நாடு என்னும் பிரிவுகள் தொண்டை மண்டலத்திலும், வளநாடு, நாடு என்னும் பிரிவுகள் சோழமண்டலத்திலும் இருந்திருக்கின்றன. பல ஊர்கள் சேர்ந்து ஒரு நாடும், பல நாடுகள் சேர்ந்து ஒரு கோட்டமும், பல கோட்டங்கள் சேர்ந்து ஒரு மண்டலமும் ஆகும். அப்படியே, பல ஊர்கள் சேர்ந்து ஒரு நாடும், பல நாடுகள் சேர்ந்து ஒரு வளநாடும், பல வளநாடுகள் சேர்ந்து ஒரு மண்டலமும் ஆகும்.

கோட்டத்தில் உட்பட்ட, நாடு என்பதன் உட்பிரிவாகக் கூறு என்பதொன்றும் காணப்படுகிறது. உதாரணமாக, "களத்தூர் கோட்டத்துக் களத்தூர் நாட்டுத் தன்கூற்றுத் திருக்கழுக்குன்றம்" என வருவது காண்க. இதன்படி ஊர், கூறு, நாடு, கோட்டம், மண்டலம் என்பன முறையே ஒன்றினொன்று உயர்ந்தனவாகும் என்பது கவனிக்கற்பாலது. வளநாட்டின் உட்பட்ட நாடு என்பதற்குப் பிரதியாகக் கூற்றம் என்பதும் காணப்படுகிறது. "பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றம்" என வருதல் காண்க. சோழ மண்டலமானது வளநாட்டிற்கு மேலாகத் தென்கரை நாடு, வடகரை நாடு என்னும் பிரிவினையும் உடைத்தாயிருந்தது. இப் பிரிவு காவிரி நதியில் ஏற்பட்டதாகும். "சோழ மண்டலத்துத் தென்கரை நாட்டு நித்தவிநோத வளநாட்டு ஆவூர் கூற்றத்து ஆவூருடையான்" என வருகின்றது. சில இடங்களில் கோட்டமாவது, வளநாடாவது கூறப்படாமல், மண்டலத்தை யடுத்து நாடு, கூற்றம் என்பன கூறப்படுகின்றன.

பண்டைத் தமிழகத்தில், மண்டலம், கோட்டம், நாடு முதலியவற்றின் பெயர்களும், காலத்திற்குக் காலம் மாறியும் வந்துள்ளன என்பதும் கவனிக்கற்பாலது. ஓர் உதாரணத்தையும், அதன் பிரிவுகளையும் கூறி அமைய விரும்புகிறேன். தொண்டை மண்டலத்திற்கு ஜயங்கொண்ட சோழமண்டலம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. "தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஓய்மாநாடு" என வருதல் காண்க. இவ்வாறே, பாண்டி நாட்டிற்கு ராஜ ராஜ மண்டலம் என்றும், கொங்கு நாட்டிற்குச் சோழ கேரள மண்டலம் என்றும் பெயர்கள் வழங்கியுள்ளமை, "பாண்டி நாடான ராஜ ராஜ மண்டலம்" என்றும், "கோனேரி மேல்கொண்டான் கொங்கான சோழ கேரள மண்டலம்" என்றும் வருதலால் அறியலாம். "அதிராஜ ராஜ மண்டலத்து வெங்காலநாடு" என வருதலால்

கொங்கிற்கு அப்பெயருண்டானமையும் பெறப்படும். ஈழநாடும், "மும்முடிச் சோழமண்டலம்" எனப்பட்டது. இவையெல்லாம், சோழமன்னர்களின் வெற்றிக்கு அடையாளங்களாகும் என்பதும் வாசகர்கள் நன்கு கவனிக்கற்பாலது.

தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாகவும், 79 நாடுகளாகவும் வகுக்கப்பட்டிருந்தன. கீழே வருவன அக்கோட்டங்களாகும். (1) ஆமூர், (2) இளங்காடு, (3) ஈக்காடு, (4) ஈத்தூர், (5) ஊற்றுக்காடு, (6) எயில், (7) கடிகை, (8) காவியூர், (9) களத்தூர், (10) குன்றபத்திரம், (11) சிறுகரை, (12) செங்காடு, (13) செந்திருக்கை, (14) செம்பூர், (15) தாமல், (16) படுவூர், (17) பல்குன்றம், (18) புழல், (19) புலியூர், (20) பேயூர், (21) மணையில், (22) வெண்குன்றம், (23) வேங்கடம், (24) வேலூர் என்பனவாம். [ஒவ்வொன்றன் பின்னும் கோட்டம் என்பதைச் சேர்த்துக்கொள்க.]

பண்டைத் தமிழகத்தின் நாட்டு நிறுவனங்களையும், அதன் பிரிவுகளையும் வாசகர்களுக்கு ஓரளவு அறிமுகம் செய்த பின்பு, மீண்டும் அவர்களின் கவனத்தை மேல்நாட்டு அரசியல் வல்லுநர்களின் பக்கம் திருப்ப முனைகிறேன். நாடு என்பது எப்படி அமையவேண்டும் என்பதைப் பற்றிப் பேராசிரியர் வில்சன் (Wilson) கூறுகிறார் : 'ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சட்டங்களை அமைத்துக்கொண்டு, அவற்றின் பிரகாரம் வாழ்க்கை நடத்தும் மக்களை நாடு என்று அழைக்கலாம்'. பேராசிரியர் லாஸ்கி (Laski) கூறுகிறார்: 'ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள், மக்கள் என்றும் ஆட்சியினர் என்றும் தங்களைப் பிரித்துக்கொண்டு, தங்களுடைய எல்லைக்குள் உள்ள மற்றெல்லா நிறுவனங்களையும், அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு நடத்தப்படுவது நாடு'. பேராசிரியர் கார்னர் (Garner) மேலும் கூறுகிறார் : 'ஒரு குறிப்பிட்ட மக்கள், வெளியாருடைய ஆதிக்கத்திற்குக் கட்டுப்படாமல், தாங்களாகவே அரசை அமைத்தும், அவற்றுக்கு எல்லோரும் பணிந்து நடப்பது நாடாகும்.' இப்பேராசிரியர்களின், பொருள் நிறைந்த ஆனால் சுருக்கமான கூற்றுகளிலிருந்து சில முக்கியமான கருத்துகள் வெளியாகின்றன. ஒரு நிறுவனம், நாடு என்று அழைக்கப்படவேண்டுமென்றால், அங்கே ஒரு குறிப்பிட்ட மக்களின் எண்ணிக்கை வேண்டும்; அம்மக்கள் வாழ்வதற்கு நிலம் வேண்டும் ; அவர்களுடைய வாழ்க்கை அமைப்பு யாருடைய அதிகாரத்திற்கும் கட்டுப்பட்டதல்ல; அவர்களாகவே அமைத்துக்கொண்ட அதிகாரத்தைத் தங்க

ளால் ஏற்படுத்தப்பட அரசின் மூலமாகச் செலுத்த வேண்டும்; அவ்வரசின் அதிகாரம் எல்லோராலும் மதிக்கப்படவேண்டும் என்பனவாகும். மேலே குறிப்பிட்ட முக்கிய அம்சங்களைச் சிறிது விவரித்துக் கூறுவோமாகில், நாடு என்பது என்ன என்பதும் விளங்கி விடும். எனவே, நாடு என்னும் மாபெரும் நிறுவனத்தின் சிறிய நிறுவனங்களைத் தெளிவாக அறிவதற்கு வாசகர்களை அழைத்துச் செல்கிறேன்.

## (1) மக்கள் தொகை (Population)

நாடு நல்லாட்சி நடத்துவதற்குச் சிறிய அளவான மக்கள் தொகையும், நாடு வல்லமை பெற்று விளங்குவதற்கு, ஓரளவு பெரிய மக்கள் தொகையும் அவசியமாகும் என்று அரிஸ்டாடில் கூறியுள்ளார். இது ஒரு பொதுவான கூற்றாகும்; மேலும் கிரேக்க நகர மக்கள் வாழ்ந்த அரசியல் வாழ்க்கையைத் தழுவிய கூற்றாகும். எனவே, இக்கூற்றை அப்படியே இக் காலத்திற்கும் பொருத்தமுடியாது. ஏனென்றால் தற்காலத்தில் உள்ள நாடுகள் மாபெரும் மக்கள் தொகையைப் பெற்றிருப்ப தாகும். உதாரணமாக நம் தாய்நாடாகிய இந்தியா 55 கோடி மக்களையும், சீனா சுமார் 78 கோடி மக்களையும் பெற்றிருக் கின்றன. இவ்விதம் நாடுகள்தான் இவ்வளவு பெரிய மக்கள் தொகையைப் பெற்றிருக்கின்றனவா என்றால், தற்கால நகரங் களும் அவைகளுக்குப் பின்தங்கியதில்லை. என்பதையும் நாம் காணலாம். உதாரணமாக உலகத்திலேயே மிகவும் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களில் முக்கியமானவை சில பின்வருவன: சீனாவிலுள்ள சாங்கை (Shanghai) சுமார் ஒரு கோடி மக்களையும் (1,08,20,000), ஜப்பானில் உள்ள டோக் யோவில் (Tokyo) சுமார் 38 இலட்சம் மக்களையும் (38,41,000), அமெரிக்காவிலுள்ள நியூயார்க் (Newyork) சுமார் 79 இலட்சம் மக்களையும் (78,95,000), இங்கிலாந்திலுள்ள லண்டன்மா நகரத் தில் (London) சுமார் 74 இலட்சம் மக்களையும் (73,79,000) பெற்றி ருக்கின்றன; மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் யாவும் 1971ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குறிப்புகள் ஆகும். இவ் விதமாக மாபெரும் மக்கள் தொகையைப் பெற்ற நகரங்கள் இருந்தபோதிலும், பிரன்னிஸிலுள்ள அண்டோரா (Andora) என்னும் நாட்டில் சுமார் 5,000 மக்கள் தொகையும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு நாட்டின் மக்கள்தொகை சுமார் 10,000-த் திற்குக் குறைவாக இருக்கக்கூடாது என்று சில ஜெர்மானிய அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

(2) நிலப்பரப்பு (Territory)

ஒன்றுபட்ட மக்கள் ஒரு குறிப்பிட்ட நிலத்தில் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது அவ்வியற்கை வரையறை நாட்டின் எல்லைகளாகின்றன; அவ்வெல்லைகள் நாட்டின் நிரந்தரமான உரிமைப்பொருள்களாகி விடுகின்றன. எனவே, அவ்வெல்லைகளுக்குள் மக்கள் என்றும் வாழ வேண்டியதன் அவசியமும் ஏற்படுகிறது. ஏனென்றால், இடம் விட்டு இடம் சென்று வாழும் மக்கள், அந்நிலவள உரிமைகளைப் பெறமுடியாது; அவர்களை மக்கள் என்றும் அழைக்கவியலாது. கிரேக்க மக்களின் நகரங்கள் சிறிய அளவுடையதாக இருந்தனவென்பதை நாம் முன்பே தெரிந்துகொண்டோம். ஆனால் தற்கால நாடுகள் மாபெரும் நிலவள எல்லைகளைக் கொண்டனவாகும். உதாரணமாக, இந்தியா 1,269,640 சதுர மைல்களையும், ரஷ்யா 8,708,070 சதுர மைல்களையும், இத்தாலியிலுள்ள சான்மாரினோ (Sanmarino) 38 சதுர மைல்களையும் பெற்றிருக்கின்றன. இவ்விதமான வேறுபாடுள்ள நிலப்பரப்பைப் பெற்றிருந்தாலும், அந்நாடுகள் அனைத்தும் தங்களுடைய மக்களுக்கு நல்வாழ்வு அமைத்துக் கொடுப்பதில், அந்நாடுகளுக்குக் கிடைத்துள்ள இயற்கை நிலவளங்களைப் பயன்படுத்தி மக்களிடத்தில் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதில் முழு முயற்சிகள் புரிந்தவண்ணமாகவே இருக்கின்றன. தற்காலத்தில் நிலப்பரப்பளவில், நிலம் மட்டும் சேர்வதில்லை; அந்நிலத்திற்குள் அடங்கும் இயற்கை வளங்களும், தண்ணீரும், காற்றும் அம்மக்களுக்கே உரிமையாகும். நீர் எல்லையைப் பற்றிக் குறிப்பிடும்போது, நிலத்திலிருந்து சுமார் மூன்று மைல்கள் தூரம் வரையுள்ள நீர்ப்பரப்பும் அந்த நாட்டு மக்களுக்கே உரியனவாகும்.

இவ்விதமாக எண்ணிக்கையாலும், எல்லைகளாலும் மக்கள் தங்கள் தங்கள் நாடுகளை அமைத்துக்கொண்ட போதிலும், ஒவ்வொரு நாட்டிலும், வேற்று நாட்டுமக்களும் வருகை தருகின்றனர்; தங்குகின்றனர்; சிலர் தங்களுடைய உறைவிடமாகவே கொள்கின்றனர். இதன் காரணமாக முக்கியப் பிரச்சினைகளும் தோன்றியிருக்கின்றன. இப்பிரச்சினைகள் நாட்டுப் பிரச்சினைகளைவிடப் பெரியனவாகும்; ஆகவே அவை அகில உலகப் பிரச்சினைகள் (International Problems) என்று அழைக்கப்படுகின்றன. இப்பிரச்சினைகளைத் தீர்வு காண்பதற்கும், எல்லா நாட்டினரையும், மக்களையும் ஒன்றாக இணைத்து வாழ வழிமுறைகள் அமைத்துக் கொடுப்பதற்கும் அகில உலக நிறுவனங்

களும் (International Organisations) ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறாக முதலில் தோன்றிய நிறுவனம் உலகநாட்டுக் குழு (League of Nations) என்பதாகும். அந்நிறுவனத்தின் தொடர்ச்சியாக அமைந்ததே ஐக்கியநாடுகளின் நிறுவனம் (United Nations Organisation). இந்நிறுவனத்தைப்பற்றிய செய்திகள் விரிவாகப் பின்பு தரப்படும். இருந்தபோதிலும், ஒரு நற்செய்தி மட்டும் இந்நிறுவனத்தைப்பற்றி இந்நிலையில் கூறலாம்; அகிலஉலகப் பிரச்சினைகள் ஓரளவு சமாதான முறையில் தீர்வு கண்டு, மக்கள் எல்லோரும், எங்கு வாழ்ந்தாலும், நல்வாழ்வு வாழவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்திற்காக அயராது உழைத்துவரும் நிறுவனம் இது ஒன்றே!

(3) அரசாங்கம் (Government)

நாட்டு மக்களிடையே ஒழுங்கும் நியதியும் நிலவி எல்லோரும் இன்புற்றிருக்கின்றனர் என்றால், அதற்கு முக்கியக் காரணமாக உள்ளது அரசு. இந்நிறுவனத்தை நிர்வாக இயந்திரம் என்று கூறலாம்; ஏனென்றால், இந்நிறுவனம் செயல்படாவிடில், மக்களிடையே ஒற்றுமை நிலவ முடியாது; ஒழுக்கம் அமையப் பெறாது; இவை யாவும் அமையப் பெறவேண்டுமென்றால், அரசு செயல்பட வேண்டியதவசியமாகிறது, அவ்விதம் செயல்படும்போது, பல நேரங்களில் அதிகாரமும், சில நேரங்களில் வலுக்கட்டாயமும் பயன்படுத்தப்படும்; அவையாவும், பெரும்பாலான மக்களின் நன்மையைக் கருதியே பயன்படுத்தப் படுவதாகும். ஒரு நாட்டிலுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்துக் காப்பாற்றுவதால் அரசு - நிறுவனம் எவ்வளவு முக்கியமானதென்பது சொல்லாமலேயே விளங்கும். இருந்தபோதிலும் இதன் முக்கியத்துவம், எவ்வாறு இந்நிறுவனம் மக்களுக்குப் பயன்படுகிறது என்பதன் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. மேலும், மக்கள் விரும்பி, நல்லதென ஏற்றுக்கொண்டவற்றைச் செயல்படுத்தப் பயன்படுவதும் இந்நிறுவனமே. இவ்விதமாகத் தற்காலத்தில் அரசு பலவிதங்களில் பயன்பட்டு மக்களுக்குத் தொண்டு புரிவதில், மூன்று முக்கியப் பாகங்களைக் கொண்டதாக விளங்குகிறது. அவையாவன: சட்டத்துறை (Legislature), நிருவாகத்துறை (Executive), நீதித்துறை (Judiciary). பண்டைக்கால அரசியல் வாழ்வில், அரசின் நடவடிக்கைகள் மேற்குறிப்பிட்டவாறு பிரிவினைகள் பெறவில்லை. இவ்விதம் பிரிவினை ஏற்பட்டது தற்காலத்தில்தான்; அதுவும் நவீனகால ஐரோப்பிய அரசியல் மேதையானவரும், பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவருமான மாண்டெஸ்கியூ என்பவரால்

இப்பிரிவினைகள் ஆதரிக்கப்பட்டன; அதன்பின் அமுலுக்கு வந்தன. இருந்த போதிலும், இப்பிரிவினைகள் யாவும் ஒன்றை யொன்று தழுவியே செயல்பட வேண்டுமென்பதே அதன் நோக்கம்.

(4) ஆட்சியுரிமை (Sovereignty)

ஒரு நாட்டில் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்கிறார் கள்; அவர்களிடத்திலே நேர்மையான நிருவாகம் ஏற்பட் டுள்ளது; அதன் காரணமாக அந்நாடே வலிமை பெற்று விளங்கு கிறது என்று குறிப்பிடும்போது, அவற்றிற்கெல்லாம் ஆதார மாக இருப்பது அந்நாட்டின் அரசுரிமை என்பதே; இதனைத் தலைமையுரிமை என்றும் இறைமை என்றும் அரசியல் வல்லுநர் குறிப்பிடுவர். இவ்வுரிமைதான் மற்றெல்லா உரிமைகளுக்கும் ஆதாரமாகும் என்பதும் கவனிக்கற்பாலது. ஏனென்றால், ஒரு நாடு தன்னுடைய மக்களுக்குத் தேவையான உரிமைகளை அளிப்பதற்கும், மற்ற நாடுகள் தன்னை மதிப்பதற்கும் காரணமாக அமைவது அந்நாட்டின் அரசுரிமையாகும். இவ்வுரிமையானது வெளியிடப்படும்போதுதான் சட்டங்கள் தோன்றுகின்றன; அச்சட்டங்களை மதிப்பவர்களுக்கு மரியாதையும் மதியாதவர் களுக்குத் தண்டனையும் அளிக்க வல்லது இவ்வரசுரிமைதான். இவ்வித முக்கியத்துவம் பெற்றுள்ளதால்தான், அரசுரிமை இல்லாத நாடு, நாடென்றே அழைக்கப்படமாட்டாது. அந் நாட்டு மக்களும் முற்றிலும் விடுதலை பெற்றவர்கள் என்று குறிப்பிட முடியாது. ஏனென்றால், அந்நாட்டு மக்களின் உரிமை களை நிருணயிப்பதற்கு, அம்மக்களிடத்திலேயே அதிகாரம் இல்லை. இந்நிலையை நன்கு விளக்குவதற்கு நாம் எந்த நாட்டு உதாரணத்தையும் தேடவேண்டியதில்லை. நம் தாய்நாடு இந்தியா 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15இல் ஆங்கிலேயர் களிடமிருந்து விடுதலை பெற்றுவிட்ட போதிலும், பின்பும் சில ஆண்டுகள் வரைக்கும் நாம் நம்முடைய தலைமை உரிமையைப் பெறவில்லை. ஏனென்றால், 1950இல் இந்தியா ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப் பெற்று நாம் பூரண உரிமையைப் பெற்றோம். அதற்குப் பிறகுதான் நம்முடைய வருங்காலத்திற் காக, நமக்குத் தேவையான சட்டதிட்டங்களை நாமே உண்டாக் கவும், நிருவகிக்கவும், தலை நிமிர்ந்து நின்று, இந்தியாவின் வீரச் செம்மல்களாக உலக அரங்கிலே நடக்கவும், பேசவும் முடிந்தது. இதற்கெல்லாம் முக்கியக் காரணம் நாம் பெற்ற அரசுரிமைதான் என்பதை நன்கு கவனிக்கவேண்டும்.

ஒவ்வொரு நாட்டின் தலைமை உரிமையும் எவ்விதம் செம்மையாக அமையவேண்டும், இல்லையேல் நாட்டுக்கு நாடு பிணக்குகள் ஏற்படும் என்பன போன்ற அகில உலகப் பிரச்சினைகள், 20ஆம் நூற்றுண்டில் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாருன பிரச்சினைகளைத் தீர்வு காண்பதற்கும், நாடுகளிடையே நல்லுறவுகள் ஏற்படுத்தவும் அகில உலக நிறுவனங்கள் ஏற்பட்டுள்ளன என்பதும் உண்மை. அவ்வாருன நிறுவனங்களில் மிக முக்கியமானதும், தலைசிறந்ததும் ஐக்கிய நாட்டு நிறுவனம் (U. N. O.) என்பதும் உண்மை. வல்லரசுகள் எவ்விதம் தங்கள் தலைமை உரிமையைப் பயன்படுத்துகின்றன; அதன்காரணமாக அண்டை நாடுகளின் நிலைமைகள் எவ்விதம் பாதிக்கப்படுகின்றன; பிரச்சினைகள் தோன்றுகின்றன; அப்பிரச்சினைகளை முக்கிய ஐக்கிய நாட்டு நிறுவனம் எவ்விதம் ஆய்வு நடத்தி, சமாதான முறையில் தீர்வுகாண்கின்றன என்பன போன்ற உண்மையிலேயே சிக்கலான, ஆனுல் மிகவும் சுவையான கருத்துகளைப் பின்பு காணவிருக்கிருேம். சுருங்கக் கூறின் தலைமை உரிமை அல்லது அரசுரிமை அல்லது இறைமை என்பது ஒரு நாட்டின் அச்சாணி போன்றது; எனவே அது இயங்கும் தன்மையைப் பொருத்தே நாடு நல்ல முறையில் இயங்கி மக்களுக்கும், ஏன் மனித சமுதாயத்திற்கே நன்மை புரிய முடியும் என்பதை நன்கு கவனிக்கவேண்டும்.

# 8. அரசின் தோற்றம்
## (Origin of the State)

15—16ஆம் நூற்றுண்டு ஐரோப்பாவில், அரசியல் வாழ்வு எவ்விதம் தோன்றியது ; நாடு, அரசு, முதலிய நிறுவனங்கள் எவ்விதம் அமைந்தன ; நிறுவப்பெற்றன என்பன போன்ற விஞக்களுக்குப் பதில் அளிக்கும் முறையில் பல கருத்துகள் நிலவிவந்தன. அவற்றில் முக்கியமாகச் சில கொள்கைகளை மட்டும் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். அரசியல் வல்லுநர்கள் அரசின் தோற்றத்தைப் பற்றிக் கூறும் கொள்கைகளை இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். அவையாவன : தொகுப்புமுறைக் கொள்கைகள் (Deductive theories), பகுப்புமுறைக் கொள்கைகள் (Inductive theories) என்பனவாகும். தொகுப்புமுறைக்கொள்கைகளில் முக்கியமானவை : தெய்வீக முறைக்கொள்கை (Divine Right theory), வலிமைக் கொள்கை (Force theory), சமூக உடன்பாட்டுக்கொள்கை (Social contract theory) என்பனவாகும். பகுப்பு முறைக் கொள்கைகளில் முக்கியமானவை: தந்தை வழித் தோற்றக் கொள்கை (Patriarchal theory), தாய் வழித் தோற்றக் கொள்கை (Matriarchal theory), பரிணமக் கொள்கை (Evolutionary theory) என்பனவாகும்.

### (i) தொகுப்பு முறைக் கொள்கைகள்
### (Deductive theories)

#### (1) தெய்வீக உரிமைக் கொள்கை (Divine Right theory)

தெய்வீகமுறைக் கொள்கையானது இறைவனை முதலாகக் கொண்டு, அரசன், நாடு, மக்கள் முதலியன இறைவனல் தோற்றுவிக்கப் பட்டது என்னும் கருத்துடையதாகும். இதற்குச்

சான்றுகள் விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டிலும், இந்து புராணங்களிலும் காணப்படுகின்றன. இக்கொள்கை அநேகமாக எல்லா நாடுகளிலும் நிலவியது என்றே சொல்லலாம்; பழங் காலத்திலும், மத்திய காலத்திலும், ஏன், தற்காலத்திலும் கூட ஒருசில நாடுகளில் முடியாட்சிதான் நிலவியது; நிலைத்திருக்கிறது, இக்கொள்கையின் பிரகாரம், 16 — 17ஆம் நூற்றாண்டுகளில் எதேச்சதிகாரம் புரிந்துவந்த பிரெஞ்சு மன்னர் 14ஆம் லூயி என்பாரும், இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் என்பாரும் தங்களுடைய ஆட்சிகளை நியாயமானதென்றே சாதித்தார்கள். ஏனென்றால் மன்னர்கள் ஆண்டவனுக்குத்தான் பொறுப்பே ஒழிய, மக்களுக்கோ, அவர்களின் குரலுக்கோ அல்ல என்ற முறையில் தெய்வீகமுறைக் கொள்கைகளை மேல்வாரியான விளக்கம் அளித்தார்கள். இவ்விதமான அரைகுறை விளக்கங்களும், அலட்சிய மனப்பான்மைகளும் சேர்ந்ததன் காரணமாகவோ என்னவோ, காலச்சுழற்சியில் இக்கொள்கைகள் அழிவுற்றுச் சிதைந்துவிட்டன போலும்.

## (2) வலிமைக் கொள்கை (Force theory)

பழங்காலத்தில் வலியவர் மெலியவர்களை அடக்கி அதிகாரம் செலுத்தினர், காலக்கிரமத்தில் ஆட்சியும் அமைத்துக் கொண்டனர்; இதற்குச் சான்று போர் எழுச்சியும், அதன் காரணமாக வலிமை வெற்றி பெறுவதும், எளியோர், மெலியோர் அடிமைகளாவதும்தான். இவ்விதப் பரிதாபகரமான நிலைமை தற்காலத்திலும் உண்டு என்று உண்மையைச் சொல்வதைத் தவிர யாம் வேறொன்றும் சொல்வதற்கில்லை! அவ்வித நிலைமை எவ்விதம் எங்கெங்கு நிலவியிருக்கிறதென்பதை அறிந்து கொள்வதற்கு வாசகர்களின் சிந்தனைக்கு ஓர் அரிய சந்தர்ப்பமாக அமைத்துவிட்டு விலகிக்கொள்கிறேன். எனவே, வலிமைக்கொள்கை ஓரளவு உண்மையைப் பெற்றிருப்பதும் நன்கு விளங்கும். உதாரணமாக வால்டையர் (Voltaire) கூறுகிறார்: முதலில் தோன்றிய அரசன் ஒரு சிறந்த போர் வீரனாகவும் இருந்தான். இக்கருத்தில் பிரகாசிக்கும் உண்மை, நாட்டின் அடிப்படை படைவலிமைதான் என்பதும் கவனிக்கற்பாலது. மேலும் இக்கருத்தை ஜெங்க்ஸ் (Jenks) என்பாரும், ஓப்பன் ஈமர் (Oppen heimer) என்பாரும் வெகுவாக ஆதரிக்கின்றனர். இவற்றைத் தவிர, தற்காலத்திலும் நாடுகளின் பெருமை அந்நாட்டின் படைவலிமையைப் பொருத்தே புகழப்படுவதாலும், இக்கொள்கை மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. பண்டைக் கிரேக்கநாட்டிலும், சோபிஸ்ட் (Sophist) என்று அழைக்

கப்பட்டோர், வலிமைக்கொள்கையையும் பலவந்தமான அரசியல் முறைகளையும் வலியுறுத்திச் சென்றுள்ளனர் என்பதும் கவனிக்கற்பாலது. அநேகமாகப் பழங்காலத்திலும், மத்திய காலத்திலும், இக்கொள்கை நின்று நிலவியிருக்கலாம்; ஆனால், 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள அரசியல் உணர்வும், நல்லெண்ணமும் வலிமைக்கொள்கையை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு இடம் தராது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## (3) சமூக உடன்பாட்டுக் கொள்கை (Social Contract theory)

20ஆம் நூற்றாண்டின் நாகரிக வளர்ச்சிகளுக்கும், அரசியல் வாழ்வுக்கும் முன்னோடியாக அமைந்தது, 16ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய சமுதாய மறுமலர்ச்சி. அதனால்தான் 16ஆம் நூற்றாண்டையே மறுமலர்ச்சிக் காலமாக (Period of Renaissance), வரலாற்றுப் பேராசிரியர்களும், அரசியல், பொருளியல் வல்லுநர்களும் ஒப்புக்கொள்கின்றனர். அதன் முக்கியத்துவம் என்னவென்றால், 15ஆம்நூற்றாண்டுவரை, ஐரோப்பாவும் மூடநம்பிக்கைகளுக்குத்தான் முதலிடமாக இருந்தது. மறுமலர்ச்சி ஏற்பட்டதென்றால், மக்கள் மூடநம்பிக்கைகளிலிருந்து விழிப்படைந்து பகுத்தறிவுக்கு முதல் இடம் தந்தார்கள் என்று பொருளாகும். அதன் காரணமாகத்தான் அறிவுத்துறையிலும் ஆராய்ச்சித்துறையிலும் மற்றப் பல சமூகத்துறைகளிலும், புதிய புதிய நோக்கங்களும், கருத்துகளும் தெரியவந்தன. மக்கள் அறிவு விளக்கம் பெற்றனர். சமுதாயப் பிரச்சினைகளையும் அரசியல் பிரச்சினைகளையும் மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்தோடு நோக்கினர் ; தீர்வுகளையும் கண்டனர். இவ்விதமான விழிப்புணர்ச்சி ஏற்பட்ட சமுதாயத்திலே, அரசியல் வாழ்வும், அதன் நிறுவனங்களும் எவ்விதம் தோன்றின, அவை தொடர்ந்து இருப்பதால் பயன் என்ன என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் இருத்தும் முறையில் சில கருத்துகளும் கொள்கைகளும் பிறந்தன, வளர்ந்தன, வல்லமையும் பெற்றன. இருந்தபோதிலும், பன்னெடுங் காலமாக மக்களின் எண்ணங்களிலே ஊன்றி நிலைத்திருந்த தெய்வீகமுறைக் கொள்கையும், வலிமைக் கொள்கையும், புதிய சூழ்நிலையில் தோன்றிய கேள்விகளுக்குச் சரியான விடைகள் தர இயலவில்லை. அதன் காரணமாக எழுந்ததே சமூக உடன்பாட்டுக் கொள்கையாகும். இக்கொள்கையை மூன்று அரசியல் மேதைகள், தாங்கள் வாழ்ந்த காலநிலைமைகளைப் பொறுத்து வேறுபாடான விளக்கங்களுடன்

வெளியிட்டனர், ஏனென்றால், அக்கால நிலைமைகளிலும் முடியாட்சிதான் நிலவியிருந்தது. எனவே, அவர்கள் வெளியிட்ட கொள்கைகளும் நிலவியிருந்த முடியாட்சியும் ஓரளவாவது பொருத்தமுடையதாக இருக்க வேண்டியதவசியமாயிற்று.

அம்மூன்று அரசியல் வல்லுநர்கள், ஹாப்ஸ், லாக், ரூஸோ என்போராவர். இம்மூவருக்கும், வேறுபாட்டுக் கருத்துகள் இருந்தபோதிலும், பொதுவாகச் சில கருத்துகளில் ஒற்றுமையிருந்தன. அவையாவன: அரசு ஏற்படுவதற்கு முன்னர் மக்கள் இயற்கையான சூழ்நிலையில் சட்டதிட்டங்களோ அல்லது கட்டுப்பாடுகளோ அமையாத வாழ்வு வாழ்ந்தனர். இதனை இயற்கை நிலை (Natural Condition) என்று குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் மக்களின் வாழ்வு நிச்சயமில்லாமலும், பாதுகாப்பற்றதாயும் இருந்ததால் பாதுகாப்பான நிலைமையைப் பெறுவதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக, இயற்கை நிலையைத்துறந்து கட்டுப்பாடுகளுடன் அமைந்த சமூக வாழ்வை ஏற்றுக்கொள்கின்றனர். இந்நிலையை அரசு நிலை (Political Condition) என்று குறிப்பிடுகின்றனர். இவ்விதம் இருநிலைகளை மூன்று அரசியல் வல்லுநர்களும் ஒப்புக்கொண்டாலும், அந்நிலைமைகளில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர், எவ்விதமான நிறுவனங்களை ஏற்றுக்கொண்டனர் என்பன போன்ற பிரச்சினைகளில் மூவரும் வேறுபடுகின்றனர். அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், அவற்றில் முக்கியமானவை, அவர்கள் வாழ்ந்தகாலமும் அக்காலத்தில் மக்களிடம் தோன்றிய விழிப்புணர்ச்சியுமாகும். அவர்களுடைய கொள்கைகளை இனி விரிவாகக் காண்போம்.

## **தாமஸ் ஹாப்ஸ்** (Thomas Hobbes 1588-1679)

ஹாப்ஸ் வாழ்ந்த காலம், இங்கிலாந்தில் முடியாட்சி நிலவிய காலம் ஆகும்; அப்போது உள்நாட்டுப் போர் ஏற்பட்டிருந்த சூழ்நிலையில் 1651இல் தன்னுடைய நூலாகிய லெவியதன் (Leviathan) என்பதின் வாயிலாக, சமூக உடன்பாட்டுக் கொள்கையை வெளியிட்டார். ஹாப்ஸ் கூறும் இயற்கைநிலை, மிகவும் பயங்கரமான நிலையாக வருணிக்கப்படுகிறது. அது ஒரு பரிதாபகரமானதாயும், அருவெறுப்பானதாயும், ஒழுங்கற்றதாயும், நிச்சயமில்லாததாயும் இருந்தநிலை (It was brutish, nasty, poor and short). எனவே அங்கே சுயநலம் தலைவிரித்தாடியது; அங்கே போரும், பொருமையும் பொங்கி எழுந்து நின்றன;

இந்நிலையில் வாழ்க்கை நிச்சயமில்லாததாக இருந்தது. ஆகவே இவ்வித நிலைமைகளை நீக்குவதற்கும், அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் மக்கள் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டனர்; அதன்விளைவாகத் தங்களுடைய உரிமைகள் யாவும் ஒருவரிடம்-மன்னனிடம் ஒப்படைக்கப்படுகிறது; அவரது ஆணையின்படி நடந்து கொள்ளவும் ஒப்புக் கொள்கின்றனர். அரசன் இடர்களை நீக்குகிறான்; மக்கள் அமைதியாக நல்வாழ்வு வாழ முடிகிறது. இவ்வாறு ஏதோ ஒரு கதையைச் சொல்வதைப் போல், அரசின் தோற்றத்தை ஹாப்ஸ் வருணித்து, 16ஆம் நூற்றாண்டில் நிலவிய முடியாட்சியையும், மன்னரின் வரம்பற்ற அதிகாரத்தையும் ஆதரித்தார். ஹாப்ஸின் கொள்கையில், மன்னனைத்தவிர மற்ற அரசியல் நிறுவனங்கள் தெளிவாக விளக்கம் பெறவில்லை. மேலும் மன்னரின் கட்டளையே சட்டமாகவும், அதனை மறுப்பதற்கு மக்களுக்கு எந்தவிதமான உரிமைகள் இல்லை என்பன போன்ற கருத்துகளும் கவனிக்கற்பாலது.

## ஜான் லாக் (John Locke 1632-1704)

17ஆம் நூற்றாண்டின் புரட்சிக்காலத்தில் வாழ்ந்தவர் லாக். முற்போக்கான கொள்கைகளை மேற்கொண்டவராவார். தாம் வெளியிட்ட அரசாங்கத்தின் இருநூல்கள் (Two Treatises on Civil Government) மூலமாக, ஹாப்ஸின் கொள்கைகளை மறுத்து அரசின் வரம்புகளையும், ஆட்சியின் முறைகளையும் எடுத்துக் கூறினார் லாக். இவருடைய கருத்துகள் இங்கிலாந்தில் மட்டுமல்ல, அமெரிக்காவிலும் நன்கு வரவேற்கப்பட்டது. ஏனென்றால், அப்போதுதான் அமெரிக்காவிலும் விடுதலைப் போராட்டங்கள் தோன்றியிருந்தன. சுருங்கக் கூறின், 'மன்னரின் கட்டளைகளே சட்டம்; அதனை ஏற்றுக்கொண்டு நடப்பதே மக்களின் கடமை', என்ற ஹாப்ஸின் கொள்கையை மறுத்தார் லாக். மன்னரின் அதிகாரங்களுக்கு வரம்பு உண்டு; அவ்வரம்பை நிருணயிப்பவர்கள் மக்களே; அவர்களின் விருப்பங்களை ஈடேற்றுவதே அரசின் கடமை என்பன போன்ற புரட்சிக் கருத்துகளை எடுத்துக் கூறினார் லாக்.

லாக்கின் இயற்கை நிலை, ஹாப்ஸ் வருணித்ததைப் போல் அவ்வளவு பயங்கரமானதல்ல. ஏனென்றால், லாக்கின் இயற்கை நிலையில் மக்கள் அமைதியாகவே வாழ்ந்தனர்; சில உரிமைகளையும் பெற்றிருந்தனர். ஆனால் கலவரங்கள் ஏற்பட்ட நிலைமைகளில், அவற்றைத் தீர்வு காண்பதற்குக் குறிப்பிட்ட

நபர்கள் பொறுப்பேற்பதற்கில்லை. எனவே, மக்கள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, இயற்கை நிலையைத் துறந்து, அரசியல் சமுதாயத்தில் செல்கின்றனர்; இதற்குச் சமூக உடன்படிக்கை (Social Contract) எனப் பெயரிடுகிருர் லாக். அதன் பின்பு அரசியல் உடன்படிக்கை (Political or Governmental Contract) ஏற்படுகிறது. அதன் பிரகாரம், அரசன் (King) தேர்ந்தெடுக்கப்படுகிருன்; அரசாங்கம் (Government) அமைக்கப்படுகிறது. இதன் மூலமாக, அரசியல் நிறுவனங்கள் யாவும் மக்களுக்குப் பொறுப்புள்ளவைகளாகத்தான் நடைபெற வேண்டும் என்பதையும் லாக் தெளிவு படுத்துகிருர். மேலும் கூறுகிருர்: அவ்விதம் பொறுப்பில்லாமல் நடைபெறத் துவங்கினுல், அந்நிறுவனங்களை நீக்கவோ, மாற்றி அமைக்கவோ மக்களுக்கு உரிமை உண்டு என்பதையும் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டுகிருர் அதன் மூலமாக அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) என்றும் மக்களிடத்திலேதான் இருக்கின்றன என்பதையும் தெளிவுபடுத்துகிருர். லாக்கின் அரசியல் கருத்துகளை, ஹாப்ஸின் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவற்றில் காணப்படும் வேற்றுமைகள் நன்கு விளங்கும். லாக்கின் கொள்கையில், அரசியல் நிறுவனங்களும், அதிகாரமும், தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன; மன்னர், மக்களுக்குப் பொறுப்புடையவராகத் திகழ வேண்டும்; அவருடைய அதிகாரம் மக்களிடமிருந்து பெற்றவையாகும். இதன் மூலமாக மன்னரின் அதிகாரத்திற்கு வரம்பு ஏற்படுத்துகிருர் லாக். இக்கொள்கையைத் தழுவியதே சட்டத்திற்கு உட்பட்ட அரசு (Constitutional limited Monarchy). இக்கொள்கையைத் தழுவிய அரசே இன்றைக்கும் ஆங்கிலேய நாட்டில் அமைந்துள்ளது என்பதும் கவனிக்கற்பாலது.

## ஜீன் ஜேகஸ் ரூஸோ (Jean Jacques Rousseau 1712-1778)

பிரெஞ்சு நாட்டு மேதையான ரூஸோ வாழ்ந்த காலம் 14ஆம் லூயி பிரான்ஸில் தன்னுடைய எதேச்சதிகாரத்தை நிலைநிறுத்தி ஆட்சிபுரிந்த காலம்; அவருடைய ஆட்சி முறையை மிகவும் வெறுத்தவர் ரூஸோ. மேலும் அக்காலத்தில் ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சிக் கொள்கைகளையும் முற்போக்கான கருத்துகளையும் ஆதரித்தவர் ரூஸோ. எனவே இவருடைய சமூக உடன்பாட்டுக் கொள்கையானது ஹாப்ஸ்,

லாக் போன்ருேருடைய கொள்கைகளிலிருந்து ஒரு முக்கியமான விதத்தில் மாறுபட்டது; ரூஸோவினுடைய கொள்கையில் மன்னர் என்ற அரசியல் நிறுவனமே இல்லை; அந்நிலையில் எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற புரட்சிக் கருத்தை வெளியிட்டார் ரூஸோ.

ரூஸோவினுடைய கொள்கையிலும் இருவிதமான நிலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. முதல் நிலையான இயற்கை நிலையில், மனிதன் இன்பமான, கட்டுப்பாடற்ற, கள்ளங்கபடமற்ற வாழ்வு வாழ்கிருன். இதனை இயற்கையோடு இணைந்த இன்ப வாழ்வு (Idyllic felicity) என்று குறிப்பிடுகிருர். இந்நிலைமை காலப்போக்கில் மாறுகிறது. அதற்கு மிக முக்கியக் காரணம் மக்கள் இனப்பெருக்கமும், அதன் காரணமாக எழுந்த பலதேவைகளுமாகும். எனவே, மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு உடன்படிக்கையைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கின்றனர். அங்கு ஏற்படுகிறது பொதுநோக்கு (General Will). அரசு, சட்டம் என்பன போன்ற மற்றெல்லா நிறுவனங்களும் இப் பொது நோக்கு என்னும் நிறுவனத்தால்தான் அமைக்கப்படுகிறது. எனவே அதன் உரிமைகள் நிரந்தரமானவை. அதன் அதிகாரம் வரம்புகட்கு உட்படாதவை. மக்கள் இதற்கு மரியாதை செலுத்திப் பணிந்து நடந்தனர்; பாதுகாப்பும் பெற்றனர். ரூஸோவின் கொள்கையில் மக்களின் குரலே நிருவாகப் பொறுப்பை ஏற்கிறது. எனவே மக்கள் தங்களைத் தாமே ஆட்சி புரிந்து கொள்ளமுடியும் என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இக்கருத்துகளின் வளர்ச்சியே ஜனநாயகப் பண்பாக மலருகிறது என்பதும் கவனிக்கற்பாலது. இந்நிலையில்தான், 20ஆம் நூற்ருண்டின் ஜனநாயகக் கொள்கைக்கு வித்திட்டவர் ரூஸோ என்றும் கூறப்படுகிறது. மக்களின் உரிமைகளையே வலியுறுத்தினமையால் ரூஸோவின் கருத்துகள் சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity) பிரெஞ்சு நாட்டுப் புரட்சிக்கும் காரணமாகும் என்றும் கூறப்படுகிறது.

இது நிற்க, ரூஸோவின் சமூக உடன்பாட்டுக் கொள்கையைச் சிறிது ஊன்றிப் பார்ப்போமாகில், ஹாப்ஸின் கொள்கையிலிருந்து முதல் கூற்றையும், லாக்கின் கொள்கையிலிருந்து இரண்டாம் கூற்றையும் பெற்று, அவற்றின் முடிவுரையாகத்தான் தன்னுடைய கொள்கையைத் தருகிருர் ரூஸோ என்பதையும் காணலாம். மேலும், அரசியல் நிருவாகம், தேர்வுகள் முதலியன நடைபெறுவதற்கு, யார்

பொறுப்பேற்று நடத்துவது என்பனபோன்ற பிரச்சினைகளைத் தெளிவாக விளக்கவில்லை என்பதும் கவனிக்கற்பாலது.மக்களின் நலனுக்காக மக்களாலேயே அரசாட்சி நடைபெறுவது நல்லது என்ற கொள்கையை நாம் வரவேற்றாலும் எவ்விதம் அது அமையும் என்ற வினாவிற்குச் சரியான பதிலை நாம் பெற முடியவில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம், ரூஸோ, பழங்காலக் கிரேக்கச் சமுதாயத்தின் அரசியல் வாழ்வு, அரசியல் நிறுவனங்கள் முதலியவற்றால் வெகுவாகக் கவர்ச்சிக்கப்பட்டவர்; எனவே தான், மன்னர் ஆட்சியில் அவருக்குத் திருப்தி இல்லாததாலும், மக்கள் ஆட்சிவேண்டும் என்ற தன்னுடைய ஆர்வத்தை வெளியிடும் முறையில், தன்னுடைய கொள்கையை ஒருவாறு அமைத்து வெளியிட்டு விட்டார்! அவருடைய நோக்கம் சிறந்ததுதான்; ஆனால் அது ஈடேற்றும் முறைதான் சிக்கல்களை உண்டாக்குகின்றன. இந்நிலையில், லாக்கின் சமூக உடன்பாட்டுக் கொள்கையானது, சிக்குகள் இல்லாத, சீராக அமைந்து செயல்படக்கூடிய கோட்பாடாக இருக்கிறது. என்பதையும் வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், லாக்கின் கொள்கையில், எல்லா அரசியல் நிறுவனங்களும் இடம் பெறுகின்றன; எல்லோருடைய உரிமைகளும் வரையறைகளுடன் பாதுகாக்கப்படுகின்றன. அதனாலன்றோ தற்காலத்திலும் லாக்கின் கருத்துகள் ஆங்கிலேயர்களிடமும், அமெரிக்க மக்களிடமும் வலிமைபெற்று விளங்குகின்றன என்பதும் நன்கு கவனிக்கற்பாலது.

## (ii) பகுப்புமுறைக் கொள்கைகள்
## (Inductive theories)

**தந்தை வழித்தோற்றக் கொள்கை (Patriarchal theory)**

அரசு எவ்விதம் தோன்றியது என்பதை வரலாற்று வாயிலாகவும், பழங்கால மக்களின் மரபுகளின் அடிப்படையிலும் விளக்கம் தர முயல்கிறார் சர் ஹென்றி மெயின் (Sir Henry Maine). இவர் பண்டைக்கால மக்களாகிய கிரேக்கர், இந்தியர், ரோமானியர் போன்றோரின் பழக்க வழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் சட்ட திட்டங்களையும் அறிந்தவராகையால், அவற்றின் அடிப்படையில், தன்னுடைய கொள்கையை நிருபிக்க முற்படுகிறார். இவர் 1861இல் எழுதிய பழமைச் சட்டம் (Ancient law) முக்கிய நூலாகும்.

பொதுவாக எந்தச் சமுதாயத்திலும், வாழ்க்கை அமைவது குடும்பங்களில்தான் ; அக்குடும்பங்களின் தலைமைப்பொறுப்பும் ஆண் மக்களிடம்தான் இருந்துவந்திருக்கின்றன. ஆகவே, ஆண்களில் மூத்தவன் குடும்பத்திற்குத் தலைவனாக இருந்தான் ; பெண்கள், குழந்தைகள், அடிமைகள் யாவரும் அவனுக்கு அடங்கி நடந்தனர். இவ்விளக்கத்தின் மூலமாக ஆதிக்கம் செலுத்துவதற்கு ஆண் மகன்தான் உரிமை பெற்றிருந்தான் ; இவ்வுரிமையானது உறவு (Kinship) அல்லது இரத்த பாசம் (Blood relation) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கிறது என்பதும் கவனிக்கற்பாலது. நாளடைவில், ஒரு குடும்பம் பல குடும்பங்களாக மாறியது ; இருந்தபோதிலும், இரத்த பாசத்தால் யாவரும் பிணைக்கப்பட்டு ஒரு குலமாகத் (Tribe) திகழ்ந்தனர். இவ்வாறு ஏற்பட்ட பல குடும்பங்களுள், மூத்த ஆண்மகன், தலைமைப் பொறுப்பேற்றான்; பெண்டிர்க்கு அதிகாரமோ, உரிமையோ அளிக்கப்படவில்லை. இவ்வாறான கருத்துகளுக்கு, பழங்காலக் கிரேக்க, ரோமானிய வரலாறுகளிலிருந்து சான்றுகளை எடுத்துக் கூறினார் சர் ஹென்றி மெயின். இக்கொள்கை சமுதாய அமைப்பையும், முக்கியமாக இல்லற வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வித நிலைமைகள் ஏற்படவேண்டுமென்றால், மக்களிடையே ஓரளவு அரசியல் உணர்வு ஏற்படவேண்டியதவசியமாகிறது. எனவே, ஆரம்பகாலத்தில், அதாவது. அரசியல் உணர்வுகள் ஏற்படாத நிலையில் மனிதன் எப்படி வாழ்ந்தான் என்ற வினாவிற்குப் பொருத்தமான பதிலைக் கொடுக்கும் முறையில், மற்றொரு, கொள்கை வெளியிடப்பட்டது. அக்கொள்கையை ஆதரித்தவர்கள் ஜெங்க்ஸ் (Jenks), மார்கன் (Morgan) போன்றோர் ஆவர். அவர்கள் மறுப்புக்கு முக்கியக் காரணம், ஆதிகாலத்தில், அதிகாரம் பெண்களிடம் தான் இருந்தது என்பதாகும். இதனைத் தாய்வழித்தோற்றம் என்னும் தங்களுடைய கொள்கையை எடுத்துக்கூறி விளக்கம் தருகின்றனர்.

## தாய்வழித் தோற்றக் கொள்கை (Matriarchal theory)

தாய்வழித் தோற்றக்கொள்கையை ஆதரிப்பவர்கள் ஜெங்க்ஸ் (Jenks), மார்கன் (Morgan) என்போராவர். இக்கொள்கையின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், ஆதிகாலத்தில் தோன்றிய கூட்டு வாழ்க்கையில் தலைமைப் பொறுப்பு பெண்டிரிடம்தான் இருந்ததென்பதாகும். இதற்குச் சான்று

களாக, ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பழங்குடி மக்கள், அவர்களுடைய சமுதாயப் பழக்க வழக்கங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவர்களின் சமூக அமைப்பின் நிறுவனம் இல்லறமோ (Family) அல்லது அவற்றின் கூட்டுச்சேர்க்கையான குலமோ (tribe) அல்ல; அவற்றிலும் பெரிய, ஆனால் அவை அனைத்தையும் சேர்த்துக் கொண்ட நிறுவனமாகிய டோடம் (Totem) என்பதாகும். அந்நிறுவனத்திற்கு அடையாளமாகக் கங்காரு (Kangaroo) என்னும் விலங்கை ஏற்றுக் கொண்டனர். எனவே, அவ்விலங்கை ஏற்றுக் கொண்டுப் போற்றிவரும் மக்கள் எல்லோரும் ஓர் இனம்; அதைப் போலவே. பாம்பு, மரம் போன்றவற்றையும் ஏற்றுக் கொண்டு வழிபட்ட மக்கள் வேறு வேறு கூட்டமாகவும் வாழ்ந்தனர். அவர்களுடைய சமுதாய அமைப்பில் ஒரு முக்கியக் கோட்பாடு என்னவென்றால், திருமணம் ஒரு இனத்திலிருந்து மற்ற இனத்தினருடன்தான் நடைபெற்றன. ஆகவே, ஒரே இனத்தில் வாழ்ந்த ஆணும் பெண்ணும் மணம் புரிந்துகொள்வதில்லை; இதனைத் தடை (Taboo) என்று குறிப்பிட்டார்கள். திருமணச் சம்பிரதாயங்கள் ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்தாருடன்தான் நடந்ததென்றாலும், ஒரு பெண்ணை ஒரு ஆண் மணப்பதென்பதோ அல்லது ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்தான் கணவன் என்பதோ முறையாக நிலை பெறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது, ஏனென்றால், அவ்வித உயர்ந்த பண்பாடு-'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் வாழ்க்கையே ஏற்படாத காலம் அது. இந்நிலையில், ஆண் பெண் உறவுகளை உறுதிப் படுத்துவது பெண்ணால்தான் முடியும் என்பதும் கவனிக்கற்பாலது. எனவேதான், பெண்மக்கள் சமுதாய அலுவல்களில், அதுவும் அதிகாரம் செலுத்துவதில் முதன்மை பெற்றிருந்தனர் என்பதே தாய்வழித் தோற்றக் கொள்கையின் அடிப்படை உண்மை.

**பரிணமக் கொள்கை** (Evolutionary theory)

இதுவரை அரசின் தோற்றத்தைப் பற்றிச் சில கொள்கைகளை ஆராய்ந்தோம். ஒவ்வொரு கொள்கையிலும் சில உண்மைகள் இருக்கத்தான் செய்தன; இருந்தபோதிலும், அவைகள் தாம் முழு உண்மைகள் என்று ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், ஒவ்வொரு கொள்கையும் குறைவுகளையும் பெற்றிருக்கின்றன. ஆனாலும் அக்கொள்கைகள் யாவற்றிலும் நியாயமான கருத்துகள் எடுத்துக்காட்டப்படுகின்றன; எவ்விதம்

அரசு தோன்றியது ; அதிகாரம் தோன்றியது ; இவற்றிற்கு ஒவ்வொரு கொள்கையும், அவைகள் எழுந்த காலத்திற்கும், மக்களின் அரசியல் அறிவு நிலைக்கும் ஏற்றவாறு அரசு நிறுவனங்களையும் அவற்றின் ஆரம்ப நிலைமைகளையும் விளக்குகின்றன. இந்நிலையில் பரிணாமக் கொள்கையானது, ஓரளவு எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய விதத்தில் விளக்கம் தருவதாகக் கொள்ளப்படுகிறது. ஏனென்றால், இக்கொள்கையானது, பல சூழ்நிலைகளையும், காலங்களையும் கருத்திற்கொண்டு, அரசு நிறுவனங்களின் தோற்றத்தை விளக்குகிறது. அதன் காரணமாகவே, இக்கொள்கை வரலாற்றுக்கொள்கை (Historical Theory) என்றும் அழைக்கப்படுகிறது. இனி பரிணாமக்கொள்கையைக் காண்போம்.

மனிதனிடத்தில் ஏற்படும் அரசியல் உணர்வுகள், நல்ல முறையில் வளர்ச்சி பெற்று, நாடு, நகரம், அரசு, அமைச்சு போன்ற நிறுவனங்களைப் பெறமுடிவது, பல காலங்களில், பல இடங்களில் பல்வேறு வகையான மக்களின் வாழ்க்கைச் சேர்க்கையினால்தான். இவ்வித நிலைமை ஏற்பட வேண்டுமென்றால், பல நூறு ஆண்டுகள், ஏன், பல ஆயிரம் ஆண்டுகள் தேவைப் படும். அவ்விதம் பலப்பல நிலைமைகளில் மானிட முயற்சிகள் நடந்துகொண்டே வந்திருக்கின்றன என்பதையும் வரலாறு எடுத்துக்கூறுகிறது. உதாரணமாகப் பேராசிரியர் பர்கஸ் (J. W. Burgess) கூறுகிறார் : மனிதச் சமுதாயம் ஆதியிலிருந்த ஓர் ஒழுங்கற்ற நிலையிலிருந்து கிரமமாகவும், வேகமாகவும் முன்னேறி, அதன் காரணமாகத் தங்களிடம் அமைந்து கிடந்த உணர்வுகள் மெல்ல மெல்லப் புதுமை பெற்றுக் கடைசியாகத் தான் ஓர் ஒழுங்கான, முறையாக வளர்ச்சியடைந்த நிலைமைக்கு வரவியலும். இக்கூற்றில் அரசின் தோற்ற வரலாறு ஒருவாறு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எனவே, அரசின் தோற்றம், பல காரணங்களாலும், பல்வேறு காலங்களிலும், பல்வேறு இடங்களிலும் உண்டானவையாகும். அக்காரணங்களில் மிகவும் முக்கியமானவை: மனித உறவு (Kinship), சமயம் (Religion), போர் (War), அரசியல் உணர்வு (Political Consciousness).

பேராசிரியர் வில்ஸன் (W. Wilson) கூறுகிறார் : ஆதிகாலத்தில் குடும்பங்கள் பலவற்றிலும் ஆண்களே தலைமைப் பொறுப் பேற்றனர். எனவே தந்தை வழி ஆதிக்கம் இருந்து வந்தபோதிலும், அதையொத்த பல குடும்பங்கள், பல இனங்கள், பல இடங்களில் வாழ்ந்து வந்தமையாலும், சில இடங்களில் தாய்வழி

ஆதிக்கமும் இருக்கத்தான் செய்தன; அதற்கும் சில சான்றுகள் இருக்கின்றன. இக்கருத்தினைத் தமிழகத்தின் தலை சிறந்த கல்வியாளராகிய பேராசிரியர் இரத்தினசாமி (M. Rathnasamy) ஒப்புக்கொண்டு மேலும் கூறுகிறார்: தந்தை வழிக்கொள்கையும், தாய்வழிக் கொள்கையும் இருகோடுகள் போன்றவை; அவற்றில் தந்தைவழிக் கோடு அதிக ஆழமானதாகும் என்பதாம். இவற்றிலிருந்து ஆதிகாலத்தில், தந்தைவழி ஆதிக்கமோ அல்லது தாய்வழி ஆதிக்கமோ அரசின் தோற்றத்திற்கு அடிகோலியாக அமைந்தது எனக்கொள்ளலாம்.

ஆதிகால மக்கள் சமய உணர்வு பெற்றிருந்தனர் என்பதும் நன்கு தெரிய வருகின்றது; அதனால்தான் பழங்காலச் சமயம் (Primitive Religion) என்றும் அழைக்கப்படுகிறது. அப்போது மக்கள் கூட்டு வழிபாடு (Collective worship) செய்து வந்தனர்; அவ்வழிபாட்டில் அவர்களுடைய இறந்து போன முன்னோர்களையும்(Ancestors), இயற்கைச் சின்னங்களையும்(Natural objects) வணங்கினர். இவ்விதமாகக் குல உணர்வும், சமய உணர்வும் இணைந்திருந்தன. எனவே அரசின் தோற்றத்திற்கு, இன உறவோடு சமய உணர்வும் இணைந்து துணைபுரிந்திருக்கிறது என்பதையும் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. இந்நிலையில், பலதரப்பட்ட வழிபாடுகளைப் பெற்றிருந்த ஆதிமக்களிடம் போட்டியும் பொறாமையும் ஏற்பட்டு, சண்டை சச்சரவுகள் நடந்ததாகவும் அறியப்பெறுகிறோம்; பழங்காலத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதற்கு அநேகக் காரணங்களும், அதற்கான சூழ்நிலைகளும் இருந்தன; அவற்றைப் பற்றி ஆய்வது நம்முடைய நோக்கமல்ல. ஆனால், சண்டை சச்சரவுகள் நிரந்தரமாக ஏற்பட்டுக்கொண்டே இருந்தனவென்பது உண்மை. அதன் காரணமாக, வலியவர் மெலியவரைத் தோற்கடித்து, தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்துவதும் இயல்பாக ஏற்படும் ஒரு நிலைமையாகும். இவ்விதமான நிலைமைகள் பல விதங்களில், பல காலங்களில், பல இடங்களில் ஏற்பட்டதன் விளைவாகத்தான், அரசியல் உணர்வுகளும் வளர்ச்சி பெற்றன; வல்லமையடைந்தன. அரசியல் உணர்வுகள் வல்லமை பெற்று வாழத் தொடங்கும்போதுதான் அரசியல் வாழ்வு மலருகிறது; அரசு அமைகிறது; மக்கள் நல்வாழ்வு வாழ முடிகிறது; அவர்களின் நல்வாழ்வுக்குக் காவல் புரிகிறது சட்டதிட்டங்கள். இவ்விதமாக, மனிதன் உயர்ந்த மனிதனாக மாறுவதும் அதன் பயனாக நல்ல பல நன்மைகள் பெறுவதற்கே அரசு என்றதோர் அமைப்பினை உண்டாக்கி, அதற்குள் அடங்கி வாழும் நிலையே தற்கால மனிதனின் அரசியல் நிலையாகும்.

# 9. அரசின் குறிக்கோள்

## (Purpose of the State)

### (1) தனித்தன்மைக் கொள்கை (Individualistic View)

பொது மக்களின் நன்மைக்காகவும், உயர்வாழ்விற்காகவும் அரசு தொடர்ந்து நிலைபெறுகிறது என்ற கொள்கையை அரிஸ்டாடில் வலியுறுத்தினர் என்பதை முன்னமேயே குறிப்பிட்டோம். அதன் பிரகாரம், தனிப்பட்ட மனிதனின் உரிமைகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற கோட்பாட்டையும் அரிஸ்டாடில் வலியுறுத்தினர். ஆனால், தனித் தன்மைக் கொள்கைகள் 16ஆம் நூற்றுண்டு ஐரோப்பாவில் தோன்றியவையாகும்; அவற்றின் தன்மைகளும் நோக்கமும் வேறு அடிப்படையில் எழுந்தவை என்பதும் கவனிக்கற்பாலது. சுருங்கக்கூறின், தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அவர்களின் போக்கில் அரசு தலையிடாதிருப்பதே, அரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும்; தனிப்பட்டோர் தம்முடைய திறமைக்கேற்றவாறு வாணிகம் செய்து பொருள் திரட்டுவதற்கு மட்டுமல்லாமல், அவ்விதத் திறமைகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் அரசு விதிக்கக் கூடாது என்ற பொருளியல் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்ததே தற்காலத்துத் தனித்தன்மைக் கொள்கைகளாகும். இதற்குத் துணையாக இருந்த கோட்பாடுகளில் முக்கியமானது, தலையிடா வணிகக் கொள்கை (Laissez faire) என்பதாகும். எனவே, அரிஸ்டாடிலின் தனித்தன்மை கொள்கைக்கும், தற்காலத்துக் கொள்கைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தற்காலத்துத் தனித்தன்மைக் கொள்கையை ஆதரித்தவர்கள், ஆடம் ஸ்மித் (Adam Smith), ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill), ரூஸோ (Rousseau) போன்றோர்களாவர். இவர்

களின் கூற்றுகள் பலவற்றையும் பின்வருமாறு சுருக்கமாகக் கூற லாம்: தனிப்பட்ட மனிதனுக்காகவே அரசு இயங்க வேண்டும்; அரசுக்காகத் தனிப்பட்ட மனிதன் வாழ்வதல்ல. இக்கூற்றினை ஊன்றிக் கவனிப்போமானால், அவற்றில் முழு உண்மைகள் இல்லை என்பது நன்கு விளங்கும். அதன் காரணமாகவே இக்கொள் கைக்கு மற்றொரு பொருத்தமான பெயரும் வழங்கப் பட்டுள்ளது: முதல் பார்வைக் கொள்கை (First look theory). இக்கோட்பாட் டின்படி அரசினால் செய்யப்படும் எல்லாவிதமான பொதுப்பணி களும், தனிமனிதனுடைய திறமையை வளர்ப்பதற்கு முட்டுக் கட்டையாகத்தான் அமைகின்றனவென்பதாம். உதாரணமாகப் பெருவாரியான மக்கள் தங்கள் எளிய நிலைமைகளை மாற்றிக் கொண்டு நல்வாழ்வு பெறுவதற்குத் தேவையான பொருளுதவி அரசாங்கத்தினரே அமைத்துக் கொடுத்து விடுவதால், அம்மக் கள் தங்களுடைய திறமைகளைத் தாமே வளர்ப்பதற்கு இயலா மல் போய்விடுகிறது; இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமென் றால், மக்கள் வாழ்க்கையில் முன்னேறுவது அவர்களுடைய சொந்த முயற்சிகளினால்தான் ஏற்பட வேண்டும்; அவ்விதம் அல் லாமல் மற்றவர்களுடைய உதவியினால் முன்னேற்றமடைபவர் கள் சோம்பேறிகளே என்பதாகும். இக்கூற்று ஓரளவு உண்மை யாக இருந்தாலும், தற்காலத்திற்கு நிச்சயமாகப் பொருந்தாது என்பதை நாம் அறிவோம்; ஏனென்றால், இக்கூற்றின் அடிப்படை நோக்கம், பொருள் சேர்ப்பது ஒரு சில திறமைசாலிகளினால் தான் முடியக்கூடியது என்னும் முதலாளித்துவ (Capitalism) கோட்பாட்டைத் தழுவியதாகும் என்பதும் கவனிக்கற்பாலது.

### (2) பயன்வழிக் கொள்கை (Utilitarian View)

பயன்வழிக் கொள்கையை ஆதரித்தவர்கள் பெந்தம் (Bentham), மில் (J. S. Mill), ஆஸ்டின் (Austin) போன்றோர் களாவர். இவர்களின் பொதுவான கருத்து என்னவென்றால், பெருவாரியான மக்களுக்குப் பெரிதும் பயன் விளைவிப்பதற் காகவே (Greatest happiness of the greatest number) அரசு நிலைத்திருக்கிறது என்பதாம். ஆகவே, மக்களின் முயற்சிகள் எல்லாம் இன்பத்தை அடைவதற்காகவே; அவ்விதம் இன்பம் பெறுவதற்கே அரசு நிலைத்திருக்கிறது; அவ்வின்பத்தைப் பெரு வாரியான மக்கள் பெற்று வாழ்கிறார்களென்றால், அவ்வரசு நல்லதாக அமைந்துவிட்டதென்பதாகும். ஆகவே, அரசினை எடைபோடுவதற்கு அளவு கோலாக அமைவது ' இன்பம்

ஏனென்றால், மனிதனுடைய முயற்சிகள் யாவும் இன்பத்தைப் பின்பற்றியதாகும். இக்கூற்றின் பிரகாரம், மனிதன் ஒரு சுயநல வாதி என்ற அபிப்பிராயத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த அடிப்படையில்தான் பயன்வழிக் கொள்கையும், தனித் தன்மைக் கொள்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் (Two sides of a coin) என்றும் கூறப்பட்டுள்ளன.

தனி மனிதனோ அல்லது மக்களின் கூட்டுத் தொகையோ இன்பம் அடைவதைத்தான் இலட்சியமாகக் கொண்டிருந்தாலும், அரசு எவ்விதம் இன்பத்தை உற்பத்தி செய்ய முடியும்? முடியாத தாகும். ஏனென்றால், இன்பம் பெறுவது மனிதனின் உள்ளத் தின் நிலையைப் பொறுத்தது. எனவே, மனிதன் இன்பம் பெறு வதற்குத் தேவையான சூழ்நிலைகளைத்தான் அரசு அமைத்துக் கொடுக்க முடியுமேயொழிய, அரசே இன்பத்தை உற்பத்தி செய்ய முடியாது! அவர்களின் கூற்றின் மூலமாக, மக்களுக்கு அரசின் கடமையைச் சுட்டிக் காட்டுகிறார்கள் என்றே கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில்தான் பேராசிரியர் லாஸ்கி (J. Laski) கூறுகிறார்: சமூக நலன் (Social good) அடைவதையே அரசு தன்னுடைய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்; அதற் கான சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கவேண்டும். அதற்காக மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும்; அதனைப் பயன் படுத்தி மக்கள் தங்களின் உயர்ந்த விருப்பங்களைப் பூர்த்திசெய்து கொண்டு பயனடைவர். பேராசிரியர் லாஸ்கியின் சீரிய கருத் திலும், பயனடைவதென்பது மனிதனிடம்தான் இருக்கிறது; அரசு பயனடையத்தான் செய்ய முடியும் என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நிலையில் சமூக நலன் அடைவதற் காக, அரசு நல்ல பல சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண் டும்; அதனைப் பயன்படுத்த மக்களுக்கு உரிமைகளும் வழங்கப் படவேண்டும் என்பன போன்ற கருத்துகள், முக்கியமாக அரசியல் வல்லுநர்கள் நன்கு கவனிக்கத்தக்கவை.

### (3) கற்பனைக் கொள்கை (Idealistic Theory)

தனித்தன்மைக் கொள்கையும், பயன்வழிக் கொள்கை யும் தாம் கொண்ட கருத்துகளை அடைவதற்கு ஒரு சாதனமாகத் (Instrument)தான் அரசு அமையவேண்டுமென்று வலியுறுத்தின. ஆனால், கற்பனைக் கொள்கையோ இதற்கு எதிரிடையான கருத் துடையதாகும். அரசு என்பதே இறுதி (End). எனவே, அதற்கு உகந்த முறையில்தான் மனிதனும் மற்றப் பல நிறுவனங்களும்

அமைய வேண்டுமென்பது கற்பனைக் கொள்கையின் அடிப்படை அம்சமாகும். இக்கொள்கையை ஆதரித்தவர்கள் : போசங்கே (Bosanquet), கிரீன் (T. H. Green), காண்ட் (Kant), ஏகல் (Hegel) என்போராவர். இவர்கள் எல்லோரும் பிளேட்டோவின் கருத்துகளை மதித்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

மனிதன் சுயநலவாதி; அவனுடைய சிந்தனையும் தன்நல விருப்பு வெறுப்புகளால் தூண்டப்படுவதால், எப்பொழுதும் செம்மையாகச் சிந்திக்க முடிவதில்லை; எனவே, தான் கண்ட முடிவுகள் என்று சொல்லிக் கொள்வதிலும் உண்மைகள் இருப்பதில்லை. அவ்விதம் எடுத்துக் கூறும் முடிவுகளும் நிரந்தரமானவை அல்ல; ஏனென்றால், சுயநலம் மனிதனைச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறவும், முன்பு தாம் கூறியதையே, தமக்குப் பயன்படாதென்றால், பின்பு அதனை மறுக்கவும் தூண்டி விடுகிறது. ஆனால், அரசு என்பது மேலே கூறப்பெற்ற எல்லாவிதமான குறுகிய நோக்கங்களிலிருந்தும் விருப்பு வெறுப்புகளிலிருந்தும் நீங்கி நிற்பதாகும். அரசு என்பது மக்கள் எல்லோருக்கும் பொதுவாக உள்ளது; அதன் சிந்தனை, பொது நோக்குடையது; சீரியது, செம்மையானது, நிரந்தரமானதும் ஆகும். இவ்விதமான கருத்துகளைக் கற்பனைக்கொள்கை ஆதரிப்பதாகும். முக்கியமாக ஏகல் என்பார், கற்பனைத்திறனை மட்டும் பெறவில்லை; கவிதைத் திறனையும் பெற்றவர் என்பதைச் சுட்டிக் காட்டும் அவருடைய கூற்றைக் கவனிப்போம் : அரசின் குரல் அறிவின் குரலாகும்; மக்கள் அக்குரலின்படி நடப்பதே அவர்களுடைய கடமையாகும். மேலும் ஏகல் கூறுகிறார் : அரசே மக்கள் வரலாற்றில் நடமாடும் தெய்வமாகும் (The State is the march of God in history).

கற்பனைக் கொள்கையானது அரசை ஒரு மாபெரும் மரத்திற்கும், மக்களை அம்மரத்தின் இலைகளுக்கும் ஒப்புமை காட்டுகிறது. அதன் மூலமாக, மரம் எப்பொழுதும் நிலைத்து நின்று வாழ்கிறது; ஆனால் பருவங்களுக்கேற்ப இலைகள் வளருகின்றன, உதிர்கின்றன; அதைப் போலவே, மக்கள் வருவர்; மக்கள் போவர்; ஆனால் அரசு என்றும் நிலைத்திருக்கும். இவ்விதமான கருத்துகள் தாம் 19ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய சர்வாதிகார ஆட்சிகளும் அதன் பிரிவுகளாகிய நாஜிஸம் (Nazism), பாஸிஸம் (Facism) போன்ற அரசியல் அமைப்புகளையும் ஊக்குவித்தது எனலாம். அந்தோ! அக்கோட்பாடுகளின் கதி என்னவாயிற்று என்பதையும் தற்கால வரலாறு நன்கு தெரிவிக்கிறது. அரசு என்பதே மக்களின்

நன்மைக்கும் நல்வாழ்வுக்கும்தான் என்ற குறிக்கோளைச் சில காலம் மறுக்கவும் சில காலம் மாற்றவும் செய்யலாம்; ஆனால் உண்மையை என்றைக்கும் மறைக்க முடியாது என்பது 20ஆம் நூற்றாண்டில் நாம் காணும் அரசியல் காட்சிகளாகும். அதனை நிருபிக்கும் முறையில்தான் சமூகப் பொதுவுடைமைக் கொள்கைகள் தோன்றி வளர்ந்து தற்காலத்தில் வல்லமை பெற்று விட்டதென்பதையும் நாம் அறிவோம்.

## (4) சமூகப் பொதுவுடைமைக் கொள்கை (Socialistic View)

பொதுவுடைமை (Communism) என்பதை விடச் சமூகப் பொதுவுடைமை (Socialism) என்ற சொல் தரமான ஆங்கிலச் சொல்லாகும் என்று பெர்னாட்ஷா (Bernard Shaw) கூறினார். குறிப்பளவில் குறுகியதாயினும், பொருளளவில், இது மிகவும் ஆழமான கூற்றாகும். ஏனென்றால், பொதுவுடைமைக் கொள்கைக்கும், சமூகப் பொதுவுடைமைக் கொள்கைக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது பொதுவுடைமை வெளியீடு (Communist Manifesto). இதனை 1848இல் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) என்ற ஜெர்மானியச் சிந்தனையாளர் வெளியிட்டார். இவருடைய காலம் 1818-1883. இவருடைய கொள்கைகள் உலகப் பிரசித்தமானவை; பல தரப்பட்ட விளக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்தவை. அவற்றின் முக்கியத்துவம் பின்பு விரிவாக விளக்கப்படும். கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமை வெளியீட்டில் காணப்படும் நான்கு கோட்பாடுகள் பின்வருவனவாகும்: 1. மானிட வரலாற்றையே பொருளியல் நோக்கில் விளக்குவது (Materialistic interpretation of history); 2. முதலாளித்துவம், தொழிலாளித்துவம் ஆகிய இருபெரும் வகுப்புகளிடையே உள்ள பிணக்குகள் (Class war); 3. மிகுதி மதிப்பீடு (Surplus value); 4. புரட்சியும், தொழிலாளித்துவத்தின் வெற்றியும், அவர்களின் ஆட்சியும் (Revolution and the establishment of proletariat government). இந்நான்கு கோட்பாடுகள் எந்த முறையில் பயன்படுத்தப் படுகின்றன என்பது மிகவும் முக்கியம். ஏனென்றால், புரட்சி போன்ற வன்முறைகளைப் பயன்படுத்தித் தங்களுடைய குறிக்கோளை அடைவது பொதுவுடைமையாகும். ஆனால், சமுதாயத்தை நிலைநிறுத்தி, சட்டதிட்டங்களை மதித்து அவற்றின் பிரகாரம் தன்னுடைய குறிக்கோளை அடைவது சமூகப் பொதுவுடைமையாகும்.

இவ்விரு தரப்பின் கோட்பாடுகள் இன்னும் வேறுவிதமான விளக்கங்களும் பெற்றிருக்கின்றன ; அவையாவும் பின்பு விரிவாக விளக்கப்படும். சட்டதிட்டங்கள், சமுதாய நிறுவனங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அவற்றின் மூலமாகச் சமுதாயத்தில் உண்டு பண்ணும் மாற்றங்களைக் கொண்டதே சமூகப் பொதுவுடமைக் கொள்கை. இக்கொள்கையினை விளக்குவதே நம் நோக்கமும் ஆகும்.

சமூகப் பொதுவுடைமை ஓர் அரசியல் கோட்பாடு என்று கூறுவதைவிட, பொருளியல் கோட்பாடு என்று கூறுவதே மிகவும் பொருந்தும். ஏனென்றால், சமூகத்தில் உள்ள வறுமையை விரட்டுவதும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், மக்களிடையே நிலவி நிற்கும் வேற்றுமைகளையும், பிணக்குகளையும் ஒழித்துக் கட்டுவதும்தான் சமூகப் பொது உடைமையின் இலட்சியமாகும். இந்த உயரிய இலட்சியத்திற்குத் தடையாக உள்ளது ஏகபோக முதலாளித்துவமும் அதன் தீமைகளுமாகும். அத்தீமைகளாவன : உழைப்பாளர்களுக்குத் தரப்படும் சம்பள முறை (Wage system); அவர்களின் சமநிலையற்ற வருவாய் (Unequel income) ; அதில் காணும் அநீதிகள் போன்றவையாகும். இவையாவும், முதலாளித்துவம் ஏற்படுத்திக்கொண்ட, தங்களுக்கே சாதகமான ஒரு சமுதாய அமைப்பு. இதனை மாற்றினால்தான் உழைப்பாளிகள் உய்வர்; அதன் காரணமாக மக்களே பயன் அடைவர் என்பது சமூகப் பொதுவுடைமைக் கொள்கையாகும். இவ்விதமான விளக்கங்களும், அதன் கோட்பாடுகளும் முற்றிலும் சரியானதா என்ற கேள்விக்கு உடனே பதில் அளிக்க நான் விரும்பவில்லை. மேலும் இக் கோட்பாடுகள் உழைப்பாளிக் கூட்டத்திற்கே நன்மை பயப்பதாக அமைந்துள்ளதால், நிச்சயமாக முதலாளிக் கூட்டத்தினருக்கே எதிர்ப்பாகத்தான் அமையும். அதன் காரணமாகத்தான், காலச் சுழற்சியில், அக் கோட்பாடுகளிலிருந்து வேறு பல கருத்துகளும், அவற்றின் விமரிசனங்களும் தோன்றி இருக்கின்றன. அவை பின்பு விரிவாக விளக்கப்படும்.

சமூகப் பொதுவுடைமைக் கொள்கை முக்கியமாக விரும்புவது சமூகத்தின் பொருளாதார வாய்ப்பினை எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டுமென்பதே. இதற்காகவே பொருள் உற்பத்தி (Production), பங்கீடு (Distribution) போன்ற நிறுவனங்களைப் பொதுவுடைமை ஆக்கி அதன் மூலமாகத் தன்னுடைய குறிக்கோளைப் பெறுவதற்கு முனைகிறது.

ஆனால் அம்முயற்சியில் தனிப்பட்ட மனிதனின் முயற்சிகளுக்கே இடமில்லாமல் போய்விடுகிறது என்பதையும் கவனிக்கவேண்டும். மேலும், இக் கொள்கையின் பிரதான நோக்கம் பொருளியல் பிரச்சினைகளைப் பற்றியதே. மனித வாழ்வுக்குப் பொருளாதாரத்தைத் தவிர வேறு எந்தவிதமான அவசியங்களும் இல்லை என்றோ, தேவையில்லை என்றோ கூறுவது உண்மைக்குப் புறம்பாகும். மேலும், மக்களினத்தை, முதலாளிகள், தொழிலாளிகள் என்ற இரண்டே இரண்டு பிரிவுகளாக நோக்குவது, மேல்வாரியான நோக்கில் மக்களை எடைபோடுவதாகும். அதிலும் பொருள் (Capital) வைத்திருப்போர் எல்லோரையும் முதலாளிகள் என்று கூறுவதும், மற்றெல்லோரையும் உழைப்பாளிகள் என்று அழைப்பதும் உண்மையாகாது. இவற்றைத் தவிர, பொருளியல் வல்லுநர்களே ஒப்புக்கொள்ளும், பொருளியல் கோட்பாடுகளாகிய கிடைப்பும் தேவையும் (Supply and demand), போட்டி (Campetition) போன்றவைகளை எல்லாம், சமூகப் பொதுவுடைமைக் கொள்கை, ஆய்ந்ததாகவோ அல்லது ஒப்புக்கொண்டதாகவோ தெரியவில்லை. ஆட்சிப் பொறுப்பும், அதிகாரமும் உழைப்பாளிகளின் கைகளில் அமைய வேண்டுமென்ற கருத்தும் ஆய்வுக்குரிய பிரச்சினை என்பதையும் வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், அதிகாரம் பொதுவாக யாரையும் ஆட்டிவைக்கும் சக்தி வாய்ந்தது; அதுவும் உழைப்பாளிகளின் கையில் சிக்கும்போது, அவர்கள் மட்டும் மனித இயல்புக்கு விதிவிலக்கல்ல; இருந்தபோதிலும் சமூகப் பொதுவுடைமைக் கொள்கை ஏற்படுத்த முற்படும் சமத்துவச் சமுதாயம் மிகவும் சிறப்பான சமுதாய அமைப்பாகும்; கடினமானதும் ஆகும். அவ்விதச் சமுதாயம் ஏற்பட்டுவிட்டால் மனிதக் குலமே மகிழ்ச்சியடையும்; பெருமையும் உண்டாகும். இவ்விதமாகக் கூறுவது வெறும் புகழ்ச்சியன்று; ஏனென்றால், இக் கூற்றுக்கு ஓரளவு உருவம் அமைத்துக்கொடுப்பதுபோல் தற்காலத்து ரஷிய நாடு விளங்குகிறது. அதனால்தான் இந்தியாவின் பெருமகனார் பண்டித ஜவாஹர், ரஷிய மக்களின் சாதனையைக் கண்ணுற்று வியந்தார்; பெருமிதம் கொண்டார்; பாராட்டிப் புகழ்ந்தார்: 'மனித வரலாற்றிலேயே காணப்படாத ஒரு புதுமையான சாதனை, ரஷிய மக்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள பொதுவுடைமைச் சமுதாயமாகும்'.

# 10. அரசாங்கத்தின் வகைகள்

## (Forms of Government)

### (1) முடியாட்சி (Monarchy)

அரசாங்கத்தின் வகையைப் பற்றிக் குறிப்பிடும் போது கார்ல் ப்ரடெரிக் கெயிஸர் (Karl Frederick Geiser) நான்கு விதமான அமைப்புகளையே சுட்டிக்காட்டுகிருர் ; மற்ற அமைப்புகள் இருந்தாலும் அவையும் இந்நான்கினுள் அடங்கும் என்பதே அவருடைய அபிப்பிராயம். பழமைக்காலங்களிலும், மத்திய காலங்களிலும், ஏன் தற்காலத்திலும்கூட சில நாடுகளில், முடியாட்சிதான் நிலவியது, இன்றும் நிலவுகிறது. முடியாட்சியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பிளேடோ, அரிஸ்டாடில் ஆகியோரும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளனர். தெய்வீக உரிமைக்கொள்கை, வலிமைக் கொள்கை போன்றவையும் முடியாட்சியையே வலியுறுத்துவனவாகும். தந்தை வழித் தோற்றக் கொள்கை, தாய் வழித்தோற்றக் கொள்கை முதலியனவும் அரசரின் அல்லது அரசியின் ஆட்சியையே ஆதரிக்கின்றன. இவ்விதமாகப் பலதரப்பிலிருந்தும் ஆதரவுகள் பெற்று விளங்கும் முடியாட்சியின் முக்கியத்துவம் என்னவென்பதைச் சுருக்கமாகக் கீழ்வருமாறு விவரிப்போம்.

(1) மன்னர்களில் பலர் தங்களது விருப்பம்போல் சர்வாதிகார ஆட்சி (despotic rule) செலுத்தினர்; ஆனல் மக்களுக்கு நன்மை புரியும் விருப்பமுடையவர்களாகவே (benevolent) செயல் பட்டனர்.

(2) மக்களை ஒன்று சேர்த்தார்கள் ; நாடு நகரங்களை அமைத்தார்கள்.

(3) அல்லல்படும் மக்களைத் துயரத்திலிருந்து நீக்கினர் ; தங்களது வல்லமையினல், அண்டை நாடுகளையும் தம் வசப்படுத்தினர்.

(4) அதிகாரத்தைப் பயன்படுத்திச் சமுதாயத்திலே சட்ட திட்டங்களை உண்டு பண்ணினார்கள்; கலை, கோயில் முதலிய நிறுவனங்களையும் அமைத்தார்கள்.

(5) மன்னர்களின் சந்ததியார்களே பரம்பரையாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தனர்; எனவே நிருவாகம் நேர்மையாகவும், நிரந்தரமாகவும் நடைபெற்றது; மக்கள் அமைதியான இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

மேற்குறிப்பிட்ட பண்பாடுகளெல்லாம் முடியாட்சியைச் சார்ந்தனவாகும். அவ்விதம் தொன்றுதொட்டு முடியாட்சியையே போற்றி ஏற்றுவந்த நாடுகள் இந்தியா, சீனு, பாரசீகம், ஆப்கனிஸ்தான், கிரீஸ், ரோம், பிரிட்டன், ஜப்பான் போன்றவையாகும். பழங்காலத்துச் சிறப்புப் பெற்ற இந்நாடுகளில் மன்னர்கள் மக்களுக்காகத்தான் வாழ்ந்தனர்; குறிப்பாக இந்தியாவில், மன்னனை மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்; ஏனென்றால், மன்னன் அறத்தின் அடிப்படையில் அரசாட்சி செலுத்தினான். இக்கூற்றை நிருபிக்க அநேக நீதி நூல்கள் ஏற்பட்டன. அவற்றில் முக்கியமானவை தரும சாத்திரங்களும் (Dharma Sastras), திருக்குறளும் (Tirukkural) ஆகும். இருந்த போதிலும், காலச்சுழற்சியில், மன்னர்களின் மனிதத் தன்மை மாறவும், அரசாட்சிகளும் கைமாறின. மன்னர் ஆட்சியில், அவருக்கு அடுத்த நிலையில் இருந்துகொண்டு அரசாங்கத்தின் நிருவாகங்களுக்குத் தேவையான ஆலோசனை கூறி வந்த உயர்குடி மக்களே (Noble men) ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர் என்று கூறினால் அது ஒரு சுருக்கமான ஆனால் உண்மையான விளக்கமாகும்.

## (2) உயர்குடியாட்சி (Aristocracy)

உயர்குடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி என்றும் கூறப்படும்; சிறந்த மக்களால் நடத்தப்படுவதாகக் கூறப்படும் அரசாட்சியாகும். சிறந்த மக்கள் என்று குறிப்பிடும்போது, அவர்கள் எந்த விதங்களில் சிறந்தவர் என்பதில் பல விதமான அபிப்பிராயங்கள் தொன்றுதொட்டு ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. பொதுவாகக் கூறுவோமாகில், அச்சிறந்தவர் என்போர், பண்பாட்டிலும், வயதிலும், பொருள் உடைமையிலும், அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவர்களாக விளங்கியுள்ளனர். அதன் காரணமாகவே, முடியாட்சியிலும் இம்மக்கள் அரசனுக்கு அறிவுரைகள் கூறுவதுடன் அமைந்தனர்; அவ்வுரைகளை

ஆய்ந்து முடிவு எடுத்துச் செயல்படுத்துவது அரசரின் தலைமையுரிமையாக இருந்தது. ஆனால், இம்மக்களே அரசாட்சியின் பொறுப்பை ஏற்கும்போது, முடிவு எடுத்துச் செயல்படுத்தும் நிலையில்தான் சிக்கு ஏற்படுகிறது. ஏனென்றால், அதிகாரம் ஒருவர் – அரசர் - கைமாறிப் பலரிடம் - உயர் குடி மக்கள்-வந்தமைகிறது; பலரில் யார் அதிகாரம் செலுத்துவது என்ற பிரச்சினை மிகவும் சுலபமாக எழக் கூடியதொன்றாகும். இப்பிரச்சினையே ஒருவிதத்தில் இவ்வாட்சியின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைகிறது என்பதும் கவனிக்கற்பாலது. மேலும், உயர் குடி மக்கள் தங்களைப் பொது மக்களிடமிருந்து பிரித்துக் கொள்வர்; அதன் காரணமாகப் பொது மக்களின் இன்றியமையாத் தேவைகளைச் சுலபமாக அங்கீகரிக்க மாட்டார்கள். இதன் விளைவு என்னவாகும் என்றால், உயர்குடியாட்சி, ஒரு சிறு குழு ஆட்சி (Oligarchy) யாக மாறிவிடுகிறது. இவ்விதக் கருத்துகளைப் பேராசிரியர் போமென் (E. F. Bowman), தன்னுடைய 'அரசியலுக்கு ஓர் அறிமுகம்' என்னும் நூலில் மிகவும் தெளிவாக விளக்கிக் கூறுகிறார்.

பேராசிரியர் ப்ளன்ட்சிலி (Bluntschli) என்பார், உயர் குடி ஆட்சியில் ஏற்படும் ஒரு முக்கியமான தன்மையையும், எவ்விதம் அத்தன்மையே அவ்வாட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறார். உயர்குடி மக்கள் அல்லது பிரபுக்கள் தாம் கொண்ட கருத்துகளையே பற்றி நிற்பர்; அதன் பிரகாரமே ஆட்சியும் நடத்த முற்படுவர். இதனால் ஒருவித நெகிழாத்தன்மை (inflexibility) ஆட்சி முறையில் ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால், மக்கள் சமுதாயம் வளரும் தன்மைபெற்றது; புதிய சிந்தனைகளும், கருத்துகளும் ஏற்படுவதன் வாயிலாக, மக்களின் விருப்பு வெறுப்புகளும் மாறுகின்றன. இவ்விதச் சமூக மாறுதல்களை அரசாங்கம் ஓரளவு பிரதிபலிக்க வேண்டும். ஆனால், உயர் குடியாட்சி, இம்மாறுதல்களை மதிப்பதுமில்லை; ஆட்சிப் பீடத்திலிருந்து அகலுவதற்கும் தாம் விரும்புவதில்லை. அதன் விளைவு என்னவாகிறதென்றால், பிரபுக்கள் ஆட்சியானது கொடுங்கோலாட்சியாக மாறுகிறது. அவ்வித ஆட்சியை நீக்குவதற்கு மக்கள் புரட்சி (Revolution) செய்ய வேண்டியிருக்கிறது; அதன் காரணமாக மக்களிடத்திலே ஒற்றுமை உணர்வும், நாட்டுப் பற்றும் வளரத்தொடங்குகின்றன. இவ்வுணர்வுகள், கொடுங்கோல் ஆட்சியில் அமுங்கிக் கிடந்து, மக்கள் ஆட்சியில் மலருகின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

## (3) கொடுங்கோல் ஆட்சி (Tyranny)

கொடுங்கோலாட்சி என்னவென்பதைப் பற்றி விவரிக்க முற்படுவதால், இவ்வாட்சியில் நான் விருப்பங் கொண்டவன் என்று வாசகர்கள் நினைத்துவிடக் கூடாது; அதைப் போலவே, இவ்வாட்சியைப் பற்றி வாசகர்கள் தெரிந்து கொள்ளும்போது இதனை விரும்பி ஏற்றுக்கொள்வார்களென்றும் பொருளல்ல. 'களவும் கற்று மற' என்ற தமிழ்க் கூற்றுக்கு ஒவ்வ, கொடுங் கோலாட்சி எப்படிப்பட்டது என்பதையும் நாம் அறியமுற்படு கிறோம். மனித வரலாற்றிலே கொடுங்கோல் ஆட்சி பல சந்தர்ப் பங்களில் ஏற்பட்டிருக்கின்றன; அதனால் சில நன்மைகளும் அக்காலச் சூழ்நிலைகளுக்கேற்ப உண்டாகியும் இருக்கின்றன. ஆனால் இவ்வாட்சியை நாம் அணுகும் முறை வேறுவிதமானது: பிரபுக்கள் ஆட்சி, சிக்குகளை அதிகரித்துக் கொள்ளும்போது, அங்கே கொடுங்கோல் ஆட்சி தோன்றுகிறது என்பது முன்பே சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாட்சியில் நன்மைகளும் இருக்கத் தான் செய்கின்றன; ஆனால் அவையாவும், ஒரு சிலரையே போய்ச் சேர்கின்றன; ஆட்சியில் இருப்பவர்களுக்கு மட்டுமோ அல்லது அவர்களுடைய உறவினர்களுக்கோ போய்ச்சேர்கின் றன. அதற்குமேல் எந்தவிதமான நன்மைகளும் யாரையும் போய்ச் சேருவதில்லை. இந்நிலைமையில், மக்களிடம் அமைதி யின்மையும், கொந்தளிப்பும் அதிகரிக்கின்றன; இச்சூழ்நிலை சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதற்குச் சாதகமாகிறது; உதாரண மாக இராணுவத்தினர் ஆட்சியை ஏற்றுக்கொண்டு நடத்தலாம். ஆனால் அவ்வித அரசியல் அமைப்பும் மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்துவிட முடியாது. எனவேதான், மக்கள் ஒன்று பட்டு, கிளர்ச்சிகளை உண்டாக்குகின்றனர். கலவரமும் குழப்ப மும் ஏற்பட்டு, சட்டதிட்டங்கள் நசுக்கப்பட்டுக் கடைசியாக ஆட்சிப் பீடம், மக்கள் கையில் சிக்குகிறது. எவ்விதம் மக்கள் ஆட்சி நடைபெறும் என்பதைப் பற்றி, நாம் ஐயம் கொள்ளத் தேவையில்லை; ஏனென்றால் சுமார் கால் நூற்றாண்டாக, அவ் வாட்சியினைப்பெற்று, உலக மக்களிடையே பெருமையுடன் வாழும் இந்தியராகிய நாம், மக்களாட்சியைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டியது அவசியமும், கடமையுமாகும்.

## (4) மக்கள் ஆட்சி (Democracy)

மக்கள் ஆட்சி என்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சி, மக்களின் நன்மைக்காகவே நடைபெறும் ஆட்சி என்று ஒரு

பொதுவான அபிப்பிராயம் தற்காலத்தில் நிலவுகிறது. அவ்வித அரசியல் அமைப்பு, தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தாலும், இவ்வாட்சியின் தன்மைகளைப் பற்றிய விளக்கங்கள் பண்டைக் கிரேக்க வாழ்வில் அமைந்திருந்ததாக வரலாறு கூறுகிறது. பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோர் மக்களாட்சியைப்பற்றி விவரித்துள்ளனர். ஆனால் அப்பெரியோர்கள் குறிப்பிட்ட மக்கள் ஆட்சிக்கும், தற்காலத்தில் நம்மிடையே செயல்பட்டுவரும் மக்களாட்சிக்கும் வேறுபாடுகள் உண்டு என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். ஏனென்றால், தற்கால மக்களாட்சியின் தன்மைகளும், அதன் மகத்தான வளர்ச்சியும் ஓரளவு பிரிட்டனைத் (Britain) தழுவியதாகும். பாராளுமன்ற ஆட்சியைக் கொண்ட ((Parliamentary Rule) பிரிட்டனைப் பின்பற்றியே, மற்றப் பல நாடுகளும், மக்களாட்சி என்ற அமைப்பின்மீது தங்களுடைய சொந்த அரசியல் முறைகளை இணைத்துக் கொண்டுள்ளன. அதனைப் பாராளுமன்ற மக்களாட்சி (Parliamentary Democracy) என்று குறிப்பிடுவர். எனினும், இவ்விதக் கோட்பாடுகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர்கள் ஆங்கிலேயர்கள்தான் என்பதை அரசியல் வல்லுநர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அதன் காரணமாகத்தான் பிரிட்டனைப் 'பாராளுமன்றங்களின் தாய்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

மேலும், தற்காலத்தில் மக்களாட்சி முறையில் இயங்கும் பெரும்பாலான நாடுகள், பிரிட்டனின் ஆட்சி முறையைப் பின்பற்றித் தங்களது அரசியல் அமைப்பினையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன என்பதும் கவனிக்கற்பாலது. ஆங்கிலேய அரசியல் அமைப்பின் நான்கு முக்கிய அம்சங்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

I. அரசர் அல்லது அரசியார் (King or Queen).

II. அமைச்சரவை (Ministry).

III. பாராளுமன்றம் (இருபிரிவுகள்) Parliament.

பொது மக்கள் மன்றம் (House of Commons). பிரபுக்கள் மன்றம் (House of Lords).

IV. நீதி அமைப்பு (Judiciary).

இந்நான்கு நிறுவனங்களையும், ஒரு சில வேறுபாடுகளுடன் பல நாடுகள் பின்பற்றுகின்றன. உதாரணமாக, இந்தியாவில், பிரிட்டனின் முதலாவது நிறுவனமாகிய அரசியாருக்குப்

பதிலாக, ஜனாதிபதி (President) இருக்கிறார். மற்றபடி, இந்தியாவின் அரசியல் அமைப்பு ஓரளவு பிரிட்டனைத் தழுவி அமைந்துள்ளது எனக் கூறலாம். அரசருக்குப் பதிலாக ஒரு குடியரசுத் தலைவரை மற்ற நாடுகளும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன.

**மக்களாட்சியின் நன்மைகள்**

மக்கள் ஆட்சியில் ஒவ்வொரு மனிதனின் முழு உரிமைகளும் நன்கு வரையறுக்கப்படுகின்றன; அதனால் மனிதத் தன்மை (Human dignity) முழு அளவில் வளர்ச்சி பெற்று வாழ்க்கையின் பயனை அடைய முடிகிறது. இந்நிலையில், சமத்துவம் என்னும் சமுதாயக் கோட்பாடும், மக்களின் ஒற்றுமையை வளரச் செய்வதற்குத் துணைபுரிகிறது. இச்சூழ்நிலையானது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய திறமைகளை வெளியிடுவதற்குத் துணைபுரிகிறது என்று பேராசிரியர் பர்ன்ஸ் (C. D. Burns) கூறுகிறார். மக்களாட்சியில் ஏற்படும் சமுதாய வாழ்க்கை ஒரு சமய வாழ்வைப் போன்றது; ஏனென்றால், ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தில் இயல்பாகவே உள்ள திறமைகளைச் சமத்துவ அடிப்படையில் வெளியிடுவதற்கும், அதன் காரணமாகத் தோன்றும் வேற்றுமைகளையும் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் அனுசரித்து ஒற்றுமையாக வாழும் ஓர் உன்னதமான வாழ்க்கையாக அமைகிறது என்ற கருத்தினைச் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் ஸ்மித் (Smith). இவ்வித அரிய சமுதாயச் சூழ்நிலைகளைத் தவிர, மக்களாட்சியினால், பல உயர்ந்த உணர்வுகளும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏற்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைக் கீழே குறிப்பிடலாம்: முன்னெச்சரிக்கைக் காரணம் (Precautionary reason). இதன் மூலமாக, ஒவ்வொரு மனிதனும், குறைவுகளையும் நிறைவுகளையும் பெற்றிருந்தாலும், ஒரு குடிமகனாகக் கருதப்பட்டு, நல்வாழ்வு வாழ்வதற்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. அவர்களுடைய நம்பிக்கைகளும், குறிக்கோளும் வெற்றி அடைவது நிச்சயம் என்ற உறுதியும் அளிக்கப்படுகிறது. இதன் காரணமாக, மக்களிடையே எந்த விதமான அதிருப்தியோ அவநம்பிக்கையோ ஏற்பட வழியில்லாமல் போகிறது. உளவியல் காரணம் (Psychological reason) — இதனால் ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கும்பொழுது, சமூகத்தைப் பற்றியே சிந்திக்க முற்படுகிறான்; தன்நலம் குறைந்து விடுகிறது. ஆட்சியில் இருப்பவர்கள் நம்மவர் என்ற நினைவு மேலோங்கி நிற்கிறது. அதனால் ஆட்சியாளருடன் முழுமனத்துடன் ஒத்துழைக்கிறான்; மக்களெல்லாரும் அரசியலில் பங்கு கொள்கின்றனர். மேலும் அரசாங்கத்தினரால் நடத்தப்படும் எல்லா

விதத் திட்டங்களும், பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவதால், அதுவே மக்களுக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது. தங்கள் ஆட்சியில் ஏற்படும் ஒவ்வொரு திட்டங்களின் வெற்றிகளைத் தெரிந்து கொண்டு, மக்களெல்லோரும் பெருமையடைகின்றனர்; ஒன்றுபட்டு இன்பமடைகின்றனர். இந்நிலையில் தோன்றும் உயர்ந்த சமூகப் பண்பாடுகளின் காரணமாக, வகுப்புவாத உணர்வுகள், எளியவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகள் யாவும் மறையத் தொடங்குகின்றன. இவ்விதமாக, எல்லோரும் தங்கள் வாழ்வின் தேவைகளைப் பெற்று, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடை போடுகின்றனர்.

### மக்கள் ஆட்சியின் தீமைகள்

மக்களின் நன்மைக்காகவே மக்களாட்சி என்று கூறப்பட்டாலும் அவ்வாட்சியினால், மக்கள் எல்லோரும் நன்மைகளைப் பெறவில்லை என்பதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஏனென்றால், மக்கள் ஆட்சி என்பது பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகளே ஆட்சி புரிவதால், சிறுபான்மையாரின் பிரதிநிதிகளின் நியாயமான கருத்துகளும் நசுக்கப்பட்டு விடுகின்றன. இதனால், பொறுப்பற்றவர்களின் கையில் ஆட்சியானது சிக்குண்டு பரிதவிக்கிறது; மக்களும் தங்களது உரிமைகளை நன்கு பயன்படுத்துவதில்லை. முக்கியமாகத் தேர்தல் சமயங்களில் மக்கள் அதிகக் கவனம் செலுத்துவதில்லை; யாரைத் தம்முடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றியோ அல்லது எவ்விதம் தங்களது உரிமைகள் முக்கியமானது என்பதைப் பற்றியோ சிந்திப்பதில்லை. இந்நிலையில், பலவிதக்கட்சிகள், மக்களின் எண்ணங்களைத் தெளிவுபடுத்துவதற்குப் பதிலாகக் குழப்பங்களைத்தான் விளைவிக்கின்றன; ஏனென்றால், ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு விதமான பிரச்சாரத்தைப் புரிய முனைகிறது; அதில் தன் நலம் ஓங்கி நிற்கிறது. மக்களின் பிரதிநிதிகளும் சரியான முறையில் தெரிந்து கொள்ளாமல் தேர்ந்தெடுக்கப்படுவதால், அத்தகையவர் அரசியலில் பொறுப்பான பதவிகளை நல்ல முறையில் பயன்படுத்த முடிவதில்லை. அதன் காரணமாக, அரசியல் நடவடிக்கைகளும், நிறுவனங்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன என்ற கருத்தினை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் பிரெஞ்சு அரசியல் மேதை ஃபாகாட் (Faguet) என்பார். மக்களும் நிலையிழந்து, கொள்கைகளில் உறுதியற்றவர்களாகவும், கோட்பாடுகளின்படி நடக்க இயலாதவர்களாகிவிடுகின்றனர். இக்கருத்தினை மிகவும் சுவையான முறையில் சுட்டிக்காட்டு

கிறுர் பேராசிரியர் மாக்ஸே (Maxey). யார் வேண்டுமானுலும் எந்தப்பொறுப்பிலும் அமரலாம் என்னும் கருத்து மக்களாட்சியில் மலிந்து காணப்படுகிறது; ஆனல், இது ஒரு தவறுன அபிப் பிராயமாகும் என்று மேலும் எடுத்துக் கூறுகிறுர் ஃபாகாட்; இக்குறைவுக்கு அவர் ஒரு பெயரே சூட்டுகிறுர்: உயிர் இயல் பொருந்தாமை (Biological Misfit). ஏனென்ருல், மனித உடம்பில் உள்ள ஒவ்வொரு அவயவங்களும் ஒவ்வொரு வேலை செய் வதற்கும், அவை அனைத்தையும், நரம்பு மண்டலத்தின் மூலமாக ஒன்றிணைத்து, அதனை மூளை (Brain) கட்டுப்படுத்துவதால், மனிதன், மனிதனுக இயங்குகிறுன்; இதற்கு மாருக, மூளையின் உத்திரவில்லாமலேயே, ஒவ்வொரு அவயவங்களும், தாமாகவே எந்த வேலையையும் செய்யத் தொடங்கிவிட்டால், மனிதனுக்கு என்ன கதி ஏற்படுமோ, அந்நிலைதான் மக்களாட்சியில் ஏற்படு கிறது என்று ஃபாகாட் கருதுகிறுர். இவற்றைத்தவிர, லஞ்ச ஊழல்கள், பொறுப்பின்மை, உறுதியற்ற தன்மை என்பன போன்ற குறைபாடுகள் எந்தெந்த விதங்களில் மக்களாட்சியில் மலிந்து கிடக்கின்றன என்பதைப் பேராசிரியர் பிரைஸ் (Bryce) தன்னுடைய ‘அரசியலில் பண ஆதிக்கம்’ (Money Power in Politics) என்னும் நூலில் மிகவும் சாதுர்யமாகவும், சுவையாகவும் விளக்கிக் காட்டுகிறுர்.

**மக்கள் ஆட்சியின் சிறப்பு**

மக்களாட்சியில் காணப்படும் குறைவுகளையும் நிறைவு களையும், தெளிவான சிந்தனையுடன் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது, சொல்லப்பட்ட எல்லாக் குறைகளையும் ஏற்றுக்கொள் வதற்கில்லை. அதைப் போலவே, கொள்கையளவில் அமைந்து கிடக்கும் நிறைவுகளையும், நிறைவேற்ருத காரணத்தால், ஏன் அவ்வித நிலைமை ஏற்பட்டதென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கொள்கையளவில் கூறப் பட்ட உயர்ந்த கருத்துகள், நடைமுறையில் சாதிக்கப்படா மைக்குக் காரணம், இரண்டு உலகப்போர்களும், அவற்றின் பிந்தைய விளைவுகளும் என்பதை மட்டும் முக்கியமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக மனிதச் சமுதாயத்திலே, வறுமை, பிணி, வேலையின்மை போன்ற கொடிய பிரச் சினைகள் தற்போதுதான் தோன்றியவையல்ல; அப்பிரச்சினைகள் சிறிய அளவுகளில் முன்பே இருந்து வந்தன; அவற்றை மிகுதிப் படுத்தும் முறையில், இரண்டு உலகப் போர்களும் உதவிபுரிந்து விட்டன என்ருல் அது மிகையாகாது. இந்நிலையில் எந்தவிதமான அரசாட்சியானுலும், மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளைச்சமாளிப்பது

மிகவும் கடினம். ஒரு மனிதன் தன்நிலையில் இருக்கும்போது தான் அவனுடைய நடத்தையைப்பற்றி உண்மையாக அளவிட்டுத் தீர்மானிக்க முடியும்; ஆனால் அவன் குடிபோதையில் இருக்கும்போது நாம் அவனைப் பற்றியே பேசுவதற்கில்லை. அதைப் போலவே, பயங்கரமான சூழ்நிலைகளைச் சமுதாயத்தில் அவிழ்த்துவிட்ட நிலையில், மக்களாட்சி எவ்விதம் இயங்குகிறது என்பதைச் சற்று நிதானித்தே அளவிட வேண்டும்.

மேலும் மக்களாட்சி அடைய முற்படும் மகத்தான கொள்கைகள்—மக்கள் எல்லோரும் ஒரு இனம்; உயர்வு தாழ்வு என்ற வேறுபாடுகள் நீங்க வேண்டும்; எல்லோரும் சமத்துவ அடிப்படையில் வாழ்வின் நன்மைகளைப் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும் என்பன போன்ற கருத்துகள் சாதாரணமானவையல்ல; அவைகளை நடைமுறையில் ஈடேற்றுவதென்பது பகீரதப் பிரயத்தனம் என்றே சொல்ல வேண்டும். அவ்வளவு பெரிய, அரிய முயற்சிகளையும் ஈடேற்ற முடியும் என்பதை அகில உலகத்திற்கே எடுத்துக் காட்டியிருக்கிறது நம் தாய்நாடு—இந்தியா என்பதைப் பெருமையுடன் இக்கட்டத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மக்களின் பேராதரவு பெற்று விளங்கிய தலைவர்களில் பண்டித ஜவாஹரின் பெயர் பொன்னெழுத்துகளில் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். சுமார் 17 ஆண்டுகள் இந்தியக் குடியரசின் இணையற்ற தலைவராக, முடிசூடா மன்னராகத் திகழ்ந்து, மக்களாட்சியைத் திடப்படுத்தி, மக்களின் முன்னேற்றத்தையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டு, இறுதி மூச்சு வரை உழைத்த உத்தமர் ஜவாஹர்லால் நேரு என்று கூறினால் அது மிகையாகாது. அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்திய மக்களை, மக்களாட்சி என்னும் அணைப்பிலேயே எடுத்துச்செல்கிறார் இந்தியாவின் தாய்எனத் தகும் இந்திராகாந்தி அம்மையார்.

பொதுவாக மக்களாட்சியில் பல்வேறு கட்சிகள் இருக்கத்தான் செய்யும்; அவ்விதம் பல கட்சிகள் இயங்குவதே ஜனநாயக மரபு; அக்கட்சிகள் மக்களை எப்போதும் விழிப்புடன் இருக்கச் செய்யும் சக்திகள் என்றே கூறலாம். மக்களும் தங்களுடைய சிந்தனைகளைச் சீர்படுத்தி, செம்மையாகச் சிந்தித்து, நாம் எல்லோரும் ஒரு குலம், ஓர் இனம் என்ற உயர்ந்த கோட்பாடுகளையே நினைவில் நிறுத்தி, சொல்லிலும் செயலிலும் ஒன்றுபட்டு வாழ உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும்; இவ்வித உண்மைகளுக்கு உருவம் அமைப்பதுபோல், நாட்டின் செய்தி ஏடுகள் செயல்பட வேண்டும். மக்களைச் சரியான சிந்தனைப்

பாதையில் எடுத்துச் செல்வது செய்தி ஏடுகளின் சீரிய பணியாகும். அரசாட்சியின் பணியினையும், மக்களின் கடமைகளையும் எடுத்துக்கூறுவதே செய்தி ஏடுகளின் அடிப்படை நோக்கமாக அமைய வேண்டும்; அப்போதுதான் நல்ல பல பொது உணர்வுகள் (Public Opinion) ஏற்பட முடியும்; அவற்றினுல் மக்களுக்கும் அரசாட்சிக்கும் நன்மை விளையும். செம்மையான மக்களாட்சி செயல்படுவதற்கு எவ்விதம் செய்தி ஏடுகள் முக்கியமோ, அதைப்போலவே, பொதுவுணர்வுகளும் முக்கியமானவையாகும். ஏனென்ருல், மக்களின் ஒருங்கிணைந்த கருத்துகள், கோட்பாடுகள் என்பன போன்றவை தோன்றி நிலைபெறுவது பொதுவுணர்வுகளிலிருந்துதான் என்பதும் கவனிக்கற்பாலது. எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் மக்களின் ஏகோபித்த பொதுவுணர்வுகளுக்கு மாருக அரசாட்சி நீடித்ததில்லை. அப்பொதுவுணர்வு செம்மையான முறையில் அமையவில்லை என்ருல், அதனுல் ஏற்படும் தீமைகளும் மக்களாட்சியையே பாதிக்கும். இவ்வித இக்கட்டான நிலையைச் செம்மைப்படுத்த முடிவது செய்தி ஏடுகளினுல்தான் என்பதையும் கவனிக்க வேண்டும். தன்னல வாதிகள், பாமர மக்களை ஏய்த்து, தவருன பொதுவுணர்வுகளை உண்டாக்கி, அவற்றைப் பரவச்செய்து விட்டால், அதனைச் சுட்டிக்காட்டி நல்வழியில் திருப்புவதற்குச் செய்தி ஏடுகளுக்கே உரிமை உண்டு. அதனுல்தான் மக்களாட்சியில், செய்தி ஏடுகளுக்கும் பொதுவுணர்வுகளுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 20ஆம் நூற்ருண்டிலே நாம் பெற்றுவாழும் மக்களாட்சி ஓர் அரிய பேறு என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஏனென்ருல் இவ்வாட்சி மாறுமானுல், எவ்வித ஆட்சி ஏற்படும் என்று நினைக்கும் பொழுதுதான், மக்களாட்சியின் மகிமையை நாம் உணர முடியும். நிழலில் இருப்பவனுக்கு வெயிலின் அருமை தெரியாது என்ற தமிழ்க் கூற்றுக்கு ஒவ்வ நல்ல முறையில் சிந்தித்து, மக்களாட்சியின் நன்மைகளை நாம் உணர வேண்டியது அவசியமாகும். பேராசியர் பர்ன்ஸ் (C.D. Burns) மக்களாட்சியைப் பொறி வண்டிக்கு (Automobile) ஒப்பிட்டுக்காட்டுகிருர்; அவ்வண்டியில் குறைவுகள் ஏற்பட்டாலும், அதனைத் தூக்கி எறிந்துவிட்டு, மீண்டும் எருதுகள் பூட்டிய வண்டியில் பிரயாணம் செய்ய முற்படுவது மடமையாகும். அதைப் போலவே, மக்களாட்சி நமக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பாகும். இதனை நல்ல முறையில் பயன்படுத்தினுல், இந்தியர்கள் மட்டுமல்ல, அகில உலக மக்களே நற்பயனடைவர் என்பது நிச்சயம்.

# 11. மக்களின் உரிமைகள்

## (Rights of People)

மக்கள் என்று அழைக்கப்படுவதற்கே முக்கியக்காரணம், அவர்கள் சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றனர் என்பதாம்; அவ்வித உரிமைகளின் தொகுப்பே விடுதலை (Liberty) என்று கூறப்படுகிறது; சுதந்திரம் என்றும் குறிப்பிடுவர். இதன் அடிப்படையில்தான் மனிதனுடைய எல்லாவித உரிமைகளும் அமையப்பெறுகின்றன. அதனால்தான், விடுதலை, உரிமைகளின் தாய் என்று பேராசிரியர் லாஸ்கி சுட்டிக்காட்டுகிறார். அதனால் தான், அவ்வுரிமையைப் பாதுகாப்பதற்காகவே, வரலாறு தோன்றிய காலத்திலிருந்து மனிதன் போராடியிருக்கிறான்; அதைப் போலவே, அவ்வுரிமையைப் பறிப்பதற்காகவே எத்தனையோ வன்முறைச் சம்பவங்களும் ஏற்பட்டிருக்கின்றன. எனினும், மனிதன் விடாமுயற்சியாலும், பகுத்தறிவைப் பயன்படுத்தும் பண்பாலும், அவ்வுரிமையைக் காப்பாற்றிக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றிருக்கிறான் என்பதையும் வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்றன.

வரலாற்று ரீதியாக முதன் முதலில் மக்களின் உரிமைச் சாசனம் தோன்றியது கி. பி. 1215ஆம் ஆண்டில் என்று கூறப்படுகிறது; அதனை அங்கீகரித்து அமுல் நடத்தியவர் இங்கிலாந்தின் அரசரான ஜான் (King John) என்பாராவர். இச் சம்பவம் மனித முயற்சியின் மகத்தான முதல் வெற்றி என்று கருதிப் பாராட்டப்படுகிறது; இதனை மாக்ன கார்டா (Magna Carta) என்று குறிப்பிடுவர். அதற்குப் பிறகு 17-18ஆம் நூற்றாண்டுகளில் இவ்வுரிமைப் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன; வன்முறைச் செயல்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் வரலாறு நினைவூட்டுகிறது. அதன் விளைவாக 1688இல் உரிமைகளின் பட்டியல் (Bill of Rights)

ஏற்பட்டது. 1789இல் பிரெஞ்சு மக்கள் நடத்திய ரத்தக் களரியும், அவர்கள் எழுப்பிய சுதந்திர கீதம் - விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் (Liberty, Equality and Fraternity) என்பன போன்ற நிகழ்ச்சிகள் நவீனகால மானிட வரலாற்றின் மறக்கமுடியாத சம்பவங்கள் என்றால் அது மிகையாகாது. அதன் பின்பு, அமெரிக்க மக்களிடையில் ஏற்பட்ட குழப்பங்களும், அதன் விளைவாக 1791இல் அமெரிக்க மக்கள் பெற்ற உரிமைகளும், வரலாற்றுப் புகழ்பெற்ற சம்பவங்களாகும்.

இவ்விதமாக மக்கள் தங்கள் விடாமுயற்சியாலும், ஒன்றுபட்ட செயலாலும் தங்களது உரிமைகளைப் பெற்றனர் என்று வரலாறு கூறினாலும், இவ்வுரிமைகளை விவரிக்கும் தன்மையில் இரண்டு விதங்களுண்டு என்பது கவனத்திற்குரியது. ஒன்று நாட்டுச் சுதந்திரம் (National Liberty) ; மற்றொன்று தனிமனிதனின் சுதந்திரம் (Individual Liberty). ஆகவே தனிப்பட்ட மனிதனுக்கும் அல்லது ஒரு நாட்டிற்கும் அமையும் எல்லாவிதச் சலுகைகளும் (Privileges), இந்த உரிமைகளிலிருந்துதான் தோன்றுகின்றன என்பது கவனிக்கற்பாலது. மேலும், இவ்விரண்டு நிலைகளும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத தன்மையில் இணைந்திருக்கின்றன. ஏனென்றால், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கருத்துகளை வளர்க்கவும், கொள்கைகளை எடுத்துக்கூறவும், எழுதி வெளியிடவும் இயல்பாகவே முனைகிறான் : இவற்றிற்கு உரிமைகள் அவசியப்படுகின்றன. ஆனால் இவ்வுரிமைகள் மற்றவர்களுடைய தலையீட்டையோ அல்லது குறுக்கீட்டையோ விரும்புவதில்லை, ஏற்றுக்கொள்வதுமில்லை ; அப்போதுதான் உரிமைகள் - பிறர் தலையீட்டுக்கு உட்படாதது- என்றும் அழைக்கப்படும். மனிதன் பிறருடன் சேர்ந்தே வாழ்வதால், பலருடைய உரிமைகள் ஒன்றுக்கொன்று முரண்படாமல் இருக்கவும், அவ்வித முரண்பாடுகள் ஏற்பட்ட காலத்தும் அதனைச் சரிக்கட்டவும் வரையறைகள் அமைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது ; இதுதான் நாட்டின் உரிமை என்று குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு குடிமகனும் மற்றவர்களுடன் சமமாக உரிமைகளைப் பெறுவதற்கும் மற்றவர்களுடைய உரிமைகளை மறுப்பதற்கோ அல்லது வெறுப்பதற்கோ நிலைமை ஏற்படாமல் கண்காணிப்பதும் நாட்டின் தலையாய கடமையாகும். அரசியல் வல்லுநர்கள் இச்சுதந்திரத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறுவர். அவையாவன : 1. சமுதாயச் சுதந்திரம் (Civil Liberty) ; 2. அரசியல் சுதந்திரம் (Political Liberty) ; தேசிய சுதந்திரம் (National Liberty). இப்பிரிவுகளையும்,

அதன் விளக்கங்களையும் பேராசிரியர் லாஸ்கி, தன்னுடைய அரசியல் இலக்கணத்தில் (Grammar of Politics) மிகவும் தெளிவாக விவரித்திருக்கிறார்.

## சமத்துவம் (Equality)

உடல் அமைப்பாலும், உள்ளத்து உணர்வுகளாலும் ஒன்றுபட்டு வாழும் மக்களிடம் வேற்றுமைகளோ, வித்தியாசங்களோ இருக்க முடியாது, இருக்கக்கூடாது. இந்நிலைதான் சமத்துவம் என்று குறிப்பிடப்படுகிறது ; இந்நிலைமை ஏற்படுவதற்கே அடிப்படைக்காரணம் விடுதலையாகும் என்பதை ஆக்டன் பிரபு (Lord Acton) எடுத்துக்கூறியிருக்கிறார். இதிலிருந்து விடுதலைக்கும், சமத்துவத்திற்கும் உள்ள நெருங்கிய பிணைப்பினையும் நன்கு உணரலாம். ஏனென்றால், விடுதலை உணர்வே, மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் சக்தி வாய்ந்தது. அப்போதுதான் உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை மறைந்து, ஒழிந்து, நாம் எல்லோரும் ஓர் இனம், ஒரு குலம் என்ற உயர்ந்த மனப்பான்மையைப் பெறுகிறோம். இவ்வுணர்வை மக்கள் பெறவில்லையென்றால், அவர்கள் இன்னும் அரசியல் வாழ்வின் அடிப்படைக் கோட்பாட்டை நன்கு உணரவில்லை என்றுதான் பொருள். மேலும், மக்களிடையே காணப்படும் பல்வேறு பிரிவுகளும், வேற்றுமைகளும், அதன் காரணமாக எழும் உயர்வு தாழ்வு மனப்பான்மைகளும், சமத்துவ நோக்கினை நன்றாகப் புரிந்துகொள்ளாத காரணத்தினால்தான், சமூகத்தில் இருந்துகொண்டு, மக்களை முன்னேற்றப் பாதையில் செல்லவிடாமல் தடுக்கின்றன. அதன் காரணமாகத்தான் மாபெரும் சமூகப் புரட்சிகள் தோன்றின. பிரெஞ்சுப் புரட்சியும், ரஷியப் புரட்சியும் இதற்குச் சான்றுகள். அப்புரட்சிகளுக்குப் பின் பிரெஞ்சு, ரஷிய நாடுகளில் ஏற்பட்ட சமத்துவ சமுதாய நிலைமைகள், தற்கால மக்களினத்திற்கே ஒரு படிப்பினையாகும் என்று கூறினால், அது மிகையாகாது. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் நல்வாழ்வு வாழ்வதற்கும் உரிமையுண்டு. இந்த அடிப்படையில் மக்கள் அனைவரும் சமமாகக் கருதப்பட வேண்டும். ஒரு மனிதன் மற்றவனைவிடத் தாழ்ந்தவன் என்றோ அல்லது உயர்ந்தவன் என்றோ கொள்ளுதல் கூடாது, என்னும் உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் சமத்துவம் என்பது. இவ்வித அமைப்பைச் சமூகத்தில் ஏற்படுத்திக்கொடுப்பதும், அதனைப் பாதுகாப்பதும் சட்டத்தின் பணியாகும்.

## சட்டம் (Law)

சட்டங்கள் சமுதாயத்தில் நிறுவனங்களைக் கட்டிக் காத்து மக்களின் நல்வாழ்வைப் பேணிப் பாதுகாப்பவையாகும். இந் நிலையில், விடுதலை உணர்வுகளுக்குச் சட்டங்கள் எவ்விதம் உதவியாக உள்ளன என்பதைப்பற்றி அரசியல் வல்லுநர்களிடையே அபிப்பிராயப்பேதங்கள் உண்டு. லாக் என்பார் சட்டங்களின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் ஆதரித்தார்; ஏனென்றால், சமூகத்தில் சட்டதிட்டங்கள் நிலைபெறும் போதுதான் விடுதலை உணர்வும் வளரமுடியும் என்பது அவருடைய அபிப்பிராயம். ஆனால் இதற்கு நேர்மாறான அபிப்பிராயங்களும் கொள்வதற்கு வழியுண்டு. பேராசிரியர் டைசி (Dicey) கூறுகிறார்: விடுதலை உணர்வுகளுக்குத் தடையாகத்தான் சட்டங்கள் அமைகின்றன; விடுதலை உணர்வு அதிகம் இருக்கிறதென்றால் சட்டங்களின் எண்ணிக்கையும் குறைகிறது; அதைப்போலவே, சட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதென்றால், விடுதலை உணர்வு குறைகிறது. வில்லியம் காட்வின் (William Godwin) என்பார், சட்டம் என்பதே விரும்பத்தகாத ஒரு நிறுவனமாகும் என்று குறிப்பிடுகிறார். 'மனிதனும் அரசும், (Man Verses the State) என்னும் நூலில் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) கூறுகிறார்: சட்டமும் விடுதலையும் ஒன்றுக்கொன்று எதிர்மாறானவையாகும். சுருங்கக் கூறின், இக்கருத்துகள் யாவும் ஒரு தலைப்பட்சமாகவே விளக்கம் தருகின்றன என்பதையும் வாசகர்கள் கவனிக்கவேண்டும். ஏனென்றால், சட்டதிட்டங்கள் சீராக அமைந்த சமுதாயத்தில் தான், விடுதலை உணர்வுகள் வளருவதற்கு இயலும் என்பதை நாம் அறிவோம்; சட்டதிட்டங்கள் இல்லாத சமுதாயம், ஒரு சமுதாயமென்று குறிப்பிடமுடியாது என்பதையும் நாம் நன்கு அறிவோம். இந்நிலையில், சட்டம் என்பது, சமூகத்தில் விடுதலை உணர்வுகள் வளருவதற்கு மட்டுமல்லாமல், அவ்வுணர்வுகளுக்கு எதிராக ஏற்படும் சக்திகளையும் கண்டித்து, விடுதலை உணர்வைக் கட்டிக் காப்பதுமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றிலிருந்து, சட்டத்திற்கும் விடுதலைக்கும் உள்ள நெருங்கிய பிணைப்பும் நன்கு விளங்கும். தனி மனிதனின் சுதந்திரத்தைப் போற்றிக் காப்பது சட்டமாகும். அதே நேரத்தில், மக்களிடையே சுதந்திரத்தாகத்தைத் தூண்டி, வளர்த்துக் காப்பதும் சட்டமாகும். எனவே சட்டதிட்டங்களைப் பெற்ற சமுதாயத்திலேதான், விடுதலை, சமத்துவம் போன்ற உயர்ந்த சமுதாய உணர்வுகள் வளரும்; அதனை மக்கள் பயன்படுத்துவதற்கே

தங்கள் உரிமைகளைப் பெறுகின்றனர் என்பதும் கவனிக்கற்பாலது.

## உரிமைகள் (Rights)

### (1) இயற்கை உரிமைகள் (Natural Rights)

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மனிதனாக வாழ்வதற்கும் உரிமைகள் உண்டு; இது இயல்பாகவே ஏற்படும் நிலையாகும். எனவே, இதனை இயற்கை உரிமை என்று குறிப்பிடுகின்றனர். அரசியல் வாழ்வு தோன்றுவதற்கு முன்பே, இந்நிலைமை ஏற்பட்டு விடுகிறது என்பதையே, சமூக உடன்பாட்டுக் கொள்கைகளும் வலியுறுத்தின என்பதை முன்னமேயே அறிந்தோம். இவ்வியற்கை உரிமைகள், சூழ்நிலைகளுக்கொவ்வ எவ்விதங்களில் பயன்படுத்தப்பட்டன என்பதைப்பற்றி வெவ்வேறுவிதமான விளக்கங்கள் தரப்பட்டதையும் கண்டோம். பலவிதமான அபிப்பிராயங்களுக்கிடையே, இயற்கை உரிமைகள் என்பன இருந்தன என்பது நிச்சயமாக ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. இக்கோட்பாட்டை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறி மக்களின் ஏகோபித்த உணர்வுகளைத் தட்டியெழுப்பியவர் லாக், ரூஸோ, சர் தாமஸ் பெயின் (Sir Thomas Paine) போன்றோர் ஆவர். லாக், தாமஸ் பெயின் போன்றோருடைய கருத்துகள் அமெரிக்காவிலும், ரூஸோவின் கருத்துகள் பிரான்ஸிலும் பிரசித்தமடைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயற்கை உரிமை என்பதை விளக்கும் முறையில் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) கூறுகிறார்: ஒவ்வொரு மனிதனும் தான் விரும்புவதை, மற்றவர்களைப் பாதிக்காமல் செய்து, பயனடைதல் இயற்கை உரிமையாகும். மனிதனுடைய நிறம், அவனுடைய உடம்போடு எவ்விதம் இணைந்திருக்கிறதோ அதைப் போலவே இயற்கை உரிமைகள் மனித வாழ்வுடன் இணைந்தனவாகும்; ஏனென்றால், நிறமில்லாத மனிதர்களில்லை; உரிமைகள் இல்லாத மனித வாழ்வே இல்லை. அதனால்தான், உரிமைகள் என்பதைப்பற்றிப் பேசும்போது பேராசிரியர் லாஸ்கி கூறுகிறார்: மனிதர்கள் உரிமைகள் பெறுவது, தாம் இழந்த பெரும் பொருளை மீண்டும் பெற்றதற்கு ஒப்பாகும். பேராசிரியர் போசங்கே கூறுகிறார் : உரிமைகள் என்பது சமூகத்தினரால் ஒப்புக்கொள்ளப் பட்டவை; அரசினரால் பாதுகாக்கப்பட்டவையுமாகும். அவ்விதமாக இருந்தபோதிலும் உரிமைகள் என்பது மக்கள் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் தேவையான, சில இன்றியமையாத

நிலைமைகளை அமைத்துக் கொடுக்கின்றன ; அதன் காரணமாக அந்நிலைமைகள் இல்லாமல் வாழ்வு என்பதே இயலாததாகிவிடும் என்று லாயிடு மார்கன் (Lloyd Morgan) சுட்டிக் காட்டுகிறார்.

(2) **சமூக உரிமைகள்** (Civil Rights)

எவ்விதம் சமூக உரிமைகள் தோன்றின என்பதைப்பற்றித் தற்போது நாம் விவாதிக்கப் போவதில்லை; சமுதாயம் என்று குறிப்பிடும் போது, நிச்சயமாக அங்குச்சில உரிமைகள் உள்ளன. அவற்றினால் ஒவ்வொரு குடிமகனும் எவ்விதம் பயனடைகிறான் என்பதைப் பற்றித்தான் தெரிந்துகொள்ள முற்படுகிறோம். மனிதனாகப் பிறந்தவன், மனிதனாக வாழ்ந்தே தீரவேண்டும் என்பது இயற்கை உரிமை மட்டுமன்று, அதுவே அடிப்படை உரிமையுமாகும் (Fundamental Rights). சமூக உரிமை என்று குறிப்பிட்டுக் கூறவேண்டுமென்றால், அவற்றில் முக்கியமானவை பின்வருவனவாகும்: சொத்துரிமை, சமயஉரிமை, விரும்பிய தொழில் புரியவும், கல்வி கற்கவும், சமூகத்தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளுதல் என்பன போன்ற உரிமைகளாகும். ஆனால், இவ்வுரிமைகள் யாவும் நல்ல முறையில் நடைபெறுவதும், அதனால் மக்கள் எல்லோரும் நலமடைவதும், எப்போது என்றால், இவ்வுரிமைகளனைத்தையும், அரசு கண்காணித்துக் காப்பாற்றும் போதுதான் என்பது கவனிக்கற்பாலது. எனவே, இதன் மூலமாகச் சமூக உரிமைகள் எவ்விதம் அரசியல் உரிமைகளுடன் இணைந்துள்ளன என்பதும் பெறப்படும்.

(3) **அரசியல் உரிமைகள்** (Political Rights)

அரசியல் உரிமைகள் என்று கூறப்படுவனவற்றில் மிகவும் முக்கியமானது, ஒரு மனிதன், தான் விரும்பும் அரசினை ஆதரிக்கவோ அல்லது தன்னுடைய வேறுபட்ட அரசியல் கொள்கைகளை வெளியிடவோ உள்ள உரிமைகளாகும். இவ்வுரிமையினால், தனிமனிதனின் கருத்துகள் எவ்வளவு முக்கியத்துவம் அடைகிறது என்பதும் நோக்கற்பாலது; ஏனென்றால், இவ்வுரிமையினால், நடைமுறையில் இயங்கி வரும் அரசியல் கொள்கைகளையும் குறைகூறும் அளவுக்குத் தனிமனிதனுக்கு வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால், ஒரு புதிய கொள்கையை உண்டாக்கி அதன் அடிப்படையில் ஒரு கட்சியையே அமைத்து, தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு. அரசின் நிறைவு, குறைவுகளை விமர்சிக்கவும் பத்திரிகைகள், பேச்சு மூலம், ஆதரிக்கவோ எதிர்க்கவோ அரசியல் உரிமைகள் அனுமதிக்கின்றன. மேலும் தனி மனித

னின் உரிமைகள், அரசாங்கத்தின் சட்டதிட்டங்களினுல் பாதிக்கப்படும்போது, அந்நிலைமையைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக, நீதிமன்றங்களில் விசாரணை நடத்துவதற்கும் அரசியல் உரிமைகள் தனிமனிதனுக்கு உரிமை தருகின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

## (4) அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)

இயற்கை உரிமை, சமூக உரிமை, அரசியல் உரிமை என்று பல கோணங்களிலிருந்தும், மனித உரிமைகளை நோக்கினுல், அவற்றில் மிகவும் இன்றியமையாத உரிமைகள், சட்டரீதியாக, எழுத்து வடிவில் அமையும்போது, அவை அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன; இதன் முக்கிய அம்சம் என்னவென்ருல், இவ்வுரிமைகளைப் பறிக்கவோ பாழ்படுத்தவோ யாராலும், அரசாலும் முடியாது என்பதே! இந்த உண்மையைத்தான், உலக வரலாறு எடுத்துச் சொல்கிறது என்ருல் அது மிகையாகாது. புரட்சிகளும், ரத்தக்களைகளும் ஏற்பட்டன; எதற்காக? மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதற்கோ அல்லது விலைக்கு வாங்குவதற்கோ முயற்சிகள் நடக்கும்போது, அவற்றை முறியடித்து உண்மையை நிலைநாட்டுவதற்கே, என்பதுதான் என்னுடைய தாழ்மையான பதில். அவ்விதம் உண்மையை நிலைநாட்டும்போதுதான் மக்கள், பெருமக்களாக வாழமுடிகிறது. மக்களின் அடிப்படை உரிமைகளை எழுத்து வடிவிலே அமைத்து, அரசியல் அமைப்பை (Constitution) உண்டாக்கி, அவற்றை நடைமுறையிலே அமுல் நடத்தும் மேற்கத்திய நாடுகளில் மேற்கு ஜெர்மனி (West Germany), அமெரிக்க ஐக்கிய நாடுகள் (United States of America) போன்றவை முக்கியமானவையாகும். இந்தியாவிலும் அடிப்படை உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சில ஜனநாயக முறைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது. அம்முறைகள் பின்வருவனவாகும்

(1) சட்டத்தின் ஆட்சி (Rule of Law): இதன் பிரகாரம் ஒவ்வொரு மனிதனுடைய உரிமைகளும் மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன. உதாரணமாக, யாரையும் நீதி மன்றத்தில் விசாரணை செய்து குற்றவாளி என்று நிரூபிக்காமல், கைது செய்யவோ சிறையில் வைக்கவோ கூடாது. இதன் மூலமாகச்

சட்டத்தின்முன், எல்லோரும் சமம் என்ற சமத்துவ நோக்கும் பெறப்படுகின்றது.

(2) மக்கள் துவக்கம் (Peoples Initiative) : இம்முறை யானது, சுவிட்சர்லாந்திலும், மற்ற ஜனநாயக நாடு களிலும் கையாளப்படுகின்றன. இம்முறை எவ்விதம் செயல் படுகிறதென்பதைக் காண்போம். ஒரு குறிப்பிட்ட சட்டத்தைத் திருத்தவோ மாற்றவோ வேண்டுமென்றால், மக்கள் தொகையில் சுமார் 50,000 பேர், அதனை ஆதரித்து விண்ணப்பம் செய்தால், அவ்விதமே மக்களின் விருப்பத்தை அமுலாக்க முடியும் என்ப தாம். இதன் மூலமாக மக்களின் உரிமைகளின் முக்கியத்துவம், மற்ற யாவற்றையும்விட முதன்மையானது என்பதும் பெறப் படும்.

(3) குடி ஒப்பம் (Referendum) : பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களையும், மக்களின் விருப்பத்திற் கிணங்க, மாற்றவும் முடியும் என்பதை நிரூபிப்பதற்குக் குடி ஒப்பம் பயன்படுகிறது. சட்டங்களை மட்டுமல்ல, அரசியல் நிறு வனங்களையும், ஏன், ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தவர்களையும், அந் நிலைகளிலிருந்து, தகுந்த காரணங்களைக் காட்டி நிரூபித்தால், நீக்கவும் குடி ஒப்பம் பயன்படுகிறது என்பதும் கவனிக்கற்பாலது.

இம்முறைகளெல்லாம் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மக்களை நல்வாழ்வு வாழச் செய்வதற்கே அமைந்துள்ளதால், இவற்றை மிகவும் கவனமாகவும், கண்காணிப்புடனும் பயன் படுத்த வேண்டியது அவசியமாகிறது.

# 12. தண்டனைக் கொள்கைகள்

## (Theories of Punishment)

மனிதனின் மகத்தான உரிமைகளைப் பற்றி மிகவும் உருக்கமாகப் பேசிவிட்டு, மனிதனுக்குத் தண்டனைகளும் தரப்படவேண்டுமென்று கூறுவது பொருந்துமா ? என்ற கேள்வியை வாசகர்கள் கேட்கலாம்; ஒரு வேளை கேட்காமலும் விட்டு விடலாம். ஆனால், அக்கேள்விக்குப் பதில் அளிக்கும் முறையில் தான், தண்டனைக் கொள்கைகளின் அடிப்படையும், உரிமைகளின் அடிப்படையும் ஒன்றுதான் என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் உரிமைபெற்ற குடிமகனுக்குத் தண்டனையும் தரப்படவேண்டுமா என்று கேட்டால் அதற்குச் சுருக்கமான பதில் : ஆம், தண்டனை நிச்சயமாகத் தரப்படவேண்டும். பார்வை அளவில் விநோதமாகத் தோன்றும் இச்சூழ்நிலையை மிகவும் அழகாக எடுத்துக்காட்டி, தன்னுடைய 'உரிமையின் தத்துவம்' (Philosophy of Right) என்னும் நூலில் விளக்கம் தருகிறார் ஏகல்.

மனிதன் தனக்காக உரிமைகளைப் பெற்றுக்கொள்கிறான் ; தானாகவே வாழ்கிறான். ஆனால் தனியாகவா வாழ்கிறான் ? இல்லை ; நிச்சயமாகயில்லை ; ஏனென்றால், மனிதன் ராபின்சன் குருேஸா (Robinson Crusoe) அல்ல ; மனிதன் ஒரு சமூகப் பிராணி. எனவே தனக்காகவே உரிமை கேட்டாலும், பிறரும் அதைப் பெற்று வாழவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறான் ; இதனைத்தான் கடமை என்று குறிப்பிடுகிறோம். எனவே உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும். மனிதன் தனக்காக எவ்விதம் உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறானோ அதைப்போலவே, மற்றவர்களுடைய உரிமைகளையும் மதிக்கவேண்டும். அவ்விதம் மதிக்காமல், நடந்து கொள்ளும் போதுதான், மனிதன் மனித நிலையிலிருந்து மாறு

கிருன்; இதன் காரணமாகவே தண்டனைக்குள்ளாகிருன் குற்றவாளி என்ற பெயரிலே! சமுதாயத்தில் பலரும் ஒன்ருக வாழ்கின்றனர்; அரசியல் நிறுவனங்களால் பாதுகாக்கப்படு கின்றனர். இந்நிலையில் ஒருவர்க்கொருவர் தவறு இழைக்கும் போது, தவறு இழைத்தவர்களைத் தண்டிப்பது அரசின் கடமை யல்லவா? மனிதன் தன் கடமையை மறந்தாலும், அரசு தன்னுடைய கடமையை மறக்கமுடியுமா? மறக்க முடியாது, மறக்கவும் கூடாது. மேலும் தவறு இழைத்தவர்களுக்குத் தண்டனை விதிப்பது அவர்களை நல்வழிப்படுத்துவதற்கே; அதைப்போலவே, மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்கே உரிமை களும் அமைந்துள்ளன. எனவே, முன் குறிப்பிட்டது போல், உரிமைகள், தண்டனைகள் இவற்றின் அடிப்படை ஒன்றுதான்; அதுதான் மனிதனின் நல்வாழ்வு; இந்நல்வாழ்வுக்கு நடுகல் லாக விளங்குவது நீதி (Justice) என்று மேல்நாட்டு அறிஞர்கள் கூறுவர்; அதனை அறம் என்றும் தருமம் என்றும் இந்தியப் பெருமக்கள் குறிப்பிடுவர். இனி முக்கியமான தண்டனைக் கொள்கைகள் சிலவற்றை விவரிப்போம்.

## (1) தடுப்புமுறைக் கொள்கை (Preventive Theory)

இக்கொள்கையின் நோக்கம் என்னவென்ருல், பழிச்செயல் களைத் தண்டிக்க வேண்டியதுதான், ஆனல் அவ்விதக் குற்றங் கள் மீண்டும் தலைக்காட்டா வண்ணம் தண்டனைகள் தரப்பட வேண்டுமென்பதே. இக்கருத்தினை விளக்கிக்கூறும் வகையில் பேராசிரியர் மெகன்சி (Mackenzie) விவரிக்கிருர்: உதாரணமாக ஆடுகளைத் திருடினவனுக்குத் தண்டனை அளிக்க வேண்டியது தான்; ஆனல் தரப்படும் தண்டனையின் தன்மை, இனிமேலும் அவ்விதத் திருட்டு நடவாதிருப்பதற்கு உகந்ததாக இருக்க வேண்டும். இதன் நோக்கம் என்னவென்ருல், தற்போது திருடினவனுக்கு அளிக்கும் கடுமையான தண்டனை, அதைக் கேட்போருடைய மனத்திலும் பீதியை உண்டாக்கவேண்டும்; அப்போதுதான், வருங்காலத்தில் அவ்விதத்திருட்டு நடவாது. இக்கொள்கையில் வெளிப்படையாகக் காணும் குறை என்ன வென்ருல், செய்த குற்றத்தின் தன்மைக்குப் பொருந்தாத முறையில் தண்டனை அமைந்து விடுகிறது என்பதே. இழைக்கப் பட்ட குற்றத்திற்குத்தான் தண்டனை பொருந்தும்படி இருக்க வேண்டும். ஆனல் தடுப்புமுறைக்கொள்கையின் பிரகாரம், அந்நியதி மாறுபட்டு விடுகிறது என்பது கவனிக்கற்பாலது.

## (2) காப்புமுறைக் கொள்கை (Protective Theory)

இக்கொள்கையின் நோக்கம் என்னவென்ருல், மக்கள் சமுதாயத்தைப் பழிச்செயல்களிலிருந்து காப்பாற்றிக் காக்க வேண்டியது அரசின் கடமையாகும். எனவே பழிச்செயல்கள் ஏற்படும்போது அச்செயல்களைப் புரிந்தோர் தண்டிக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு அளிக்கும் தண்டனையின் தன்மை, சமூகத்தைக் காக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அமைய வேண்டுமென்பதே. பேராசிரியர் மெகன்சி எடுத்துக் கூறிய விளக்கம், இங்கும் பொருந்தும். ஆடு திருட்டு என்பது, தனி மனிதனின் பொருளாதார உரிமையைப் பறிப்பதாகும்; அதனுல் சமூகத்திற்கே தீங்கு இழைப்பதாகும். எனவே தண்டனையின் தன்மையானது, வருங்காலத்தில் இவ்விதக் குற்றங்கள் நிகழா வண்ணம் இருக்கும் பொருட்டு, மிகவும் கடுமையாகவே அமையவேண்டும். மேலும், சமூகத்தைக் காப்பாற்ற வேண்டி, சந்தேகப்படும் சமூக விரோதிகளை ஒருவிதமான விசாரணையும் புரியாமல், சிறையில் வைக்கவும் முடியும்; அம் மக்கள், எந்தவிதமான பழிச்செயலைப் புரியாவிட்டாலும், அவர்கள் அவ்விதம் குற்றங்களைச் செய்ய முயலுவார்கள் என்ற யூகத்தில், அவர்களைத் தண்டிக்கவும் முடியும். இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வது, தண்டனை அளிக்கும் முறையில், காப்புமுறைக் கொள்கை, தடுப்புமுறைக் கொள்கையைத் தழுவியே அமைந்துள்ளது என்பதாம். மேலும் இரண்டு கொள்கைகளும் ஒன்றையொன்று நெருக்கமாக இணைந்துள்ளன என்பதும் கவனிக்கற்பாலது. இரண்டு கொள்கைகளும் குற்றத்திற்குப் பொருந்தாத முறையில், தண்டனை அளிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனுல், மனிதனுடைய அடிப்படை உரிமையும், நிராகரிக்கப்பட்டு, மனிதனை மனிதனுகக் கருதாமல், ஏதோ ஒரு கருவியாகக் கருதப்பட்டு விடுகிறதென்பதும் கவனிக்கற்பாலது. பரிதாபத்திற்குரிய இந்நிலையில், குற்றவாளி என்று கூறப்படும் மனிதன் தனக்கு இயல்பாகவே - மனிதனுக - உள்ள உரிமைகளைக்கொண்டு, நல்ல பல காரியங்களைச் செய்வதற்கும் இயலாதவன் ஆகிவிடுகிருன் என்பதும் நோக்கற்பாலது.

## (3) பழிவாங்கு கொள்கை (Retributive Theory)

குற்றம் புரிந்தவன் தண்டிக்கப்பட வேண்டுமென்பதே இக்கொள்கையின் அடிப்படை நோக்கம். பழிச்செயல் புரிவதில்,

மற்றவர்களுடைய உரிமையைப் பறிக்கிறான்; மேலும் அச்செயலானது, தனக்குத் தெரிந்தும், திட்டமிட்டும் செய்ததாகும். உதாரணமாக, கொலை புரிதல், குற்றங்களில் மிகவும் கொடிய குற்றமாகும். பிறருடைய வாழ்வைக் கெடுத்து, தான் வாழ்வதற்கு முற்படுபவனை அரசு தண்டிக்க வேண்டியது கடமையாகும். இக்கொள்கையானது பழங்காலத்திலிருந்து மக்களிடையே பழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றது. கிரேக்க அரசியல் வல்லுநர்களாகிய பிளேடோ, அரிஸ்டாடில் போன்றோரும் தற்காலத்தில் காண்ட், ஏகல் போன்றோரும் இக்கொள்கையை ஆதரித்திருக்கின்றனர். பழிச்செயல் புரிந்தவன் முற்காலத்தில் பழிவாங்கப்பட்டதும், தற்காலத்தில் நீதிமன்றங்களின் மூலமாகத் தண்டனைகள் வழங்குவதற்கும் வேற்றுமைகள் உண்டு. இருந்தபோதிலும் குற்றம் புரிந்தவன், தண்டிக்கப்பட வேண்டுமென்பதும், அக்குற்றவாளியைச் சீர்திருத்தும் நோக்கத்தோடுதான் அமைந்ததாகும்; இவ்வபிப்பிராயம் 20 ஆம் நூற்றாண்டில் மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது என்பதும் கவனிக்கற்பாலது. இதன் காரணமாகவே பழிக்குப்பழி என்பது அவ்வளவு நாகரிகமான முறையாகவும் கருதப்படவில்லை. ஏனென்றால், மனிதனின் வாழ்வு, மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையை விடச் சிறந்தது, உயர்ந்தது, புனிதமானது. குற்றம் புரிந்து விட்டான், எனவே அவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று கூறுவதைவிட, ஏன் குற்றம் புரிந்தான்? என்ற கேள்வியை எழுப்பி, அச்செயலில், சமூகத்திற்கும் ஓரளவு பங்கு உண்டு என்ற அபிப்பிராயத்தில், பழி வாங்கு கொள்கையைத் திருத்தி அமைக்க வேண்டிய சூழ்நிலை தற்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இவ்வுண்மையைத்தான், சீர்திருத்தக்கொள்கையில் நாம் காணவிருக்கிறோம். இருந்தபோதிலும், பழிவாங்கு கொள்கையும் மக்களுக்கு ஒருவிதத்தில் பயன்படத்தான் செய்கிறது. ஏனென்றால், பழிச்செயல் புரிந்தும், அதற்காகச் சிறிதளவாவது வருந்தாமல், அச்செயலைப் புரிவதில் மீண்டும் ஆர்வம் காட்டும் மனிதத்தன்மையற்றவர்களை, மரண தண்டனை அளிக்காமல் சமூகத்தில் வாழவிடுவதும் சரியல்ல. அதன் காரணமாகத்தான், இன்றைக்கும் நம் இந்திய நாட்டில் மரண தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## (4) சீர்திருத்தக் கொள்கை (Reformative Theory)

இக்கொள்கையின் அடிப்படை என்னவென்றால், குற்றம் செய்த குடிமகனுக்குத் தண்டனை கொடுப்பதும், அவன் திருந்தி

நல்ல குடிமகனுக நடந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத் தான். எனவே, தண்டனை என்ற முறையில், அக்குற்றவாளிக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து அதன்மூலமாக அவனுடைய அறிவைத் தெளிவுபடுத்திஞல், தான் செய்த குற்றத்தின் தன்மையையும் உணர்வான் ; இனிமேலும் அவ்விதப் பழிச்செயல்களைச் செய்ய முற்படமாட்டான். இந்த அடிப்படையில்தான் சீர்திருத்தக் கொள்கைக்குப் படிப்பினைக் கொள்கை (Educative Theory) என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இக்கொள்கைக்கு இன்னுமோர் ஆதரவு கிருஸ்துவ சமயத்தின் சீரிய பண்பாகிய பாவியை மன்னித்தல் என்ற கோட்பாடாகும். தவறு இழைத் தவர்கள், குற்றம் புரிந்தவர்கள், அவ்வித நிலைமைக்கு உட்பட வேண்டியதன் காரணங்கள் பலவகை இருக்கலாம் ; சமய சந்தர்ப்பங்களும், மனிதனின் அறிவு நிலையும், பொருளாதார நிலையும் இன்ன பல சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டு, குற்றம் புரிந்து விடுகின்றனர் ; அதன்பின்பு அதற்காகவும் வருந்துகின்ற னர். இந்நிலையில் மனிதனுக்கு மனச்சாட்சி என்பதொன்றுண்டு என்பதும் வெளிப்படுகிறது ; அதனைத் தட்டி எழுப்பிவிட்டால் தவறுகள் புரிவதற்கு என்றுமே தயாராக மாட்டான். மற்றவர் களுக்கும் வழிகாட்டும் நல்லவன் ஆகிவிடுவான் மனிதன். இது வெறும் விரிவுரையல்ல ; நடைமுறையில் காணப்பட்ட உண்மை கள். அதன் காரணமாகத்தான் தற்காலச் சிறைச்சாலைகளில் அநேக சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன ; குற்றவாளிகளை மனிதர்களாகவும் மதிக்கின்றனர்.

பல நாடுகளில் மரணதண்டனையே ரத்து செய்யப்பட் டுள்ளது கவனத்திற்குரியதாகும். குற்றவாளிகளைக் கண் காணிக்கப் பல புதிய நிறுவனங்களும் ஏற்பட்டுள்ளன; அதிலும் வயதில் சிறிய குற்றவாளிகளுக்காகவும், சில நிறுவனங்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாகப் போர்ஸ்டல் பள்ளி (Borstal School) என்பது இங்கிலாந்தில் அமைக்கப்பட்டு, அங்கு சிறுவர், சிறுமியர் (Young Offenders) படிப்பினையும், நல்ல பழக்க வழக்கங்களையும் பெற்று, பின்பு உயர்ந்த குடிமக்களாக விளங்கு வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். அமெரிக்காவில், சிங் சிங் சிறை (Sing Sing Prison) என்பது ஒரு பெரிய சிறைச்சாலை நிறுவனமாகும் ; பல நவீன வசதிகளுடன் அமைந்தது. இங்கே குற்றவாளிகள் எல்லா விதமான நற்பயிற்சிகளும் பெறுகின்றனர்; அவற்றிற்குச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன ; அதனைக் கொண்டு, வெளி உலகில் அவர்கள் நல்ல வேலைகளையும் பெற்று நல்வாழ்வு நடத்தவும் முடிகிறது என்பதை வாசகர்கள் கவனிக்க

வேண்டும். மேலும், உளவியல் வல்லுநர்களும், சமுதாயவியல் வல்லுநர்களும் சீர்திருத்தக் கொள்கையை ஆதரிக்கின்றனர் என்பதும் கவனிக்கற்பாலது.

இவ்வளவு முக்கியத்துவம் சீர்திருத்தக் கொள்கைக்கு அளித்த போதிலும், பழிவாங்கு கொள்கை ஏன் இன்னும் அமுலில் இருக்கின்றது? என்ற கேள்வியை வாசகர்கள் கேட்கலாம். அதற்கு நேரடியான பதிலைக் கொடுக்க முடியாவிட்டாலும், ஒன்றுமட்டும் உறுதியாகக் கூறலாம். எவ்வளவு வசதிகள் செய்துகொடுத்தும், கல்வி கற்பித்தும், மீண்டும் ஒரு மனிதன் குற்றம் செய்வதையே தன் குறிக்கோளாகக் கொண்டால், அவனைத் தண்டிக்காமல் இருக்கமுடியுமா? அதுவும் சமுதாய வாழ்வில் அவ்வித நிலையை நீடிக்கச் செய்யலாமா? முடியாது, கூடாது. பயங்கரமான கொலைப் பாதகங்களைப் புரிந்தவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிட்டால் சமுதாயக் கட்டுகோப்புத் தளர்ந்து விடுமல்லவா? அதனால் சட்டதிட்டங்கள் செல்லரித்துப் போகுமல்லவா? அதன்பின்பு மக்கள் சமுதாயம், மாக்கள் சமுதாயம் ஆகிவிடுமல்லவா? இன்னபிற காரணங்களினால் தான் பழிவாங்கு கொள்கையை இன்றும் பல நாடுகளில் அங்கீகரித்துள்ளனர். உதாரணமாகக் கூறுவோமாகில், திட்டமிட்டு ஆனால் திருட்டுத்தனமாகப் படுகொலை புரிந்த ஒருவன், பிடிபட்டபின் தண்டிக்கப்படவில்லை என்பதை மற்றவர்கள் உணர்ந்தால், பின்பு அவர்களும் அவ்விதச் செயல்களைச் செய்வதில் முற்பட்டு விடுவார்கள் அல்லவா? எனவேதான் மரண தண்டனை இன்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது; அதிலும் இந்தியாவானது அதை அமுலில் நடத்தி வைக்கிறது! இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. இந்தியாவில், கொலைப் பாதகங்கள் நடப்பவற்றின் புள்ளி விவரங்களை நோக்குவோமாகில், மரண தண்டனை என்பதொன்று இருந்தே தீரவேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரவியலும். இருந்தபோதிலும், சீர்திருத்தக் கொள்கைக்கு அதிக மதிப்பு இந்தியாவில் அளிக்கப்பட்டு வருகின்றது என்பதும் உண்மை. இவ்வுண்மையைத் தற்கால இந்தியச் சிறைச்சாலைகளில் ஏற்பட்டுவரும் சீர்திருத்தங்களிலிருந்து நன்கு உணரலாம்.

# 13. தற்காலத்து அரசியல் கொள்கைகள்

(Contemporary Political Theories)

கார்ல் மார்க்ஸினுடைய கொள்கைகள் 1917ஆம் ஆண்டு ரஷியப் புரட்சிக்குப்பின் ஒரு திருப்பத்தை அடைந்தது என்று கூறினுல் அது வரலாற்று உண்மையாகும்; அப்புரட்சிக்குத் தலைமைதாங்கி நடத்தியவரும் மார்க்ஸின் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றியவருமான லெனின் (Lenin) என்பாரின் கருத்துகளும் விமர்சனம் செய்யப்பெறத் தொடங்கின என்பதும் கவனிக்கற்பாலது. இவற்றின் விளைவாக, மார்க்ஸின் கொள்கைகள் இருபெரும் பிரிவுகளாக அமையத் தொடங்கின. அந்த அடிப்படையில், மார்க்ஸின் பொதுவுடமைக் கருத்துகள், அதி தீவிரப் பொதுவுடைமை என்றும், தீவிரச் சமூகப் பொது வுடைமை என்றும் இரு அமைப்புகளாக வளரத்தொடங்கின. அவ்வமைப்புகளே, தற்காலத்தில் உலகத்தின் பல பாகங்களில் ஒரு சில மாற்றங்களுடன் இயங்கிவருகின்றன. இனி அவ் வமைப்புக்களை விரிவாகக் காண்போம். அதிதீவிரப் பொது வுடைமைக்கொள்கை என்பது (Revolutionary Socialism) மேலும் இரண்டு பிரிவுகளைக் கொண்டதாகும். அவையாவன : பொதுவுடைமை (Communism), தொழிற்சங்கப் பொதுவுடைமை (Syndicalism).

## பொதுவுடைமை (Communism)

பொதுவுடைமைக் கோட்பாட்டின் குறிக்கோள், தொழி லாளி, முதலாளி என்ற வர்க்க பேதமில்லாத சமுதாயத்தை (Classless Society) அடையப் பெறுவதேயாகும். இக்குறிக் கோளை அடைவதில் எந்தவிதமான முறைகளையும் பின்பற்ற

லாம் என்பதும் அடங்கியுள்ளது ; எனவே, வன்முறைகளுக்கு ஆதரவும், சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கு, வெளிப்படையான எதிர்ப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் கவனிக்கற்பாலது. பொதுவுடைமைக் கோட்பாடு, தன் குறிக்கோளைப் பெறுவதில் இரண்டு நிலைகளை ஒப்புக்கொள்கிறது. முதல் நிலை என்பது, அரசு முதலாளிகளிடமிருந்து, தொழிலாளிகளிடம் மாறுவதாகும் ; இந்நிலையில், வன்முறைகள் மிகவும் வெளிப்படையாகவே பயன்படுத்தப்படும். அதனால் சமூகத்தில் ஒரு புரட்சியே உண்டாகும் ; அரசும் தொழிலாளிகளின் வசமே இருக்கும். இவற்றின் விளைவே, பொதுவுடைமைக் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது ; அதுவே இரண்டாவது நிலையுமாகும். அங்கே அரசு (State) இருக்காது ; வர்க்கபேதங்களும் இருக்கமாட்டா.

தொழிலாளிகள் (Proletariat) அரசைக் கைப்பற்றாமல், சமூகத்தில் எந்தவிதமான மாற்றங்களையும் உண்டு பண்ண முடியாது ; வன்முறைச் செயல்களாலன்றி அரசைக் கைப்பற்றவும் இயலாது ; இவ்விதம் அரசைக் கைப்பற்றி, முதலாளித்துவ சமூகத்தை, பொதுவுடைமைச் சமுதாயமாக மாற்றுவது வரலாற்று முக்கியத்துவமாகும் என்பது லெனின் கூறும் கருத்துகளாகும். எனவே, பொதுவுடைமைச் சமுதாயத்தை நிருமாணிப்பதில், அரசு சர்வாதிகாரமாகத்தான் செயல்படும் . அந்நிலையில், சட்டதிட்டங்களுக்கோ, சம்பிரதாயங்களுக்கோ இடமிருக்காது என்பதும் வெளிப்படை. சர்வாதிகார ஆட்சியானது தானுகவே, தனக்குகந்தவற்றைச் சட்டங்களாக அமைக்கும் ; அதனை அமுல் நடத்தும் ; அவற்றை எதிர்ப்போர்கள் மரணதண்டனைக்குள்ளாவர் ! தொழிலாளர் கட்சியைத்தவிர, வேறு எந்தக் கட்சியும் அல்லது கொள்கையும் இடம் பெருது. இவை யாவும் சர்வாதிகார ஆட்சியின் குணுதிசயங்கள் என்று சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்நிலையில், தனி மனிதனின் உரிமைகளுக்கோ ஜனநாயகப் பண்புகளுக்கோ எவ்விதமான மதிப்பு இருக்கமுடியும் என்பதை வாசகர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன் ; இதற்குக்காரணம், வாசகர்களின் தெளிவான சிந்தனையில் அவ்வளவு நம்பிக்கை எனக்கு !

இருந்தபோதிலும், மேற்குறிப்பிட்ட சர்வாதிகார ஆட்சியின் அம்சங்கள் வெறும் கட்டுக்கதை அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், இவ்வித நிலைமைகள் 1917ஆம் ஆண்டு ரஷியப் புரட்சிக்குப் பின், ஸ்டாலினின் (Stalin) சர்வாதிகார ஆட்சியில் நிலவியது என்பதை வரலாறு

ஓரளவு மறைத்திருக்கிறது என்பது உண்மை; ஆனல் நிச்சய மாக மறந்து விடவில்லை! மேலும் பொதுவுடைமைக் கொள் கையின் ஒரு முக்கிய அம்சமாகிய அரசு அழிந்து போதல் (State Withers Away) என்பதை, ரஷியப் பொருளியல் நிபுண ரான ஏங்கல்ஸ் (Engles) என்பார் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிருர்: பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றும் நாட்டில், அரசு அழியாமல் நிலைத்து நிற்கிறதென்ருல், அவ் வரசை வைத்துக்கொண்டு, உலகத்தின் மற்ற அரசுகளையும் தன்வசம் சேர்ப்பதற்காகப் பயன்படுத்துவதற்கே என்ற சாதுர்யமான, ஆனல் பொருள் நிறைந்த விளக்கத்தையும் வாசகர்கள் கவனிக்கவேண்டும்.

## தொழிற்சங்கப் பொதுவுடைமை (Syndicalism)

மார்க்ஸின் கொள்கைகளைத் தழுவியதாக இருந்தாலும், தொழிற் சங்கப் பொதுவுடைமைக் கொள்கைகள் புரோதா (Proudhon) என்ற பிரெஞ்சுப் பொருளியல் நிபுணரால் தோற்று விக்கப்பட்டது. தம்முடைய கொள்கைகளைக் கூட்டுறவுச் சமு தாயம் (Associative Communism) என்ற தலைப்பில் வெளியிட்டு, தாம் நினைக்கும் சுதந்திரச் சமுதாயம் எவ்விதம் இயங்கவேண்டு மென்பதைச் சுட்டிக்காட்டினர் புரோதா. இவருடைய கோட் பாடுகளில் முக்கியப்பங்கினை வகிப்பது தொழிற்சங்க நிறுவனங் களாகும்; அவையே சமுதாயத்தின் அடிப்படை அரசியல் நிறுவனங்களாகவும் கருதப்படுகிறது என்பதும் கவனிக்கற் பாலது. அதனல்தான் தொழிற்சங்கப் பொதுவுடைமை என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், இக்கொள்கையில் தொழிலாளியின் உழைப்பிற்கு முதலிடம் தரப்படுகிறது. அதன் காரணமாகவே, தொழிலாளிகள், தாங்கள் உற்பத்திசெய்யும் பொருட்களை மட்டுமல்லாமல் சமூகத்தையும் நிருவகிப்பதற்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்படு கின்றன. சுருங்கக்கூறின், பொருளியல் துறையில் மட்டு மல்லாமல், அரசியல் துறையிலும் தொழிலாளர்கள் அதிகாரம் செலுத்த வேண்டுமென்பதே, தொழிற்சங்கப் பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படை அம்சமாகும்.

தொழில் நிறுவனங்களைத் தொழிலாளிகளே நிருவகிக்கும் போது, அந்நிறுவனங்களின் திறமையும் வளர்ச்சிபெற்று, முன் னேற்றமடைகிறது என்பது தொழிற்சங்க நிறுவனங்களின் நம் பிக்கையாகும். தொழிலாளிகளும் நிருவாகத்தில் பங்கு கொள்வ

தால், அவர்களுக்கும் தாம் எல்லோரும் சுதந்திரத் தோழர்கள் என்ற தெம்பும் ஏற்படுகிறதென்பதாம். இதனுல் சமூகத்திற்குத் தேவையான பொருளை உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், சமுதாயத்தையே நிருவகிக்கும் பொறுப்பும் தொழிலாளியிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்பதும் கவனிக்கற்பாலது. மேலும், பொருளியல்துறைதான் சமூகத்தின் பல்வேறு துறைகளில் மிகவும் முக்கியமானது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது; அதுவே மார்க்ஸின் அடிப்படைக் கொள்கையுமாகும். தொழிலாளர்களின் நலனை வேண்டி, அவற்றைப் பெறுவதற்கு, பயன்படுத்தக்கூடிய வன்முறைச் செயல்களில் முக்கியமானவை பின் வருவன :

1. தொழிற்சாலையின் இயந்திரங்களைச் சேதப்படுத்துதல்.
2. அதிக நேரத்தில் குறைந்த வேலை செய்தல்.
3. ஒத்துழையாமை.

## தீவிர சமூகப் பொதுவுடைமைக் கொள்கைகள்
## (Evolutionary Theories of Socialism)

### (1) கூட்டுப் பொதுவுடைமை (Collectivism)

தீவிர சமூகப் பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் பின்வருவனவாகும்: அரசு (State) நிலைத்து நிற்கும்; மக்களுக்கு வேண்டியன யாவும் அரசினராலேயே அமைத்துக் கொடுக்கப்படும்; இவை யாவும் சட்ட திட்டங்களுடன் கூடிய ஒரு சமுதாய அமைப்பிலேதான் அமுல் நடத்தப்படும் என்பனவாம். எனவே, வன்முறைச் செயல்களுக்கோ, உடனடியாக ஏற்படுத்த முற்படும் சமூக நிறுவனங்களுக்கோ இடமில்லை என்பது தெளிவு. ஏனென்றால், சமூக முன்னேற்றமென்பது திடீர் என்று தோன்றுவதன்று; அது ஒரு இயற்கை வளர்ச்சியாகும். எனவே, மெதுவாகவும், உறுதியாகவும், உண்மையாகவும் பரிணும முறையிலே வளர்ந்து நிலைபெற வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வடிப்படையில் அமையும் பொதுவுடைமைக் கோட்பாடுகளும் சில முக்கியத் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன என்பதும் கவனிக்கற்பாலது. அவற்றின் பிரகாரம், உற்பத்தி நிறுவனத்தை (Production), அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்; உற்பத்தியான பொருட்களை மக்களின் நலனுக்கும் நன்மைக்கும்தான் பங்கிடப்பட்டுத் தரவேண்டுமேயொழிய, இலாபகரத்திற்காக விற்பனையாகக் கூடாது. ஆகவே, பொதுவுரிமைக் கோட்பாடு வலியுறுத்தும் சமுதாய அமைப்பு,

தற்போது இயங்கிவரும் நிறுவனங்களையோ அல்லது இயற்கையாக அமைந்துள்ள சமுதாய அமைப்பையோ அழிப்பதல்ல; அவற்றை வைத்துக் கொண்டு, மேலும் சில மாற்றங்கள் ஜனநாயக முறையில் ஏற்படுத்தி, மக்கள் அதிக நன்மையும் நலனும் பெறுவதற்கு முயலுகிறது என்று சுருங்கக் கூறலாம். இக்குறிக்கோளை அடைவதில், மக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பும், உறுதிமொழியும், உண்மையான ஒற்றுமை உணர்வும்தான் வலியுறுத்தப்படுகின்றன. இவற்றிலிருந்து வன்முறைச் செயல்களுக்கே இடமில்லை என்பது தெளிவாக விளங்கும் உண்மையாகும்.

(2) வாணிகக் கழகப் பொதுவுடைமை (Guild Socialism)

19ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேய மக்களிடையே பரவி வளர்ச்சி பெற்ற ஒரு கொள்கையாகும் இது. இதன் அடிப்படை என்னவென்ருல், தொழில் நிருவாகத்தில் சுய ஆட்சி ஏற்பட வேண்டுமென்பதே; அவ்விதமான நிலைமைதான், 16ஆம் நூற்றுண்டில், வாணிகக் கழகங்கள் (Guilds) பெற்று, தங்களது வியாபாரத்தைத் தாங்களே நடத்தி வந்தனன; கூட்டங் கூட்டமாக வணிகர்கள், பல அயல்நாடுகளுக்கும் சென்று தங்களது வாணிகப் பொருட்களை விற்பனை செய்து நல்ல இலாபமடைந்தனர் என்று வரலாறு கூறுகிறது. வாசகர்களிடமிருந்து நான் மறைக்க விரும்பவில்லை; உண்மையைக் கூறிவிடுகிறேன். மேற்குறிப்பிட்ட முறையில்தான், ஆங்லேயர்களும், 16ஆம் நூற்றுண்டில் வியாபார நிமித்தமாக இந்தியாவுக்கு வருகை தந்தனர். அதன் பின்பு அவர்கள் எவ்விதம் வியாபாரம் நடத்தினர், எவ்வளவு இலாபம் பெற்றனர் என்பன போன்ற செய்திகளை ஆழமாக உணர்வதற்கு வாசகர்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டு அமைகிறேன்.

வாணிகக் கழகப் பொதுவுடைமைக் கோட்பாட்டின் முக்கிய அம்சம் என்னவென்ருல், வணிகர்கள் தாங்களாகவே விற்பனைப் பொருட்களைத் தயாரித்து, அவற்றின் விலை முதலியவற்றை அவர்களே நிருணயித்து மற்றவர்களுக்கு விற்ருர்கள். இந்நிலையில் யாருடைய குறுக்கீடும் இல்லாமல், தாங்களாகவே வியாபாரம் நடத்தினர்; நல்ல இலாபமும் பெற்றனர். அதன் காரணமாகவே, அவ்வாணிகக் கழகங்களே தங்களுக்குத் தேவையான படைபலம் முதலியவற்றையும் பெற்றிருந்தன. இந்த அடிப்படை நோக்கத்தைத்தான் வாணிகக் கழகப் பொதுவுடைமைக் கொள்கையும் வலியுறுத்தியது. இக்கொள்கையானது

ஆங்கிலேயே மக்களிடம்தான் அதிகமாகப் பரவியிருந்தது. மேலும் இக்கொள்கைக்கு அதிகமான ஆதரவு தந்தவர்களில் முக்கியமாகப் பென்டி (Penty) என்பாரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

1909 முதல் 1912 வரையில் பிரிட்டனில், தொழிற் கட்சியின் பிரச்சினைகள் மிகவும் மேலோங்கி நின்ற காலமாகும். தொழில் நிறுவனங்களும், அவற்றின் கூட்டமைப்புகளும் முக்கியத்துவம் பெற்றன. அந்நிலையில், வாணிகக் கழகம் ஏற்படுவதற்குச் சாதகமான சூழ்நிலையும் ஏற்பட்டது; பல தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பே வாணிகக் கழகம் எனப்பட்டது; அவ்வாணிகக் கழகம், சமுதாயத்தையும் நிருவகிக்கும் நிலைமை ஏற்படுவதே, வாணிகக் கழகப் பொதுவுடைமை என்பதாகும்; இதனை 1912இல் இங்கிலாந்தின் தொழிற்கட்சி அமுலுக்குக் கொண்டுவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வியக்கத்தின் எல்லாவிதக் கோட்பாடுகளும், ஜனநாயக முறையில், சட்டதிட்டங்களுடன் கூடிய சமுதாய அமைப்பில்தான் அமுலாக்கப்பட்டது என்பதும் கவனிக்கற்பாலது. தொழிலாளர்களுக்குத் தரப்பட்ட சம்பள விகிதம் (Wage System) நீக்கப்பட்டது; அதற்குப் பதிலாகத் தொழிலாளிகள், பங்குதாரர்கள் (Partners) என்ற நிலைமை உண்டாக்கப்பட்டது. இதன் விளைவுதான் வாணிபத்தில் சுய ஆட்சி என்ற நிலையை உண்டாக்கும் என்பதும் கவனிக்கற்பாலது.

மேலும் சில முக்கியமான கருத்துகள் வெளியிடப்பட்டன. அவையாவன: செயல்முறை ஜனநாயகம் (Functional Democracy): இதன் மூலம், தொழிலாளிகளுக்குப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், அவற்றைச் சமூகத்தில் விநியோகம் செய்வதற்கும் சுயஉரிமை அவர்கள் செய்யும் தொழிலுக்கேற்றவாறு அளிக்கப்பட வேண்டும். தொழில்துறையில் தன்னுரிமை ஆட்சி (Autonomy in Industry): இதன் மூலம், வியாபாரத் தொழில் முறையில் யாருடைய குறுக்கீடும் (அரசியல்) கூடாது என்பதாம். தொழில் துறையிலும், பொருள் துறையிலும் ஜனநாயகப் பண்பாடுகள் அமையாமல், அரசியல் துறையில் மட்டும் அப்பண்புகள் அமைய முடியாது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் மூலமாக, ஜனநாயகக் கோட்பாடுகள் மக்களுடைய வாழ்க்கைத் துறையில் எல்லா அமைப்புகளிலும் ஏற்படவேண்டும்; அவ்விதக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முக்கியமான நிறுவனங்கள் தொழிற்சங்கங்களாகும். அவற்றின் கூட்டுச்சேர்க்கையே வாணிகக் கழகம் எனப்படும். ஜனநாயகக்

கோட்பாடுகளின் வழியே சமுதாயம் நிருவாகம் செய்யப்பட வேண்டுமென்பதே இதன் நோக்கமும் குறிக்கோளும் ஆகும்.

## பாஸிஸம் (Fascism)

முதலாவது உலகப் போருக்குப் பின்னர் 1918இல், இத்தாலிய நாட்டில் பிறந்த புரட்சிகரமான கொள்கைகளில் பாஸிஸம் முக்கியமானதாகும். பாஸிஸம் என்ற சொல்லுக்கு 'இணைந்து ஒன்ருகச் செயல்படு' என்று பொருளாகும். இக் கொள்கையை ஊக்குவித்தவர் முஸோலினி என்பார் ஆவர். முதலாவது உலகப் போருக்குப்பின் இத்தாலிய நாடு பொருளாதாரத் துறையில் மிகவும் பின்னடைந்து விட்டது ; அந்நிலையை முற்றிலும் மாற்றி இத்தாலி ஒரு உயர்ந்த நாடாக மீண்டும் திகழ்வதற்குப் பாஸிஸக் கொள்கைதான் உதவி புரிந்தது என்பது கவனிக்கற்பாலது. இருந்த போதிலும், யதேச்சாதிகாரத்தையும், சர்வாதிகாரக் கொள்கைகளையுமே அடிப்படையாகக் கொண்டிருந்ததால், உலகத்தின் மற்றெந்தப் பாகங்களிலும் இதனைப் பின்பற்றவில்லை என்பதும் கவனிக்கற்பாலது ; மேலும், முஸோலினியின் மறைவுக்குப் பின்னர் இத்தாலியிலும் கூட இக் கொள்கை நிலைக்கவில்லை ; முஸோலினியின் மறைவோடு பாஸிஸக் கொள்கைகளும் மாண்டு போயின என்பதையும் வாசகர்கள் கவனிக்கவேண்டும். எனினும், பாஸிஸக் கொள்கைகள் சிலவற்றை அறிந்துகொள்வதால், நன்மைகளும் ஏற்படலாம்.

பாஸிஸம் துவங்கும்பொழுது, சமூகப் பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படையில்தான் ஏற்பட்டது. சுமார் 50 உறுப்பினர்களைக் கொண்டுதான் முஸோலினி தம்முடைய கட்சியைத் துவக்கினர் என்று வரலாறு கூறுகிறது. ஆனல் நாளடைவில், அவருடைய செல்வாக்கு அதிகரித்து, அவருடைய கருத்துகள் மக்களின் உள்ளங்களில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பியது ; அதன் காரணமாக முஸோலினியின் பதவிகளும் உயர்ந்தன ; இத்தாலிய நாட்டின் சட்டசபை, மக்கள் எல்லோரையும் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து விட்டார் முஸோலினி! இந்நிலையில் அரசியல் நிறுவனங்களையும், சமய (கத்தோலிக்க) நிறுவனங்களையும் தம் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் கருவிகளாக அமைத்துக்கொண்டார். இத்தாலிய மக்களை ஒன்று சேர்த்தார் ; செயல்படுத்தினர் ; செல்வாக்கையும் பெற்ருர். தேசீய உணர்வு ஓங்கி வளர்ந்தது ; அதற்குச் சர்வாதிகார ஆட்சிதான் சிறந்தது; அதுவும் முஸோலினியின் ஆதிக்கத்தில் அமைவது சிறப்பின்

சிகரம் என்ற எண்ணம் மக்களிடம் வேரூன்றிவிட்டது ; அந்நிலையில், மக்களின் உரிமைகளைப் பற்றியோ, அரசியலில் அவர்களுடைய பங்கினைப் பற்றியோ எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை.

இத்தாலிய நாட்டைத்தவிர, உலகத்தின் வேறெந்தப் பாகங்களிலும் பாஸிஸம் படரவில்லை என்பது உண்மை. இருந்த போதிலும் இத்தாலிய நாட்டு மக்களுக்குச் சுமார் 25 ஆண்டுகள் நல்ல முறையில் பயன்பட்டு, அதன் காரணமாக முன்னேற்றமடைந்த உலக நாடுகளுடன் ஒப்பிட்டுக் கூறும் அளவுக்கு, பாஸிஸம் நன்மை புரிந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. மேலும் முஸோலினியின் அரசியல் ஞானத்திலிருந்து பிறந்தது தான் கூட்டவை அரசு (Corporate State) என்பதாகும். முதலாளிகளின் நலன்களுக்கும், தொழிலாளிகளின் நன்மைகளுக்கும் இடையூறுகள் ஏற்படாமல் அக்கூட்டவை அரசு செயல்பட்டது என்பது கவனிக்கற்பாலது. இவ்வாறு இத்தாலிய நாட்டின் ஒற்றுமையை மேம்படுத்தி உற்பத்தியை உயர்த்தி, தேசீய உணர்வின் ஒற்றுமையையும் ஒன்று திரட்டி, எல்லாத் துறைகளிலுமே இத்தாலியின் முன்னேற்றத்தைக் காட்டினுர் முஸோலினி. இருந்த போதிலும், அவருடைய சர்வாதிகார ஆட்சியின் தன்மையினுலும், போர் வெறியாலும், இரண்டாம் உலகப்போரில் இத்தாலியைப் பங்கு கொள்ளச் செய்து, அதன் விளைவாக ஏற்பட்ட தோல்வியால் தம்முடைய கட்சியின் கொள்கைகளும் தோல்வி அடைவதற்கு அவரே காரணமாகிவிட்டார் என்பதையும் வாசகர்கள் கவனிப்பார்களாக.

## நாஜிஸம் (Nazism)

இக்கொள்கை ஜெர்மானிய தேசத்தில் பிறந்தது ; முதலாவது உலகப் போருக்குப்பின் வலுவடைந்தது ; இதன் முழுப் பெயராகிய தேசீய சமூகக் கட்சி (National Socialist Party) என்பதனை, நாஜி என்று சுருக்கமாகக் குறிப்பிட்டனர். இக்கட்சியின் பொறுப்பாளராகவும் தலைவராகவும் விளங்கியவர் ஏடால்ப் ஹிட்லர் (Adolf Hitler) என்பாராவர். முதலாவது உலகப் போரில் ஈடுபட்ட ஜெர்மனி, தோல்வி கண்டதால், நாட்டில் குழப்பமும், பொருளாதார இன்னல்களும் அதிகரித்திருந்தன. அவ்வித இக்கட்டான நிலைமையைச் சமாளித்து, நாட்டு மக்களை ஒன்று சேர்த்து, ஜெர்மனி தேசத்தின் மறுமலர்ச்சிச் சகாப்தத்தை உண்டாக்கியவர் ஹிட்லர் என்று கூறினுல் அது மிகையாகாது.

ஆனுல், எந்த விதத்தில், இவ்வித நிலைமையை ஜெர்மானிய மக்களுக்கு அளித்தார், அதன் காரணமாக எப்பேர்ப்பட்ட விளைவுகள் ஜெர்மனியில் மட்டுமல்ல, உலக அரசியல் அரங்கி லேயே ஏற்பட்டன என்பதைக் காணும்போதுதான், ஹிட்லரின் சாதனைகள் ஒரு புறமும், அதனுல் நேர்ந்த வேதனைகள் மறுபுற மும் நின்றுகொண்டு, ஹிட்லரை ஒரு வீரர் என்று கூறுவதா, அல்லது இனவெறிகொண்ட சர்வாதிகாரி என்று அழைப்பதா என்பன போன்ற ஐயப்பாடுகள் எழுகின்றன, சிந்தனையாளர் களின் உள்ளங்களிலே. இருந்த போதிலும், வரலாற்று ரீதியிலே பார்க்கப்போனுல், உலகத்தையே தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வர வேண்டுமென்ற ஆசைகொண்ட மகா அலெக்ஸாண்ட ருக்குப்பின், அதைப் போன்ற எண்ணத்துடன் செயல்பட்ட தற்கால அரசியல்வாதி ஹிட்லர் என்று குறிப்பிடும் அளவுக்குப் புகழடைந்து விட்டார். எனவே, ஹிட்லரைப் பற்றிச் சிறிதளவு விளக்கமாகவே அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் வாசகர் களுக்கு உண்டு என்றே நான் கருதுகிறேன்.

முதலாவது உலகப் போருக்குப்பின் சிதைந்து கிடந்த ஜெர்மானிய நாட்டையும், சோம்பிக்கிடந்த ஜெர்மானியர் களையும் தட்டி எழுப்பினுர் ஹிட்லர்; அந்நிலையில் அவர் பயன் படுத்தியது, சுருக்கமாகக் குறிப்பிட்டால், இனவெறி என்றுதான் சொல்ல வேண்டும். ஹிட்லரின் மெயின் காம்ப் (Mein Kmpf) என்னும் நூலில், அவருடைய கொள்கைகள் ஒருவாறு விளக் கப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது ஜெர்மானிய மக்களின் இன உணர்ச்சியைப் பற்றியதாகும். ஜெர்மானிய மக்களான 'நார்டிக்' இனத்தவர்தான் உலக மக்கள் இனத்தி லேயே உயர்ந்த இனத்தவர் என்றும், அவர்கள் யாருக்கும் அடிமைகளாக வாழ வேண்டிய அவசியமில்லை என்றும், சொல் லப் போனுல், அவர்கள் தங்களுடைய நாட்டை மட்டுமல்ல, உலகத்தையே ஆளப்பிறந்தவர்கள் என்று தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார் ஹிட்லர். இவ்வுணர்ச்சிக்குரலை, உணர்ச்சி வசமாக இருந்த ஜெர்மானிய மக்களும் முழுதும் நம்பினர். இவ் விதமாக இனவெறியைத்தூண்டி, கட்சியை அமைத்து, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தனர் நாஜிக் கட்சியினர்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தார் ஹிட்லர்; அந்தோ! அவரும் ஒரு மனிதர் தானே? அதிகாரபோதை அவருக்கு மட்டும் விதி விலக்கு அளிக்குமா? இல்லவே இல்லை; நிச்சயமாக இல்லை! விளைவு? சர்வாதிகாரியாக மாறினுர் ஹிட்லர்!! இயற்கையாகவே போர் வீரரான ஹிட்லருடைய உள்ளத்தில் போராவல் பேரா

வலாக மாறியது; அதுவும் இயற்கைதானே!!! மக்களாட்சி என்பது சக்தியற்றது; பயனற்றதும்கூட, என்பது ஹிட்லரின் உறுதியான கொள்கை. அதனை நிரூபிப்பதுபோலவே, அன்றைய ஜெர்மானிய வைமார் (Weimar) குடியரசும், மக்களின் தேவைகளை நல்லமுறையில் அமைத்துக்கொடுக்க இயலவில்லை. எனவே, ஹிட்லரின் உபதேசங்களுக்கு அதிக வலிமை ஏற்பட்டது. அதன் காரணமாக அவருடைய கொள்கைகளைப் பின்பற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டிருந்தது. சந்தர்ப்பவாதியான ஹிட்லர் வீர முழக்கம் செய்தார்; சமாதானம் என்பது சோம்பேறிகளின் கூக்குரல்; அது ஜெர்மானிய மக்களுக்கு உகந்ததன்று; ஒவ்வொரு ஜெர்மானியனும் சிறந்த போர் வீரன்; எனவே, போரிடுவதற்குச் சிறிதும் தயங்கவோ, அஞ்சவோ கூடாது. அப்போதுதான் ஜெர்மானிய மக்களின் வீரப் பிரதாபத்தை உலக மக்களுக்கே உணர்த்த முடியும்; உலக சாம்ராஜியத்தை அமைக்கவும் முடியும். ஹிட்லரின் வீரகர்ஜனையில் அடங்கிக்கிடக்கும் உணர்ச்சிகளையும், பேராசைகளையும் வாசகர்கள் நிதானமாகவும் சீரான சிந்தனையோடும் கவனிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

'ஜெர்மனி; ஜெர்மனிதான் எல்லாவற்றிற்கும் மேலானது' (டுயட்லாண்ட்; டுயட்லாண்ட் உபர் அல்லஸ்) என்று கர்ஜித்தார் ஹிட்லர். தேசீய உணர்வு கட்டுக்கடங்காத நிலையை எட்டிவிட்டது என்றே கூறவேண்டும். இவ்வுணர்ச்சி மயமான நிலையில், யூதர்களைக் கிரமமாக ஒழிக்கும் பணியினையும் துவக்கிவிட்டார் ஹிட்லர். தங்களுடைய உரிமைகளைப் பற்றிக் கவலைப்படாத ஜெர்மானிய மக்களும், அவர்களை 'ஒன்றுபடு, போராடு' என்று கட்டளையிடும் சர்வாதிகாரியின் குரல் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து செயல்படும்போது எவ்விதமான அரசியல் நிலைமை ஏற்படும் என்பதையும் வாசகர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். மேலும், நாஜிஸக் கொள்கைகள், சமூகப் பொதுவுடைமைக் கொள்கையை முற்றிலும் பின்பற்றவில்லை. ஆனாலும், அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட தொழில் உற்பத்தி நல்ல முறையில் இயங்கிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. தொழிற்சாலைகளை நடத்துவதற்கு முதலாளிகளுக்கே முழு உரிமையும் கொடுக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக, நாட்டின் உற்பத்தி செழித்தது; செல்வம் குவிந்தது. இதன் விளைவாக, உலகச்சந்தையில், மற்ற நாடுகளுடன் போட்டியிட்டு, வெற்றிக்கொள்ளும் அளவுக்கு ஜெர்மனி உயர்ந்தது; அதுவும் ஹிட்லரின் தலைமையில்! இந்நிலைதான் இரண்டாவது

உலகப் போருக்கே அடிக்கல் நாட்டியது என்ருல் அது வரலாற்று உண்மையாகும்.

இவ்விதமாகச் சந்தர்ப்பச் சூழ்நிலைகள், ஹிட்லரின் சர்வாதிகாரத்தைத் தலைவணங்கிப் போற்றும் அளவுக்கு உயர்த்திவிட்டது என்பதை உணர்ந்தோம். அதன் காரணமாகவே, அன்று பிரிட்டனின் ஆட்சிப் பீடத்தில் பிரதமராக வீற்றிருந்த அரசியல் மேதை சர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறினர்: 'ஹிட்லரைப் போன்ற வீரன், தற்போது எனக்குத் தேவை'. வேற்று நாட்டவரே போற்றும் அளவுக்குப் புகழின் உச்சநிலையை எட்டிப் பிடித்துவிட்ட ஹிட்லரை, ஜெர்மானிய மக்கள் வணங்கி, வாழ்த்திஞர்கள் என்ருல் அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை என்றே நான் கருதுகிறேன். ஆகவே, ஜெர்மானிய மக்களுடைய நல்வாழ்விற்கு ஒரே வழி; அதுதான் ஹிட்லர் காட்டிய வழியும், நாஜிஸக் கொள்கைகளுமாகும். ஹிட்லரின் குரல், ஜெர்மானிய மக்களின் குரலாகும்; எனவே ஹிட்லரின் குரலை எதிர்ப்பது, மக்களையே எதிர்ப்பதாகும் என்பன போன்ற உணர்ச்சி வசப்பட்ட கருத்துகளும், மக்களிடையே பரவி இருந்தன. இந்நிலையில், ஹிட்லரை எதிர்த்தோர், மரண தண்டனைக்கு ஆளாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது; அவ்விதச் செயல்களை மிகவும் இரகசியமாகவே நடத்துவதற்கும் ஒரு படை இயங்கிவந்தது; அதற்குப் பெயர் 'கெஸ்டபோ' என்பதாம். சர்வாதிகார ஆட்சியின் மூலமாக இத்துணைத் திட்டங்களையும், உள்நாட்டில் இயக்கியும், வெளிநாட்டு உறவுகளிலே யதேச்சாதிகாரத்தையும் பயன்படுத்தி, இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்ட ஹிட்லர், முதன் முதலில் வெற்றிகளைப் பெற்றபோதிலும், இறுதியில் தோல்வியடைந்து, அதன் விளைவாக அக்கட்சியும் சிதறுண்டுபோயிற்று என்பதும் வரலாற்று மூலம் அறியும் செய்திகளாகும்.

# 14. காந்தி அடிகளின் அரசியல் தத்துவம்

## 1869 — 1948

இருபதாம் நூற்றுண்டில் தோன்றிய மக்கள் தலைவர்களில் ஒருவராக மட்டுமல்லாமல், ஒப்பற்றவராகத் திகழும் காந்தி அடிகள் இந்தியாவில்தான் (குஜராத் மா நிலத்தில்) தோன்றினுர்; இந்தியர்களுக்கே உபதேசம் செய்தார். அவருடைய உபதேசக் கருத்துகள், இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல், உலக மக்களுக்கே பயன்படும் அளவில் வளர்ந்து வல்லமை பெற்றுவிட்டது என்பதைச் சிந்தனையுலகம் நன்கு அறியும். இந்நிலையில், காந்தி அடிகளின் கருத்துகள், ஒரு நாட்டிற்கோ அல்லது ஒரு மக்களினத்திற்கோ என்று மட்டும் கொள்வது உண்மையல்ல; அது மனிதச் சமுதாயத்திற்கே உரியதாகும் என்பதுதான் உண்மையாகும். அப்பேர்ப்பட்ட உலகத்தலைவனை ஈன்றெடுத்தது இந்தியத்தாய் என்ருல், அதைவிடப் பெரிய பேறு இந்தியர்களுக்கு எதுவாக இருக்கமுடியும் என்பதை வாசகர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நம்மிடையே தோன்றி, நம்மிடையே வளர்ந்து நம் நல்வாழ்விற்காகவே உழைத்து, நம் நாட்டின் பெருமையை உலகுக்கு எடுத்துக் கூறி, உண்மைக்காகவே உயிர்த் தியாகம் புரிந்த உத்தமர், உயர்ந்த மனிதர், மனிதருள் மாணிக்கம் மகாத்மா காந்தியாவர். அவருடைய கருத்துகள், மனித வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் தேவையானவை. அந்நிலையில், அவை அனைத்தையும் இங்கு எடுத்துக்கூறி விளக்கம் தருவதும் இயலாது. எனினும் அண்ணலின் அரசியல் கருத்துகளை மட்டும் ஓரளவு விளக்கமாக எடுத்துக் கூறுவது அவசியம் என்று கருதுகிறேன்.

காந்தி அடிகள் அரசியலைப் புனிதப்படுத்தியவர் என்று தற்கால அரசியல் மேதைகள் அறிவுறுத்துகின்றனர். அவ்விதம்

அரசியலைத் தூய்மைப்படுத்தியவர் காந்தி அடிகள் என்றால், அவர் எந்த முறையில் தூய்மைப் படுத்தினார், அதனால் ஏற்பட்ட நன்மைகள் யாவை என்பதைப் பற்றித்தான் ஓரளவு விளக்கமாக விவரிக்க முயல்கிறேன். இளமையிலிருந்தே காந்தி அடிகள் சமயத்துறையில் மிகவும் பற்றுக் கொண்டவராகத் திகழ்ந்தார். இந்து சமயத்தில் ஈடற்ற பக்தி கொண்டிருந்தாலும், ஜைனம், கிருஸ்துவம், இஸ்லாமியம் போன்ற சமயங்களிலும் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். சட்டப்படிப்பிற்காக இலண்டன் மாநகரம் சென்று அங்கு வாழ்ந்த நாட்களில், சட்ட நூல்களைவிட, சமய நூல்களையும் மேல்நாட்டுச் சிந்தனையாளர்களின் சமூகக் கருத்துகளையும், கொள்கைகளையும் அதிகமாகவே அறிந்து கொண்டார் என்றே சொல்ல வேண்டும். விவிலிய நூல் (The Bible), குரான் (Quran), மேற்கத்திய கடவுளுணர்வு (Western Theosophy) போன்ற நூல்களை ஊன்றிப் படித்ததன் விளைவாக, தாம் முன்பே படித்திருந்த பகவத்கீதையின் உயர்ந்த கருத்துகளை இன்னும் நல்லமுறையில் தம்மால் அறிந்து கொள்வதற்கு முடிந்தது என்று அவரே குறிப்பிட்டுக் கூறியுள்ளார் என்பது கவனிக்கற்பாலது. பகவத் கீதையின் உபதேசங்களை, தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார் என்று தம்முடைய சுயசரிதையில் (Autobiography) சுட்டிக்காட்டியுள்ளார் காந்தி அடிகள். அவ்வளவு ஈடுபாடு இந்து சமயத்தில் அவர் கொண்டிருந்த போதிலும், மற்றச் சமயங்களின் கருத்துகளையும், அதே ஆர்வத்துடன் பின்பற்றினார், மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறினார் என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். அதே நேரத்தில், இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள எல்லாக் கருத்துகளையும் சரியானதென்றே காந்தி அடிகள் ஒப்புக் கொள்ளவில்லை என்பதும் கவனிக்கற்பாலது. இந்நிலையில் பகுத்தறிவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. மக்கள் சமூகத்திலே ஒருவருக்கொருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டு உணர்ச்சிகளைத் தூண்டும் கருத்துகளை ஒப்புக் கொள்ளாத பகுத்தறிவாளர் காந்தி அடிகள். மனிதர்கள் எல்லோரும் ஓர் இனம், ஒரு குலம் என்னும் உயர்ந்த கண்ணோட்டத்தை வலியுறுத்திய உத்தமர் காந்தி அடிகளாவார்.

காந்தி அடிகளின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்த மேல் நாட்டுச் சிந்தனையாளர்களில் ஒருவரை முக்கியமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்; அவர்தான் ரஸ்கின் (John Ruskin) என்ற பொருளியல் வல்லுநர். அவருடைய 'இந்த முடிவுக்கு' (Unto This

Last) என்னும் நூலைக் காந்தி அடிகள், முதல் பக்கத்திலிருந்து முடிவு வரை, ஒரே இரவில் படித்து முடித்துவிட்டு, அந்நூலில் கூறியுள்ள கருத்துகளின் பிரகாரம், தம்முடைய வாழ்க்கையையும் நடத்துவது என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டதைக் குறிப்பிடப்பட்டுள்ளது, வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய செய்தியாகும். "அந்த நூல் என்னுடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது", என்று காந்தி அடிகளே கூறியிருக்கிறார். அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியக் கருத்துகள் பின்வருவனவாகும்: எல்லோருக்கும் நன்மை பயக்கும் பொருளாதார அமைப்பே, பொருளியலின் சிறப்பாகும்; மனிதன் வாழ்கிறான் என்றால், சமூகத்திற்காக நல்லதோர் தொழிலைச் செய்துதான் வாழவேண்டும்; உதாரணமாகக் கூறினால், செருப்புத் தைப்பவன், நாணயமான தன்னுடைய தொழிலால் சமூகத்திற்குச் சேவை புரிகிறான்; அறத்தின் அடிப்படையில் அமைந்த சட்டங்களுக்காக வாதிடும் வக்கீலும், சமூகத்தின் நன்மைக்காகவே உழைக்கிறான். இக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டுதான் பின்நாட்களில் சர்வோதயம் (Sarvodaya) என்னும் கோட்பாடும் வளர்ச்சியடைந்தது எனக் கூறலாம். மேலும், மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன் தானே அதனைப் பின்பற்றி, அவற்றின் நன்மை தீமைகளை உணர்ந்து, அதற்குப் பிறகுதான், மற்றவர்களையும் அதன்படி நடக்குமாறு பணித்தார் காந்தி அடிகள். இந்நிலையில்தான் அவருடைய உத்தமமான பண்புகள் அடங்கியுள்ளன என்பதை அழகாக வருணித்திருக்கிறார் ரவீந்திரநாத் தாகூர்.

சமூகப் பிரச்சினைகள், சமயப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள் என்று வெவ்வேறு நிலையில், மக்களின் பிரச்சினைகளை, காந்தி அடிகள் அணுகவில்லை என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். அவ்வித வேறுபாடுகளை அமைத்துக்கொள்வதால், ஒரு மனிதனையே பல கூறுகளாகப் பிரிப்பதற்கு ஒப்பாகும் என்பது அவருடைய கருத்தாகும். ஏனென்றால், மனிதன் முழு மனிதனாகச் செயல்பட வேண்டுமென்றால், அவனிடத்திலே சமயப் பண்பும், அரசியல் அறிவும், சமூக நோக்கமும் ஒன்றாக அமைய வேண்டுமென்பது காந்தி அடிகளின் அறிவுரையாகும். மேலும், சமூகத்தைச் சீர்திருத்துவதற்குச் செய்ய வேண்டிய முதல்கடமை என்னவென்றால், தனிப்பட்ட மனிதனைச் சீர்திருத்தவேண்டும். ஒவ்வொரு மனிதனும் சீர்திருந்தாமல் சமூகம் எவ்வாறு சீர்திருந்தும்? நாடு எப்படிச் சீர்திருந்தும்? மக்கள் இனமே எவ்வாறு சீர்திருந்தும்? என்பன போன்ற கேள்

விகளை எழுப்பி, அவற்றிற்குப் பதிலும், விளக்கமும் தரும் பாணியில், காந்தி அடிகள் கூறியுள்ள அறிவுரைகள், இந்தியர்களுக்கு மட்டுமல்ல, மனிதச் சமுதாயத்திற்கே பொருந்தும் என்பதும் கவனிக்கற்பாலது. சமூகச் சீர்திருத்தம் என்னும் கோட்பாடு, தனிமனிதனின் சீர்திருத்தம் என்னும் தத்துவத்தில் அடங்கியிருக்கிறது என்ற உண்மையை எடுத்துக் கூறியுள்ளார் காந்தி அடிகள். ஆகவே, ஒவ்வொரு மனிதனும் சீர்திருந்திச் செம்மையாக நடந்துகொள்ள முற்பட்டுவிட்டால், அச்சமூகமே, ஏன் அந்நாடே சீர்மை பெற்றுச் சிறப்பெய்தும் என்பதும் பெறப்படும். இந்நிலைமையை அடைவதற்குச் சில உபாயங்களை உபதேசித்தார் காந்தி அடிகள். அவ்வுபாயங்கள் பின்வருவன வாகும்: வாய்மை, அகிம்சை, வழியும் முடிவும் என்ற கோட்பாடு. இனி அவற்றைச் சிறிது விளக்குவோம்.

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்களுக்கு ஒரு சிறிதும் தீமையில்லாத சொற்களைச் சொல்லும் அறமாகும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்;[20] இதனை அப்படியே ஒப்புக்கொண்டு அதன் பிரகாரமே வாழ்க்கை நடத்தினார் காந்தி அடிகள் என்று கூறினால் அது உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை எனலாம். மனிதனின் அன்றாட வாழ்வில் இன்றியமையாதது வாய்மை; சொல்லிலும் செயலிலும், நடத்தையிலும் வாய்மை இருந்தால்தான், மனிதன், முழு மனிதனாகிறான் என்பது காந்தி அடிகளின் அறிவுரை அதன் காரணமாகத்தான் வாய்மைக்கும் உயர்ந்தது வேறொன்றுமில்லை என்றும் குறிப்பிட்டார். ஏனென்றால், காந்தி அடிகளின் சொல்லகராதியில், வாய்மையே கடவுளாகும்! வாய்மையை நாடும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், கடவுளைத்தான் நாடுகின்றனர் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்மைக்கு அளிக்கப்பட்டிருப்பதன் வாயிலாக, அதனைப் பின்பற்றும் மனிதனின் உள்ளம் எத்தன்மையதாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவதுபோலவே, அகிம்சை என்னும் மனிதத்தன்மையை, வலியுறுத்துகிறார் காந்தி அடிகள். அகிம்சை என்றால் கொல்லாமை, பொய் சொல்லாமை என்று மட்டும் பொருளல்ல; பிறருக்குத் தீங்கு செய்யாமை என்று மட்டும், பொருளல்ல; தீமையான செயல்களைப் பற்றியே மனத்தாலும் நிலையாமை என்பதுதான் அகிம்சை. அகிம்சை என்னும் பண்பு எவ்வளவு

20. Tirukkural No. 291.
'What is truthfulness? It is the utterance of such words that smack not of even the slightest taint of evil'.

ஆழமானதென்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும்; இந்த இடத்தில்தான் காந்தி அடிகளின் தத்துவம் வெளிப்படுகிறது; ஏனென்றால், மேல் வாரியான நோக்கில் ஒழுக்கக் கட்டளைகளை அவர் வெளியிட்டுச் சொல்லவில்லை; அடித்தளத்தை நன்கு அமைத்த பின்பே, மனிதனின் உள்ளம் உறுதியாகப் பண்படுத்தப்பட்டதன் பின்னரே, ஒழுக்கவியல்புகள் பின்பற்றப்பட வேண்டும்; பின்பற்றவும் முடியும் என்பதைத் தன்னுடைய வாழ்க்கையிலேயே பயிற்சி செய்து அதன் பலனை உணர்ந்த பின்னரே மற்றவர்களுக்கும் உபதேசித்தார் காந்தி அடிகள்; இதனால்தான் தன்னுடைய சுயசரிதைக்கு 'உண்மையின் ஆராய்ச்சி' (My Experiment with Truth) என்ற தலைப்பையும் அமைத்தார் என்பதும் கவனிக்கற்பாலது.

வாய்மையும், அகிம்சையும் என்னவென்பதை நன்றாக உணர்ந்து, அவற்றை அன்றாட வாழ்வில் பின்பற்றுபவர்கள் தான், மூன்றாவதாகக் குறிப்பிட்ட, வழியும் முடிபும் என்ற கோட்பாட்டினையும் பின்பற்ற முடியும் என்பதனையும் கவனிக்க வேண்டும். பொதுவாக ஒவ்வொரு மனிதனும், ஏதாவ தொன்றினை அடைவதிலேயே முயன்று கொண்டிருக்கிறான். பொருளைச் சேர்ப்பதிலோ, புகழைச் சேர்ப்பதிலோ, பதவிகளைப் பெறுவதிலோ, வரம்பற்ற அதிகாரத்தைப் பெறுவதிலோ இன்னும் எத்துணையோ முறைகளில் மனிதன் முயன்று கொண்டிருக்கிறான். இந்நிலையில் தாம் அடைய விரும்பும் பொருளையே முக்கியமாகக் கருதி, எப்படியேனும் அதை அடைந்துவிட வேண்டும் என்று முயன்றால், அதனைச் சரி என்று ஒப்புக் கொள்ள மாட்டார் காந்தி அடிகள். ஒரு பொருளை அடைய முற்படுவது எவ்விதம் முக்கியமானதோ, அதைப்போலவே, அடைவதற்காக ஏற்படுத்திக்கொள்ளும் முறைகளும் முக்கியமானவையாகும்; தவறான முறைகளைக் கொண்டு நல்லதோர் முடிபை அடைந்துவிட முடியாது என்பது காந்தி அடிகளின் கருத்தாகும். எந்த நாட்டு மக்களாயினும், அடிமைத்தளைகளிலிருந்து அகற்றி விடுதலை பெறுவதில் அநேக நன்மைகள் விளையும் என்பது உண்மைதான்; அதற்காக, ரத்தக்களையும், வன்முறைகளும்தான் வழி என்றால், அவற்றின் மூலமாக விடுதலை பெறாமல் இருப்பதே நலம் என்று கருதுபவர் காந்தி அடிகள். சுருங்கக் கூறின், நல்ல முடிபுகளையும் நல்ல முறைகளோடுதான் அணுகவேண்டும்; அதன் காரணமாகவே அடைய வேண்டும். அதன் விளைவு எப்படிப்பட்டதாக இருக்குமென்றால், இருசாராருக்கும் - விடுதலை கொடுத்தவர்களுக்கும், அதனைப்

பெற்றவர்களுக்கும் மகிழ்ச்சியும் நன்மையும் ஏற்படுவதாக இருக்கும், என்பதை வாசகர்கள் நன்கு கவனிக்கவேண்டும்.

காந்தி அடிகளின் வழியும் முடிபும் என்ற கோட்பாட்டில் அமைந்து கிடக்கும் நன்மைகள் எல்லா நாட்டவருக்கும், எத் தருணத்திலும் பயன்பட்டு அதிக நன்மைகள் விளையும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; அதற்குக் கீழ்வரும் விளக்கம் ஓர் உதாரணமாகவே அமையும். பலாத்காரத்தால் ஒரு பொருளை அடையும் போதும், அதனைப் பெற்ற பின்பும் நாம் பெருமகிழ்ச்சி அடைந்துவிடக்கூடும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது; அதைப்போலவே, அப்பொருளை மனமின்றிப் பிறருக்குக் கொடுத்தவர்களும் நிச்சயமாக நிம்மதியடைய மாட் டார்கள். எனவேதான் ஒரு பொருளை அடைவதற்கு நாம் பின் பற்றும் வழியும், காந்தி அடிகள் காட்டும் வழியாக இருந்து விட்டால், அதைக் கொடுத்தவர்களுக்கும், பெற்றுக் கொண்ட வர்களுக்கும் மகிழ்ச்சிதான் உண்டாகிறது. காந்தி அடிகளின் தலைமையில் இந்தியாவின் சுதந்திரப்போரை அகிம்சா முறையில் நடத்திஞேம்; சுதந்திரம் பெற்ற இந்தியர்களும் மகிழ்ந்தனர்; இந்தியாவினுடைய சுதந்திரத்தை இந்தியர்களுக்கே அளித்து விட்டோம் என்று ஆங்கிலேயர்களும் பெருமையடைந்தனர். அதனாலன்றோ அன்று முதல் இன்று வரை இந்தியரும் ஆங்கிலே யர்களும் நண்பர்களாகவே வாழ்கிறோம். இவ்விதமான நிரந்தர நேச மனப்பான்மை ஏற்படுவதற்குக் காரணம், காந்தி அடி களின் வழியும் முடிபும் என்ற கோட்பாடு என்று கூறினால் அது மிகையாகாது. அதனால்தான் காந்தி அடிகளின் கருத்து கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் போற்றிப் புகழப்படு கின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

காந்தி அடிகளின் அகிம்சைத் தத்துவத்திற்கு இன்னும் சிறிது விளக்கம் தருவது நலம் எனக்கருகிறேன். ஏனென்றால், எல்லாச் சமயங்களின் அடிப்படையும் அகிம்சைதான் என்பது அண்ணலின் நம்பிக்கை; அதுதான் உண்மையுமாகும். இந் நிலையில், வாய்மையும் அகிம்சையும் ஒன்றுக்கொன்று எவ்வளவு நெருங்கிய தொடர்புடன் செயல்படுகின்றன என்பதைக் காண் போம். அன்றாட வாழ்க்கையில் அகிம்சை நேரடியாகவே தொடர்பு கொண்டுள்ளது; வாய்மை அத்தொடர்புகளுக்கு உறுதியளிக்கிறது. எனவே வாய்மையில்லாத அகிம்சை என்பது பொருளற்ற செயலாகிவிடும் என்பதையும் சுட்டிக்காட்டி யுள்ளார். இந்நிலையில்தான், அகிம்சையின் ஆழமான பகுதியை மீண்டும் விளக்குகிறார்; அதனை மூன்று பிரிவுகளாக அமைத்து,

அவற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிருர். தெளி; வான சிந்தனேயும், உறுதியான நம்பிக்கையும் கொண்டவர்கள் பின்பற்றும் அகிம்சை (Non-violence of the Enlightened) முதல் தரமானதாகும்; ஆதரவற்றவர்கள் பின்பற்றும் அகிம்சை (Passive Non-violence) இரண்டாம் தரமானதாகும்; கோழைகள் பிடிவாதமாகப் பின்பற்றும் அகிம்சை (Non-violence of the Coward) மூன்ரும் தரமானதாகும். இவற்றில் முதலில் கூறப்பட்ட, முதல் தரமான அகிம்சையையே காந்தி அடிகள் சிறப்பானதென்று வலியுறுத்தியுள்ளார் என்பதும் கவனிக் கற்பாலது.

அன்ருட வாழ்க்கையில், பொது வாழ்விலும் தனிப்பட்டோர் வாழ்விலும், துயரமும் துன்பமும் மனிதனே எதிர்கொள்ளத்தான் செய்கின்றன. அதனே அமைதியோடும், உறுதியோடும், உள்ளத் தூய்மையோடும் அணுகும் முறைக்குச் சத்தியாக்கிரகம் (Satyagraha) என்று குறிப்பிட்டார்கள் காந்தி அடிகள். இக் கோட்பாடு காந்தி அடிகள் வழங்கிய ஒரு சிறந்த அரசியல் கோட்பாடாக, இன்றைய அரசியல் உலகில் திகழ்கின்றது என்பதும் கவனிக்கற்பாலது. இருந்த போதிலும், காந்தி அடிகளின் சத்தியாக்கிரகக் கோட்பாடு எத்தன்மையானது என்பதையும் நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். தீமை களேத் தீமையாலும், வன்முறைகளாலும் தீர்த்துவிட முடியாது; உண்மையான அன்பிஞலும், தன்னலமற்ற தியாகத்திஞலும் தான் தீமையை அகற்றவியலும்; இந்நிலேயில் சத்தியாக்கிரகம் என்னும் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் முதலில் தங்க ளுடைய உள்ளங்களிலிருந்து தீய எண்ணங்களேக் களேந்தெறிய வேண்டும்; உள்ளம் புனிதமடையும் போதுதான், அங்கே உண்மை ஒளி வீசும்! அப்போதுதான், எதிராளியின் உள்ளத் தையும் உருக்க முடியும். இந்நிலேயில்தான் வாய்மையே வெல்லும் என்ற அடிப்படைத் தத்துவம் மலருகிறது. இதிலிருந்து சத்தியாக்கிரகம் என்பது எல்லோரும் எளிதாகக் கையாளக் கூடியதன்று என்பதும் பெறப்படும். எனினும், இம்முறையைக் கவனமாகக் கையாண்டால், மனிதனுக்கு மனிதன் வித்தியாச மாகக் கருதும் மனப்பான்மைகள் ஒழியும்: அந்நிலேயில் இரு வருக்கும் இடையில் உள்ள தெய்வீக உறவைத் தொட்டுக்காட்டு வதாகவும் அமையும். அதன் விளேவாக, ஒருவரையொருவர் எதிர்த்துக் கொள்வதற்கே வழியில்லே; ஏனென்ருல், இருவரும் சகோதரர்கள் என்ற உயர்ந்த பிணேப்பு உண்மையாகவே உணரப்படுகிறது. இன்றைய பல சூழ்நிலேகளிலும் சத்தியாக் கிரகம் பயன்படுத்தப்படுகின்றது; ஆனல் அவை யாவும் காந்தி

அடிகள் எடுத்துக் கூறிய உயர்ந்த கோட்பாட்டின் வழியே செயல்படுகின்றனவா என்பதையும் வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

காந்தி அடிகளின் சத்தியாக்கிரகக் கோட்பாடு அறத்தின் அடிப்படையில் அமைந்தது; அவற்றில் வன்முறைகளுக்கோ அல்லது படை பலத்திற்கோ இடமில்லை. மனிதனின் தன்னடக்கத்தாலும், தன்னுணர்வாலும், தன்னலமற்ற தியாக உணர்வுகளாலும், ஊக்குவிக்கப்பெற்று, வாய்மையே வெல்லும், என்னும் புனிதமான உணர்வின் அடிப்படையில் சத்தியாக்கிரகம் இயங்க வேண்டுமென்பதுதான் காந்தி அடிகளின் கருத்தாகும். உண்ணுமை (Fasting), ஒத்துழையாமை (Non-Co-operation) போன்ற நடவடிக்கைகள் சத்தியாக்கிரகத்தின் அம்சங்களாகக் கருதப்பட்டன. எனினும், அவற்றின் அடிப்படையாகிய அறத்தை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. ஏனென்ருல், அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்தச் செயலையும் காந்தி அடிகள் மனிதச் செயலாகக் கருதவில்லை என்பதையும் நாம் உணர வேண்டும். அதனுல்தான், அரசியலைப் புனிதப் படுத்தியவர் காந்தி அடிகள் என்றும் புகழப்பட்டார் என்பதையும் வாசகர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். இன்றைய அரசியல் உலகில், இந்தியாவில் மட்டுமல்லாமல், அகில உலக ரீதியிலே நோக்குவோமாகில், காந்தி அடிகளின் கருத்துகள் மனிதச்சமுதாயத்தின் பிரச்சினைகளைச் சுமுகமான முறையில் தீர்த்து, நேச மனப்பான்மையுடன் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு உற்ற துணையாக உள்ளனவென்பதை மேல்நாட்டு அரசியல் மேதைகளே ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் மக்களினமே நற்பயனடைந்து நல்வாழ்வு வாழவேண்டுமென்ருல் அதற்கு வழி காந்தி மகான் காட்டும் வழிதான் - அதுதான் அறவழி. இவ்வழியைப் பின்பற்றிஞல் எல்லாச் சிறப்பையும் செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ முடியும் என்பதையும் உறுதிப்படுத்திச் சென்ருர் வள்ளுவப் பெருமகனுரும்கூட.[21]

21. Ibid. No: 31.
'It is the spirit of righteousness that flings open the door of heaven and unlocks the treasures of earth; What else does profit man more than righteousness ?'

# 15. ஐக்கிய நாட்டு நிறுவனமும் உலக அமைதியும்

(United Nations Organisations and World Peace)

உலக நாடுகளிடைய ஒற்றுமையை நிலவச் செய்வதிலும் உறுதியான நட்பினை வளர்த்துக் கொள்வதற்கும் ஓர் அரிய சாதனமாக அமைந்துள்ளது ஐக்கிய நாட்டு நிறுவனம் என்று கூறினுல், அது மிகையாகாது. மேலும், இந்நிறுவனம் தோன்றி நிலைத்து நின்று அகில உலக நாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அரும்பணிகள் புரிந்து இன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன, என்பதைக் காணும்போது, இந்நிறுவனத்தின் பெருமையைக் குறைத்துக் கூறவே முடியாது. இந் நிறுவனம் ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆகியுள்ளது உண்மைதான். எனினும், இந்நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கைகள் அநேக ஆண்டுகளுக்கு முன்பே முளைத்து முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது உலகப்போர் முடியுந்தருவாயிலேயே பிரிட்டன், அமெரிக்கா போன்ற வல்லரசுகள், ஓர் உலகச் சமுதாய நிறுவனம் இயங்கி வரவேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்தன. ஏனென்ருல், இரு பெரும் வல்லரசுகள் ஒருவரையொருவர் சாடிக்கொள்ளும்போது, மூன்ருமவர் குறுக்கீடும் தேவைப்படுகிறது; போரினை நடத்துவதற்கு மட்டுமல்ல, போர்முறைகள் எந்தெந்த விதங்களில் செயல்படவேண்டுமென்பதை நிர்ணயிக்கவும், போர் நின்ற பின்பும் கைதிகளை எந்த முறையில் கண்காணிக்க வேண்டுமென்பதிலும், தோல்வியுற்ற நாட்டினரை எந்த முறையில் நடத்த வேண்டுமென்பது போன்ற பல பிரச்சினைகளை நல்லெண்ணத்தின் அடிப்படையில் தீர்க்கவும், நாடுகளிடையே நேச உறவுகளை ஏற்படுத்தவும் ஓர் உலக நிறுவனம் தேவை என்பதனை நன்கு உணர்ந்தனர். அதன் காரணமாகவே, 1919ஆம் ஆண்டில்

சர்வதேச சங்கம் (League of Nations) தோன்றியது. அச்சங்கமானது உலகநாடுகளின், முக்கியமாக வல்லரசுகளின் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களிடையே நல்லுறவுகளை ஏற்படுத்துவதற்கும் முயற்சி செய்தது. ஆனால் முழுவெற்றி அம்முயற்சியில் ஏற்படவில்லை. இவ்விதமான சூழ்நிலையில் இயங்கிவந்த அச்சங்கம், துடிப்புடன் செயல்புரியும் ஓர் அகில உலக நிறுவனம் ஏற்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்பதையும் குறிப்பிடவேண்டும். ஏனென்றால், இன்றைய ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கைகளும், அன்றைய சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளும் வேறுபட்டவையல்ல என்பதையும் நாம் காணலாம்.

1939ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலக வல்லரசுகளான ஜெர்மனி, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான் முதலியவை போரில் ஈடுபட்டுத் துடிப்புடன் விளங்கிய காரணத்தால், போர்புரிய வேண்டிய தன் அவசியத்தையும், அதனை அந்நாட்டு மக்கள் ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும், அந்நாட்டுத் தலைவர்கள் உணர்ந்தனர். இந்நிலையில் ஒரு சர்வதேச நிறுவனம் இயங்கி வரவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தனர். எனவே, முன்பே இயங்கிவந்த சர்வதேச சங்கத்தின் அடிப்படைகளைக் கொண்டு வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்தம் (NATO) என்பதை ஏற்படுத்தினர். அந்நிறுவனத்தின் முக்கியக் கோட்பாடுகளைக் காணலாம்: (1) மக்களுடைய உள்ளங்களிலிருந்து (போர்) பீதி அகல வேண்டும்; (2) மக்களிடையே உள்ள வறுமை ஒழியவேண்டும்; (3) மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்; (4) மக்கள் தங்களின் விருப்பப்படி சமயவழிபாடுகளைப் பின்பற்றவேண்டும். இக்கருத்துகள் மீண்டும் உணர்வு பெற்று, முக்கியத்துவம் அடைந்தது, ஐக்கிய நாட்டு நிறுவனம் அமைந்த பின்புதான்.

1942ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் அடிக்கல் அமைந்தது உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற செய்தியாகும். அந்நிறுவனம் அமையப்பெற வேண்டுமென்று அக்கறை எடுத்துக் கொண்ட தலைவர்களில் முக்கியமானவர்களை இங்கே குறிப்பிடுகிறேன்: சர் வின்ஸ்டன் சர்ச்சில் (Sir Winston Churchill)-பிரிட்டன்; ரூஸ்வெல்ட் (Roosevelt)-அமெரிக்க ஐக்கிய நாடுகள்; லிட்வினவ் (Litvinov) - ரஷ்யா ; சூங் (T. U. Soong) - சீனா. இந்நிறுவனத்தை அமைப்பதில் மிகவும் அக்கறை காட்டி அயராது உழைத்த, ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக விளங்கிய ரூஸ்வெல்ட், மறைந்த பின்பு, அவருடைய ஞாபகச் சின்னமாக, ஐக்கிய நாட்டு நிறுவனம் என்றும் பெயரிடப்பட்டது. 1942

லிருந்து 1945 வரை அந்நிறுவனத்தின் அமைப்பு பற்றிய பல கூட்டங்கள், பலப்பல இடங்களிலும், நாடுகளிலும் கூடின; அவ்விதமாகத் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் காரண மாக 1946ஆம் ஆண்டில் இந்நிறுவனம் முழு அளவில் நிறைவு பெற்றுச் செயல்படத் தொடங்கியது. சுமார் 50 நாடுகளுடைய பிரதிநிதிகளைக் கொண்ட அதன் முதற்கூட்டம் இலண்டன் மாநகரில் துவங்கியது. தற்போது (1972இல்) சுமார் 131 நாடுகளு டைய பிரதிநிதிகளைப் பெற்றுள்ளது. அண்மையில் (1972இல்) சீனவும் அந்நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது குறிப் பிடத்தக்கது.

## நிறுவனத்தின் அமைப்பு

### (1) பொதுச்சபை (General Assembly)

உறுப்பினர்களாக உள்ள எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் கூடும் பெருமன்றமாக இச்சபை திகழ்கிறது. இப்பெருஞ் சபையானது பல துறைகளாகப் பிரிந்து செயல்படுகிறது. அத் துறைகளாவன: பாதுகாப்புத்துறை; பொருளாதாரத்துறை; சமூகத்துறை; அறத்துறை; நிதித்துறை; நிர்வாகத்துறை என்பனவாம். எந்த ஒரு நாடும் பொதுச்சபையில் அங்கத்தின ராவதற்கு முதலில் பாதுகாப்புக் குழுவினரால்தான் சிபாரிசு செய்யப்பட வேண்டும். நேசதேசங்களைப் பற்றிய தீர்மானங் கள் $\frac{2}{3}$ பங்கு பெரும்பான்மையோடு இச்சபையில் நிறைவேற்றப் படுகின்றன. உறுப்பினர் நாடுகள் இச்சபையின் செலவை ஏற்றுக்கொள்கின்றன. நேசதேச நாடுகளின் பொதுவான பிரச்சினைகளே இச்சபையில் ஆராயப்படுகின்றன; தீர்மானங் கள் எடுக்கப்படுவதில்லை. எனவே, உண்மையான அதிகாரத் திற்கு உறைவிடமாக இருப்பது பாதுகாப்புக் குழுவேயாகும்.

### (2) பாதுகாப்புக் குழு (Security Council)

பொதுச்சபையின் இதயம் பாதுகாப்புக் குழு என்று கூறினல் அது பொருத்தமானதேயாகும்; ஏனென்றல், பொதுச் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கும் முடிவு கட்டும் அதிகாரம், பாதுகாப்புக் குழுவினரிடம்தான் இருக்கிறது. இக்குழுவில் பதினேரு அங்கத்தினர்கள் உள்ளனர். அவற்றில் நிரந்தர அங்கத்தினர்களாகப் பதவி வகிக்கும் நாடுகள்: (1) அமெரிக்க ஐக்கிய நாடுகள்; (2) பிரிட்டன்; (3) ரஷ்யா; (4) சீன; (5) பிரான்ஸ். மற்ற ஆறு அங்கத்தினர்களைத் தற்காலிக

உறுப்பினர்களாகப் பிற நாடுகள், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, மாறி மாறி அனுப்பி வைக்கின்றன.

பாதுகாப்புக் குழுவின் வாக்கெடுப்பு நடவடிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நேசதேச உறவுகளின் தன்மைப் பான்மைகளைத் தீர்மானிப்பதும் அதன் விளைவாக உலக அமைதியை நிலை நாட்டுவதும் இக்குழுவில் அமைந்து செயல் படும் வல்லரசுகளின் பிரதிநிதிகள் கையில்தான் இருக்கிறது என்பதும் கவனிக்கற்பாலது. இப் பிரதிநிதிகளிடையே ஒற்றுமை நிலவினால்தான், அவர்களின் முடிபுகளும் உலக ஒற்றுமைக்கு ஊன்றுகோலாக அமையும் என்பது சொல்லாமலே விளங்கும். இருந்தபோதிலும், சில சமயங்களில் வல்லரசுகளின் வேறுபட்ட கொள்கைகளின் காரணமாக இக்குழுவிலும் வேற்றுமைகள் ஏற்படுகின்றன; அதன் விளைவாக, உலக அமைதியும் பாதிக்கப்படுகின்றது. ஏனென்றால், எந்த ஒரு வல்லரசும் மற்ற நான்கு வல்லரசுகளால் கொண்டு வரப்படும் தீர்மானத்தை நிராகரிக்க முடியும்; இதற்கு வெட்டுரிமை (Veto) என்று கூறப்படும். எந்த வல்லரசு, எச்சூழ்நிலையில் இவ்வெட்டுரிமையைப் பயன்படுத்தியது; அதனால், உலக அரசியல் அரங்கில் நேர்ந்த விளைவுகள் என்ன என்பவற்றையெல்லாம் வாசகர்களின் பொது அறிவுக்கும், பொறுமையான சிந்தனைக்கும் விட்டு விடுகிறேன். இருந்தபோதிலும், ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. ஒரு வல்லரசு விரும்பாத செயலை, மற்றொரு வல்லரசு, எக்காரணத்தைக் கொண்டும் பாதுகாப்புக் குழுவில் செயல்படுத்த முடியாது என்பதாம்.

(3) சமூகப் பொருளாதாரக் குழு (Economic and Social Council)

இக்குழு நேசதேச நாடுகளின் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முக்கியமான பொருளாதார உதவிகளை அமைத்துக் கொடுத்து அவர்களின் சமூக நல முன்னேற்றத்திற் காகப் பாடுபடும் நிறுவனமாகும். 'உலக மக்களின் சமூகப் பொருளியல் வளர்ச்சிக்கும், வாழ்வின் தரத்தை உயர்த்தவும் ஐக்கிய நாட்டு நிறுவனம் உதவும்' என்று ஐக்கிய நாட்டுச் சாசனமே குறிப்பிட்டுள்ளது நம் கவனத்திற்குரியதாகும். பல துறைகளிலும் பின் தங்கிய நாட்டு மக்களுக்கு, 18 நாடுகளைக் கொண்டு இக்குழு செயல்பட்டு வருகிறது. உதாரணமாக, சமூகம், பொருளாதாரம், வேலையின்மை, பெண்டிர் கல்வி, தாய்மை நலன், குழந்தைகள் நலன், தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலன், தொழில் ஆராய்ச்சி, நாணயச் செலாவணி

என்பன போன்ற பிரச்சினைகளின் தீர்வுக்கு இக்குழுவானது பெருந்தொண்டாற்றி வருகிறது. இவற்றைத் தவிர, வேறு சில முக்கியமான நிறுவனங்களின் மூலமாகவும் பொதுப் பணிகள் செயல்பட்டு வருகின்றன. அந்நிறுவனங்கள் கீழ் வருவனவாகும்.

(அ) ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசாரக் கழகம் (UNESCO).

(ஆ) உணவு விவசாய நிறுவனம் (FAO).

(இ) சர்வதேச அபிவிருத்திப் பொருளகம் (IBRD).

(ஈ) உலகச் சுகாதார நிறுவனம் (WHO).

(உ) சர்வதேசத் தொழிலாளர் சங்கம் (ILO).

(ஊ) சர்வதேசப் பொது விமானப் போக்கு வரத்து நிறுவனம் (ICAO).

(எ) சர்வதேச நாணய நிதி (IMF).

(4) அறங்காவலர் குழு (The Trusteeship Council)

இக்குழுவின் முக்கியமான பணிகள் பின்வருவனவாகும். இரண்டு உலகப் போர்களிலும் ஈடுபட்டுத் தோல்வியடைந்த நாடுகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலப்பகுதிகள் இக்குழுவின் மேற்பார்வையில் அமைந்துள்ளன. மேலும், சுய ஆட்சி பெறுவதற்கு இன்னும் பக்குவமடையாத குடியேற்ற நாடுகளும் இக்குழுவின் பொறுப்பில்தான் இருக்கின்றன. அவ்வெல்லைகளில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கும் நல் வாழ்வுக்கும் இக்குழுவானது பாடுபடுகிறது. அப்பணியின் நிருவாகப் பொறுப்பு சில உறுப்பு நாடுகளின் நேரடியான கண்காணிப்பின்கீழ் கவனிக்கப்படுகின்றது. பாதுகாப்புக் குழுவில் நிரந்தரமாக உள்ள ஐந்து வல்லரசுகளும் அறங் காவலர் குழுவில் உறுப்பினர்களாக உள்ளன.

(5) சர்வ தேச நீதி மன்றம் (The International Court of Justice)

உறுப்பு நாடுகளுக்கிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்ப்பதற்கு இந்நீதி மன்றம் பயன்படுகிறது. பொதுவாக விவாதங்களோ அல்லது வழக்குகளோ இரண்டு நாடுகளுக் கிடையில்தான் ஏற்படும். எனவே இவ்விரண்டு நாடுகளும் இம்மன்றத்திற்கு முறையிட்டால்தான், அவர்களுடைய வழக் கினைத் தீர்வு காண்பதற்கு இந்நீதிமன்றம் முற்படும்; இம்மன்றத் தின் தீர்ப்புக்கு அந்நாடுகளும் கட்டுப்படவேண்டும். அவ்விதம்,

இம்மன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத ஒரு குறிப்பிட்ட நாட்டின் நடவடிக்கை ஐக்கிய நாட்டு நிறுவனத்தையே எதிர்ப்பதாகக் கொள்ளப்படும் என்பதும் கவனத்திற்குரியது. உலகப் புகழ் பெற்ற பதினைந்து (15) நீதிபதிகள் இம்மன்றத்தில் பணியாற்றுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(6) காரியாலயம் (Secretariat)

பொதுச் சபையின் எல்லா நடவடிக்கைகளையும் கண்காணித்து வரும் நிறுவனம் காரியாலயம் ஆகும். நியூயார்க்கிலுள்ள வானளாவிய மாளிகையில் அமைந்துள்ள இக்காரியாலயத்தில் சுமார் 5,000 அதிகாரிகள் பணிபுரிகின்றனர். இதன் பொறுப்புகள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு நடத்துபவர் பொதுக்காரியதரிசி (General Secretary) ஆவர். இவர் பொதுச் சபையினுல் சிபாரிசு செய்யப்பட்டுப் பாதுகாப்புக் குழுவினரால் நியமிக்கப்படுபவர் ஆவர். காரியாலயத்தில் பணிபுரியும் அதிகாரிகளை இவரே நியமிப்பார். உலக அமைதியைப் பாதிக்கும் முக்கியமான காரணங்களுக்காகப் பொதுச்சபையைக் கூட்டுவதற்கு இவருக்கு உரிமையுண்டு. மேலும், எந்த ஒரு பிரச்சினையும் உலக அமைதியைப் பாதிக்கக்கூடும் என்று இவர் கருதினுல், அதனைப் பாதுகாப்புக் குழுவுக்கு அறிவுறுத்தி, உடனடி நடவடிக்கை எடுக்கச் செய்வதற்கும் காரியதரிசிக்குத் தனிச் சலுகைகள் உண்டு. காரியதரிசியாக ஒருவர் ஐந்து ஆண்டுகள் பணியாற்றலாம்; மறுமுறையும் அவரே தேர்ந்தெடுக்கப்படவும் சாசனத்தில் சலுகைகள் உண்டு. இவ்விதச் சலுகை பெற்று ஒரு தடவைக்கு மேலும் பொதுக்காரியதரிசியாகப் பணியாற்றியவர் தாண்ட் (U. Thant) என்பவராவர். இக்காரியாலயத்தின் முதல் பொதுக்காரியதரிசியாக விளங்கியவர் நார்வே நாட்டைச் சேர்ந்தவரான டாக்டர் ட்ரிகிவ் லீ (Dr. Trygve Lie) என்பவராவர். 1946 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2இல், இவர் முதல் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1972ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது பொதுக்காரியதரிசியாகப் பணியாற்றி வருபவர் டாக்டர் கர்ட் வால்ட்ஹிம் (Dr. Kurt Waldheim) என்பாராவர்.

## உலக அமைதி (World Peace)

உலகம் சடப்பொருளாயிற்றே; அதற்கு அமைதியோ அமைதியின்மையோ என்ற பேச்சுக்கே இடமில்லையே என்று வாசகர்கள் வினவலாம். உலகம் என்று குறிப்பிடும்போது,

அதில் வாழும் எல்லா உயிர்களைக் குறிப்பிட்டாலும், அவற்றில் முக்கியமாகச் சுட்டிக்காட்டப்படுவது ஆறு அறிவுகள் படைத்த மானிட உயிர்களைத்தான். ஆறு அறிவுகள் அமைந்திருப்பதனால் தான், மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபட்டு விளங்குகிறான்; உயர்திணையில் வைக்கப்பட்டுள்ளான். தன்னுடைய ஆறாவது அறிவாகிய பகுத்தறிவாலும், அதனைப் பயன்படுத்துவதாலும் மனிதன் மனிதனாகிறான்; இல்லையேல், மற்ற உயிரினங்களுக்குச் சமமாகிவிடுகிறான்! எனவே, சிந்தனை செய்யும் போது தான், மனிதன் தன்னுடைய உயர்வை உணர்வது மட்டுமன்று, மற்றவர்களுக்கு உணர்த்துவதற்கும் தகுதியடைகிறான். அதன் காரணமாகவே, தான் வாழும் நிலையையும், தன்னைப் போன்றோர் வாழும் நிலையையும் தன்னலமற்ற நிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்க்கிறான். அப்போதுதான் உண்மை நிலையையும் உணருகிறான். ஆனால் இவ்வித நிலைமையைத் தற்காலத்தில் நாம் பெற்றிருக்கிறோமா என்ற கேள்விக்கு எப்படிப்பட்ட பதில் கிடைக்குமோ அதன் அடிப்படையில்தான் உலகில் அமைதி இருக்கிறதா இல்லையா என்பதும் பெறப்படும். எழுப்பிய வினாவிற்குப் பதில் அளிக்கவேண்டுமென்றால், அதற்குச் சுருக்கமான பதில்-தற்கால நிலைமையில் அமைதியை விலைக்கு வாங்குவதற்கும் கிடைக்கவில்லை என்பதுதான். அவற்றிலிருந்து, வாசகர்கள் அவசரப்பட்டு முடிவு எடுத்துவிடக் கூடாது; அதாவது, அமைதி என்பது ஒரு பொருள், அதனை விலைக்கு வாங்கினால்தான் கிடைக்கும் என்று; அவ்வித நோக்கம் உண்மையானதுமன்று, பயனுடையதுமாகாது. மனிதன் தன்னலத்தைத்துறந்து வாழ்வின் உண்மையான பயனைப்பெற இயலவில்லை; எதை எதையோ தேடி அலைந்து களைப்படைந்து விட்டான்; இவ்விதத்தடுமாற்றத்தினால் திசைமாறிச் செல்லும் நீராவிக்கப்பலைப்போல் நடுக்கடலில் நின்று தவிக்கிறான்; இந்நிலையில் எவ்விதமாவது கரையை அடைந்துவிட்டால் போதும் என்ற நிலைமைக்கு உள்ளாகி, எப்படியாவது வாழ்ந்துவிடுவோம் என்ற இக்கட்டான சூழ்நிலையில் தற்கால மனிதன் இயங்கிவருகிறான். இப்பரிதாபமான நிலைமைக்குக் காரணம், சுருக்கமாகச் சுட்டிக்காட்டுவேனாகில், மனிதனின் தன்னலமும், தவறான அடிப்படைக்கொள்கைகளும், விஞ்ஞானத்தின் வேகமான முன்னேற்றமும் அவற்றின் விளைவுகளுமாகும்.

முதல் காரணமான தன்னலம் என்பது மிகவும் முக்கியமான காரணமாகும்; இதனில் சீர்திருத்தம் ஏற்பட்டால், மற்றெல்லாத் தீமைகளையும் அகற்றிவிடலாம். ஏனென்றால், தன்னலங்காரணமாக எழுவதே தப்பான அபிப்பிராயங்களும்,

தவருன கொள்கைகளுமாகும். அதனுல்தான், நன்மையே பயக்கும் விஞ்ஞானத்தையும், தன்னலத்திற்காக மட்டும் பயன் படுத்த நேரிடும்போது, விஞ்ஞானத்தின் நன்மைகளும், பெரு மளவில் தீமையாகவே முடிந்துவிடுகிறது. எனவேதான் பல காரணங்களைப் பரிசீலித்துப் பரிகாரம் தேடுவதைவிட, ஒரு முக்கியக் காரணம் அதுவும் மூலகாரணமாக உள்ளதைச் சரியாகப் புரிந்துகொண்டால், நாம் விரும்பும் அமைதியை அடைவதற்கு அனுகூலமான வழிகளைப் பற்றி அறிந்து கொள்ள லாம் என்பதே.

ஒரு மனிதன் எப்பொழுது பிறமக்களால் போற்றப்படு கிருன்? தான் புரிந்த செயல்கள் தன்னலமற்றதாயும், அச்செயல் களினுல் பிறருக்கு நன்மை பயக்கும் போதுதான், பிறருடைய வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும் உரியவனுகிருன். உதாரண மாகச் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்துவிட்டுச் சென்ற புத்தரையும், இயேசு கிருஸ்துவையும், முகமது நபியையும் மக்கள் வாழ்த்துகின்றனர் ; வணங்குகின்றனர். ஏன்? ஏனென் ருல், அப்பெரியோர்கள் விட்டுச் சென்றுள்ள செல்வம், மனித இனத்திற்கே பயன்படும் அழியாச்செல்வமாகும். தற்காலச் சிந்தனைச் செல்வர்களைச் சிறிது நோக்குவோம் : இங்கிலாந்தின் செகப்பிரியன் (Shakespeare), ஜெர்மனியின் காண்ட் (Kant), பிரெஞ்சு நாட்டின் பெர்க்ஸோன் (Henri Bergson), ரஷ்யாவின் டால்ஸ்டாய் (Tolstoy), அமெரிக்க நாட்டின் எமர்ஸன் (Emerson), இந்தியாவின் ராதாகிருஷ்ணன் (Dr. S. Radhakrishnan). இவர் களெல்லாம் தங்கள் தங்கள் நாட்டினருக்கே மட்டுமல்லாமல், உலக மக்களினத்திற்கே சொந்தமானவர்கள். ஏனென்ருல், இப்பெரியோர்கள் கூறியுள்ள கருத்துகள், மக்களினத்திற்கே பயன்படும் உண்மையான செல்வமாகும்; இவர்களுடைய சேவை தன்னலமற்றது.

இருபதாம் நூற்ருண்டில் நம்மிடையே வாழ்ந்துவிட்டுச் சென்ற அண்ணல் காந்தி அடிகளை உலகமே போற்றுகிறது. ஏன்? ஏனென்ருல் அவர் விட்டுச்சென்ற உயர்ந்த கோட்பாடுகளா கிய வாய்மை, அகிம்சை மனித குலத்திற்கே பயன்படும் பண்புகளாகும். உலகமே உய்ய வேண்டுமென்ருல், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உயர வேண்டும்; அதற்குத் தேவையானது உண்மையான உழைப்பு; அவரவர்களின் நிலைக்கேற்றவாறு தாங்கள் புரியும் பணியினை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உணர்வுகளோடு இயங்கினுல் நிச்சயமாக நீ உயர்வாய், உன் நாடு உயரும், உலகமே உய்யும் என்று கூறினுர் தென்

ளுட்டுக் காந்தி அறிஞர் அண்ணு; அவருடைய கூற்றிலே தன்னலம் இல்லை; ஏனென்ருல், அவர் கூறிய கருத்துகள் எல்லா நாட்டவர்க்கும் பொருந்தும்; பயனளிக்கும் என்பதாம். இவ்விதம் தன்னலங்கருதாது; பிறருக்காக வாழ்ந்த உத்தமர்கள், ஒரு தனிப்பட்ட நாட்டிற்கல்லாமல், உலகத்திற்கே வழிகாட்டியுள்ளனர் என்பது வரலாறு எடுத்துக்கூறும் உண்மையாகும். அப் பெரியோர்களின் கூற்றுக்குச் செவி சாய்த்தால் உலகமே உய்யும் என்பது உண்மையினும் உண்மையாகும்.

இருந்தபோதிலும், மேற்குறிப்பிட்ட உயர்ந்த கருத்துகளையும் அறிவுரைகளையும் மக்கள் உணராததனுல், தற்காலத்தில் தவருன அபிப்பிராயங்களும், தப்பான கொள்கைகளும் மலிந்து காணப்படுகின்றன. இந்நிலையில் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் தன்னலவாதிகளின் கைகளில் சிக்குண்டு, மக்களுக்கு மாபெரும் நன்மைகளை விளைவிப்பதற்குப் பதிலாகத் துயரத்தையும், துன்பத்தையும்தான் அதிகரித்திருக்கிறது. இப்பரிதாப நிலை இந்தியாவில் நல்லவேளையாக ஏற்படவில்லை என்ருலும், அகில உலக ரீதியில் பார்ப்போமானுல், மேற்கத்திய நாடுகளில்தான் அதிகமான அவலநிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூறலாம். அதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று, இரண்டு உலகப் போர்களும் அவற்றின் பின்விளைவுகளுமாகும். மிகவும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது இரண்டாவது உலகப் போரும் அதில் அமெரிக்க நாடு, ஜப்பானிய மக்கள் மீது பயன் படுத்திய அணுக்குண்டுகளும், அவற்றின் பயங்கரவிளைவுகளுமாகும். போர் என்ற வார்த்தை, மிகவும் பழைய சொல்லாகிவிட்டது என்பதும் கவனிக்கற்பாலது; ஏனென்ருல் அணுக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டு அழிவு ஏற்படும்போது, யார்தோற்ருர், யார் வெற்றி பெற்ருர் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் எல்லோருமே அழிய வேண்டிய நிலைமையைத்தான் காண முடிகிறது. இப் பேருண்மையை அகில உலகரீதியில் அழுத்தந்திருத்தமாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துக்கூறிய பெருமை ஆங்கில மேதை ரஸ்ஸல் (Bertrand Russell) அவர்களைச் சாரும் என்பதையும் வாசகர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, இனிமேல் உலகப்போர் ஏற்பட்டால், மனித குலத்தின் அழிவுதான் நிச்சயமான முடிவு என்பதையும் நாம் உணர வேண்டும். இதன் காரணமாகத்தான் வல்லரசுகளே சிந்திக்கத் தொடங்கியுள்ளன; அதன் காரணமாகவே, அகில உலக நிறுவனங்கள் தோன்றின; அவற்றில் மிகவும் முக்கியமானது ஐக்கிய நாட்டு நிறுவனம் என்பதையும் முன்பே அறிந்தோம். தற்காலச் சூழ்நிலையில்,

உலக அமைதிக்கு ஐக்கிய நாட்டு நிறுவனத்தைவிட வேறெந்த நிறுவனமும் பயன்படும் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. எவ்விதம் உலக அமைதிக்கு ஐக்கிய நாட்டு நிறுவனம் பணிபுரிய முடியும் என்பதையும் சிறிது விளக்கமாக எடுத்துக்கூற முயல்கிறேன்.

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் அமைப்புகளை முன்பே விளக்கினேம்; ஆனல், தற்போது நாம் அறிந்துகொள்ள முற்படுவது அவ்வமைப்புகளின் அடிப்படை நோக்கம். அதனைப் பற்றியும் மிகவும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அந்நிறுவனத்தின் பட்டியலில் (Charter) கூறப்பட்டுள்ள சிலகருத்துகளை வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன்; ஐக்கிய நாட்டு நிறுவனம் உலக அமைதியையும், பாதுகாப்பையும் பேணும்; அண்டை நாட்டவர்களிடையே சிநேக மனப்பான்மையும், சமத்துவ நோக்கமும் அனுசரிக்கப்படும்; எந்த நாட்டு மக்களும் தங்களின் விருப்பம் போல், ஆட்சி முறைகளை அமைத்துக் கொண்டு அமைதியான வாழ்வு நடத்துவதற்கு உதவிகள் புரியும்; ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படும் ,பல பிரச்சினைகளில் முக்கியமாக, பொருளாதாரம், சமூகக்கலாசாரம் போன்ற துறைகளில் தேவையான உதவிகளைப் புரிந்து, அந்நாட்டு மக்கள் தங்களுடைய திறமைகளைத் தாங்களே வளர்ச்சி செய்து, மற்றவர்களுடைய குறுக்கீடு இல்லாமல் வாழ்வதற்கும் வகையினை அமைத்துக் கொடுக்கும். இவ்வித நல்ல பல சூழ்நிலைகளை நேசதேச நாடுகளிடையே அமைத்துக் கொடுப்பதற்கு ஒரு நடுவுநிலை நிறுவனமாக, ஐக்கிய நாட்டு நிறுவனம் திகழும். இந்நிலையில் ஐக்கிய நாட்டு நிறுவனம், அதன் உறுப்பினர்களை, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற உயர்ந்த கோட்பாடுகளின் பிரகாரம் நடத்தும்; அங்கு, பெரிய நாட்டின் உறுப்பினர்கள், சிறிய நாட்டின் உறுப்பினர்கள் என்ற சொல்லுக்கே இடமில்லை. எல்லா உறுப்பினர்களும் மக்களின் பிரதிநிதிகளாகவே கருதப்படுவர். அதைப்போலவே, அவ்வுறுப்பினர்களும் தங்களது கடமைகளைக் கண்ணியமாகவும், கட்டுப்பாடுடனும் நிறைவேற்றப் பாடுபட வேண்டும். எந்த உறுப்பு நாடும் வன்முறைகளை எந்த விதத்திலும் பயன்படுத்தக்கூடாது; அவ்விதம் செய்வார்களேயானல், அவர்கள் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் உண்மையான உறுப்பினர்கள் ஆகமாட்டார். மேலும், மற்ற நாட்டு - உறுப்பு நாடுகளாயினும் - உள்விவகாரங்களில் ஐக்கிய நாட்டு நிறுவனம் தலையிடாது. இருந்தபோதிலும், ஒரு நாட்டின் உள்விவகாரம், மற்ற நாடுகளையும் பாதிக்கும்

அளவுக்கு முக்கியத்துவம் பெற்ருல், அதனைப் பார்த்துக் கொண்டு செயலற்றும் இருந்துவிடாது. இந்நிலையில், உறுப்பினர் நாடுகளுக்கு மட்டுமல்லாமல், உறுப்பினரல்லாத நாடுகளுக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் தேடித்தருவதில் ஐக்கிய நாட்டு நிறுவனம் ஒன்றுதான் இன்றைய உலகில் இயங்கி வரும் ஓர் அறநிலையமாகும் என்று கூறினுல் அது மிகையாகாது.

கடந்த 26 ஆண்டுக் காலத்தில் இந்நிறுவனம் ஆற்றியுள்ள பணிகள் உலக வரலாற்று ஏட்டிலே பொறிக்கப்பட வேண்டிய செய்திகளாகும். ஏனென்ருல், பல சமயங்களில் உலகப்போராக உருவெடுத்த நிலைமைகளைக் கவனமாகக் கண்காணித்து, அதிக அளவில் பரவாமல் தடுத்து, அவற்றிற்குத் தீர்வுகளும் காணப்பட்டன என்பதும் கவனிக்கற்பாலது. உதாரணங்களாகச் சில உலக நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1950இல் கொரியாவிலும் (Korea), 1956இல் சுயஸ் (Suez) ஸிலும் சிறு சிறு போர்கள் நடைபெற்றன. அவற்றைச் சுட்டிக்காட்டி ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் குறைபாடுகளை மட்டும் எடுத்துக் கூறுவது ஒருதலைப் பட்சமாகிவிடும். ஏனென்ருல், அச்சிறுபுகைச்சல்களை அந்தஅளவுகளுடன் நிறுத்தியதால்தான் உலகப் போர் ஒன்று எழாமல் தடுக்கப்பட்டது என்பதைக் கவனிக்கவேண்டும். மேலும் அகில உலகப் பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். உதாரணமாக 1948இல் காஷ்மீர் (Kashmir) உடன்படிக்கை ஏற்பட்டது ; அதன் விளைவாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் (Pakistan) இடையில் ஓரளவு சமாதானம் ஏற்பட்டது. 1949இல் பாலஸ்தீனத்தில் (Palestine) டச்சுக்காரர்களுக்கும் இந்தோனேஷியர்களுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை அமைக்கப்பட்டது; அதன் பிறகு, 1962இல் அவ்விரு நாட்டின் பிரச்சினைகளுக்கே சமாதான முறையிலேயே தீர்வும் காணப்பட்டது. 1963இல் காங்கோ (Congo) பிரச்சினையும் தீர்வு கண்டது. இவ்விதம் பல நாடுகளில் சமாதானக் கொடியை ஏற்றி வைத்த பெருமை ஐக்கிய நாட்டு நிறுவனத்தையே சாரும் என்பதை மறுக்கமுடியாது; வரலாற்றிலிருந்தும் மறைக்கவும் முடியாது.

நிற்க, உலக அமைதியை ஏற்படுத்துவதற்குத் தேவையான சூழ் நிலைகளை மட்டும் அமைப்பதோடல்லாமல், உலக அமைதி மேலாண்மைக் குழு (World Peace Authority)[22] என்னும்

22. The Substance of politics — Dr. A. Appadurai.

நிறுவனத்தையே உண்டாக்குவதற்குத் தீவிரமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதும் வாசகர்களின் கவனத்திற்குரியதாகும். அவ்வித நிறுவனம் ஏற்பட்டு, அதனைக் கண்காணிப்பதற்கென்றே ஒரு பிரத்தியேகக் குழு அமைவதைப் பற்றியும் அதிதீவிரமான சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன. அக்குழுவின் தன்மையானது தேசம், காலம் முதலியவற்றைக் கடந்து தெய்வ நிலையை எய்தியதாக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது; அப்போதுதான் தன்னலம் அங்கு நுழையாது; தற்பெருமை அங்கு நிலவாது; அதன் காரணமாக அவற்றின் நடவடிக்கைகள், இயற்கையாகவும் எல்லோருக்கும் பயன்படுவதாகவும் அமையும். அதனால்தான் அக்குழுவிற்குத் தெய்வீகக் குழு (Supra National Body) என்றும் பெயரிட்டழைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு உன்னத உயர்தரமான கருத்துகளை வெளியிட்டுள்ள பெரியோர்களில் இருவருடைய பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறுவது நலம் எனக் கருதுகிறேன். அப்பெரியோர்கள் கிரன்வில் கிளார்க் (Grenville Clark), ஸோன் (L. B. Sohn) என்பாராவர்.[23] இப்பெரியோர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ள கருத்துகள் மக்களின் அமைதி வாழ்வுக்கு எத்துணை நன்மைகள் விளைவிக்கும் என்பதை வாசகர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். இருந்த போதிலும் இவ்விதமான உயர்ந்த கோட்பாடுகளைக் கூறிவிட்டு, அவற்றினை எந்த முறைகளில் பின்பற்ற வேண்டுமென்பதையும், அப்பெரியோர்களே சுட்டிக்காட்டியுள்ளனர். அந்த அளவிற்கு நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் காட்டியுள்ள நெறிகளில் சிலவற்றைக் காண்போம்.

உலகிலே அமைதி ஏற்படவேண்டுமென்றால், ஒவ்வொரு நாடும் தங்களுடைய படை வலிமையைக் குறைத்துக்கொள்ள வேண்டும்; நாளடைவில் படை வலிமையே அகற்றப்பட வேண்டும். இது எவ்வளவு முக்கியமான கருத்து என்பதை வாசகர்கள் மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பிரமாண்டமான படை வலிமையை வைத்துக்கொண்டும், அதனை வளர்த்துக்கொண்டும், அதே நேரத்தில் உலக அமைதி வேண்டும் என்று கூறுவதும் பசப்பு வார்த்தைகள் ஆகிவிடுமல்லவா? அதனால்தான், அமைதி ஏற்படுவதற்கும், ஏற்படுத்துதற்கும் முதல் நடவடிக்கையாகப் படைக்குறைப்பு அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையே உறவு முறை

23. World peace Through World Law — G. Clark and L. B. Sohn, Harvard University Press, 1962.

களில் வன்மை எந்த விதத்திலும் பயன்படுத்தக் கூடாது என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டு, எல்லா நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இதனைப் பாதுகாப்பதற்கு உலகக் காவலர் படை (World Police Force) என்னும் நிறுவனமும் அமைக்கப் பெறவேண்டும். அவ்விதச் சூழ்நிலைகளில் ஏற்படும் தேசீய வழக்குகளை விசாரிப்பதற்கு அகில உலக நீதி மன்றம் (International Court of Justice) ஒன்றினையும் அமைக்கவேண்டும். இவ்வித நிறுவனங்களைக் காப்பதற்கும் கண்காணிப்பதற்கும் கீழ்க் கண்ட நிறுவனங்களும் ஏற்படவேண்டும்: உலகச்சட்ட அவை (World Legislature), உலகச் செயல் துறை (World Executive), உலக வருவாய்த்துறை (World Revenue System). இவைகளைத் தவிர வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ச்சி அடையாத நாடுகள் இவற்றில் காணப்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சரிப்படுத்திக் காப்பதற்கு உலக வளர்ச்சி மேலாண்மை நிறுவனம் (World Development Authority) ஒன்றினையும் உருவாக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்விதமாகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ள கருத்துகள் அகில உலக ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது; ஏனென்றால் அகில உலக அமைதி என்பதையே குறிக்கோளாகக்கொண்டு இக்கருத்துகள் செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தப் பட்டுள்ளன. இவ்விதமான கருத்துகள் செயல்படத் தொடங்குவதற்குச் சில காலம் தாமதம் ஏற்பட்டாலும், எப்படியும் செயல் முறைக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கை வலிமை பெற்றுவருகிறது என்பதும் கவனிக்கற்பாலது. இந்நிலையில் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் முக்கியத்தும் எத்துணைச் சிறந்தது என்பதை வாசகர்கள் நன்கு உணர வேண்டும். மேலே குறிப்பிட்ட கருத்துகளும், நிறுவனங்களும் தனியாகவும் இயங்கலாம்; இல்லையேல், ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் வளர்ச்சி நிறுவனங்களாகவும் விளங்கலாம். அதன் விளைவாக உலகப் பெரியோர்கள் கண்ட கனு நனவாகும் என்பதை மட்டும் நிச்சயமாக நம்பலாம். அவர்கள் கண்ட கனு—மக்கள் எல்லோரும் ஒரு குலம், ஓர் இனம். அது செயல் முறையில் ஏற்படும் நாள் அதிக தூரத்தில் இல்லை; அதனைப் பெறுவதற்கு உறுதுணையாக அமைந்துள்ள உயர்ந்த நிறுவனம், உலக நிறுவனம், அமைதி நிறுவனம் ஐக்கிய நாட்டு நிறுவனம் ஒன்றே!

# மேற்கோள் நூல்கள்

(Bibliography)


## தமிழ்

திருவள்ளுவர் — திருக்குறள்.
(Tiruvalluvar) (Tirukkural)

தொல்காப்பியனுர் — தொல்காப்பியம்.
(Tolkaapiyanar) (Tolkaapiyam)

## ஆங்கிலம்

Appadurai A. — The Substance of politics.

Aristotle — Politics Edited by Newman.

Asirvatham E. — Political Theory 6th Edi.

Bernard Bosanquet — Philosophical Theory of the State.

Bhandari D. C. — History of European Political Philosophy.

Ernest Barker — The Study of Political Science and its relations to cognate Studies.

do — Political Thought in England 1848—1914.

Gettell R. G. — Political Science.

Gilchrist R. N. — Political Science.

Karl Frederick Geiser — The Evolution of the Forms of Government.

Kautilya — Artha Sastra.

Laski H. J. — A Grammar of Politics.

Plato — Republic Translated by Lindsay.

Sabine G. H. — History of Political Thought.

# கலைச் சொற்கள்

## தமிழ் — ஆங்கிலம்

### அ

| | | |
|---|---|---|
| அகிம்சை | — | Ahimsa |
| அடிப்படை உரிமைகள் | — | Fundamental rights |
| அடிமைக்கொள்கை | — | Slavery |
| அரசாங்கம் | — | Government |
| அரசியல் உணர்வு | — | Political Consciousness |
| அரசியல் வாழ்வு | — | Political life |
| அரசியல்வாதி | — | Political animal |
| அரசியல் வாழ்வின் தோற்றம் | — | Origin of State |
| அரசியல் வாழ்வு நிலை | — | Political state |
| அரசியல் சுதந்திரம் | — | Political liberty |
| அரசியல் உரிமைகள் | — | Political rights |
| அரசியல் ஒப்பந்தம் | — | Governmental contract |
| அரசியல் பொதுநோக்கு<br>பொது உணர்வு | — | General will |
| அரசியல் அமைப்புகள் | — | Forms of Government |
| அரசியல் சட்ட அமைப்பு | — | Constitution |
| அறங்காவலர் குழு | — | Trusteeship Council |
| அறம் | — | Justice |
| அறவியல் | — | Ethics |

### ஆ

| | | |
|---|---|---|
| ஆட்சியுரிமை<br>இறைமை | — | Sovereignty |
| ஆட்சித்துறை | — | Executive |

| | | |
|---|---|---|
| ஆண்டவனின் நிறுவனம் | — | Theocracy |
| ஆழ்ந்த உள்ளம் | — | Unconscious Mind |
| | இ | |
| இயல்புணர்ச்சி | — | Gregarious instinct |
| இயற்கை வாழ்வு நிலை | — | Natural state |
| இயற்கை இன்ப வாழ்வு | — | Idyllic felicity |
| இறைமை | — | Divinity, Sovereignty |
| | உ | |
| உடலியல் உளவியல் | — | Physiological psychology |
| உணர்வு | — | Spirit |
| உண்ணுமை | — | Fasting |
| உண்மைக்காகப் போராடு | — | Satyagraha |
| உயர்குடி ஆட்சி / பிரபுக்கள் ஆட்சி | — | Aristocracy |
| உயிரினவியல் | — | Zoology |
| உற்பத்தி | — | Production |
| உரிமைகள் | — | Rights |
| உரிமைப் பட்டியல் | — | Bill of Rights |
| உளவியல் | — | Psychology |
| உள்ளம் | — | Soul or Mind |
| | ஐ | |
| ஐக்கிய நாட்டு நிறுவனம் | — | United Nations Organisation (UNO) |
| ஐநூற்றுவர் குழு | — | Council of five hundred |
| | ஒ | |
| ஒத்துழையாமை | — | Non - Co-operation |
| | க | |
| கடவுள் | — | God |
| கந்தழி | — | The Absolute Reality |
| கல்வித்துறை உளவியல் | — | Educational psychology |

| | | |
|---|---|---|
| கற்பனைக் கொள்கை | — | Idealistic view |
| கிடைப்பும் தேவையும் | — | Supply and demand |
| குடியாட்சி | — | Republic |
| குடி உரிமை | — | Cetizenship |
| குடி ஒப்பம் | — | Referendum |
| குலம் | — | Tribe |
| குல மரபுச் சின்னம் | — | Totem |
| குலுக்குச் சீட்டு முறை | — | Lot system |
| கூடி வாழ்தல் | — | Fellowship |
| கூட்டம் | — | Crowd |
| கூட்டுப் பொதுவுடைமை | — | Collectivism |
| கூட்டு வழிபாடு | — | Collective worship |
| கொடுங்கோல் ஆட்சி | — | Tyranny |

ச

| | | |
|---|---|---|
| சட்டம் | — | Rule |
| சட்ட ஆதிக்கம் | — | Rule of law |
| சட்டத்துறை<br>சட்ட மன்றம் } | — | Legislature |
| சட்ட மன்றத் தலைவர் | — | Speaker |
| சமயம் | — | Religion |
| சமுதாயம் ; சங்கம் | — | Society |
| சமுதாயச் சுதந்திரம் | — | Civil liberty |
| சமூக உடன்படிக்கை | — | Social Contract |
| சமூக உரிமைகள் | — | Social rights |
| சமூக உளவியல் | — | Social psychology |
| சமூக நலன் | — | Social good |
| சமூகப் பிராணி | — | Social animal |
| சமூகப் பொதுவியல் | — | Social philosophy |
| சமூகப் பொதுவுடைமைக் கொள்கை | — | Socialistic view |
| சர்வதேச நீதி மன்றம் | — | International Court of Justice |
| சர்வாதிகாரம் | — | Dictatorship |
| சாதாரணப் பாதுகாவலர் | — | Ordinary guardians |

சிந்தனை — Thinking ; Reason

சிறு குழுவாட்சி — Oligarchy

சீர்திருத்தக் கொள்கை — Reformative Theory

த

தடை ; தீண்டாமை — Taboo

தடுப்புமுறைக் கொள்கை — Preventive theory

தத்துவம் — Philosophy

தத்துவ மேதை — Philosopher

தண்டனைக் கொள்கை — Theories of Punishment

தலையிடாக் கொள்கை — Laissez faire

தற்காலத்து அரசியல் கொள்கைகள் — Contemporary political Idealogies

தனித் தன்மைக் கொள்கை — Individualistic view

தாவர இயல் — Botany

தீயாமை — Ahimsa

தூய பாதுகாவலர் — Perfect guardians

தேசீய சுதந்திரம் — National liberty

தொகுப்பு முறைக் கொள்கைகள் — Deductive theories

தொழிற்சங்கப் பொதுவுடமை — Syndicalism

ந

நகரத்தான் — Citizen

நடத்தை — Behaviour

நனவு — Consciousness

நாடு ; அரசு — State

நாடுகளின் கூட்டமைப்புகள் — International Organisations

நாட்டவை — National Assembly

நாட்டவைக் குழு — National Council

நிர்வாகத்துறை — Excecutive

நிலப்பரப்பு — Territory

நிறுவனம் — Institution

நுகர்வு ; நுகர்தல் — Consumption
நுண்ணறிவு — Intelligence

ப

பகுப்பு முறைக் கொள்கைகள் — Inductive theories
பங்கீடு — Distribution
பட்டினப்பாக்கம் — Ward; Demes (Greek)
பதின்மர் குழு — Board of Ten
பயனுடைமைக்கொள்கை — Utilitarian theory
பரிணமக் கொள்கை — Evolutionary theory
பழங்காலச் சமயம் — Primitive religion
பழிவாங்கு கொள்கை — Retributive theory
பாட்டாளிகளின் சர்வாதிகாரம் — Dictatorship of proletariat
பாதுகாவல் அல்லாதார் — Non-guardians
பாராளுமன்றம் — Parliament
பிரதிநிதி — Representative ; Delegate
பிரபுக்கள் ஆட்சி — Aristocracy
பிறழ்வான நடத்தை உளவியல் — Abnormal psychology
பேரரசு — Empire
பொதுநல நாடு — Welfare State
பொதுவுடைமை — Communism
பொதுவுடைமைச் சமுதாயம் — Socialistic pattern of Society
பொது மக்கள் சபை — House of Commons
பொதுமக்கள் பிரதிநிதி — Representative of people
பொருளாதாரக் கோட்பாடுகள் — Economic laws
பொருளியல் — Economics
போட்டி — Competition
போர் — War

ம

மக்கள் ; பிரஜைகள் — Citizens
மக்களாட்சி — Democracy
மக்கள் மன்றம் — General Assembly

| | | |
|---|---|---|
| மக்கள் துவக்கம் | — | Initiative |
| மக்கள் தொகை | — | Population |
| மகா சாஸனம் | — | Magna Carta |
| மருத்துவ உளவியல் | — | Psycho - pharmacology |
| மருத்துவக் குழு | — | Medical Association |
| மறைவு நனவு உள்ளம் | — | Sub-conscious Mind |
| மனித உறவு | — | Kinship |
| மானிடவியல் | — | Anthropology |
| முதலாளித்துவம் | — | Capitalism |
| முதற் பார்வைக்கொள்கை | — | First look theory |
| முடியாட்சி | — | Monarchy |
| முன்ஞேர் வழிபாடு | — | Ancestor worship |

### வ

| | | |
|---|---|---|
| வணிகக் குழு | — | Trade Union |
| வரலாறு | — | History |
| வழக்கங்கள் | — | Usages |
| வழக்காறு | — | Convention |
| வாக்குரிமை | — | Franchise |
| வாணிகக் கழகப் பொதுவுடைமை | — | Guild Socialism |
| வாய்மை | — | Truth ; Satya |
| விலங்கு உளவியல் | — | Animal psychology |

# கலைச் சொற்கள்

## ஆங்கிலம் — தமிழ்

### A

| | | |
|---|---|---|
| Ahimsa | — | தீயாமை-சொல்; செயல்; நடத்தை |
| Analytical method | — | பகுப்புமுறை |
| Ancestor worship | — | முன்னோர் வழிபாடு |
| Appetite | — | வேட்கை |
| Aristocracy | — | உயர்குடி ஆட்சி; பிரபுக்கள் ஆட்சி |
| Assembly | — | சட்டமன்றம் |

### B

| | | |
|---|---|---|
| Bill of Rights | — | உரிமைகளின் பட்டியல் |
| Brotherhood of mankind | — | உலகச் சமுதாயச் சகோதரத்துவம் |

### C

| | | |
|---|---|---|
| Capitalism | — | முதலாளித்துவம் |
| Citizen | — | நகரத்தான்; குடிமகன் |
| Citizenship | — | குடிஉரிமை |
| Civil liberty | — | சமுதாயச் சுதந்திரம் |
| Collectivism | — | கூட்டுப் பொதுவுடைமை |
| Collective worship | — | கூட்டு வழிபாடு |
| Communism | — | பொதுவுடைமை |
| Communist Manifesto | — | பொதுவுடைமை வெளியீடு |

| | | |
|---|---|---|
| Conscience | — | மனச்சாட்சி |
| Constitution | — | அரசியலமைப்பு |
| Constitutional Government | — | அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம் |
| Constitutional Monarch | — | சட்ட அமைப்புக்குட்பட்ட முடியாட்சி |
| Contemporary Political Idealogies | — | தற்காலத்து அரசியல் கொள்கைகள் |
| Convention | — | மரபு; வழக்காறு |
| Councillor | — | மன்ற உறுப்பினர் |
| Council of five hundred | — | ஐநூற்றுவர் குழு |
| Court | — | நீதிமன்றம்; நியாயத்தலம் |
| Covenant | — | ஒப்பந்தம் |
| Crowd | — | கூட்டம் |

## D

| | | |
|---|---|---|
| Deductive Theories | — | தொகுப்புமுறைக் கொள்கைகள் |
| Delegate | — | பிரதிநிதி |
| Democracy | — | மக்களாட்சி; ஜனநாயகம் |
| Despot | — | சர்வாதிகாரி |
| Despotisom | — | எதேச்சாதிகாரம் |
| Dictatorship | — | சர்வாதிகாரம் |
| Direct Democracy | — | நேரடி மக்களாட்சி |
| Divine Right Theory | — | தெய்வீக உரிமைக் கொள்கை |
| Doctrine | — | கோட்பாடு; கொள்கை |

## E

| | | |
|---|---|---|
| Ecclesia | — | இறைமைக்குரிய; தெய்வீக |
| Economics | — | பொருளியல்; பொருளாதாரம் |
| Economic and Social Council | — | சமூகப் பொருளாதாரக் குழு |
| Educative Theory | — | சீர்திருத்தக் கொள்கை |
| Election | — | தேர்தல் |
| Electorate | — | வாக்காளர் தொகுதி |
| Empire | — | பேரரசு |

Equality — சமத்துவம்
Ethic — அறவியல்; ஒழுக்கவியல்
Evolution — பரிணாமம்
Executive — நிர்வாகத்துறை

F

Fasting — உண்ணாமை; நோன்பு
Fascism — பாஸிஸம்
Fellowship — கூடிவாழ்தல்
First Look Theories — முதல் பார்வைக் கொள்கைகள்
Force Theory — வலிமைக்கொள்கை
Forms of Government — அரசாங்கத்தின் வகைகள்
Fraternity — சகோதரத்துவம்
Freedom — விடுதலை
Functions — பணிகள்
Functional representation — தொழில்வகைப்பிரதிநிதித்துவம்
Fundamental Rights — அடிப்படை உரிமைகள்

G

Gandhism — காந்தியம்
General Assembly — பொதுமன்றம்
General will (of Rousseau) — அரசியல் பொதுநோக்கு; பொது உணர்வு
Government — அரசு
Governmental Contract — அரசியல் ஒப்பந்தம்
Guild — கழகம்
Guild Socialism — வாணிகக் கழகப் பொதுவுடமை

H

Historical method — வரலாற்று முறை
History — வரலாறு
House of Commons — மக்கள் சபை
House of Lords — பிரபுக்கள் சபை

## I

| | | |
|---|---|---|
| Idealism<br>Idealistic | — | கற்பனைக் கொள்கை |
| Idyllic felicity | — | இயற்கை இன்ப வாழ்வு |
| Inductive theories | — | பகுப்பு முறைக்கொள்கைகள் |
| Individualism<br>Individualistic view | — | தனித்தன்மைக் கோட்பாடு |
| Industrial Revolutions | — | தொழிற்புரட்சி |
| Initiative | — | குடித்துவக்கம் |
| International Government | — | அகில உலக அரசு |
| International relations | — | அகில உலகத் தொடர்புகள் |
| International Court of Justice | — | சர்வதேச நீதிமன்றம் |

## J

| | | |
|---|---|---|
| Judge | — | நீதிபதி |
| Judgment | — | நீதித்தீர்ப்பு |
| Judiciary | — | நீதித்துறை |
| Justice | — | அறம்; நீதி |

## K

| | | |
|---|---|---|
| King | — | அரசன் |
| Kingship | — | அரசுரிமை |
| Kinship | — | மனித உறவு; இரத்தப் பாசம் |

## L

| | | |
|---|---|---|
| Laissez faire | — | தலையிடா வணிகக் கோட்பாடு |
| Leadership | — | தலைமைப் பொறுப்பு |
| League of Nations | — | சர்வதேசச் சங்கம் |
| Legal Sovereignty | — | அரசியல் தலைமையுரிமை |
| Legislative | — | சட்டத்துறை |
| Liberty | — | விடுதலை ; சுதந்திரம் |

## M

| | | |
|---|---|---|
| Magna Carta | — | மகா சாஸனம் |
| Manifesto | — | வெளியீடு |
| Marxism | — | மார்க்சீயத் தத்துவம் |

| | | |
|---|---|---|
| Materialism | — | பொருள் சார்புத் தத்துவம் |
| Materialistic interpretation | — | பொருள் சார்பு விளக்கம் |
| Matriarchal system | — | தாய்வழி முறை |
| Middle ages | — | இடைக்காலம் |
| Minister | — | அமைச்சர் |
| Minorities | — | சிறுபான்மையினர் |
| Monarchy | — | முடியாட்சி |
| Monarchy Absolute (of Arblees) | — | வரம்பில்லா முடியரசு |
| Monarchy Constitutional (of Locke) | — | சட்டத்திற்குட்பட்ட முடியரசு |

## N

| | | |
|---|---|---|
| Nation | — | நாட்டு மக்கள் |
| Nationality | — | நாட்டினம் |
| Nationalisation | — | தேசீய உடைமையாக்கம் |
| National liberty | — | தேசீய சுதந்திரம் |
| Nationalism | — | தேசீய உணர்வு |
| Natural state | — | இயற்கை வாழ்வுநிலை |
| Natural rights | — | இயற்கை உரிமைகள் |
| Nazism | — | நாஜிஸம் |
| Non-violence | — | தீயாமை — சொல்; செயல்; நடத்தை |
| Non-Co-operation | — | ஒத்துழையாமை |
| Non-guardians | — | பாதுகாவல் அல்லாதார் |

## O

| | | |
|---|---|---|
| Oligarchy | — | சிறு குழு ஆட்சி |
| Ordinary guardians | — | சாதாரணப் பாதுகாவலர் |
| Organisation | — | அமைப்பு |
| Organic theory | — | உடலுறுப்புக் கோட்பாடு |
| Origin of State | — | அரசின் தோற்றம் |

## P

| | | |
|---|---|---|
| Parliament | — | பாராளுமன்றம் |
| Patriarchal system | — | தந்தைவழிமுறை |
| Patriotism | — | நாட்டுப்பற்று |

| | | |
|---|---|---|
| Perfect guardians | — | தூயகாவலர்; புனிதக் காவலர் |
| Philosophy | — | தத்துவம்; மெய்ப்பொருளியல் |
| Philosopher | — | தத்துவ மேதை |
| Polltical Consciousness | — | அரசியல் உணர்வு |
| Political animal | — | அரசியல்வாதி |
| Political state | — | அரசியல் வாழ்வு நிலை |
| Political liberty | — | அரசியல் சுதந்திரம் |
| Political parties | — | அரசியல் கட்சிகள் |
| Political Philosophy | — | அரசியல் தத்துவம் |
| Political Science | — | அரசியல் நூல் |
| Political Theory | — | அரசியல் கோட்பாடு |
| Polis (Greek) | — | நகரம் |
| Politics | — | அரசியல் |
| Polity | — | ஆட்சி அமைப்பு |
| Population | — | மக்கள் தொகை |
| Popular sovereignty | — | மக்கள் இறைமை |
| Primitive religion | — | பழங்காலச் சமயம் |
| President | — | ஜனாதிபதி; குடியரசுத் தலைவர் |
| Preventive Theory | — | தடுப்புமுறைக் கொள்கை |
| Prime-Minister | — | பிரதம மந்திரி |
| Private ownership | — | தனியார் உடமை |
| Proletariat | — | தொழிலாளி; பாட்டாளி |
| Proletariat Revolution | — | பாட்டாளியின் புரட்சி |
| Propaganda | — | விளம்பரம் |
| Protective Theory | — | காப்புமுறைக் கொள்கை |
| Property | — | சொத்து; வீடு வாசல் என்பன |
| Political right | — | அரசியல் உரிமைகள் |
| Public opinion | — | பொதுமக்கள் கருத்து |

**Q**

| | | |
|---|---|---|
| Queen | — | அரசி |

**R**

| | | |
|---|---|---|
| Referendum | — | குடிஒப்பம் |
| Reformative Theory | — | சீர்திருத்தக் கொள்கை |

Religion — சமயம்
Republic — குடியரசு
Representation — பிரதிநிதிக்கோட்பாடு
Retributive Theory — பழிவாங்கு கொள்கை
Rights — உரிமைகள்
Rule of law — சட்ட ஆதிக்கம்

## S

Satya — வாய்மை; உண்மை; சத்தியம்
Satyagraha — உண்மைக்காகப் போராடு
Sarvodaya — சமத்துவக் கோட்பாடு
Secretariat — காரியாலயம்; செயலகம்
Security of Council — பாதுகாப்புக்குழு
Self-government — சுயஆட்சி
Self-preservation — தற்காப்பு
Separation of powers — அதிகாரப் பிரிவினைகள்
Social good — சமூகநலன்
Social Contract — சமூக ஒப்பந்தம்
Socialistic view — சமூகப் பொதுவுடைமைக் கொள்கை
Social legislation — சமூக நலச்சட்டம்
Socialisation — சமூகப் பொதுவுடைமையாக்கம்
Socialism — சமூகப் பொதுவுடைமைக் கோட்பாடு
Socialism Guild — வாணிகப் பொதுவுடைமைக் கோட்பாடு
Socialism Collective — கூட்டுப் பொதுவுடைமை
Socialistic pattern of Society பொதுவுடைமைச் சமுதாய அமைப்பு
Sovereignty — ஆட்சியுரிமை; தலைமை உரிமை; இறைமை
Sovereignty of law — சட்டத்தின் தலைமை உரிமை
Speaker — மன்றத் தலைவர்
State — நாடு; அரசு
State enterprise — அரசின் தொழில் நிறுவனம்
State of Nature — இயற்கை நிலை
Stateless Society — நாடற்ற சமுதாயம்
Statute laws — எழுத்து வடிவம் பெற்ற சட்டங்கள்
Statutory powers — சட்டபூர்வமான அதிகாரங்கள்

Supply and demand — கிடைப்பும் தேவையும்
Suffrage — வாக்குரிமை
Super human origin — மனிதனுடைய அறிவெல்லைக் கப்பாற்பட்ட
Syndicalism — தொழிற்சங்கப் பொதுவுடைமை

T

Taboo — தடை; தீண்டாமை
Territory — நிலப்பரப்பு - நிலம்; காற்று; நீர்
Theocracy — சமயச்சார்புடைய அரசு; ஆண்டவனின் நிறுவனம்
Theories of Punishment — தண்டனைக் கொள்கைகள்
Totalitarianism — சர்வாதிகாரத்துவம்
Tradition — மரபு
Trade Union — வாணிகக்குழு
Treaty — உடன்படிக்கை
Trusteeship Council — அறங்காவலர் குழு
Tyranny — கொடுங்கோன்மை

U

UNESCO — ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம்
Unity — ஒற்றுமை
United Nation Organisation — ஐக்கிய நாடுகளின் நிறுவனம்
Utilitarianism / Utilitarian Theory — பயன்கருது கோட்பாடு

V

Veto — தடைவாக்கு; மறுப்பாணை
Vote — வாக்கு
Voters — வாக்காளர்கள்

W

War — போர்
Welfare State — பொதுநல நாடு
W. H. O. — உலக சுகாதார நிறுவனம்
World Government — உலக அரசாங்கம்
World peace — உலக அமைதி